பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

மூலமும் தெளிவுரையும்



2

வர்த்தமானன் பதிப்பகம்

வ. ஜோதி M.A.

உ

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

(மூலமும் தெளிவுரையும்)

இரண்டாம் தொகுதி

உரையாசிரியர்:

வ. ஜோதி M.A.,

வர்த்தமானன் பதிப்பகம்

ஏ. ஆர். ஆர். காம்ப்ளக்ஸ்,
141, உஸ்மான் சாலை, தி. நகர்,
சென்னை - 600 017.
✆ 825 79 95

இரண்டாம் பதிப்பு : 1998

ஐந்து தொகுதிகள்
விலை ரூ.500/-

Laser by : **SRI SATHYA SAI GRAPHICS**
29/1, Sarojini Street, T.Nagar, Chennai - 600 017. ✆ : 433 25 04

அச்சிட்டோர் :- அருணா ஆப்செட் சென்னை - 7.
☎ :6420221.

2/3

பதிப்புரை

திருவிளையாடற் புராணத்தின் இரண்டாம் தொகுதியான இதில், பதினாறு படலங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தத் தெய்வப் பனுவலுக்கு மிகத் தெளிவாக உரை வகுத்துத் தந்துள்ளார். வ. ஜோதி அவர்கள். உற்சாகமும், ஊக்கமும், உழைப்பும் உள்ள ஆசிரியரின் உரை வளம் கண்டு இன்புறுக. உரை கண்ட இனிய நண்பருக்கு எங்கள் நன்றி.

ஆதரவு தரும் அனைவருக்கும் நன்றி; நன்றி.

- பதிப்பகத்தார்

பொருளடக்கம்

திருவிளையாடற் புராணம்

மூலமும் தெளிவுரையும்

இரண்டாம் தொகுதி

3. திருநகரம் கண்ட படலம்

472. தான வாறிழி புகர்முகத் தடுகரி சாபம்
போன வாறுரை செய்துமேற் புதுமதி முடிமேல்
வான வாறினன் கடம்பமா வனமுது நகரம்
ஆன வாறது தனைச்சிறது அறிந்தவா றறைவாம்.

473. இன்ன ரம்புளர் ஏழிசை யெழான்மிடற் றளிகள்
கின்ன ரம்பயில் கடம்பமா வனத்தினின் கீழ்சார்த்
தென்னர் சேகர னெனுங்குல சேகர னுலக
மன்னர் சேகர னரசுசெய் திருப்பது மணவூர்.

474. குலவு மப்பெரும் பதியிளங் கோக்களில் ஒருவன்
நிலவு மாநிதி போலருச் சனைமுத னியதி
பலவு மாஞ்சிவ தருமமுந் தேடுவான் பரன்பாற்
றலைமை சான்றமெய் யன்பினான் தனஞ்சயன் என்பான்.

475. செல்வ மாநக ரிருந்துமேற் றிசைப்புலஞ் சென்று
மல்லல் வாணிகஞ் செய்துதன் வளம்பதி மீள்வான்
தொல்லை யேழ்பவக் கடற்கரை தோற்றுவித் தடியார்
அல்ல றீர்ப்பவன் கடம்பமா வனம்புகும் அளவில்.

3. திருநகரம் கண்ட படலம்

472. மதமாகிய ஆறு ஒழுகுகின்ற, புள்ளிகளையுடைய முகமுடைய பகைவர்களைக் கொல்லுகின்ற,வெள்ளை யானை யினது சாபம் நீங்கிய தன்மையினைக் கூறினோம். இனி பிறைமதியை அணிந்த, திருமுடியின் மேல் கங்கையாற்றினை உடைய இறைவனது கடம்பவனமானது சிறப்பான நகரமான தன்மையினைத் தெரிந்தபடி கூறுவோம்.

473. இனிய நரம்புகளை மீட்டுவதால் உண்டாகும் ஏழிசை போலும், கண்டத்தையுடைய வண்டுகள் இசை பாடுகின்ற கடம்பவனத்தின் கீழ்ப்பக்கம், உலகில் உள்ள மன்னர்களுக்கு முடிபோல்பவனும், பாண்டிய மன்னர்களுள் மகுடம் என்று சொல்லத்தக்கவனுமான 'குலசேகரன்' என்னும் மன்னன் அரசெய்தி இருந்தது 'மணவூர்' ஆகும்.

தனஞ்சயன் கண்ட அதிசயம்

474. அப்பெரிய நகரத்தில் 'தனஞ்செயன்' என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் பெரும் செல்வத்தைத் தேடுவதுபோலவே, அருச்சனை முதலிய கடமைகள் மூலம் சிவபுண்ணியம் தேடுபவன்; சிவபெருமானிடம் சிறந்த மெய்யன்புடையவன்.

475. ஒரு சமயம் தனஞ்சயன் செல்வம் நிறைந்த மணவூரிலிருந்து மேற்குத் திசையில் உள்ள ஊர்களுக்குச் சென்று வாணிபம் செய்துகொண்டு தன் நகருக்குத் திரும்பி வந்தான். தொன்றுதொட்டு வரும் ஏழு பிறப்பாகிய கடலை வற்றச் செய்து அடியார்களின் பிறவித் துன்பத்தைப் போக்குபவனாகிய சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளியுள்ள கடம்பவனத்தில் புகுந்தான்.

476. இரவி கண்மறைந் தேழ்பரி யிரத முந் தானும்
உரவு நீர்க்கருங் கடலில் வீழ்ந் தொளித்தன னாக
இரவு நீண்மயங் கிருள்வயிற் றமியனாய் மெலியும்
அரவு நீர்ச்சடை யண்ணலுக் கன்பினோ னாங்கண்.

477. வாங்கு நான்மருப் பேந்திய மதமலை யெருத்தந்
தாங்கி யாயிரங் கரங்களாற் றடவியெண்டி சையுந்
தூங்கு காரிரு டுரத்துசெஞ் சுடரெனச் சூழ்போய்
வீங்கு காரிரு ளொதுக்கிய விமானனேர் கண்டான்.

478. அடுத்த ணைந்தனன் அவிர்சுடர் விமானமீ தமர்ந்த
கடுத்த தும்பிய கண்டனைக் கண்டுதாழ்ந் துவகை
மடுத்த நெஞ்சினா னங்ஙனம் வைகிருள் கழிப்பான்
எடுத்த சிந்தையி னிருந்தன னிருக்குமவ் விருள்வாய்

479. சோம வாரமன் றாதலாற் சுரர்களங் கெய்தி
வாம மேகலை மலைமக டலைமகன் மலர்ந்த
காமர் சேவடி பணிந்தவன் கங்குல்போற் கருதி
யாம நான்கினு மருச்சனை யின்புறப் புரிவார்.

480. அண்டர் வந்தது மருச்சனை புரிவது மனைத்துந்
தொண்டர் அன்பினுக் கெளியவன் சுரர்தொழக் கறுத்த
கண்ட னின்னருட் கண்ணினாற் கண்டன னுதலிற்
புண்ட ரம்பயி லன்புடைப் புண்ணிய வணிகன்.

476. ஏழு குதிரைகள் பூட்டிய தேரும், தானும் கடலில் விழுந்து மறைந்தனர் என்னும்படி சூரியன் மேற்கு திசையில் மறைந்தான். மயக்கத்தைத் தருகின்ற இருளில் தனி ஒருவனாக வருந்திய தனஞ்சயன், பாம்பையும், கங்கையையும் சடையில் அணிந்த சிவபெருமானிடம் அன்பு பூண்டு தங்கி இருந்தான்.

477. வளைந்த நான்கு கொம்புகளுடைய எட்டு யானைகளின் பிடர்களால் தாங்கப் பெற்று, இருளைத் துரத்துகின்ற ஆயிரம் கிரணங்களையுடைய சூரியன் போன்று எட்டுத் திக்குகளிலும் உள்ள கரிய இருளைப் போக்குகின்ற இந்திரன் உண்டாக்கிய விமானத்தை நேரில் பார்த்தான்.

478. அவ்விமானத்தின் அருகில் சென்று, ஒளிவீசும் தன்மையுடைய அதன்மேல் எழுந்தருளியுள்ள, நஞ்சுக் கறை விளங்கும் திருமிடற்றினையுடைய சொக்கலிங்க மூர்த்தியைத் தரிசித்தான். பெருமகிழ்ச்சி கொண்ட உள்ளம் உடையவனாய் அவ்விறைவனையே தரிசித்து இரவைக் கழிக்கின்ற எண்ண முடையவனாய் அங்கேயே இருந்தான்.

479. அந்த நாள் திங்கட்கிழமை (சோமவாரம்). ஆதலினால் அங்கே தேவர்கள் வந்து, ஒலிக்கும் மேகலையை அணிந்த பார்வதியின் தலைவனாகிய சிவபெருமானின் அழகிய திருவடிகளை வணங்கி, அவன் இரவாகிய சிவராத்திரி போல எண்ணி நான்கு யாமங்களிலும் அருச்சனை புரிந்தனர்.

480. நெற்றியில் மூன்று கீற்றாகத் திருநீற்றினைத் தரித்த தனஞ்சயன், அடியார்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு, தொண்டர்கள் முறையிட, கறுத்த திருமிடற்றினையுடைய இறைவனது அருட்பார்வையால், அமரர்கள் வந்ததையும் அவர்கள் பூசை செய்ததையும் நேரில் கண்டான்.

481. நான மென்பனி நறும்புன னாயகன் பூசைக்
கான நல்விரை வருக்கமும் அமரர்கைக் கொடுத்து
ஞான வெண்மதிச் சடைபவன் கோயிலின் ஞாங்கர்த்
தான மர்ந்தருச் சனைசெய்வான் றங்கணா யகனை.

482. வள்ள றன்னைமெய் யன்பினால் அருச்சனைசெய் வானோர்
உள்ள வல்வினை யீட்டமுங் கங்குலு மொதுங்கக்
கள்ள மில்லவன் யாரையுங் கண்டிலன் கண்டான்
தள்ள ருஞ்சுடர் விமானமேற் றனித்துறை தனியை.

483. ஆழ்ந்த சிந்தையன் அதிசய மடைந்துசே வடிக்கீழ்த்
தாழ்ந்தெ ழுந்திரு கைகளுந் தலைமிசைக் கூப்பிச்
சூழ்ந்து தன்பதிக் கேகுவா னொருதலை துணிந்து
வாழ்ந்த வன்பினான் விடைகொடு வழிக்கொடு வந்தான்.

484. முக்க டம்படு களிற்றினான் முகிறவழ் கோயில்
புக்க டங்கலர் சிங்கமன் னானெதிர் புகல்வான்
திக்க டங்கலுங் கடந்தவெந் திகிரியாய் நெருநல்
அக்க டம்பமா வனத்திலோர் அதிசயங் கண்டேன்.

481. மெல்லிய கஸ்தூரியையும், மணம் மிக்க பனி நீரையும், இறைவன் பூசைக்குரிய நல்ல பொருள்களையும் அத்தேவர்களின் கையில் கொடுத்து, ஞானவடிவினன் ஆகிய பிறையணிந்த சடையையுடைய சோமசுந்தரப் பெருமானின் விமானத்தின் திருமுன் தானிருந்து இறைவனை அருச்சனை புரிவிப்பா னாயினான்.

482. பிறகு சோமசுந்தரக் கடவுளை உண்மை அன்போடு பூசித்த தேவர்கள் கூட்டமும், தன் மனத்தைப் பற்றிய வல்வினையின் கூட்டமும், இரவு விடியும்போது நீங்கியது. பின்னர் வஞ்சனை இல்லாத மனத்தையுடைய அவ்வணிகன் ஒருவரையும் காணாதவனாகி விமானத்தில் தனித்து எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரப் பெருமானை மட்டுமே கண்டான்.

483. இவ்வாறு இவர்கள் காணமால் போனதால் அழுந்திய சிந்தையையுடைய அவ்வணிகன் வியப்படைந்து அப் பெருமானின் சிவந்த திருவடிகளில் விழுந்து வணங்கி எழுந்தான். இரண்டு கைகளையும் தலைமேல் குவித்தவாறு வலம் வந்தான். பின் தன் நகருக்குப் போக ஒருவாறு துணிந்து விடைபெற்றுக் கொண்டு அன்பாகிய வாழ்க்கையை உடைய அவ்வணிகன் தன்நகரம் வந்து சேர்ந்தான்.

தனஞ்சயன் பாண்டியனுக்கு அறிவித்தல்

484. மும்மதங்களை உடைய யானையை யுடைய பாண்டிய மன்னனின் மேகம் தவழும் அரண்மனையை அடைந்தான். பகைவர்களுக்குச் சிங்கம் போன்ற அவன் திருமுன் சென்று வணங்கி ''எல்லாத் திசைகளையும் வென்ற சக்கரத்தை உடையவனே! நேற்றுக் கடம்பவனத்தில் ஓர் அதிசயம் கண்டேன்.''

485. வல்லை வாணிகஞ் செய்துநான் வருவழி மேலைக்
கல்ல டைந்தது வெங்கதிர் கங்குலும் பிறப்பும்
எல்லை காணிய கண்டனன் இரவிமண் டலம்போல்
அல்ல டுஞ்சுடர் விமானமு மதிற்சிவக் குறியும்

486. மாவ லம்புதார் மணிமுடிக் கடவுளர் வந்தத்
தேவ தேவனை யிரவெலாம் அருச்சனை செய்து
போவ தாயினார் யானுமப் பொன்னெடுங் கோயின்
மேவு மீசனை விடைகொடு மீண்டன னென்றான்.

487. மூளு மன்பினான் மொழிந்திட முக்கணெம் பெருமான்
றாளு மஞ்சலி கரங்களுந் தலையில்வைத் துள்ளம்
நீளு மன்புறமற் புதமுமே நிரம்பநீர் ஞாலம்
ஆளு மன்னவன் இருந்தனன் போயினா னருக்கன்

488. ஈட்டு வார்வினை யொத்தபோ திருண்மலங் கருக
வாட்டு வார்அவர் சென்னிமேன் மலரடிக் கமலஞ்
சூட்டு வார்மறை கடந்ததந் தொல்லுரு விளங்கக்
காட்டு வாரொரு சித்தராய்த் தோன்றினார் கனவில்

485. நல்ல வாணிபம் செய்து திரும்பி வருகையில் வெப்பத்தையுடைய சூரியன் மேற்கில் சென்று மறைந்தான். இரவின் எல்லையையும், பிறப்பின் எல்லையையும் காணுமாறு மிக்க ஒளியையுடைய ஒரு விமானத்தையும், அதனுள் எழுந்தருளி இருக்கும் ஒரு சிவலிங்க மூர்த்தியையும் கண்டேன்.

486. வண்டுகள் ஒலிக்கும் மாலையை அணிந்த, மணிகள் பொருத்தப்பட்ட முடிகளையுடைய தேவர்கள் வந்து, அத் தேவர்களுக்குத் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுளை நான்கு யாமங்களிலும் பூசை செய்துவிட்டுச் சென்றதையும் கண்டேன். பின்னர் நானும் அப்பொன்னாலாகிய விமானத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு வந்தேன்'' என்றான்.

487. மேன்மேலும் வளரும் அன்பினையுடைய தனஞ்சயன் என்னும் வணிகன் இதனைக் கூற, கடலால் சூழப்பெற்ற பெரிய உலகை ஆட்சி செய்யும் குலசேகரப் பாண்டியன், மூன்று கண்களையுடைய சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளையும், குவித்த கைகளையும் தலையில் வைத்து உள்ளத்தில் அன்பும் அதிசயமும் நிறைய வீற்றிருந்தான். சூரியன் மறைந்தான்.

பாண்டியன் கனவில் சிவபெருமான் தோன்றுதல்

488. அன்பர்களுக்கு இருவினை ஒப்பு வந்தபோது அவர்களின் ஆணவ மலத்தைப் போக்கி, அவர்கள் சிரசின் மீது திருவடித் தாமரை மலரைச் சூட்டி, தமது உண்மைத் திருவுருவத்தைக் காட்டியருளும், வேதங்களாலும் அறிய முடியாத அச் சிவபெருமான் அப்பாண்டியனது கனவில் ஒரு சித்தராக வந்து தோன்றினார்.

489. வடிகொள் வேலினாய் கடம்பா வனத்தினைத் திருந்தக்
கடிகொள் காடகழ்ந் தணிநகர் காண்கென வுணர்த்தி
அடிகள் ஏகினார் கவுரிய ராண்டகை கங்குல்
விடியும் வேலைகண் விழித்தனன் பரிதியும் விழித்தான்.

490. கனவிற் றீர்ந்தவ னியதியின் கடன்முடித் தமைச்சர்
சினவிற் றீர்ந்தமா தவர்க்குந்தன் கனாத்திறஞ் செப்பி
நனவிற் கேட்டதுங் கனவிற் கண்டது நயப்ப
வினவித் தேர்ந்துகொண் டெழுந்தனன் மேற்றிசைச் செல்வான்

491. அமைச்ச ரோடுமந் நீபமா வனம்புகுந் தம்பொன்
சமைச்ச விழ்ந்தபொற் றாமரைத் தடம்படிந் தொளிவிட்
டிமைச்ச லர்ந்தபொன் விமானமீ தினிதுவீற் றிருந்தோர்
தமைச்ச ரண்பணிந்து அஞ்சலி தலையின்மேன் முகிழ்த்தான்.

492. அன்பு பின்றள்ள முன்புவந் தருட்கணீர்த் தேக
என்பு நெக்கிட வேகிவீழ்ந் திணையடிக் கமலம்
பொன்பு னைந்ததார் மௌலியிற் புனைந்தெழுந்து இறைவன்
முன்பு நின்றுசொற் பதங்களாற் றோத்திர மொழிவான்.

489. அச்சித்தர் பாண்டியனை நோக்கி, ''கூர்மையான வேற்படையை உடையவனே! பெரிய கடம்பவனத்தில் உள்ள காட்டினை அழித்து, திருத்தமான காவலையுடைய அழகிய நகரமாகச் செய்வாயாக!'' என்று அறிவித்து மறைந்து அருளினார். பாண்டியன் மரபில் உதித்த ஆண்டகையான குலசேகரன் இரவு கழியும் வரையில் உறங்காதவனாயினான். சூரியனும் தோன்றினான்.

490. கனவிலிருந்து நீங்கி, இரவு முழுவதும் விழித்திருந்த பாண்டியன், தன் நித்திய கருமங்களை முடித்து அமைச்சர்களையும் தவத்தில் சிறந்த முனிவர்களையும் அழைத்தான். பகலில் வணிகனிடம் கேட்டதையும், இரவில் கனவில் கண்டதையும் கூறினான். பிறகு யாவற்றையும் ஆராய்ந்து தெளிவடைந்து பின்னர் எழுந்து மேற்கு நோக்கிப் புறப்பட்டுச் சென்றான்.

சோமசுந்தரக் கடவுளைப் பாண்டியன் வணங்குதல்

491. அமைச்சரோடு குலசேகரப் பாண்டியன் அப் பெரிய கடம்பவனத்தை அடைந்தான். அழகிய பொன்னால் செய்யப்பட்ட, மலர்ந்த பொற்றாமரையை யுடைய தடாகத்தில் நீராடினான். ஒளி வீசும் பொன் விமானத்தில் இனிதாக வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளைத் தரிசித்துக் கைகளைச் சிரமேற் கூப்பி வணங்கினான்.

492. அன்பானது பின் நின்று தள்ளவும், அருட் பார்வை முன்னே இழுக்கவும், எலும்புகளும் கரைந்து உருகுமாறு, சென்று கீழே விழுந்து இரண்டு திருவடித் தாமரைகளைத் தன் தலைமீது சூடி எழுந்து நின்று சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் சிறந்த திருமொழிகளால் தோத்திரம் செய்தான்.

493. சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணஞ்
சரண மங்கல மாகிய தனிமுதல் சரணஞ்
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்
சரண மும்பர்க ணாயக பசுபதி சரணம்.

494. ஆழி ஞாலமே லாசையும் அமரர்வான் பதமேல்
வீழு மாசையும் வெறுத்தவர்க் கன்றிமண் ணாண்டு
பீழை மூழ்கிவா னரகொடு பிணிபடச் சுழலும்
ஏழை யேங்களுக் காவதோ வெந்தைநின் கருணை.

495. சூள தாமறைச் சென்னியும் தொடத்தொட நீண்ட
நீள னீயுனக் கன்பில மாயினு நீயே
மூள வன்புதந் தெங்குடி முழுவதும் பணிகொண்
டாள வேகொலிக் கானகத் தமர்ந்தனை யென்னா.

496. சுரந்த வன்பிரு கண்வழிச் சொரிவபோற் சொரிந்து
பரந்த வாறொடு சிவானந்தப் பரவையுட் படிந்து
வரந்த வாதமெய் யன்பினால் வலங்கொடு புறம்போந்
தரந்தை தீர்ந்தவன் ஒருசிறை யமைச்சரோ டிருந்தான்.

497. ஆய வேலையின் மன்னவ னாணையால் அமைச்சர்
மேய வேவலர் துறைதுறை மேவினர் விடுப்பப்
பாய வேலையி னார்த்தனர் வழிக்கொடு படர்ந்தார்.
சேய காடெறிந் தணிநகர் செய்தொழின் மாக்கள்.

493. ''உமையம்மை ஒரு பாதியில் உறையும் சங்கரனே, வணக்கம்! மங்கலமாகிய ஒப்பற்ற பொருளே வணக்கம்! மந்திரவடிவாகிய சதாசிவ மூர்த்தியே வணக்கம்! தேவர்களின் தலைவனே வணக்கம்! உயிர்களின் தலைவனே வணக்கம்!''.

494. மேலும் பாண்டியன் இறைவனை நோக்கி, ''எந்தையே! நின் திருவடிகளில் எய்தும் பாக்கியமானது, கடலால் சூழப்பட்ட இப்புவியிடம் உண்டான விருப்பத்தையும், தேவருலகின் உயர்ந்த பதவியின் மேல் கொண்ட விருப்பத்தையும் வெறுத்த துறவிகட்கு மட்டுமே எய்தும், அல்லாமல் பூமியை ஆண்டு துன்பத்தில் அழுந்திச் சுவர்க்கத்திலும் நரகத்தினும் கட்டுண்டு சுழலுகின்ற அறிவில்லாத எங்கட்கு எய்தத் தக்கதோ?''

495. ''தொடுவேன் என்ற சபதத்தையுடைய வேதத்தின் முடிவும் தொடமுடியாதபடி தொடத்தொட நீண்ட நீட்சியை யுடையவன் நீ! உமக்கு யாம் அன்பிலேம் ஆயினும் நீயே அன்பு பெருகும்படி அருளி எமது குடி முழுவதும் ஏவல் கொண்டு ஆளவோ இந்தக் கானகத்தில் எழுந்தருளியது?''

496. என்று பலவாறு புகழ்ந்து கூறி, உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பானது கண்களின் வழியாகச் சொரிவது போல, ஆனந்தக் கண்ணீராகிய நதியோடு சிவானந்தக் கடலுள் மூழ்கி மேன்மை குன்றாத மெய்யன்பினால் வலம் வந்து துன்பம் நீங்கியவனாகிய பாண்டியன் புறம் போந்து அமைச்சர்களோடு ஓரிடத்து இருந்தான்.

காடுகளைக் களைந்து எறிதல்

497. அப்போது பாண்டிய மன்னனுடைய ஆணையால் அமைச்சர்கள் அங்குள்ள ஏவலாட்களைப் பல இடங்களிலும் அனுப்பிப் பலவகைத் தொழிலாளர்களை அழைத்து வருமாறு செய்தனர். நீண்ட காட்டினை அழித்து அழகிய நகரமாக்கும் தொழிலாளர்கள், கடல்போல ஆரவாரம் செய்து கொண்டு வந்தனர்.

498. வட்ட வாய்மதிப் பிளவின்வெள் வாய்க்கூரிய நவியம்
இட்ட தோளினர் யாப்புடைக் கச்சினர் இரும்பின்
விட்ட காரொளி மெய்யினர் விசிகொள்வார் வன்றோல்
தொட்ட காலினர் வனமெறி தொழிலின ரானார்.

499. மறியு மோதைவண் டரற்றிட மரந்தலை பனிப்ப
எறிய மோதையு மெறிபவ ரோதையும் இரங்கி
முறிய மோதையு முரிந்துவீ ழோதையு முகில்வாய்ச்
செறியு மோதையிங் கீழ்ப்பட மேற்படச் செறியும்.

500. ஒளிறு தாதொடு போதுசெந் தேனுக வொலித்து
வெளிறில் வன்மரஞ் சினையிற வீழ்வசெங் களத்துப்
பிளிறு வாயவாய் நிணத்தொடு குருதிநீர் பெருகக்
களிறு கோடிற மாய்ந்துவீழ் காட்சிய வனைய.

501. பூவ டைந்தவண் டினமயற் புறவொடும் பழனக்
காவ டைந்தன பறவைவான் கற்பக மடைந்த
கோவ டைந்திட வொதுங்குறுங் குறும்புபோற் செறிந்து
மாவ டைந்தன மாடுள வரைகளுங் காடும்.

502. இருணி ரம்பியவனமெலா மெறிந்துமெய் யுணர்ந்தோர்
தெருணி றைந்தசிந் தையின்வெளி செய்துபல் லுயிர்க்கும்
அருணி றைந்துபற் றறுத்தர ணடிநிழ லடைந்த
கருணை யன்பர்தம் பிறப்பென வேரொடுங் களைந்தார்.

498. இரும்பு போன்ற கருமையான தோற்றமுடைய அக்கலைஞர்கள், வட்டமாகிய சந்திரனது பிளவு போலும் வெள்ளிய வாயினை உடைய கூரிய கொடுவாளையும், கோடரியையும் வைத்த தோளினை யுடையவராய், இடுப்பில் கச்சினைக் கட்டியுள்ளவராய், வாரால் செய்யப்பட்ட செருப்பினைக் கால்களில் உடையவராய் இருந்தனர். அவர்கள் காடு வெட்டும் தொழிலாளர்கள்.

499. நீண்ட ஒலியை உடைய வண்டுகளின் ஓசையும், மரங்களை வெட்டுவதால் உண்டான ஓசையும், வெட்டுகின்றவர்களின் ஓசையும், அவை முரியும் ஓசையும், முரிந்து விழுகின்ற ஓசையும், இடி ஓசையைவிட அதிகம் என்று சொல்லத்தக்க அளவில் கேட்டுக் கொண்டே இருந்தன.

500. யானைகள் போர்க் களத்தில் ஒலிக்கின்ற வாயினை யுடையனவாய், நிணத்துடன் இரத்தம் பெருகத் தந்தங்கள் முரிய இறந்து கீழே விழுந்து கிடக்கும் தோற்றத்தைப் போல வெள்ளடை இல்லாத வயிரம் செறிந்த மரங்கள் மகரந்தத்துடன் மலர்களும் செந்தேனும் சிந்த ஒலி செய்து கிளைகள் முரியக் கீழே விழுந்து கிடந்தன.

501. மலர்களில் உள்ள வண்டினங்கள் பக்கத்தில் உள்ள முல்லை நிலங்களிலும், மருத நிலங்களிலும், சோலைகளிலும் சென்று சேர்ந்தன. பறவைகள் உயர்ந்த கற்பக மரங்களைச் சென்று சேர்ந்தன. பெரிய மன்னர்கள் வர, குறுநில மன்னர்கள் நீங்குவது போன்று விலங்குகள் பக்கத்தில் உள்ள காடுகளிலும் மலைகளிலும் சென்றடைந்தன.

502. இருள் நிரம்பிய காடு அனைத்தையும் வெட்டி மெய்ப்பொருளை உணர்ந்தவர்களின் தெளிந்த சிந்தையைப் போல, வெட்ட வெளியாக்கிப் பல உயிர்களிடத்தும் பேரருள் கொண்டு, இருவகைப் பற்று அறுத்துச் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்த அடியார்கள், தங்கள் பிறவியை வேரோடு களைதல்போல, மரங்களையும் வேரோடும் அகழ்ந்து எடுத்தனர்.

503. களைந்து நீணிலந் திருத்திச்செந் நெறிபடக் கண்டு
வளைந்து நன்னக ரெடுப்பதெவ் வாறெனத் தேறல்
விளைந்து தாதுகு தார்முடி வேந்தன்மந் திரரோ
டளைந்த ளாவிய சிந்தையோ டிருந்தன னங்கண்.

504. மெய்ய ரன்புதோய் சேவடி வியனிலந் தீண்டப்
பொய்ய கன்றவெண் ணீறணி மேனியர் பூதிப்
பையர் நள்ளிருட் கனவில்வந் தருளிய படியே
ஐயர் வல்லைவந் தருளினா ரரசுளங் களிப்ப.

505. கனவி லும்பெருங் கடவுளர் காண்பதற் கரியார்
நனவி லும்வெளி வந்தவர் தமையெதிர் நண்ணி
நினைவி னின்றதா ளிறைஞ்சிநேர் நின்றுநல் வரவு
வினவி யாதனங் கொடுத்தனன் மெய்யுணர் வேந்தன்.

506. தென்ன ரன்பினில் அகப்படு சித்தர்தா முன்னர்ச்
சொன்ன வாதிநூல் வழிவரு சார்புநூற் றொடர்பால்
நன்ன ராலய மண்டபங் கோபுர நகரம்
இன்ன வாறுசெய் யெனவகுத் திம்மென மறைந்தார்.

507. மறைந்தெ வற்றினு நிறைந்தவர் மலரடிக் கன்பு
நிறைந்த நெஞ்சுடைப் பஞ்சவ னிலத்துமேம் பட்டுச்
சிறந்த சிற்பநூற் புலவராற் சிவபரஞ் சுடர்வந்
தறைந்து வைத்தவா றாலய மணிநகர் காண்பான்.

503. இங்ஙனம் தேன் நிறைந்த மகரந்தமுடைய மாலையை அணிந்த பாண்டியன் மரங்களை அகழ்வித்துப் பெரிய நிலத்தைச் செப்பம் செய்து, நல்ல வழியினை உண்டாக்குவித்து வட்டமான நல்ல நகரை எப்படி உண்டாக்குவது என்று அமைச்சர்களோடு அளவளாவி சிந்தனையோடு இருந்தான்.

சிவபெருமான் பாண்டியன் முன் தோன்றுதல்

504. இறையவர், உண்மை அன்பிலே தோய்ந்த திருவடிகள் நிலத்தில் தோய, மிக வெள்ளிய திருநீற்றினை அணிந்து, விபூதிப் பையைத் தாங்கி முன்னர் கனவில் எழுந்தருளிய வண்ணமே 'சித்தராய்' அரசன் மகிழ்ச்சியடைய எழுந்தருளி வந்தார்.

505. பெரிய தேவர்களாகிய அரி, அயன் போன்றவர்கள் கனவிலும் காண்பதற்கு அரியவராகிய சித்தர், தமக்கு நினைவிலும் எளியவராய் வெளிவந்த தன்மை அறிந்த, உண்மைப் பொருளை அறிந்த மன்னன், எதிர் சென்று வணங்கி 'நல்வரவு' கூறி ஆசனம் கொடுத்தான்.

506. பாண்டியர்களின் அன்பு வலையில் அகப்படும் சித்தமூர்த்திகள் தாம் ''முன்னே கூறியருளிய முதல் நூல், வழிநூல், சார்பு நூல் ஆகிய இவைகளில் கூறிய முறையால் நன்றாகக் கோயிலும், மண்டபமும், கோபுரமும், நகரமும் செய்வாயாக'' என்று வகுத்துரைத்து விரைந்து மறைந்தார்.

ஆலயம் அமைத்தல்

507. எல்லாப் பொருள்களிலும் மறைந்துள்ள இறைவனின் மலர்போன்ற திருவடிகளில் அன்பு வைத்துள்ள பாண்டிய மன்னன், இந்நிலவுலகத்தில் உயர்ந்த சிறந்த சிற்ப நூல் வல்ல அறிவுடையோர்களால், சிவபரஞ்சோதியார் சித்தராய் எழுந்தருளிக் கூறியருளிய முறைப்படி திருக்கோயில் திருநகரம் முதலியன அமைக்கத் தொடங்கினான்.

வேறு

508. மறைபயில் பதும மண்டப மருத்த மண்டப மழை நுழை
வளைவாய்ப்
பிறைபயில் சிகைமா மண்டப மறுகாற் பீடிகை திசையெலாம்
பிளக்கும்
பறைபயி னிருத்த மண்டபம் விழாக்கொள் பன்மணி மண்டபம்
வேள்வித்
துறைபயில் சாலை திருமடைப் பள்ளி சூழுறை தேவர்தங்
கோயில்.

509. வலவயி னிமய வல்லி பொற் கோயின் மாளிகை யடுக்கிய
மதில்வான்
நிலவிய கொடிய நெடிய சூளிகைவா னிலாவிரி தவளமா
ளிகைமீன்
குலவிய குடுமிக் குன்றிவர் செம்பொற் கோபுரங் கொண்டல்கண்
படுக்குஞ்
சுலவெயில் அகழிக் கிடங்குகம் மியநூற் றொல்வரம்
பெல்லைகண் டமைத்தான்.

510. சித்திர நிரைத்த பீடிகை மறுகு தெற்றிகள் வாணிலாத் தெளிக்கும்
நித்தில நிரைத்த விழாவரு வீதி நிழன்மணிச் சாளர வொழுக்கப்
பித்திகை மாடப் பெருந்தெருக் கவலை பீடுசால் சதுக்கநற்
பொதியில்
பத்தியிற் குயின்ற மன்றுசெய் குன்று பருமணி மேடையா
டரங்கு.

508. வேதம் ஓதும் பதும மண்டபமும், அருத்த மண்டபமும்,முகில் நிறைந்த வளைந்த வாயினையுடைய பிறைமதி திகழும் மகாமண்டபமும், ஆறுகாற் பீடமும், திசைகளைப் பிளப்பது போன்ற ஒலியையுடைய நிருத்த மண்டபமும், இறைவன் திருவிழாக்கோலம் கொள்ளும் பலமணி மண்டபமும், பல துறைகளையுடைய வேள்விகள் செய்யும் யாக சாலைகளும், திருமடைப் பள்ளியும், சுற்றிலும் பரிவாரத் தெய்வங்கள் வசிக்கக் கோயில்களும் மறைநூல் வழி நின்று செய்தமைத்தான்.

509. இறைவனின் வலப்பக்கத்தில் அங்கயற்கண்ணம்மைக்குப் பொன்னாலாகிய திருக்கோயிலும், திருமாளிகை வரிசைகளை யுடைய திருமதில்களும், ஆகாயத்தை அளாவிய கொடிகளையும், வெள்ளிய நிலவைப் பிரதிபலிக்கின்ற வெண்மையான மாளிகைகளையும், விண்மீன்கள் விளங்கும் முடியினையுடைய மலைபோலும் உயர்ந்த பொன்னாலாகிய கோபுரங்களும், மேகங்கள் தங்கும் சுற்று மதில்களும் அகழிகளும் ஆகிய இவைகளைச் சிற்ப நூலின் பழைய வரம்புகளை ஆராய்ந்து செய்தான்.

நகர் அமைப்பு

510. சித்திரங்கள் எழுதப்பட்ட கடைவீதிகளும், ஒள்ளிய நிலவினைப் பிரதிபலிக்கும் வெண்முத்துகளை வரிசைப்பட அமைத்த, திருவிழாவில் இறைவன் எழுந்தருளி இருக்கும் சிறப்புமிக்க வீதிகளும், ஒளிமிக்க மணிகள் பதிக்கப்பட்ட சாளரங்கள் கொண்ட மாளிகைகள் அமைந்த பெரிய வீதிகளும், நாற்சந்தி கூடுமிடங்களும், இரண்டு தெருக்கள் கூடுமிடங்களும், நல்ல அம்பலங்களும், வரிசையாக அமைந்த மன்றங்களும், பெரிய மணிகள் அமைந்த மேடைகளும், கூத்தவைகளும் அமையச் செய்தான்.

511. அருந்தவர் இருக்கை யந்தண ருறையு ளரசரா வணங்குல வணிகப்
பெருந்தெரு நல்வே ளாளர்பே ரறஞ்சால் பெருங்குடி யேனைய கரிதேர்
திருந்திய பரிமா நிலைக்களங் கழகந் தீஞ்சுவை யாறுநான் குண்டி
இரந்தவர்க் கருத்து நல்லறச் சாலை யினையன பிறவுநன் கமைத்தான்.

512. துணிகயங் கீழ்நீர்க் கூவல்பூ வோடை தொடுகுளம் பொய்கைநந் தவனந்
திணிமலர்ச் சோலை துடவையுய் யானந் திருநகர்க் கணிபெறச் செய்து
மணிமலர்த் தாரோன் மாளிகை தனக்கம் மாநகர் வடகுண பாற்கண்
டணிநகர் சாந்தி செய்வது குறித்தா னண்ணலார் அறிந்திது செய்வார்.

513. பொன்மய மான சடைமதிக் கலையின் புத்தமு துகுத்தனர் அதுபோய்ச்
சின்மய மான தம்மடி யடைந்தார்ச் சிவமய மாக்கிய செயல்போற்
றன்மய மாக்கி யந்நகர் முழுதுஞ் சாந்திசெய் ததுவது மதுர
நன்மய மான தன்மையான் மதுரா நகரென வுரைத்தனர் நாமம்.

511. அரிய தவசிகள் தங்கும் மடங்களும், மறையோர் வசிக்கும் வீடுகளும், அரசர் வீதிகளும், சிறந்த வணிகரின் பெரிய வீதிகளும், அறம் நிறைந்த வேளாளர் மிக்க பெரிய வீதிகளும், மற்றும் குதிரை, யானை, தேர் ஆகிய இவைகள் தங்குமிடங்களும், கல்விச் சாலைகளும், இனிய அறுசுவையோடு கூடிய நால்வகை உணவுகளை உரியவர்களுக்குக் கொடுக்கும் தரும சத்திரங்களும் இன்னும் இவை போல்வன பிறவும் நன்றாக அமைத்தான்.

512. தெளிந்த நீரையுடைய சிறு குளங்களும், கிணறுகளும் மலரோடைகளும், தோண்டப்பட்ட பெரிய குளங்களும், பொய்கைகளும், நந்தவனங்களும், சோலைகளும், தோட்டங் களும் உத்தியானங்களும் ஆகிய இவற்றைத் திருநகரத்திற்கு அணி பெறச் செய்து செல்வம் நிறைந்த நகரத்திற்கு அழகு பொருந்த அமைத்தான். மலர்களாகிய அழகிய மாலையை அணிந்த பாண்டியன் தனக்கு ஓர் அரண்மனை அந்நகரத்தின் வட கீழ்த் திசையின் கண் செய்வித்தான். இங்ஙனம் பாண்டியன் நகரை அமைத்த பின் அந்நகருக்குச் சாந்தி செய்யக் கருதினான். சோமசுந்தரக் கடவுள் இதனை அறிந்து,

மதுரா நகர் என்ற பெயர் பெறுதல்

513. தம் சடையில் உள்ள பொன்மயமான சந்திரக்கலையின் புத்தமுதத்தைச் சிந்தினார். அவ்வமுதம் சிவபெருமானுடைய திருவடிகள் தம்மை அடைந்தவரைச் சிவமயமாகச் செய்த செய்கையைப் போல, அந்நகர் முழுவதையும் அமிர்த மயமாக்கித் தூய்மை செய்தது. அவ்வமுதம் நல்ல மதுரமாகிய தன்மையைக் கொண்டிருந்ததால் அந்நகருக்கு மதுராநகர் (மதுரை மாநகர்) என்னும் பெயர் கூறினர்.

514. கீட்டிசைக் கரிய சாத்தனுந் தென்சார் கீற்றுவெண் பிறை நுதற் களிற்றுக்
கோட்டிளங் களபக் கொங்கையன் னையருங் குடவயின் மதுமடை யுடைக்குந்
தோட்டிளந் தண்ணந் துழாயணி மௌலித் தோன்றலும் வடவயிற் றோடு
நீட்டிரும் போந்தி னிமிர்குழ லெண்டோ ணீலியுங் காவலா நிறுவி.

515. கைவரை யெருத்திற் கனவரை கிடந்த காட்சியிற் பொலிந்தொளிர் கோயின்
மைவரை மிடற்று மதுரைநா யகரை மரபுளி யருச்சனை புரிவான்
பொய்வரை மறையா கமநெறி யொழுகும் புண்ணிய முனிவரை யாதி
சைவரைக் காசிப் பதியினிற் கொணர்ந்து தலத்தினிற் றாபனஞ் செய்தான்.

516. உத்தம குலத்து நாற்பெருங் குடியு முயர்ந்தவும் இழிந்தவு மயங்க
வைத்தவு மான புறக்குடி மூன்று மறைவழுக் காமநு வகுத்த
தத்தம நெறிநின் றொழுகவை திகமுஞ் சைவமுந் தருமமுந் தழைப்பப்
பைத்தெழு திரைநீர் ஞாலமேற் றிலகம் பதித்தென நகர்வளம் படுத்தான்.

517. அன்றுதொட் டசர னந்நகர் எய்தி யணிகெழு மங்கல மியம்ப,
என்று தொட் டிமைக்கு மனையின்மங் கலநா ளெய்தினா னிருந்துமுப் புரமுங்,
குன்று தொட் டெய்தான் கோயின்மூன் றுறுப்புங் குறைவில்பூ சனைவழா தோங்கக்
கன்றுதொட் டெறிந்து கனியுருத் தான்போற் கலிதுரந் தரசுசெய் நாளில்.

514. பிறகு குலசேகரபாண்டியன், மதுரை மாநகரின் கிழக்குத் திசையில் கரிய நிறமுடைய ஐயனாரையும், தென் திசையில் கீற்றாகிய வெள்ளிய பிறையை ஒத்த நெற்றியினையும், யானையின் கொம்பு போன்ற இளமையான கொங்கைகளையும் உடைய 'சத்த மாதரையும்', மேற்குத் திசையில் தேன்மடை உடைத்து ஒடுகின்ற இதழ்களையுடைய பசுமையான குளிர்ந்த துழாய் மாலையை அணிந்த முடியினையுடைய 'திருமாலை' யும் வடக்குத் திசையில் மடல் நீண்ட பனையின் மலரணிந்த நிமிர்ந்த கூந்தலையும் எட்டுத் தோள்களையும் உடைய 'பத்திரகாளி' யையும் நகரத்திற்குக் காவலாக நிறுத்தினான்.

515. யானையின் பிடரியில் பொன் மலை தங்கிய தோற்றம்போல் பொலிவு பெற்று ஒளி வீசும் விமானத்தில் எழுந்தருளிய கருமையான கண்டத்தையுடைய மதுரை நாயகரை, விதிப்படி பூசை செய்யும் பொருட்டு, பொய்ம்மை நீங்குகின்ற வேதாகம நெறியில் ஒழுகுகின்ற புண்ணிய முனிவர்களையும் காசி நகரிலிருந்து அழைத்து வந்து மதுரை மாநகரில் நிலை நிறுத்தினான்.

516. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு பெருமக்களும் வேதவழி வழுவாது வகுக்கப்பெற்ற தத்தமக்குரிய ஒழுக்கத்தில் ஒழுகவும், வேதநெறியும் சைவ நெறியும் தழைத்தோங்கவும், அலைகளையுடைய கடல்சூழ்ந்த பசுமையுடைய நிலவுலகத்தில், அந்நகரம் ஒரு திலகம் போன்று விளங்கவும் அதை வளப்படுத்தினான்.

517. அன்று முதல் மன்னன் அம்மதுரை மாநகரை அடைந்து அழகு பொருந்திய மங்கல வாத்தியங்கள் முழங்க சூரியனை அளாவி ஒளி வீசும் அரண்மனையில் நன்னாளில் புகுந்து இருந்தான். பொன்மலையை வில்லாக வளைத்து மூன்று புரங்களையும் அழித்த இறைவனது திருக்கோயிலில், மூன்று அங்கங்களிலும் குறைவில்லாது பூசையானது மேலோங்க, கன்றினைப் பிடித்து விளாங்கனியை வீழ்த்திய திருமாலைப் போலத் தீமையை ஓட்டி அரசு புரிந்துவந்தான்.

518. பவநெறி கடக்கும் பார்த்திவன் கிரணம் பரப்பிளம் பரிதிபோன் மலயத்
துவசனைப் பயந்து மைந்தன்மேன் ஞாலஞ் சுமத்திநாள் பலகழித் தொருநாள்
நவவடி விறந்தோன் ஆலயத் தெய்தி நாதனைப் பணிந்துமூ வலஞ்செய்
துவமையி லின்ப வருணிழ லெய்தி யொன்றியொன் றாநிலை நின்றான்.

திருநகரம் கண்ட படலம் முற்றிற்று

4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்

519. கன்னியொரு பங்கினர் கடம்பவன மெல்லாம்
நன்னகர மானது நவின்றுமுல கீன்ற
அன்னைமக ளாகிமல யத்துவச னாகுந்
தென்னனிடை வந்துமுறை செய்ததுரை செய்வாம்.

520. மனுவறம் உவந்துதன் வழிச்செல நடத்தும்
புனிதன்மல யத்துவசன் வென்றிபுனை பூணான்
கனியமுத மன்னகரு ணைக்குறையுங் காட்சிக்
கினியன்வட சொற்கட றமிழ்க்கட லிகந்தோன்.

குலசேகர பாண்டியன் இறைவன் திருவடி அடைதல்

518. பிறவியைக்கெடுக்கும் சிறந்த வழியைப் பின்பற்றும் பாண்டியனானவன் ஒளியை வீசுகின்ற இளஞாயிறு போலும் 'மலயத் துவசன்' என்னும் மகனைப் பெற்று வளர்த்து, அவனிடம் அரசியலை ஒப்படைத்துப் பல நாள் கழித்தான். ஒன்பது வடிவங்களையும் கடந்த சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலில் சென்று வணங்கி, மும்முறை வலம் வந்து குலசேகரப் பாண்டியன் சிவத்தோடு இரண்டறக் கலக்கின்ற பேரின்பமாகிய திருவடி நிழலையடைந்தான்.

திருநகரம் கண்ட படலம் முற்றிற்று.

4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்

519. உமையொரு பாகத்து இறைவரது கடம்பவனம் முழுவதும் நன்நகரம் ஆனதைக் கூறினோம். உலகங்கள் அனைத்தையும் பெற்ற உமாதேவியார் மலயத்துவசன் என்னும் பாண்டிய மன்னனின் புதல்வியாகி அரசாட்சி செய்த திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

மலயத்துவச பாண்டியன் அன்பு

520. மலயத்துவசன் என்னும் பாண்டியன் மனுதர்மம் நிலை பெறும்படி அரசாட்சி செய்யும் தூய்மையானவன்; வெற்றியையே பூணாக அணிகின்றவன்; சுவையுடைய அமிழ்தம் அவனிடம் தங்கி இருந்தது; காட்சிக்கு இனியவன்; வடமொழியிலும் தமிழ் மொழியிலும் மிக வல்லவன்.

521. வேனில் விறல் வேள்வடிவன் வேட்கைவிளை பூமி
ஆனமட வார்கள்பதி னாயிரவர் உள்ளான்
வானொழுகு பானுவழி வந்தொழுகு சூர
சேனன்மகள் காஞ்சனையை மன்றல்வினை செய்தான்.

522. கண்ணுதலை முப்பொழுதும் வந்துபணி கற்றோன்
எண்ணில்பல நாண்மகவி லாவறுமை யெய்திப்
பண்ணரிய தானதரு மம்பலவும் ஆற்றிப்
புண்ணிய நிரம்புபரி வேள்விபுரி குற்றான்.

523. ஈறின்மறை கூறுமுறை யெண்ணியொரு தொண்ணூற்
றாறினொடு மூன்றுமக மாற்றவம ரேசன்
நூறுமக மும்புரியி னென்பதநொ டிப்பின்
மாறுமென மற்றதனை மாற்றியிது சாற்றும்.

524. நன்பொருள் விரும்பினை யதற்கிசைய ஞாலம்
இன்புறு மகப்பெறு மகத்தினை யியற்றின்
அன்புறு மகப்பெறுதி யென்றமரர் நாடன்
தன்புலம் அடைந்திடலு நிம்பநகு தாரான்.

521. வேனிற் காலத்தில் வெற்றி கொள்ளும் மன்மதன் போன்ற அழகிய தோற்றம் உடையவன். அவனுக்கு அமைந்த காமக் கிழத்தியர்கள் பதினாயிரவர். அவன், வானில் செல்லும் சூரியன் மரபில் தோன்றியவனும் தருமத்தின் வழியில் நடக்கும் தன்மையுடையவனுமான 'சூரசேனன்' என்பவனின் மகளான 'காஞ்சன மாலை'யை மணம் புரிந்து கொண்டான்.

மதவேள்வி

522. சோமசுந்தரக் கடவுளை மூன்று காலங்களிலும் வணங்கி வழிபடும் தன்மையுடையவன். இத்தகைய சிறப்புடைய மலயத்துவசன் மகப்பேறின்றிப் பல நாள் வருந்தினான். அக்குறையைப் போக்கிக் கொள்ளப் பல தருமங்களையும், தானங்களையும் செய்தான். பின்னர், புண்ணியம் நிறைந்த அசுவமேதயாகம் செய்யலுற்றான்.

523. அழிவில்லாத வேதமுறையை ஆராய்ந்து தொண்ணூற்றொன்பது யாகங்களைச் செய்து முடித்தான். அப்போது தேவேந்திரன், ''இப்பாண்டியன் நூறு யாகங்களைச் செய்து முடிப்பானாகில் நொடிப் பொழுதில் என்னுடைய இந்திர பதவி அவனுக்குப் போய்விடும்', என்று எண்ணி பாண்டிய னிடத்துச் சென்று நூறாவது அசுவமேதயாகத்தை முடிக்கா வண்ணம் தடுத்து இதனைக் கூறுகின்றான்:

524. ''பாண்டியனே! நீ நல்ல மகப்பேற்றினை விரும்பினாய். அவ்விருப்பம் நிறைவேற, உலக இன்பத்தைப் பெறுவதற்குரிய (புத்திர காமேஷ்டி) யாகத்தைச் செய்வாயாகில் நல்ல அன்புமிக்க புத்திரப் பேற்றைப் பெறுவாய்'' என்று கூறிவிட்டுத் தன் நாட்டிற்குச் சென்றுவிட்டான்.

525. மிக்கமக வேள்விசெய் விருப்புடைய னாகி
அக்கண மதற்குரிய யாவையும் அமைத்துத்
தக்கநிய மத்துரிய தேவியொடு சாலை
புக்கன னிருந்துமக வேள்விபுரி கிற்பான்.

526. ஆசரம றைப்புலவர் ஆசிரியர் காட்டும்
மாசறுச டங்கின்வழி மந்திரமு தாத்த
ஓசையநு தாத்தசொரி தந்தமுவ வோதி
வாசவ னிருக்கையி லிருந் தெரி வளர்ப்பான்.

527. விசும்புநில னுந்திசையும் வேள்வியடுசாலைப்
பசும்புகை படர்ந்தொரு படாமென மறைப்பத்
தசும்புபடு நெய்பொரி சமித்தினோடு வானோர்க்
கசும்புபடு மின்னமுதின் ஆகுதி மடுத்தான்.

528. ஐம்முக னநாதிபர மாத்தனுரை யாற்றால்
நெய்முக நிறைத்தழ னிமிர்ந்து வரு மெல்லை
பைம்முக வராவணி பரஞ்சுடர் தனிப்ப
மைம்முக நெடுங்கணிம வான்மனைவி நாண.

529. வள்ளன்மல யத்துவச மீனவன் வலத்தோள்
துள்ளமனை காஞ்சனை சுருங்கிய மருங்குல்
தள்ளவெழு கொங்கைக டதும்பநிமிர் தீம்பால்
வெள்ளமொழி கக்கரிய வேற்கணிட னாட.

525. உடனே பாண்டிய மன்னன் நலம் மிகுந்த மகயாகம்(புத்திர காமேஷ்டி) செய்யும் விருப்பத்தினால் அப்பொழுதே அவ்வேள்விக்கு வேண்டும் பொருள் அனைத்தையும் சேர்த்தான். தகுந்த நியமத்திற்குரிய மனைவியோடு வேள்விச் சாலைக்குச் சென்றிருந்து மகப்பேறு வேள்வியைச் செய்யத் தொடங்கினான்.

526. வேத நூலில் தேர்ச்சியுற்ற குற்றமற்ற ஆசிரியர் காட்டுகின்ற வழியே மந்திரங்களை எடுத்தல் (உதாத்தம்) படுத்தல் (அனுதாத்தம்) நலிதல் (சொரிதம்) என்னும் ஓசை தழுவும்படி உச்சரித்து இந்திரனின் இருப்பிடத்திலிருந்து (கீழ்த்திசையிலிருந்து) வேள்வியைச் செய்வானாயினான்.

527. யாகசாலையினின்றும் எழும்பிய வேள்விப்புகை வானிலும், நிலத்திலும், திசைகளிலும் பரவி ஒரு போர்வையைப் போல மறைத்தது. யாகத்தீயினிலே நெய், பொரி, சமித்து முதலியவற்றால் தேவர்களுக்கு ஊற்றெடுக்கும் இனிய அமுதம் போல ஆகுதி செய்தான்.

அங்கையர் கண்ணம்மை தோற்றம்

528.ஐந்து திருமுகங்களை யுடையவனும், அனாதியாய் உள்ளவனும், பரமாத்மனுமாகிய சிவபெருமானுடைய திருவாக்காகிய மறை வழிப்படி நெய்யை வேள்விக் குண்டத்தில் நிறைத்துத் தீயை வார்த்தான். அப்போது படத்தையுடைய பாம்பணிந்த சிவபரஞ்சோதி தனிக்கவும், மைதீட்டி நீண்ட கண்களையுடைய மலையரசன் மனைவியாகிய மேனை வெட்கப்படவும்.

529. வள்ளலாகிய மலயத்துவச பாண்டியனுடைய வலத்தோள் துடிக்கவும், அவள் மனைவியாகிய காஞ்சன மாலையின் நுண்ணிய இடை ஒசியும்படியும், தனங்களில் இருந்து பால் வெள்ளம் ஒழுகவும், அவளது வேல் போன்ற இடக்கண் துடிக்கவும்,

530. இவ்வுலக மன்றியுல கேழுமகிழ் வெய்தச்
சைவமுத லாயின தவத்துறை நிவப்ப
ஔவிய மறங்கெட வறங்குது கலிப்பத்
தெய்வமறை துந்துபி திசைப்புலன் இசைப்ப.

531. மைம்மலர் நெடுங்கணர மங்கையர் நடிப்ப
மெய்ம்மன மொழிச்செயலின் வேறுபடல் இன்றி
அம்மதுரை மாநகரு ளாரக மகிழ்ச்சி
தம்மையறி யாதன தலைத்தலை சிறப்ப.

532. மார்ந்தர்பயின் மூவறுசொன் மாநில வரைப்பிற்
றீந்தமிழ் வழங்குதிரு நாடது சிறப்ப
ஆய்ந்ததமிழ் நாடர சளித்துமுறை செய்யும்
வேந்தர்களின் மீனவர் விழுத்தகைமை யெய்த.

533. நொய்தழ லெரிக்கடவு ணோற்றபயன் எய்தக்
கொய்தளி ரெனத்தழல் கொழுந்துபடு குண்டத்
தைதவ ழிதழ்க்கமல மப்பொழு தலர்ந்தோர்
மொய்தளிர் விரைக்கொடி முளைத்தெழுவ தென்ன.

534. விட்டிலகு சூழியம் விழுங்குசிறு கொண்டை
வட்டமதி வாய்க்குறு முயற்கறையை மானக்
கட்டியதி னாற்றிய கதிர்த்தரள மாலை
சுட்டியதில் விட்டொழுகு சூழ்கிரண மொப்ப.

530. இந்த நிலவுலக மக்களேயன்றி ஏழு உலகில் இருப்பவர்களும் மகிழவும், தவநெறியும் சைவ நெறியும் மேலோங்கவும், பொறாமை முதலிய பாவங்கள் அழியவும், அறம் மகிழ்வடையவும், தெய்வ மறையும் துந்துபியும் எல்லாத் திசைகளிலும் ஒலிக்கவும்,

531. மைதீட்டிய மலர் போன்ற கண்களையுடைய அரம்பையர் கூத்தாடவும், அம் மதுரை நகர் மக்கள், மெய், மனம், மொழி ஆகிய மூன்றின் செயலிலும் வேறுபடாது, தம்மை அறியாமைக்குக் காரணமாகிய அகமகிழ்ச்சி மேலும் மேலும் ஓங்கப் பெறவும்,

532. மக்களின் வழக்கில் உள்ள பதினெட்டு மொழிகள் வழங்கும் பெரிய நிலஉலகத்தில் தமிழ்மொழி பேசும் நாடு சிறந்தோங்கவும், சங்கமிருந்து அரசாண்டு நீதி செலுத்துகின்ற மன்னர்களில் பாண்டியன் சிறந்த பெருமை பெறவும்.

533. தீக்கடவுள் தான் செய்த தவப்பயனை எளிதில் அடையவும், கொய்யப்பட்ட தளிர்போல அக்கினி தளிர் விட்டு எரிகின்ற வேள்விக் குண்டத்தின்கண் அழகிய விரிந்த இதழ்களையுடைய தாமரைமலர் அப்போதே மலர்ந்து தளிர்களை யுடைய மணமுள்ள கொடியொன்று முளைத்து எழுவது போலவும்,

534. ஒளிவிட்டு விளங்கும் முத்தணியால் விழுங்கப்பட்ட சிறிய கொண்டையானது வட்டமான சந்திரனிடத்தில் உள்ள முயல்போன்ற களங்கத்தைப் போலவும், அம்முத்தணியில் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒளியினையுடைய முத்துமாலை சந்திரனிட மிருந்து விழுகின்ற கிரணத்தைப் போலவும்,

535. தீங்குதலை யின்னமுத மார்பின்வழி சிந்தி
யாங்கிள நிலாவொழுகு மாரவட மின்ன
வீங்குடல் இளம்பரிதி வெஞ்சுடர் விழுங்கி
வாங்குகடல் வித்துரும மாலையொளி கால.

536. சிற்றிடை வளைந்தசிறு மென்றுகில் புறஞ்சூழ்
பொற்றிரு மணிச்சிறிய மேகலை புலம்ப
விற்றிரு மணிக்குழை விழுங்கிய குதம்பை
சுற்றிருள் கடிந்துசிறு தோள்வருடி யாட.

537. தெள்ளமுத மென்மழலை சிந்திவிள மூரல்
முள்ளெயி றரும்பமுலை மூன்றுடைய தோர்பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
எள்ளரிய பல்லுயிரும் எவ்வுலகு மீன்றாள்.

538. குறுந்தளிர்மெல் லடிக்கிடந்த சிறுமணிநூ புரஞ்சதங்கை குழறி யேங்க
நறுந்தளிர்போல் அசைந்துதளர் நடையொதுங்கி மழலையிள நகையுந் தோன்றப்
பிறந்தபெரும் பயன்பெறுபொன் மாலைமடி யிருந்தொருபெண் பிள்ளை யானாள்
அறந்தழுவு நெறிநின்றோர்க் கிகம்போகம் வீடளிக்கு மம்மை யம்மா.

539. செய்யவாய் வெளிறாது துணைமுலைக்கண் கருகாது சேல்போல் நீண்ட
மையவாய் மதர்த்தகருங் கண்பசவா தையிரண்டு மதியந் தாங்கா
தையவா லிலைவருந்தப் பெறாதுபெறு மகவையெடுத் தணைத்தாள் மோந்தாள்
துய்யவாய் முத்தங்கொண் டின்புற்றாள் முன்பெற்ற தோகை யன்னாள்.

535. குதலையுடன் கூடிய இனிய அமுதமானது மார்பின் வழியாகச் சிந்தியது போன்று இளநிலவு சிந்தும் முத்துமாலை ஒளிவிடவும், ஒளிமிக்க இளஞ்சூரியன் வெப்பமாகிய ஒளியை உண்டு, கடலில் தோன்றிய பவளத்தின் மாலையானது ஒளிவீசவும்,

536. சிறிய இடையைச் சூழ்ந்த மெல்லிய சிற்றாடையின் புறத்தே உள்ள பொன்மணிகள் பதித்த சிறிய மேகலை ஒலிக்கவும், அழகிய மாணிக்கக் குழையைத் தன் உட்படுத்திய குதம்பைகள் சூழ்ந்த இருளை ஓட்டிச் சிறிய தோள்களைத் தடவி அசையவும்.

537. அமுதம் போன்ற மழலைச் சொற்கள் தோன்றவும், புன்னகையுடைய பற்கள் வெளிப்படவும், எல்லாவுலகங்களையும் உயிர்களையும் பெற்றவளாகிய உமாதேவியார் மூன்று தனங்களையுடைய ஒரு பெண்ணாக மூன்று வயதுடன் எழுந்து வந்து நின்றாள்.

காஞ்சன மாலையின் பெருமகிழ்ச்சி

538. அறத்தைப் பேணுகின்ற நன்னெறியாளர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களையும், வீடு பேற்றையும் அளிக்கின்ற உமையம்மையார், சிறிய திருவடிகளில் உள்ள சிறிய மணிகளையும், சதங்கையும் சிலம்பும் கலந்து ஒலிக்கவும் மழலைச் சொற்களும் புன்னகையும் தோன்றவும் நறிய தளிர் அசைவது போன்று அசைந்து தளிர்நடை நடந்து சென்று தான் பிறந்ததனாலாகிய பெரும்பயனைப் பெறுகின்ற காஞ்சனமாலையின் மடியின்கண் ஒரு பெண்ணாக வீற்றிருந்தாள்.

539. சிவந்த வாய் வெளுக்காமலும், இரண்டு முலைக்கண்கள் கறுக்காமலும், சேல்மீன் போன்ற நீண்ட கரிய கண்கள் பசக்காமலும், பத்து மாதம் சுமக்காமலும் ஆலிலை போன்ற வயிறானது வருந்தப் பெறாமலும் முன்னே பெற்ற மேனையைப் போன்ற, மயில் போன்ற, சாயலையுடைய காஞ்சனமாலை தான்பெற்ற மகவை வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். உச்சி மோந்து, தூய்மையான வாயால் முத்தமிட்டு இன்பமுற்றாள்.

540 பரையாதி விருப்பறிவு தொழிலாகி யுலகமெலாம் படைத்துக் காத்து
வரையாது துடைத்துமறைத் தருளியவை நின்றுந்தன் வடிவு வேறாய்
உரையாதி மறைகடந்த வொருமுதல்வி திருமகளா யுதித்தற் கிந்தத்
தரையாளு மன்னவன்செய் தவமிதுவோ அதற்குரிய தவந்தான் மன்னோ.

541 கள்ளமா நெறியொழுகும் பொறிகடந்து கரண மெலாங் கடந்தா னந்த
வெள்ளமாம் பரஞான வடிவுடையாள் தன்னன்பின் வெளிவந் தின்றோர்
பிள்ளையாய் அவதரித்த கருணையுந்தன் மணாட்டிதவப் பேறுந் தேறான்
பள்ளமா கடற்றானைப் பஞ்சவர்கோ னெஞ்சகத்துப் பரிவு கூர்ந்தான்.

542 மகவின்றிப் பலபகல்யான் வருந்தியருந் தவம்புரிந்தேன் மைந்தற் பேறு
தகவிந்த மகஞ்செய்தேன் அதுவுமொரு பெண்மகவைத் தந்த தந்தோ
முகவிந்து நிலவொழுக வருபெண்ணு முலைமூன்றாய் முகிழ்த்து மாற்றார்
நகவந்த தென்னேயோ என்றுவகை யிலனாகி நலியு மெல்லை.

540. பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்னும் ஐவகைச் சக்திகளாகி எல்லா உலகங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐவகைத் தொழில்களைப் புரிந்து, அந்த ஐவகைச் சக்தி களினின்றும் தன்னுடைய உண்மையான வடிவம் வேறாகி, வாக்கு, மனம், வேதம் இவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கின்ற ஓர் ஒப்பற்ற தலைவியாவாள். அத்தலைவியே திருமகளாகத் தோன்றுவதற்கு அந்நிலத்தை ஆளுகின்ற மலையத்துவசப் பாண்டியன் இம்மையில் செய்த பெரும் தவமே போதுமானதாகுமா? போதாது! அதற்குப் பொருந்திய தவம் மிகப்பெரியதாகும்.

பாண்டியன் துயரம்

541. வஞ்சகர் வழியில் செல்லும் ஐம்பொறியின் உணர்வையும், அந்தக்கரணங்களின் உணர்வையும் கடந்து பேரின்ப வெள்ளப்பரஞானமே திருவுருவமாகக்கொண்ட உமையம்மையார் தமது அன்பு மிகுதியினாலே வெளிவந்து, இன்று ஒரு பெண் குழந்தையாய் அவதரித்த அருமையையும் தம் மனைவியின் தவப் பயனையும் தெரியாதவனாய்க் கடல் போன்ற சேனையையுடைய மலையத்துவசப் பாண்டியன் தன் மனத்தில் துன்பம் உடையவனாய் இருந்தான்.

542. ''நான் மகப்பேறின்றி வருந்தியபடி நெடுங்காலம் இருந்தேன். அரிய தவத்தைப் புரிந்தேன். புதல்வரைப் பெற வேண்டி இப்பெரிய யாகத்தைச் செய்தேன். ஆனால் இந்த யாகமோ ஒரு பெண் பிள்ளையைக் கொடுத்தது. அந்தோ! இந்தப் பெண்ணும் முகமாகிய மதியினின்றும் நிலவொழுகத் தோன்றி, மூன்று தனங்களுடன் பகைவர் நகைக்கத் தக்கவளாய்த் தோன்றியுள்ளாள். இஃது என்னையோ?'' என்று கருதி மகிழ்வின்றி மனம் கலங்கி இருந்தான்.

543 மன்னவநின் றிருமகட்கு மைந்தர் போற் சடங்கனைத்தும்
வழாது வேதஞ்
சொன்னமுறை செய்துபெயர் தடாதகையென் றிட்டுமுடி சூட்டு
வாயிப்
பொன்னையா டனக்கிறைவன் வரும்பொழுதோர்
முலைமறையும் புந்தி மாழ்கேல்
என்னவரன் அருளாலோர் திருவாக்கு விசும்பிடைநின் றெழுந்த
தன்றே.

544 அவ்வாக்குச் செவிநிரம்ப வன்புவகை யகநிரம்ப வகல
மெல்லாம்
மெய்வாக்கு மனமொன்ற விழிவாக்கும் புனனிரம்ப விமலற்
போற்றி
நெய்வாக்கு மகநிரப்பி யெழுந்துமனை யொடுஞ்சாலை நீத்தி
ரண்டு
கைவாக்கு மியங்கலிப்பக் கடிமாட மனைபுகுந்தான் சுழற்கால்
வேந்தன்.

545 முரசதிர்ப்ப மங்கலங்கொண் டெதிர்வருவார் முகத்துவகை
முறுவல் பூப்ப
அரசிருக்கு மண்டபம்புக் கினிதமர்ந்து கனகமழை யான்ற
கேள்வி
விரசிருக்கு மறையவர்கைப் பெய்தெவர்க்கு மம்முறையால்
வெறுப்ப நல்கிப்
பரசிருக்குங் கரதலத்தெம் பரன்கோயி னனிசிறப்புப் பல்க நல்கா.

வானொலி தோன்றல்

543. அப்போது சிவபெருமானின் திருவருளால் வானில் இருந்து ஒரு திருவாக்கு ''மன்னவ! உன்னுடைய திருமகளுக்குப் புதல்வருக்குச் செய்வதுபோல் சடங்குகள் எல்லாம் சிறிதும் வழுவாமல் வேதமுறைப்படி செய்து, 'தடாதகை' என்று பெயரிட்டு முடிசூட்டக் கடவாய்! இப்பொன்போலும் வடிவினையுடையாளுக்கு ஏற்ற கணவன் வரும்போது ஒரு தனம் தானே மறைந்துவிடும். எனவே மனம் வருந்த வேண்டா'' என்று எழுந்தது.

544. அந்த இனிய வானின் வாக்கைச் செவியில் கேட்ட மலையத்துவசப் பாண்டியன் அன்பும் மகிழ்வும் உள்ளத்தில் பெருக, மனம் மொழிமெய் ஒரு வழிப்பட, கண்களில் இருந்து பெருகும் ஆனந்தக் கண்ணீர் மார்பில் வழிய, கழலுடைய கால்களையுடைய அப்பாண்டியன், சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். யாகத்தினை முடித்துக்கொண்டு தன் மனைவியோடும் எழுந்து யாகசாலையை விடுத்து, இரண்டு பக்கங்களிலும் வாத்தியங்கள் முழங்க தன்னுடைய அரண்மனையை அடைந்தான்.

545. பிறகு முரசங்கள் முழங்கவும், எட்டு மங்கலப் பொருள்களையும் ஏந்தி எதிர் வருகின்ற மகளிரின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றவும் பாண்டியன் தன் அரசிருக்கை மண்டபத்தில் புகுந்து இனிதாக வீற்றிருந்து மறையவர்க்கும் பிறர்க்கும் பொன்னை வாரி வாரி வழங்கினான். மழுப்படையை உடைய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலில் விசேடபூசை திருவிழா முதலியன பெருகும்படி செய்வித்தான்.

546 சிறைவிடுமின் சிறைக்களமுஞ் சீத்திடுமின் ஏழாண்டு தேயத்
தீட்டும்
இறைவிடுமி னயல்வேந்தர் திறைவிடுமி னிறைநிதிய மீட்டு
மாயத்
துறைவிடுமி னறப்புறமு மாலயமும் பெருக்குமெனத்
தொழாரைக் காய்ந்த
கறைவிடுமின் னயில்வேலான் வள்ளுவனைக் கூய்முரசங்
கறங்கச் சாற்றி.

547 கல்யாண மணிமௌலி வேந்தரையுங் கால்யாப்புக் கழல நீத்துக்
கொல்யானை பரிநெடுந்தேர் அரசுரிமை தொன்முறையாற்
கொடுத்துப் போக்கிப்
பல்லாருங் கொள்கவெனப் பண்டாரந் தலைசிறந்து பசும்பொன்
னாடை
வில்லாரு மணிக்கொடும்பூண் வெறுக்கைமுத லெனைப்பலவும்
வெறுப்ப வீசி.

548 தூமரபின் வருபெருமங் கலகவிகட் கிருநிதியந் துகில்பூண்
பாய்மா
காமர்கரி பரித்தடந்தேர் முதலாய பலபொருளுங் களிப்ப நல்கிக்
கோமறுகு களிதூங்கச் சுண்ணமொடு மெண்ணெய்விழாக்
குளிப்ப நல்கி
மாமதுரா நகரன்றி மற்றுமுள நகரெங்கு மகிழ்ச்சி தூங்க.

பாண்டியன் மகிழ்வு

546. அதன் பின்பு குருதிக்கறையுடைய வேற்படையை ஏந்திய மலயத்துவசப் பாண்டியன் வள்ளுவனை அழைத்து ''சிறை செய்யப்பட்டவர்களை விட்டுவிடுங்கள், சிறைச் சாலையை இடித்து விடுங்கள். ஏழு ஆண்டுகள் வரை நாட்டில் மன்னர்களின் திறைகளை வாங்காது விடுங்கள். பொருளைத் தேடும் சுங்கத் துறையை நீக்கிவிடுங்கள். அறச் சாலைகளையும், ஆலயங்களையும் ஓங்கச் செய்யுங்கள்!'' என்று பறைசாற்றும்படி ஏவினான்.

547. பொன்னால் செய்த மணிகள் அழுந்திய முடிகளையுடைய மன்னர்களின் கால் விலங்குகளைக் கழற்றி யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும் முன் உள்ளவாறே கொடுத்துப் போக விடுத்தான். 'பலரும் எளிதில் கொள்ளக் கடவர்' என்று பண்டாரத்தைத் திறந்து பொன்னாடை களையும், ஒளிமிக்க நவமணிகளையும், அணிகலன்களையும், பொற்குவியல்களையும் வேண்டிய அளவு எடுத்துப் போகச் செய்தான்.

548. தூயமரபில் வருகின்ற பெரிய மங்கலப் பாடகர்களுக்குப் பெரும் பொருளும், ஆடைகளும், அணிகளும், குதிரைகளும், யானைகளும், குதிரை பூட்டிய தேர்களும் இவை போன்ற பிற பொருள்களையும் கொடுத்தான். அரச வீதிகளில் மகிழ்ச்சிமிக வாசனைப் பொடியையும் எண்ணெயையும் நெய்யணி விழாக் கொண்டாடுவதற்குக் கொடுத்தான். இத்தகைய பெருமகிழ்ச்சி மதுரை மாநகரில் மட்டுமின்றி மற்றைய இடங்களிலும் நிறைந்தது.

549 இவ்வண்ண நகர்களிப்ப விறைமகனுங் களிப்பெய்தி இறைவர் சொன்ன
அவ்வண்ணஞ் சாதமுதல் வினை நிரப்பித் தடாதகையென்று அழைத்துத் தேவி
மெய்வண்ண மறையுணரா விறைவிதனை மேனைபோல் மேனா ணோற்ற
கைவண்ணத் தளிர்தீண்டி வளர்ப்பவிம வான்போலக் களிக்கு நாளில்.

550 திருந்தாத விளங்குதலை யாயமோடு புறம்போந்து சிறார்க்குச் சிற்றில்
விருந்தாக மணற்சிறுசோ றட்டும்வரை யுரங்கிழித்த வேளும் வாய்வைத்
தருந்தாத விளமுலைவாய் வைத்தருத்தப் பாவைதனக் களித்தும் போதில்
வருந்தாதை யண்டமெலாஞ் சிற்றிலிழைப் பாளாய்க்கு மகிழ்ச்சி செய்தாள்.

551 தீட்டுவாள் இரண்டனைய கண்களிப்பத் தோழியர்க்குத் தெரிய வாடிக்
காட்டுவா ளெனக்கழங்கு பந்துபயின் றம்மனையுங் கற்றுப் பாசம்
வீட்டுவாண் மேலொடுகீழ் தள்ளவெமை வினைக்கயிறு வீக்கி யூசல்
ஆட்டுவாள் காட்டுதல்போ லாடினா ணித்திலத்தாம் பசைத்த வூசல்

549. இவ்வாறு நகரமெல்லாம் மகிழ்வடைய மலயத்துவசப் பாண்டியனும் மகிழ்வடைந்து, இறைவன் அசரீரியாய் அருளிச் செய்த வண்ணமே சாதகன்மம் முதலிய சடங்குகளைச் செய்து முடித்து, 'தடாதகை' என்று பெயரிட்டு மகிழ்ந்தான். முன்னர் உமாதேவியை மேனை வளர்த்தது போலக் காஞ்சனைமாலை தடாதகைப் பிராட்டியாரை முற்பிறவியில் தவம் கிடந்த அழகிய தளிர்க்கைகளால் தொட்டு வளர்த்து வந்தாள். பாண்டியன் மலையரையன் போல் மகிழ்ச்சியடைந்தான்.

தடாதகைப் பிராட்டியார் விளையாட்டு

550. தடாதகைப் பிராட்டியார் திருத்தம் இல்லாத மழலை மொழி பேசும் சிறுமிகளோடு சேர்ந்து விளையாடினார். மணலில் சிறு சோறு சமைத்துச் சிறுமியர்க்கு விருந்திட்டார். கிரவுஞ்ச மலையின் மார்பைப் பிளந்த முருகப் பெருமானும் வாயினை வைத்து அருந்தாத (உண்ணாத) தனங்களையுடைய அப்பெரு மாட்டி, தன் தனங்களில் வாய் வைத்துப் பால் உண்ணுமாறு மரப் பாவைக்குப் பாலூட்டினார். இளம் பெண்களுக்கே உரிய விளையாட்டு விளையாடினாள். பிரமனுடைய அண்டங்களை எல்லாம் நினைப்பளவில் சிற்றில் இழைக்கின்ற இறைவி, தன் தாயாகிய காஞ்சன மாலைக்கு மகிழ்ச்சியைச் செய்தாள்.

551. அடியவர்களின் பாசத்தைப் போக்குபவளாகிய உமையம்மை, தன் வாள் போன்ற இரண்டு கண்களும் களிப்படைய தோழியர்க்குத் தெரியும்படி கழங்காடலையும் பந்தாடலையும் செய்தாள். அம்மானை ஆடலையும் கற்றாள். மேலும் கீழும் புகுமாறு எங்களை வினைகளாகிய கயிற்றால் கட்டி ஊசல் போல் ஆட்டுவிக்கின்ற பெருமாட்டி, அதை இங்குக் காட்டுபவள் போல் முத்துவடத்தால் கட்டிய ஊஞ்சலில் ஆடினாள்.

552 இம்முறையாற் றாயர்க்குந் தோழியர்க்கு மகத்துவகை
யீந்தாள் ஆகி
அம்முறையாற் றாதைக்கு மகத்துவகை யீவாளா
யாத்த வாய்மைச்
செம்முறையா ரண்முதனா லிரெட்டுக் கலைமுழுதுந்
தெளிந்தா ளந்த
மெய்ம்மறையார் கலையனைத்தும் மேகலையா
மருங்கசைத்த விமலை யம்மா.

553 சொல்வாய்மைக் கலைத்தெளிவு முழுமதியைப்
பிளந்திருபாற் சொருகி யன்ன
பல்வாய்மைக் கடகரிதேர் பரியுகைக்குந் திறனுமழற்
பகழி தூர்க்கும்
வில்வாள்வச் சிரமுதற்பல் படைத்தொழிலுங் கண்டிளமை
விழுங்கு மூப்பிற்
செல்வாய்மைத் திறலரசன் றிருமகட்கு முடிசூட்டுஞ்
செய்கை பூண்டான்.

554 முடிகவிக்கு மங்கலநாள் வரையறுத்துத் திசைதோறு
முடங்கல் போக்கி
கடிகெழுதார் மணிமெளலிக் காவலரை வருவித்துக்
காவல் சூழ்ந்த
கொடியணிமா நகரெங்கும் விழாவெடுப்ப வழகமைத்துக்
குன்ற மன்ன
தொடிகெழுதோட் சுமதிதிரு மணத்தினுக்கு வேண்டுவன
சூழ்ந்து செய்தான்.

555. மங்கலதூ ரியமுழங்க மால்யானை யுச்சிமிசை வந்த பூத
கங்கைமுதல் ஒன்பதுதீர்த் தமுநிரப்பிக் கதிர் விடுபொற்
கடம்பூ சித்துப்
புங்கவரை மந்திரத்தீ வளர்த்தமுத மருத்தியெரி
பொன்னாற் செய்த
சிங்கமணி யாதனத்தை நேசித்துப் பூசித்துத் தெய்வ மேற்றி.

552. இவ்வகையான விளையாட்டுகள் மூலம் அன்னைக்கும் தோழிகளுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டி, கடவுளின் வாய்மொழியாகிய வேதங்கள் முதலாக உள்ள அறுபத்து நான்கு கலைகளையும் குற்றமற அறிந்து கொண்டாள். அந்த உண்மையாகிய வேதம் முதலிய கலைகள் அனைத்தையும் மேகலையாய் இடுப்பில் கட்டி இருந்தாள்.

553. முழு நிலவை இரண்டு பிளவாக்கி இரண்டு பக்கங்களில் செருகி வைத்தாற் போன்ற தந்தங்கள் அமைந்த கரிய நிறத்தினையுடைய யானையையும், தேரையும், குதிரையையும் செலுத்தும் வகையையும், உண்மையான கலைகளின் தெளிவையும் அறிந்தாள். கொடிய அம்புகளைப் பொழியும் வில்லும், வாட்படை, வேல்படை போன்ற படைகளின் தேர்ச்சியும் பார்த்து, வயது முதிர்ந்த தந்தையான மலயத்துவசப் பாண்டியன் தன் திருமகளுக்கு மகுடம் சூட்டும் செய்கையில் ஈடுபடத் தொடங்கினான்.

திருமுடி சூட்டு விழா

554. மலை போன்ற தோளையுடைய 'சுமதி' என்னும் அமைச்சன் முடிசூட்டுதற்குரிய மங்கலநாளை நிச்சயித்தான். திக்குகள் தோறும் ஓலைகளை அனுப்பி மாலை அணிந்து மகுடம் தரித்த மன்னர்களை வரச் செய்தான். பெரிய நகரத்தில் உள்ளோர் எவ்விடத்திதும் சிறப்புச்செய்ய ஒப்பனை செய்வித்து முடிசூட்டு விழாவிற்கு வேண்டும் பொருளை ஆராய்ந்து திரட்டினான்.

555. மங்கல வாத்தியங்கள் முழங்க, பெரிய யானையின் முடியில் வைத்துக் கொண்டு வந்த கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களையும் நிரப்பி ஒளி வீசும் பொற்குடங்களைப் பூசித்து, மந்திரத்தால் வேள்வித் தீயை வளர்த்து, தேவர்களை அவியுணவை உண்பிக்கச் செய்து, பொன்னால் செய்யப்பட்ட மணிகள் இழைத்த சிங்காதனத்தை அன்போடு பூசித்துத் தெய்வ வழிபாட்டைச் செய்தனர்.

556 திருமுடியை மதயானை மிசைவைத்து நகரைவலஞ்
செய்து பூசித்
தருமணியாற் சுடிகையிழைத் தாடகத்தாற் குயிற்றியதோர்
ஐவாய் நாகம்
பெருமணிநீள் படம்பரப்பி மிசைகவிப்ப வச்சிங்க
பீடத் தேற்றிக்
குருமணிவா ணகைமயிலைக் கும்பத்துப் புண்ணியநீர்
குளிர வாட்டி.

557 புங்கவர்மந் தாரமழை பொழியவருந் தவராக்கம்
புகலத் தெய்வப்
பங்கயமென் கொம்பனையா ராடமுனி பன்னியர்பல்
லாண்டு பாட
மங்கலதூ ரியமுழங்க மறை தழங்க மாணிக்க
மகுடஞ் சூட்டி
எங்கருணைப் பெருமாட்டிக் கரசமைச்சர் பணியுந்தன்
னிறைமை நல்கா.

558 பாலனைய மதிக்கவிகை மிசைநிழற்ற மதிகிரணம்
பரப்பி யன்ன
கோலமணிக் கவரிபுடை யிரட்டமலர் மழைதேவர்
குழாங்க டூற்றக்
காலையிளங் கதிர்கயிலை யுதித்தெனவெண் கடாயானைக்
கழுத்தில் வேப்ப
மாலைமுடிப் பெண்ணரசை மங்கலதூ ரியமுழங்க
வலஞ்செய் வித்தான்.

559 விண்ணாடு மொழிகேட்ட மகிழ்ச்சியுனுந் திருமகடன்
விளக்க நோக்கி
உண்ணாடு பெருங்களிப்புத் தலைசிறப்புச் சிலபகல்சென்
றொழிய மேனாட்
புண்ணாடு வேன்மங்கை குதுகலித்து நடிப்பத்தன்
புயமேல் வைத்த
மண்ணாடு மகட்களித்து வானாடு பெற்றானம்
மகவு பெற்றான்.

556. அழகிய திருமுடியை யானையின் தலையில் வைத்து நகரை வலம் வரச் செய்து பூசித்தனர். அதன் பின்பு அரிய மணிகளைப் பூட்டிப் பொன்னாற் செய்யப்பட்டதாகிய ஒரு ஐந்து தலை நாகமானது பெரிய மணிகளையுடைய நீண்ட படங்களைக் கவிக்குமாறு செய்த அச்சிம்மாதனத்தில் மயில் போன்ற தடாதகைப் பிராட்டியரை எழுந்தருளச் செய்து கும்பத்தில் உள்ள புண்ணிய தீர்த்தத்தினால் திருமஞ்சனம் செய்வித்தனர்.

557. தேவர்கள் மலர் மழையைப் பொழிந்தனர். அரிய முனிவர்கள் ஆசி கூறினர். தெய்வத்தன்மை பொருந்திய மெல்லிய பூங்கொத்தினைப் போன்ற அழகிய தேவ மகளிர் ஆடினர். முனிபத்தினிகள் பல்லாண்டு பாடினர். மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. வேதம் முழங்கியது. எம்பெருமாட்டியாருக்கு மணிமுடிசூட்டி அரசர்களும் அமைச்சர்களும் வணங்கப் பெறும் தலைமையைக் கொடுத்தான், வேந்தன்.

558. பால் போலும் வெண்மையான சந்திர வட்டக் குடையானது, மேலே நிழலைச் செய்யவும் அந்தச் சந்திரன் தன் கிரணங்களைப் பரப்பினாற் போல அழகிய வெண்சாமரங்கள் இரு பக்கங்களிலும் வீசவும் அமரர் கூட்டங்கள் மலர் மழை பொழியவும், காலையில் தோன்றும் இளஞாயிறு வெள்ளி மலையில் உதித்தது போல, வேப்ப மலர் மாலையை அணிந்த பெண்ணரசியராகிய தடாதகைப் பிராட்டியாரை வெள்ளை யானையின் பிடரியில் ஏற்றி மங்கல வாத்தியங்கள் ஒலிக்க நகர் வலம் செய்வித்தான்.

பாண்டியன் விண்ணுலகடைதல்

559. விண்ணுலகில் இருந்து தோன்றிய அசரீரியைக் கேட்டபோது உண்டான மகிழ்ச்சியைவிடச் செல்வப் புதல்வியாரின் மேன்மையைப் பார்த்து உள்ளத்தில் மகிழ்வு உண்டாகியது. சில நாட்கள் கழிந்தது. பகைவர்களின் தசையினை நாடுகின்ற வீரமகள் மகிழ்ந்து கூத்தாடுமாறு தன்னால் தாங்கப்பட்ட நாட்டைத் தன் புதல்வியாருக்குக் கொடுத்துவிட்ட மலையத்துவசப் பாண்டியன் வானுலகத்தை அடைந்து விட்டான்.

560 விரதநெறி யடைந்தீற்றுக் கடன்பிறவுந் தாதைக்கு விதியால் ஆற்றி
அரதனமெல் லணைமேற்கொண் டுலகமெலா மொருகுடைக்கீ ழாள்வா ளானாள்
சரதமறை யாய்மறையின் பொருளாயப் பொருண் முடிவு தானாய்த் தேனின்
இரதமெனப் பூவின்மண மெனப்பரம னிடம்பிரியா வெம்பி ராட்டி.

வேறு

561 மண்ணரசி றைஞ்ச ஞால மநுவழி புரந்து மாறன்
விண்ணர சிருக்கை யெய்தப் பெற்றபின் விடையோன் உள்ளத்
தெண்ணர சன்ன மென்னத் தென்னவ னீன்ற கன்னிப்
பெண்ணர சிருந்து நேமி யுருட்டிய பெருமை சொல்வாம்.

562 இன்னிய மியம்பு மாக்க ளெழுப்பவான் இரவி தோன்றக்
கன்னலைந் தென்னப் பள்ளித் துயிலெழீஇக் கடிநீ ராடித்
தன்னிறை மரபுக் கேற்ற நியதிமா தான மன்பு
துன்னிய கடவுட் பூசைத் தொழின்முத லனைத்து முற்றா.

563 திடம்படு மறிஞர் சூழச் சிவபரன் கோயில் முன்னிக்
கடம்படி முளைத்த முக்கட் கரும்பினை மறைவண் டார்க்கும்
விடம்பொதி கண்டத் தேனை விதிமுறை வணங்கி மீண்டு
குடம்பயில் குடுமிச் செம்பொற் குருமணிக் கோயில் நண்ணி.

560. உண்மையான மறையாய், அம்மறையின் பொருளாய், அம்மறையின் முடிவாய், தேனின் சுவை போலவும், பூவின் மணம் போலவும் இறைவனிடம இருந்து நீங்காதவர் எம்பிராட்டியார். அவர் விரத நெறியில் நின்று தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக்கடன் முதலியவற்றையும் முறைப்படி செய்து முடித்தார். உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ்ச் சிறப்புற மனு முறையில் அரசு புரியலானார்.

பிராட்டியார் ஆட்சியின் பெருமை

561. நிலஉலக மன்னர்கள் எல்லாம் வணங்கும்படி ஒரு குடைகீழ் சிறப்புற மனுமுறையில் தடாதகைப் பிராட்டியார் அரசு புரியலானார். மலயத்துவசப் பாண்டியன் விண்ணுலகம் சென்று இந்திரபதவி அடைந்தான். இறைவனுடைய திருவுள்ளத்தின்படி, அப்பாண்டியன் பெற்ற அன்னம் போன்ற பெண்ணரசியார் ஆணை செலுத்திய பெருமையை இனிக் கூறுவோம்.

562. சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகை என்று சொல்லும் காலத்திலே இனிய வாத்திய ஒலி திருச்செவி மடுக்கப் படுக்கையினின்றும் துயில் நீத்து எழுவார். பின்னர் நறுமணமுள்ள நீரிலே மூழ்குவார். தமது மன்னர் மரபுக்கு ஏற்ற நியதிப்படி தானங்களை வழங்கி அன்போடு சிவபூசை முடித்துக் கொள்வார்.

563. நல்ல அறிவினை உடைய அமைச்சர்கள் சூழ்ந்து வர சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்து, வேதமாகிய வண்டுகள் ஒலிக்கும்படி, கடம்ப மரத்தின் அடியில் முளைத்த, மூன்று கண்களையும், நஞ்சுடைய திருமிடற்றினையும் உடைய பெருமானை விதிமுறைப்படி வணங்கித் துதித்து, கலசங்களும் பொன்னாலாகிய மணிகளும் நிறைந்த தம் மாளிகையை அடைவார்.

564 அரசிறை கொள்ளுஞ் செம்பொன் அத்தாணி யிருக்கை யெய்தி
நிறைசெறி மடங்க லாறு முடங்கின நிமிர்ந்பூ தாங்க
விரைசெறி மலர்மீப் பெய்த வியன்மணித் தவிசின் மேவித்
திரைசெறி யமுதிற் செய்த பாவை போற் சிறந்து மாதோ.

565 அனிந்திதை யமுதின் சாயற் கமலினி யணங்குங் காதல்
கனிந்தபார் மகளி ராய்வந் தடைப்பைப்பொற் களாஞ்சி யேந்த
இனந்திரி பதுமக் கோயில் இருவரு மனைய ராகிப்
புனைந்தவெண் கவரிக் கற்றை யிருபுடை புரட்டி வீச.

566 செடியுட லெயினச் செல்வன் சென்னிமேற் சுமந்து சாத்துங்
கடியவிழ் மலரிற் பொன்னிக் காவலன் குடக்கோ னேனை
முடிகெழு வேந்தர் உள்ளார் முடிமிசை மிலைந்த தாமம்
அடிமிசைச் சாத்திநங்கை யாணையா றேவல்செய்ய.

567 வையுடை வாள ராகி மார்புறப் பின்னி யார்த்த
கையின ராகி யன்னை யென்றுதன் கருணை நோக்கஞ்
செய்யுமென் றிமையார் நோக்கி நோக்குமேற் செங்கை கூப்பி
உய்குந மெனவாய் பொத்தி யுழையர்தம் பணிகேட்டுய்ய.

564. அரசர்கள் தங்கி இருக்கும், பொன்னாலாகிய அத்தாணி மண்டபத்தை அடைவார். வரிசையாய் உள்ள ஆறு சிங்கங்களின் வளைந்த கழுத்தானது நிமிர்ந்து தாங்குமாறு மணம் நிறைந்த மலர் தூவப்பட்ட பெரிய மணி ஆசனத்தில் வீற்றிருந்து கடலில் தோன்றிய அமுதம் போல் காட்சியளிப்பார்.

565. அப்போது திருக்கயிலாய மலையில் அகம்படித் தொண்டு செய்யும் 'அனிந்திதை', 'கமலினி' என்ற இரு தெய்வ மகளிர் அன்புடைய மானிடப் பெண்களாய்த தோன்றி அடப்பையையும் பொற்களஞ்சியையும் ஏந்தி நின்றனர். நிறம் மாறுபட்ட தாமரைமலர்களைக் கோயிலாக உடைய திருமகளும், கலைமகளும் மானிட மகளிராகி அலங்காரம் செய்யப்பட்ட கற்றையாக உள்ள சாமரையை இருபுறமும் புரட்டி வீசினர்.

566. முடைநாற்றம் வீசும் உடம்பையுடைய வேடுவகுலத் தலைவர் கண்ணப்பர் முடியின்மேல் சுமந்துவந்து இடும் மணம் விரிந்த மலர்போல, சோழனும் சேரனும் மற்றைய முடி அரசர்களும் தங்கள் முடியின்மீது அணிந்த மாலைகளை அம்மையாரின் திருவடிகளில் வைத்து அவர் ஆணைப்படி ஏவல் செய்தனர்.

567. அவ்வாறு ஏவல் செய்வோர் கூரிய வாளை உடையவராயும், மார்பில் கட்டிய கைகளை உடையவராயும், ''எம் பிராட்டியார் எப்போது தம் அருட்பார்வையைச் செலுத்து வாரோ?'' என்று சிறிதும் இமையாது கரங்களைக் குவித்து வாய் பொத்தி அவர் ஏவலைக் கேட்பாராயினர்.

568 ஆங்கவன் மராடர் வேந்தன் அவன்கரு நாடர் வேந்தன்
ஈங்கிவன் விராடா வேந்த னிவன்குரு நாடர் வேந்தன்
ஊங்குவன் சேரன் சென்னி யுவனெனக் கோலாற் சுட்டிப்
பாங்கிரு மருங்குங் காட்டக் கஞ்சுகப் படிவ மாக்கள்.

569 செந்தமிழ் வடநூ லெல்லை தெரிந்தவர் மறைநூ லாதி
அந்தமில் எண்ணெண் கேள்வியளந்தவர் சமயமாறும்
வந்தவர் துறந்தோர் சைவ மாதவர் போத மாண்ட
சிந்தனை யுணர்வான் மாயை வலிகெடச் செற்ற வீரர்.

570 முன்னிருந் தினிய தேற்று மூத்தவர் எண்ணி யெண்ணிப்
பன்னுமைந் துறுப்பிற் கால மளந்தறி பனுவன் மாந்தர்
பின்னுமுன் னோக்குஞ் சூழ்ச்சிப் பெருந்தகைச் சுமதி யோடும்
இன்னமு தனைய கேள்வி மந்திரர் யாருஞ் சூழ.

571 கற்றறி யந்தணாளர் விருத்திகள் கடவுட் டானத்
தற்றமில் பூசைச் செல்வ மறப்புற நடக்கை யேனைச்
செற்றமில் குடிகண் மற்று மமைச்சராற் றெளிந்தும் வெவ்வே
றொற்றுவிட் டுணர்த்தும் வேறு குறையுண்டே லொறுத்துத்
தீர்த்தும்.

568. சட்டை தரித்த வடிவுடைய கஞ்சுகமாக்கள், 'அங்கு நிற்கின்ற மன்னன், மராட்டிய நாட்டு அரசன், அவ்விடம் நிற்பவன் கருடதேச மன்னன். இங்கு நிற்கும் இவன் விராடதேச வேந்தன், இவண் நிற்போன் குருநாடர் காவலன், நடுவில் நிற்பவன் சேரநாட்டின் வேந்தன், ஊங்கு நிற்பவன் சோழ மன்னன்.'' என்று இரு பக்கங்களிலும் நின்று தங்கள் கையில் உள்ள பிரம்பினால் சுட்டிக் காட்டுவர்.

569. செந்தமிழ் வடமொழி இரண்டிலும் நல்ல புலமை உடையவர்களும், வேதம் முதலிய அறுபத்துநான்கு கலை களையும் வரையறுத்து உணர்ந்தவர்களும், அறுவகைச் சமய நூல்களை உணர்ந்தவர்களும், பற்று அற்றவர்களும், சிவபெருமானின் தொண்டர்களும் மெய்ஞ்ஞானிகளும் அவ்வவையில் சூழ்ந்திருந்தனர்.

570. உறுதியான பொருளைக் கூறுகின்ற பெரியோர்களும் ஐந்து அங்கங்களையும், காலத்தையும் ஆராய்ந்து கூறகின்ற சோதிடநூல் உணர்ந்தவர்களும், முக்காலத்தையும் உணர்ந்து அதற்குரிய சூழ்ச்சித் திறத்தில் மேம்பட்ட மந்திரியாகிய 'சுமதி' உள்ளிட்ட அமைச்சர் குழுவினரும் அவையில் இருந்தனர்.

571. வேதம் முதலியவற்றை உணர்ந்த அந்தணர்களுக்கு விடப்பட்ட மானியம், கோயில்களில் நடைபெறும் பூசை சிறப்புகள், அறச்சாலை நிகழ்ச்சிகள், அவை அல்லாத வேறு குடிமக்களின் வாழ்க்கை போன்றவற்றை மந்திரிகள் மூலம் தெரிந்து கொண்டு ஒற்றர்கள் மூலம் உணர்ந்து கொண்டும், குறைகள் ஏதேனும் இருந்தால் அக்குறை செய்தவரைத் தண்டித்தும் அரசாட்சி புரிந்து வந்தார்.

572 ஆதியுத் தேசத் தானும் இலக்கண வமைதி யானுஞ்
சோதனை வகைமை யானுஞ் சொன்னநூ லனுவா தித்து
நீதியி னவற்றாற் கண்டித் தவ்வழி நிறுத்தித் தம்மில்
வாதிகள் வாதஞ் செய்யுங் கோட்டின்மேன் மகிழ்ச்சி கூர்ந்தும்.

573 பையுள பகுவாய் நாகப் பள்ளியோன் ஆதி வானோர்
கையுள வலியா லட்ட கடலமு தனைத்தும் வாரிப்
பொய்யுள மகலக் கற்ற புனிதநூற் புலவர் நாவிற்
செய்யுள விளைவித் தூட்டத் திருச்செவி தெவிட்ட வுண்டும்.

574 தொல்லைநான் மறையோர் சைவர் துறந்தவர் யார்க்கும் இன்பம்
புல்லவா னமுதுங் கைப்பப் பாகநூற் புலவ ரட்ட
முல்லைவான் முகையினன்ன வறுசுவை முரியாமூரல்
நல்லவூ ணருத்தி யன்னார் நாவிருந் தமுதுசெய்யும்.

575 எல்லவன் உச்சி நீந்து மெல்லையி னான்கு மாறும்
வல்லவர் சூதனோதி வகுத்தமூ வாறு கேள்வி
சொல்லவுண் மலர்ந்துமேனை மநுமுதற் றுறைமாண் கேள்வி
நல்லவ நயந்து கேட்டு நன்பகற் போது நீத்தும்.

576 கலைக்குரை விரிப்பார் என்ன வறுமையிற் கல்வி போலப்
புலப்படா மருங்கு னல்லா ரெந்திரப் புலவன் பூட்டி
அலைத்திடு பாவை போனின் றாடல்செய் யாடற் கண்ணும்
நலத்தகு பாடற் கண்ணு நல்லரு ணாட்டஞ் செய்தும்.

572. இலக்கியத்தாலும், இலக்கணப் புலமையாலும் சோதனை வகையாலும், பிறர் கூறிய நூற் பொருளை எடுத்து மொழிந்து, நீதி முறையோடு தாம் கூறும் உத்தேசம் முதலியவற்றாலும் அவற்றை மறுத்து, தாம் கூறியவற்றையே நிலைபெறச் செய்த வாதியராயினார் தம்முள் வாதம் புரியும் பேச்சைக் கேட்டு மகிழ்வடைவார்.

573. படத்தின்கண் பிளவையுடைய பாம்பணையில் துயில்கொள்ளும் திருமால் முதலிய தேவர்கள் கையின் வலிமையால் கடைந்த கடலில் தோன்றிய அமுதம் அனைத்தையும் வாரி உண்டதுபோல் மகிழ்வை உண்டாக்கும். அறியாமையை நீக்கக் கூடிய தூய நூல்களைக் கற்றுணர்ந்த புலவர்கள் தம் நாவன்மையால் செய்யுளில் விளையச் செய்த ‘கவி’ இன்பத்தைத் தன் திருச்செவிகளால் நுகர்ந்தார்.

574. பழமையான நான்கு வேதங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்களும், சைவர்களும், துறவிகளும் ஆகிய அனைவரும் மகிழ்வடைய, தேவாமிர்தம் கசக்கும்படியாக, சிறந்த சமையல்காரர்களால் சமைக்கப்பட்ட முல்லை அரும்பு போன்ற சாதத்தையும் அறுசுவை மிக்க கறியையும் உண்பித்து அவர்கள் தம் வாயார வாழ்த்திச் சொல்கின்ற புகழ் மொழியைச் செவிமடுத்தார்.

575. சூரியன் உச்சியை அடைந்த மதிய வேளையிலே நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் கற்றுவல்ல புலவர்கள் சூத முனிவன் கூறிப் பாகுபாடு செய்த பதினெட்டு புராணங்களையும் கூற அகமகிழ்ந்தார். மற்றும் மனுநூல் முதலிய நீதிநூல்கள் பலவற்றை விரும்பிக் கேட்டுப் பகல் பொழுதைக் கழித்தார்.

576. வறுமைக் காலத்தில் கல்வி விளங்காதது போல, கண்ணுக்குத் தோன்றாத இடையை உடைய பெண்கள், எந்திரப் புலவன் ஒருவனால் கயிற்றில் பூட்டி ஆட்டப்படுகின்ற பாவைபோல நின்று, பரதக் கலைக்குரிய நூலுக்குப் பொருள் விரிப்பார் போன்று ஆடுகின்ற ஆடலின் கண்ணும், நலம் நிறைந்த பாடலின் கண்ணும் நல்ல அருட்பார்வை வைத்திருந்தார்.

577 இன்னிலை யொழுகுத் தொல்லோர் இயற்றிய
தருமம் வேறும்
அந்நிலை நிறுத்தும் வேள்வியறம்பல வாக்கஞ் செய்ய
நன்னிதி யளித்தும் வேள்வி நடாத்தியுஞ் செல்வங் கல்வி
தன்னிரு கண்க ளாகத் தழைந்திட வளர்க்கு நாளும்.

578 ஒப்புரு முதலீ றில்லா வொருத்திதன் சத்திபெற்ற
முப்பெருந் தேவ ராலே முத்தொழி னடாத்து மென்று
செப்பலும் புகழன் றென்னிற்றென்னவன் கன்னியாகி
இப்புவி மநுவிற் காக்கும் என்பதென் பேதை மைத்தே.

வேறு

579 வரைசெய் பூண்முலைத் தடாதகை மடவரற் பிராட்டி
விரைசெய் தார்முடி வேய்ந்துதன் குடைமநு வேந்தன்
கரைசெய் நூல்வழி கோல்செலக் கன்னியாம் பருவத்
தரசு செய்தலாற் கன்னிநா டாயதந் நாடு.

580 இன்ன வாறுமை யவதரித் திருந்தனள் என்னாப்
பொன்ன வாவினர் பெறவெறி பொருநைகால் பொருப்பான்
சொன்னவாய்மை கேட் டகங்களி தூங்கினர் தொழுது
மின்னுவார்சடை முனிவரோர் வினாவுரை செய்வார்.

577. இல்லறத்தில் ஒழுகும் முன்னோர் செய்த அறங்களையும், வேள்விகளையும் விருத்தி செய்தற் பொருட்டு நல்ல திரவியங்களைக் கொடுத்தருளினார். நல்ல வேள்விகளைச் செய்து, கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் தன் இரண்டு விழிகளாகப் பாவித்தும் தன் வாழ்வைச் சிறப்புடன் அமையச் செய்துவந்தார்.

578. 'ஒப்பும் வடிவமும் முதலும் முடிவுமில்லாத சிவசக்தி, தன் 'மகேசை' முதலிய சக்திகளாலே பெறப்பட்ட அயன், அரி, அரன் என்னும் மூவராலே முத்தொழில்களையும் நடத்தி நிற்கும்' என்று கூறுதலும் பெரும் புகழ் அன்று என்றால், அச்சிவசக்தி மலயத்துவச பாண்டியன் மகளாக இந்நிலவுலகை மனுநூல் முறையால் ஆளும் என்று ஒரு புகழாகக் கூறுவதும் அறியாமை உடையதே ஆகும்.

கன்னி நாடு

579. அணிகளை அணிந்த, மலையை ஒத்த தனங்களை யுடைய தடாதகைப் பிராட்டியார், மணம் வீசுகின்ற மாலையை அணிந்த முடியினைச் சூடி குளிர்ந்த குடைநிழலில் அமர்ந்து மனுநூல் வழியே தன் அரசைக் கன்னிப் பருவத்திலேயே நடத்தியதால் அப்பாண்டிய நாடு 'கன்னிநாடு' எனப் பெயர் பெற்றது.

முனிவர்கள் வினாதல்

580. இவ்வாறு உமையம்மையார் திருவவதாரம் செய்தருளினார் என்பதை, பொன்னை விரும்பினார் பெறுமாறு அவற்றை எடுத்து வீசிய தாமிரபரணி நதியைப் பெற்ற பொதிய மலையை உடைய அகத்திய முனிவர் கூறினார். அவ் வுண்மையைக் கேட்ட மின்னலைப் போன்ற சடையை உடைய முனிவர்கள் மனம் மகிழ்ந்து வணங்கி ஒரு வினாவைக் கேட்டார்கள்.

581 திருந்து நான்மறைச் சென்னியுந் தீண்டுதற் கரிதாய்
இருந்த நாயகி யாவையும் ஈன்றவெம் பிராட்டி
விரிந்த வன்புகூர் தக்கனும் வெற்பனும் பன்னாள்
வருந்தி நோற்றலா லவர்க்கொரு மதலையாய் வந்தாள்.

582 மனித்த னாகிய பூழியன் மகளென வீங்குத்
தனித்த காரணம் யாதெனத் தபனியக் பொதுவிற்
குனித்த சேவடிக் கன்புடைக் குடமுனி யருள்கூர்ந்
தினித்த தோர்கதை கேண்மினென்று எடுத்துரை செய்வான்.

583 விச்சு வாவசு வெனுமொரு விச்சையன் பயந்த
நச்சு வாள்விழி மடந்தைவிச் சாவதி நாமம்
அச்சு வாகத மொழியினாள் அம்பிகைக் கன்பு
வைச்சு வாழ்வுறு மனத்தினா டாதையை வணங்கா.

584 ஐய வம்பிகை தன்னையான் அன்பினால் வழிபட்
டுய்ய வேண்டுமென் றாளவ னுலகெலாம் பயந்த
தையன் மந்திரந் தனைமக டனக்குப தேசஞ்
செய்ய வந்நெறி யொழுகுவாள் செப்புவாள் பின்னும்.

585 இறைவி தன்னையா தரிப்பவற் கிம்பரிற் சிறந்த
குறைவி னன்னகர் யாதெனக் கூறுவான் கேள்வித்
துறைவி ளங்கினோர் பயில்வது துவாதச முடிவென்
றறைவ ளம்பதி யவனிமேற் சிவபுர மாமால்.

581. ''தபோநிதியே! நான்கு வேதங்களின் முடிவும் தொட முடியாத பெருமை வாய்ந்த எம் இறைவியார், அளவில்லாத அன்புடைய தக்கனும், மலையரசனும் பல நாட்கள் வருந்தித் தவம் செய்தலால் அவர்கட்குப் பெண்மகவாய் வந்து தோன்றியருளினார்.

582. ''மனிதப் பிறவியாகிய பாண்டியனின் திருமகளாக இப்பூமியில் இறைவனைவிட்டு இங்கு வந்து தனித்து வந்து தோன்றியருளிய காரணம் என்ன?'' என்று வினவினர். பொன்னம்பலத்தில் ஆடுகின்ற சிவந்த திருவடிக்கண் அன்புடையவராகிய குறுமுனிவரான அகத்தியர், ''கருணை மிகுந்த இனிமையான ஒரு கதை உண்டு. அதனைக் கேளுங்கள்'' என்று சொல்லத் தொடங்கினார்:

விச்சாவதி மீனாட்சியம்மையின் பெருமை கேட்டல்

583. 'விச்சுவாசு' என்ற பெயரையுடைய ஒரு விஞ்சையன் பெற்ற, வாளை ஒத்த கண்களையுடைய பெண்ணொருத்தி இருந்தனள். அவள் பெயர் 'விச்சாவதி'. அவள் கிளி போலும் மொழியினையுடையவள். உமையம்மையிடம் அன்பு வைத்து வாழுகின்ற மனமுடையவள். ஒரு நாள் அவள் தன் தந்தையை வணங்கி,

584. ''ஐயா! நான் உமாதேவியை வழிபட்டு உய்ய வேண்டும்'' என்று கூறினாள். அவன் உலகமெல்லாம் பெற்ற உமாதேவியாரின் திருமந்திரத்தை தன் மகளுக்கு உபதேசித்தான். அவள் அதனைக் கேட்டு மகிழ்ந்து, அவ் உபதேச வழி நடக்கலுற்று, மேலும் சிலவற்றைத் தன் தந்தையிடம் கேட்டாள்.

585. ''அவ்வுமையம்மையை அன்பினால் வழிபடுவதற்கு இவ்வுலகில் குறைவில்லாத நல்லபுண்ணிய பதி யாது?'' எனக் கேட்டாள். அதற்கு விச்சுவாசு, ''துவாத சாந்தம்'' என்று கூறப்படும் பெரும் நகர் ஒன்று உள்ளது. அது கல்வி கேள்விகளில் வல்லார் வாழும் 'பூலோக சிவலோகம்' எனப்படும்.

586 சேடு தாங்குமூ வுலகினுட் சிறந்தன சக்தி
பீட மூவிரு பத்துநான் கவற்றின்முற் பீடம்
மாடம் ஓங்கிய மதுரையா மற்றது போகம்
வீடும் வேண்டிய சித்தியும் விளைப்பதென் றெண்ணா.

587 அல்லு மெல்லுவா னகர்க்கத வடைப்பின்றிச் சுவர்க்கச்
செல்வ ரங்கடைந் துமையருள் சித்தியால் வினையை
வெல்லு வாரதான் றெந்தையோ டைவர்கள் வேண்டி
நல்வ ரம்பல வடைந்தனர் நமர்களந் நகரில்

588 எம்மை யாரையும் யாவையும் ஈன்றவங் கயற்கண்
அம்மை யாவரே யாயினு மன்பினா தரிப்போர்
இம்மை யாகிய போகம்வீ டெண்ணியாங் கெய்தச்
செம்மை யாகிய வின்னருள் செய்துவீற் றிருக்கும்.

589 என்ற தாதையை யிறைஞ்சினாள் அநுச்சைகொண்
டெழுந்தாள்
மன்றன் மாமலர் வல்லிபோல் வழிக்கொடு கானங்
குன்ற மாறுபின் கிடப்பமுன் குறுகினா ளன்பின்
நின்ற வாதியெம் பரையரு ணிறைந்தவந் நகரில்

590 அடைந்தி ளம்பிடி யாடல்போல் ஆடக கமலங்
குடைந்து நான்மறைக் கொழுந்திடங் கொண்டுறை
குறிப்பாற்
படர்ந்த பொன்மலை வல்லியைப் பணிந்துவெங் கதிரோன்
றொடர்ந்த வான்சுறா மதியமே யாதியாத் தொடங்கா.

586. பெருமையுடைய மூன்று உலகங்களிலும், மேம்பாடுடைய சக்தி பீடங்கள் அறுபத்து நான்காகும். அவற்றில் முதற் பீடம், ஓங்கிய மாளிகைகளை யுடைய மதுரையாகும். போகத்தையும், வீடுபேற்றையும் வேண்டுவோர் வேண்டிய சித்திகளையும் அளிக்க வல்லது அப்பதியாகும்.

587. இரவும் பகலும் அந்நகரின் கதவுகள் அடைபடாமல் இருப்பதால் துறக்க வாழ்க்கையுடைய தேவர்கள் அங்குச் சென்று அங்கயற்கண்ணம்மை அருளுகின்ற சித்தியினால் வினைப் பகையை வெல்லுவார்கள். அதுமட்டுமின்றி நம்மவர்கள் ஐவர் தந்தையுடன் அவ்வுமையம்மையாரை வணங்கி, பல நல்ல வரங்களைப் பெற்றுள்ளனர்.

588. எம்மையும், மற்றுள்ள யாவரையும், யாவற்றையும் பெற்ற அங்கயற்கண்ணம்மையானவர் அன்பினால் வழிபடுவோர் எவராயினும் அவர்கள் எண்ணிய வண்ணமே இம்மைப் பயனாகிய போகத்தையும், வீடுபேற்றையும் அடையுமாறு இனிய கருணை பொழிந்து வீற்றிருப்பார்'.

விச்சாவதியின் நெறியான நோன்பு

589. என்று கூறி முடித்த தந்தையை வணங்கி, விடைபெற்று எழுந்து, மணமும், பெருமையும் உடைய மலர்க்கொடி போல் நடந்து, கானகம், மலை, ஆறு இவற்றைக் கடந்து, அடியார்களின் அன்பில் நிலை பெற்றுத் தங்கிய பராசக்தியின் திருவருள் நிறைந்த மதுரையைப் போய்ச் சேர்ந்தாள்.

590. மதுரையை அடைந்து, பெண் யானை நீராடுவது போன்று பொற்றாமரைக் குளத்தில் நீராடினாள். நான்கு வேதங் களின் தலைவனாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தினிடம் படர்ந்த அங்கயற்கண்ணம்மையை வணங்கி சூரியன் மகர ராசியில் புகுந்த மாதமான தைமாதம் முதற் கொண்டு விரதம் தொடங்கினாள்.

வேறு

591 பெரும்பக னல்லூண் கங்குலூ ணுதவப் பெற்றவூ ணிலைமுதற் பல்லூண்
அரும்பொடி யெஃஃஞண் சாந்திரா யணமா னைந்துபா னறியநீர் தருப்பை
இரும்புத னுனிநீர் காலிவை நுகர்ந்து மியற்றரும் பட்டினி யுற்றும்
வரம்புறு விராறு திங்களு நோற்று வாடிமேல் வருஞ்சுறா மதியில்.

592 சந்நிதி யடைந்து தாழ்ந்துநின் றிளமாந் தளிரடிக் காஞ்சிசூழ் கிடந்த
மின்னிகர் மருங்குல் இழையிடை நுழையா வெம்முலைச் செம்மலர்க் காந்தட்
பொன்னிரை வளைக்கை மங்கலக் கழுத்திற் பூரண மதிக்கலை முகத்தின்
இன்னிசை யளிசூ ழிருட்குழற் கற்றை யிறைவியை யிம்முறை நினையா.

593 கோலயாழ்த் தெய்வம் பராய்க்கரங் குவித்துக் கொழுஞ்சுடர்ப் பசுங்கதிர் விளக்கம்
போல நூற் பொல்லம் பொத்து பொன் னிறத்த போர்வைநீத் தவிழ்கடி முல்லை
மாலைமேல் வீக்கிப் பத்தர்பின் கிடப்ப மலர்க்குழ றோய்சுவற் கிடத்திச்
சேலைநேர் விழியாண் மாடகந் திரித்துத் தெறித்தனன் பண்ணறிந் திசைப்பாள்.

591. தை மாதத்தில் பெரிய பகல் உணவை உட்கொண்டும், மாசித் திங்களில் இரவில் உணவு உட்கொண்டும், பங்குனியில் உதவப் பெற்ற உணவு உட்கொண்டும், சித்திரையில் இலை முதல் பல வகை உணவுகளை உட்கொண்டும், வைகாசியில் எள் பொடியை உண்டும் ஆனியில் சாந்திராயண நோன்பின் உணவு உண்டும், ஆடியில் பஞ்ச கவ்வியமாகிய உணவு கொண்டும், ஆவணியில் பாலை அருந்தியும், புரட்டாசியில் நல்ல நீரைக்குடித்தும், ஐப்பசியில் புல்நுனியில் உள்ள நீரைப் பருகியும், கார்த்திகையில் காற்றை உண்டும், மார்கழியில் பட்டினியாய் இருந்தும் இவ்வாறு பன்னிரண்டு மாதமும் செய்து தவம் புரிந்து நோன்பிருந்த்தாள்.

592. மேல் வரும் தை மாதத்தில் 'விச்சாவதி' அங்கயற்கண்ணமையின் சந்தியை அடைந்து, வணங்கி நின்று, மனத்திலே மாவின் தளிர் போன்ற திருவடிகளையும், மின்னலை ஒத்த இடையினையும், நெருங்கி இருக்கும் திருத்தனங்களையும், செம்பொன்னால் இழைக்கப் பெற்ற வளைகளையுடைய திருக்கரங்களையும், மங்கல நாண் அணிந்த திருக்கழுத்தினையும், சந்திரன் போன்ற திருமுகத்தினையும், வண்டுகள் மொய்க்கும் கூந்தலையும் உடைய தேவியை இவ்வாறு பாதாதிகேசமாகத் தியானித்தாள்.

593. மீனை ஒத்த கண்களையுடைய விச்சாவதியானவள் அழகிய யாழிற்குரிய தெய்வத்தைத் (மாதங்கி) துதித்து, இளஞாயிற்றின் ஒளி போல் விளங்கும் நூலால் தைத்த பொன்னிறத்தையுடைய போர்வையைக் கழற்றி, இதழ் விரிந்த மணமுடைய முல்லை மலர்மாலையைச் சூட்டி, பூவையணிந்த கூந்தல் தேய்ந்த பிடரியில் சார்த்தி, முறுக்காணியை முறுக்கி நரம்பைத் தெறித்து பண்ணின வகையை அறிந்து பாடத் தொடங்கினாள்.

வேறு

594 ஒளியா லுலகீன் றுயிரனைத்து மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்க ணன்னே கன்னி யன்னமே
அளியால் இமவான் றிருமகளா யாவி யன்ன மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து விளையாட் டயருஞ்
செயலென்னே.

595 அண்டக் குவைவெண் மணற்சிறுசோ றாக்கித் தனியே
விளையாடுங்
கொண்டற் கோதாய் படி யெழுத லாகா வுருவக் கோகிலமே
கொண்டற் குடுமி யிமயவரை யருவி கொழிக்குங்
குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும் விளையாட் டயரும்
வனப்பென்னே.

596 வேத முடிமேல் ஆனந்த வுருவாய் நிறைந்து விளையாடு
மாத ரரசே முத்தநகை மானே யிமய மடமயிலே
மாத ரிமவான் றேவிமணி வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து விளையாட் டயரும் பரிசென்னே.

வேறு

597 யாழியன் மொழியா லிவ்வழி பாடி யேத்தினா ளாகமெய் யுள்ளத்
தாழிய வன்பின் வலைப்படு கருணை யங்கயற் கண்மட
மானோர்
சூழிய நுழைமெல் லிளங்குழற் குதலைத் தொண்டைவாய்
அகவைமூன் றெய்தி
வாழிளங் குழவி யாகியா லயத்து வந்துநின் றாள்வரங்
கொடுப்பாள்.

594. ''தனது ஒளியினால் உலகங்கள் அனைத்தையும் பெற்று எல்லா உயிர்களும் பக்குவப்பட, மீன் போல் பாதுகாத்து கருணையுடன் வளர்க்கின்ற அழகிய கயல் போன்ற கண்களையுடைய தாயே! கன்னிப் பருவமுடைய அன்னமே! நீ கருணையால் மலையரையன் திருமகளாகி, அன்னங்களையும், மயில்களையும், நாகணவாய்ப் பறவைகளையும், பொருள் தெரியாத மழலைத் சொற்களையுடைய கிளிகளையும் வளர்த்து விளையாடும் செயல் யாது குறித்தோ?

595. ''அண்டக் கூட்டங்களை வெண் மணல் சோறாக்கித், தனியே விளையாடுகின்ற மேகம் போன்ற கூந்தலையுடைய தாயே! எழுத முடியாத அளவு அழகு வாய்ந்த வடிவமுடைய குயிலே! முகில் தவழும் முடியினையுடைய, அருவி ஒதுக்கிய குளிர்ந்த முத்துக்களால் மழலைச் சொல்லுடைய விளையாட்டுப் பெண்களோடும் நீ விளையாடுகின்ற அழகென்னவோ?

596. ''வேத முடியின் மேல் ஆனந்த உருவமாய் விளையாடுகின்ற பெண்ணரசியே! முத்து நகை சிந்தும் மானே! இளமையாகிய மயிலே! அழகிய மலையரசன் தேவியாகிய மேனையின் மார்பிலும் தோள்களிலும் அடிமலர் சிவக்குமாறு குதித்து விளையாடுகின்ற தன்மை யாது குறித்தோ?

அம்பிகை அருள் புரிதல்

597. யாழில் அமைந்த இசைப்பாட்டால் இங்ஙனம் பாடித்துதிக்க, உண்மையான உள்ளத்தில் ஆழ்ந்த அன்பாகிய வலையில் அகப்படுகின்ற கருணையுடைய இளமானைப் போன்ற அங்கயற்கண்ணம்மை ஒரு கொண்டை அணியுடைய கூந்தலையும், மழலைச் சொல்லையும், கொவ்வைக்கனி வாயையும் மூன்று ஆண்டினையுமுடைய இளமையாகிய பெண் குழந்தை வடிவமாய், விச்சாவதி வேண்டிய வரத்தைக் கொடுப்பதற்குத் திருக்கோயிலின் கண் வந்துநின்றருளினார்.

598 இறைஞ்சியஞ் சலித்தா டன்னையெம் மன்னை யாதுவேண்
டினையென வென்றும்
நிறைந்தபே ரன்பு நின்னடிப் போதி னீங்கலா நிலைமைதந்
தருளென்
றறைந்தன ளின்னும் வேண்டுவ தேதென் றருளவிம் மகவுரு
வாகிச்
சிறந்துவந் தென்பால் அருள்சுரந் திருக்கத் திருவுளஞ்
செய்யெனப் பணிந்தாள்.

599 சிவபரம் பரையு மதற்குநேர்ந் தருள்வா டென்னவர் மன்னனாய்
மலயத்
துவசனென் றொருவன் வருமவன் கற்பின் றுணைவியாய்
வருதியப் போதுன்
தவமக வாக வருவலென் றன்பு தந்தனள் வந்தவா றிதுவென்
றுவமையில் பொதியத் தமிழ்முனி முனிவர்க் கோதினான்
உள்ளவா றுணர்ந்தார்.

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம் முற்றிற்று.

5. திருமணப்படலம்

600 தரைபுகழ் தென்னன் செல்வத் தடாதகைப் பிராட்டி தானே
திரைசெய்நீர் ஞாலங் காத்த செயல்சிறி துரைத்தேன் றெய்வ
விரைசெய்பூங் கோதை மாதை விடையவன் மணந்து பாராண்
டரசுசெய் திருந்த தோற்றம் அறிந்தவா றியம்ப லுற்றேன்.

598. வணங்கி கை குவித்து நிற்கும் விச்சாவதியை நோக்கி, எம் அன்னையாகிய மீனாட்சியம்மை, ''நீ யாது விரும்பினாய்?'' என்று திருவாய் மலர்ந்தருளினார். விச்சாவதி, ''அம்மையே! நினது திருவடித் தாமரையில் என்றும் நீங்காத பேரன்பு வேண்டும்'' என்று வேண்டினாள். ''இன்னும் வேண்டுவது யாது?'' என்று அன்னை அருள, விச்சாவதி, ''இக்காட்சி தந்த குழந்தை திருவுருவத்திலே, அடியாளிடத்துத் தோன்றிக் கருணை கூர்ந்திருக்கும்படி திருவுளம் கொண்டருள்க'' என்று வணங்கி நின்றாள்.

599. சிவ சக்தியாகிய அங்கயற்கண்ணம்மையும் அவ்வேண்டுகோளுக்கு உடன்பட்டு அருள் செய்கின்றாள். ''இந் நகரத்திலே பாண்டியர் மரபில் மலயத்துவசன் என்பான் ஒருவன் வந்து தோன்றுவான். நீ அவனுடைய மனைவியாய் வருவாய்; அப்போது நாம் உம்முடைய தவப் புதல்வியாக வருவோம்'' என்று கருணை கூர்ந்தார். அம்மை பாண்டியனின் மகளாக வந்த முறை இதுவென்று, பொதிய மலையை உடைய அகத்திய முனிவர் இதனை மற்ற முனிவர்களுக்குக் கூறினார். அவர்களும் உணர்ந்து கொண்டார்கள்.

தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப்படலம் முற்றிற்று.

5. திருமணப் படலம்

600. பூமியில் உள்ளோர் போற்றும் மலயத்துவசப் பாண்டியனின் மகள் தடாதகைப் பிராட்டியார் கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகைத் தனியாகக் காத்தருளிய திருவிளையாடலைக் கூறினோம். அப்பிராட்டியாரை, இடப வாகனமுடைய சிவபெருமான் திருமணம் செய்தருளி இந்நிலவுலகை ஆண்டு அரசுசெய்து இருந்த திருவிளையாடலை அறிந்தவாறு இனிக் கூறுவோம்.

601 காயிரும் பரிதிப் புத்தேள் கலியிரு டுமிப்பச் சோதி
பாயிருங் குடைவெண் டிங்கட் படரொளி நீழல் செய்ய
மாயிரும் புவனம் எல்லா மநுமுறை யுலக மீன்ற
தாயிளங் குமரி யாகித் தனியர சளிக்கு நாளில்.

602 மருங்குறேய்ந் தொளிப்பச் செம்பொன் வனமுலை யிறுமாப் பெய்தக்
கருங்குழற் கற்றை பானாட் கங்குலை வெளிறு செய்ய
இரங்குநல் யாழ்மென் றீஞ்சொல் இன்னகை யெம்பி ராட்டிக்
கருங்கடி மன்றல் செய்யுஞ் செவ்விவந் தடுத்த தாக.

603 பனிதரு மதிக்கொம் பன்ன பாவையைப் பயந்தா ணோக்கிக்
குனிதர நிறையப் பூத்த கொம்பனாய்க் கின்னுங் கன்னி
கனிதரு செவ்வித் தாயுங் கடிமணப் பேறின் றென்னாத்
துனிதரு நீரள் ஆகிச் சொல்லினாள் சொல்லக் கேட்டாள்.

604 அன்னைநீ நினைந்த வெண்ண மாம்பொழு தாகும் வேறு
பின்னைநீ யிரங்கல் யான்போய்த் திசைகளும் பெருநீர் வைப்பும்
என்னது கொற்ற நாட்டி மீள்வலிங் கிருத்தி யென்னாப்
பொன்னவிர் மலர்க்கொம் பன்னாள் பொருக்கென எழுந்து போந்தாள்.

காஞ்சனையின் கவலை.

601. ஒளிவீசும் பெரிய திகிரியையுடைய சூரியன் துன்பமாகிய இருளைப் போக்கவும், பெரிய வெண்குடையாகிய சந்திரன் படர்ந்த ஒளியாகிய நிழலைச் செய்யவும், பெரிய உலகங்களை எல்லாம் மனுநூல் வழி அவ்வுலகங்களைப் பெற்றெடுத்த உமையம்மையார் இளைய கன்னியாய் இருந்து தனி அரசு புரிந்து வந்தார்.

602. இடையானது தேய்ந்து மறையுமாறு, சிவந்த பொன்னிறம் வாய்ந்த கொங்கைகள் பணைத்து இருக்கவும், கரிய கூந்தல் கற்றை நள்ளிரவின் கருமையை வெண்ணிறமாக மாற்றவும், யாழின் இசை போன்ற இனிய சொல்லையும் புன்னகையையும் உடைய பிராட்டிக்குத் திருமணம் செய்யும் பருவமானது வந்து எய்தியது.

603. குளிர்ந்த சந்திரனைப் போன்ற பிராட்டியாருக்குத் தாயான காஞ்சனமாலை பிராட்டியாரைப் பார்த்து, ''பூங்கொம் பினைப் போன்ற உனக்கு, கன்னிப்பருவம் முதிர்ந்த சிறப்புடைய தாகியும் இன்னும் திருமணம் நடைபெறவில்லை'' என்று கூறி வருந்தினாள். அதனைக் கேட்டு பிராட்டியார் தன் தாயிடம் கூறத் தொடங்கினார்.

604. ''தாயே! நீ எண்ணிய எண்ணம் ஆகும்போது தான் ஆகும். அதனால் நீ வீணே வருந்தவேண்டா. நான் எட்டுத் திசைகளிலும் சென்று, இப்பூவுலகம் முழுவதும் என் வெற்றியை நாட்டி வருவேன். நீ இங்கு இருப்பாயாக'' என்று கூறி விரைந்து எழுந்த பிராட்டியார் போருக்கு விரைந்து சென்றார்.

605 தேம்பரி கோதை மாதின் றிருவுளச் செய்தி நோக்கி
ஆம்பரி சுணர்ந்த வேந்த ரமைச்சரும் பிறரும் போந்தார்
வாம்பரி கடாவித் திண்டேர் வலவனுங் கொணர்ந்தான் வையந்
தாம்பரி வகல வந்தா ளேறினாள் சங்க மார்ப்ப.

606 ஆர்த்தன தடாரி பேரி யார்த்தன முருடு மொந்தை
ஆர்த்தன வுடுக்கை தக்கை யார்த்தன படகம் பம்பை
ஆர்த்தன முழவந் தட்டை யார்த்தன சின்னந் தாரை
ஆர்த்தன காளந் தாளம் ஆர்த்தன திசைக ளெங்கும்.

607 வீங்கிய கொங்கை யார்த்த கச்சினர் விழிபோற் றைப்ப
வாங்கிய சிலையே றிட்ட கணையினர் வட்டத் தோல்வாள்
தாங்கிய கையர் வைவேற் றளிர்க்கையர் பிணாத்தெய் வம்போல்
ஓங்கிய வாயத் தாரு மேறினார் உடனத் திண்டேர்.

608 கிடைப்பன வுருளாற் பாரைக் கீண்டுபா தலத்தின் எல்லை
அடைப்பன பரந்த தட்டா லடையவான் றிசைக ளெட்டும்
உடைப்பன வண்ட முட்டி யொற்றிவான் கங்கை நீரைத்
துடைப்பன கொடியாற் சாரி சுற்றுவ பொற்றிண் டேர்கள்.

அம்மையார் திக்கு விசயத்திற்குப் புறப்படுதல்.

605. மணம் மிக்க மாலையை அணிந்த பிராட்டியாரின் திருவுள்ளக் குறிப்பை உணர்ந்து அவருக்கு ஆக்கம் உண்டாகும் தன்மையை அறிந்து அரசர்களும், மந்திரிகளும் பிறரும் வந்தார்கள். தேர்ப்பாகனும் விரைந்து தாவிச் செல்லும் குதிரைகளைப் பூட்டித் தேரைக் கொணர்ந்தான். உலகமானது துன்பத்தில் இருந்து விடுபட அவதரித்த எம்பிராட்டியார் சங்குகள் ஒலிக்க அத்தேரில் ஏறியருளினார்.

606. தடாரிகளும், பேரிகைகளும் ஒலித்தன. முருடுகளும், மொந்தைகளும் முழங்கின, உடுக்கைகளும் தக்கைகளும் ஆர்த்தன. படகங்களும் பம்பைகளும் ஒலித்தன. முழவங்களும் தட்டைகளும் ஆர்த்தன. சின்னங்களும் தாரைகளும் ஒலித்தன. காளங்களும் தாளங்களும் முழங்கின. இவற்றின் ஒலி எட்டுத் திசைகளிலும் கேட்டது.

607. மெய்க்காவலாக விளங்கும் அழகிய பெண்களில் சிலர் தங்கள் பெரிய தனங்களில் கட்டிய கச்சினை உடையவர் களாயும், சிலர் தங்கள் கண்களைப் போலத் தைக்குமாறு, வில்லினைப் பூட்டிய அம்பினை உடையவர்களாயும் சிலர் கேடகத்தையும், வாளையும் ஏந்தியவராயும், சிலர் வேலை ஏந்திய தளிர்போன்ற கையை யுடையவராயும், பெண் தெய்வம் போன்ற தோற்றத்துடன் பிராட்டியாருடன் தேரில் ஏறினார்கள்.

608. இடப்புறம், வலப்புறம் சுழலும் தன்மையுடைய பொன்தேர்கள், உருளைகளால் நிலவுலகத்தைத் தோண்டி பாதாள உலகை அடைப்பன போன்றும், இடம் விரிந்த தட்டினால் பெரிய திக்குகள் எட்டனையும் முற்றும் தகர்ப்பன போன்றும், கொடிகளால் அண்டத்தைப் பெரிதும் அளாவி ஆகாய கங்கையின் நீரை வற்றச் செய்வன போன்றும் அதிர்ந்து சென்றன.

609 செருவின்மா தண்டந் தாங்கிச் செல்லும்வெங் கூற்ற மென்ன
அருவிமா மதநீர் கால அரத்தவெங் குருதிக் கோட்டாற்
கருவிவான் வயிறு கீண்டு கவிழுநீர் வாயங் காந்து
பருகிமால் வரைபோற் செல்வ பரூஉப்பெருந் தடக்கை யானை.

610 ஒலியவார் திரையின் அன்ன ஒழுங்கின யோக மாக்கள்
வலியகா லடக்கிச் செல்லு மனமெனக் கதியிற் செல்வ
கலியநீர் ஞாலங் காப்பான் கடையுக முடிவிற் றோற்றம்
பொலியும்வாம் புரவி யொன்றே போல்வன புரவி வெள்ளம்.

611 காலினுங் கடிது செல்லுஞ் செலவினர் கடுங்கட் கூற்ற
மேலினு மிகையுண் டாயின் வெகுண்டுவெந் கண்டு மீளும்
பாலினர் பகுவாய் நாகப் பல்லினும் பில்கு மால
வேலினர் வீயா வென்றி வீக்கிய கழற்கால் வீரர்.

612 எண்புதைத் தெழுந்த வீரர் இவுளிதேர் யானை வெள்ளம்
மண்புதைத் தனப தாகை மாலைவெண் கவிகை பீலி
விண்புதைத் தனநுண் டூளி வெயில்விடு பரிதிப் புத்தேள்
கண்புதைத் தனபே ரோதை கடலொலி புதைத்த தன்றே.

609. பெரிய கைகளையுடைய யானைகள், அருவி நீரைப் போன்று மதநீர் பொழியவும், சிவந்த உதிரம் தோய்ந்த கொடிய கொம்புகளால் மேகத்தின் வயிற்றைக் கிழித்து, அதனால் ஒழுகும் நீரினை வாயினால் உண்டு, போரினில் பெரிய தண்டாயுதத்தை ஏந்திச் செல்லும் யமனைப் போலவும் பெரிய மலையைப் போலவும் சென்றன.

610. ஒலியினையுடைய நீண்ட கடல் அலைகளின் ஒழுங்கினை உடையன போலவும், யோகிகள் வலிய காற்றை அடக்கி ஒருவழிப்படச் செலுத்தச் செல்லும்மனம் போலவும், ஒலிக்கும் கடல் சூழ்ந்த இந்நிலவுலகைக் காக்கும் பொருட்டுக் கலியுக இறுதியில் தோன்றும் குதிரையைப் போன்ற ஒத்த தோற்றமுடைய குதிரைக் கூட்டங்கள் பாகரின் வசமாகி ஒரு வழிப்பட்டு விரைந்து சென்றன.

611. சிறந்த வெற்றியினையும், வீரகண்டை கட்டப்பட்ட காலினையும் உடைய வீரர்கள், வீரம்மிக்க கூற்றுவனையும் புறம் காணும் தன்மையர். அவர்கள் பாம்பின் பல்லைவிடக் கொடிய நஞ்சினைச் சிந்தும் வேற்படையை உடையவரும், காற்றினும் வேகமாகச் செல்லும் தன்மையை உடையவரும் ஆவர்.

612. இவ்வாறு எண்ணிக்கையற்ற வீரர், குதிரை, தேர், யானை என்ற நால்வகைப் படையும் பூமியை மறைக்கும்படி விரைந்து சென்றன. பெரும் கொடிகளும் மாலையை உடைய குடைகளும், மயிற் பீலிகளும் வானுலகை மறைத்தன. படை செல்வதால் எழுந்த நுண்ணிய புழுதிகள் கதிரவன் கண்களை மறைத்தன. போருக்குச் செல்லும் பேரொலி கடலின் ஒலியை மறைத்தது.

613 தேரொலி கலினப் பாய்மான் செலவொலி கொலைவெண் கோட்டுக்
காரொலி வீரர் ஆர்க்குங் கனையொலி புனைதார்க் குஞ்சி
வாரொலி கழற்காற் செங்கண் மள்ளர்வன் றிண்டோள் கொட்டும்
பேரொலி யண்ட மெல்லாம் பிளந்திடப் பெருத்த வன்றே.

614 பரந்தெழு பூழி போர்ப்பப் பகலவன் மறைந்து முந்நீர்
கரந்தவன் போன்றா னாகக் கங்குல்வந் திறுத்த தேய்ப்பச்
சுரந்திரு ணிறைய முத்தின் சோதிவெண் குடையும் வேந்தர்
நிரந்தபூண் வயிர வாளு நிறைநிலா வெறிக்கு மன்னோ.

615 தேர்நிரை கலனாய்ச் செல்லப் பரிநிரை திரையாய்த் துள்ள
வார்முர சொலியாய்க் கல்ல வாட்கலன் மீனாய்க் கொட்பத்
தார்நிரை கவரிக் காடு நுரைகளாய்த் ததும்ப வேழங்
கார்நிரை யாகத் தானைக் கடல் வழிக் கொண்ட தன்றே.

616 கள்ளவிழ் கோதை மாதர் எடுத்தெறி கவரிக் காடு
துள்ளவந் தணர்வா யாசி யொருபுறந் துவன்றி யார்ப்பத்
தெள்விளி யமுத கீத மொருபுறந் திரண்டு விம்ம
வள்ளைவார் குழையெம் மன்னை மணித்திண்டேர் நடந்த தன்றே.

613. தேர் செல்லும் ஒலியும், யானைகள் செல்லும் ஒலியும், வீரர்கள் ஆர்க்கும் ஒலியும், மாலை அணிந்த கூந்தலையும் வீரக்கண்டை அணிந்த கால்களையும் சிவந்த கண்களையும் உடைய வீரர்கள் தங்கள் தோள்களைத் தட்டுகின்ற ஒலியும் ஒன்று சேர்ந்து பேரொலியாகி அண்டங்கள் பிளவுபடுமாறு ஒலித்தன.

614. படைகள் செல்லும் பொழுது எழுந்த புழுதியில் கதிரவன் கடலில் மறைந்தவன் போலானான். அதனால் இருள்வந்து எங்கும் நிறைய அவ்விருளினை, முத்துக் குடைகளும் வேந்தர்களின் வயிரவாள்களும் நிறைந்த முழு நிலவினைப் போன்று ஒளி வீசிப் போக்கின.

615. சேனையாகிய கடலில் தேர்கள் மரக்கலங்களைப் போல் சென்றன. குதிரைகளின் வரிசைகள் அலைகளைப் போல் துள்ளின. முரசங்களின் பேரொலி கடல் ஒலியைப் போல் ஒலித்தன. வாட்படைகள் மீனாய்ச் சுழன்றன. வெள்ளிய மலர் வரிசையை உடைய சாமரைக்காடுகள் நுரைகளைப் போல் மேலெழுந்து தோன்றின. யானையின் வரிசைகள் கடல்நீர் உண்ணும் மேகக் கூட்டங்களைப்போல் சென்றன. இத்தகைய தோற்றத்துடன் சேனைக் கடலானது வழி நடந்தது.

தடாதகைப் பிராட்டியார் செல்லும் காட்சி

616. தேனையுடைய மலர்மாலையை அணிந்த மகளிர் எடுத்து வீசிய கவரியானது ஒருபுறம் துள்ளியது. மறையவர்கள் தம் வாயால் சொல்லும் வாழ்த்து ஒருபுறம் கேட்டது. இசைப்பாடல்கள் ஒருபுறம் திரண்டு மறுபுறம் ஒலித்தது. நீண்ட காதினையுடைய தடாதகைப் பிராட்டியாரின் மணித் தேரானது இவ்வாறு விரைந்து சென்றது.

617 மீனவன் கொடியுங் கான வெம்புலிக் கொடியுஞ் செம்பொன்
மானவிற் கொடியும் வண்ண மயிற்றழைக் காடுந் தோட்டுப்
பானலங் கருங்கட் செவ்வாய் வெண்ணகைப் பசுந்தோ ணிம்பத்
தேனலம் பலங்கல் வேய்ந்த செல்விதேர் மருங்கிற் செல்ல.

618 மறைபல முகங்கொண் டேத்தி வாய்தடு மாறி யெய்ப்ப
நிறைபரம் பரைநீ யெங்க ணிருபர்கோன் மகளாய் வையம்
முறைசெய்து மாசு தீர்ப்பாய் அடியனேன் முகத்து மாசுங்
குறையென நிழற்றுந் திங்கட் கொள்கைபோற் கவிகை காப்ப.

619 அங்கய னோக்கி மான்றேர்க் கணித்தொரு தடந்தேர் ஊர்ந்து
வெங்கதிர் வியாழச் சூழ்ச்சி மேம்படு சுமதி யென்போன்
நங்கைதன் குறிப்பு நோக்கி நாற்பெரும் படையுஞ் செல்லச்
செங்கையிற் பிரம்பு நீட்டிச் சேவகஞ் செலுத்திச் செல்ல.

620 அலகினாற் கருவிச் சேனை யாழ்கடல் அனைத்துந் தன்போல்
மலர்தலை யுலக மன்றி மகபதி யுலக மாதி
உலகமும் பிறவுஞ் செல்ல வுலப்பிலா வலிய தாக்கித்
திலகவா ணுதலாள் மன்னர் திருவெலாங் கவரச் செல்வாள்.

617. வலிய மீன் கொடியும், புலி எழுதிய கொடியும் பெரிய வில் கொடியும், அழகிய மயிற்பீலிக் கூட்டமும், அழகிய நீலோற்பல மலர் போன்ற சிவந்த வாயையும், வெள்ளிய பற்களையும், பசிய தோள்களையுமுடைய, வண்டுகள் ஒலிக்கும் வேப்பமலர் மாலையை அணிந்த பிராட்டியாரின் தேரின் பக்கத்தில் சென்றன.

618. நிழலைச் செய்கின்ற சந்திரனானது, ''அம்மையே! வேதங்கள் பலமுறை ஒலித்தும் உன்னைக் காண்பதற்கு இயலாது வாய் தடுமாறி இளைக்குமாறு எங்கும் நிறைந்த சிவசக்தியாகிய நீ, எங்கள் வழித்தோன்றலாகிய மலயத்துவசப் பாண்டியனுக்குத் திருமகளாய்த் தோன்றிச் செங்கோலாச்சி உலகத்திலுள்ள குற்றங்களைப் போக்குகின்றாய். அதுபோல அடியேனுடைய முகத்தில் உள்ள களங்கத்தையும் போக்கியருள்க!'' என்று வேண்டுவது போல வெண்கொற்றக் குடை நிழலைச் செய்தது.

619. வியாழ பகவான் சூழ்ச்சியினும் பெரிய சூழ்ச்சியையுடைய 'சுமதி' என்னும் முதல் அமைச்சன், பிராட்டியாரின் தேருக்கு அருகில் தான் ஏறிய பெரிய தேரைச் செலுத்தி, அப் பிராட்டியாரின் திருக்குறிப்பினை ஆராய்ந்து, நால்வகைச் சேனைகளையும், கையில் உள்ள பிரம்பினால் நீட்டிச் சுட்டிக்காட்டி சேவகம் செலுத்திச் சென்றான்.

620. கடல் போன்ற நால்வகைப் படைகளையும் இந்த நிலவுலகம் மட்டுமேயன்றி இந்திர உலகம் போன்ற உலகங்களிலும் செல்லுமாறு செய்து, திலகம் அணிந்த ஒளி பொருந்திய நெற்றியையுடைய பிராட்டியார், பகையரசர்களின் செல்வமனைத்தையும் கொள்ளை கொள்ளப் போவாராயினர்.

621 கயபதி யாதி யாய வடபுலக் காவல் வேந்தர்
புயவலி யடங்க வென்று புழைக்கைமான் புரவி மான்றேர்
பயன்மதி நுதல்வே லுண்கட் பாவையர் ஆயமோடு
நயமலி திறையுங் கொண்டு திசையின் மேனோட்டம்
வைத்தாள்.

622 வார்கழல் வலவன் றேரை வலியகால் உதைப்ப முந்நீர்
ஊர்கல னொப்பத் தூண்ட வும்பர்கோ னனிகத் தெய்திப்
போர்விளை யாடு முன்னர்ப் புரந்தரன் மிலைந்த தும்பைத்
தார்விழ வாற்றல் சிந்தத் தருக்கழிந் தகன்று போனான்.

623 இழையிடை நுழையா வண்ணம் இடையிற வீங்கு கொங்கைக்
குழையிடை நடந்து மீளுங் கொலைக்கணார் குழுவுந் தான
மழைகவிழ் கடாத்து வெள்ளை வாரண மாவுங் கோவுந்
தழைகதிர் மணியுந் தெய்வ தருக்களுங் கவர்ந்து மீண்டாள்.

வேறு

624 இவ்வாறு மற்றைத் திசைகாவலர் யாரையும் போய்த்
தெவ்வாண் மைசிந்தச் செருச்செய்து திறையுங் கைக்கொண்
டவ்வா றுவெல்வாள் எனமூன்றர ணட்ட மேருக்
கைவார் சிலையான் கயிலைக்கிரி நோக்கிச் செல்வாள்.

வடநாட்டவர்களை வெல்லுதல்.

621. வடநாட்டில் உள்ள கஜபதி, துரகபதி, நரபதி முதலான மன்னர்களை எல்லாம் அவர்களின் தோள்வலி கெடுமாறு வென்றார். தொளையினையுடைய துதிக்கை யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும், அரைமதியை ஒத்த நெற்றியினையும், வேல் போன்ற கண்களையுமுடைய பெண்கள் கூட்டத்துடன் நலம் நிறைந்த திரைப் பொருளையும் ஏற்றுக் கொண்டு, திசை காப்பாளர் மேல் போர் செய்ய எண்ணினார்.

622. வலிய காற்றானது உதைத்துத் தள்ள, கடலில் விரைந்து செல்லும் கப்பலைப்போன்று, நீண்டவீரக் கண்டை என்னும் அணியைக்காலில் அணிந்த தேர்ப்பாகன் தேரினைச் செலுத்த, தேவர்க்கு அரசனான இந்திரன் படையை அடைந்து, போரினைத் தொடங்கு முன்னரே, இந்திரன் தான் அணிந்திருந்த தும்பை மாலை கீழே விழவும் அவன் வலிமை கெடவும் போர்க் களத்தில் இருந்து வெளியேறினான்.

623. மெல்லிய இடையையும், நெருங்கிய தனங்களையும், கொல்லும் தன்மை உடையவை போன்ற கண்களையும் உடைய பெண்கள் கூட்டமும், மழை போல் மதத்தைக் கொட்டுகின்ற வெள்ளை யானையும், குதிரையும், காமதேனுவும், சிந்தாமணியும், தெய்வத் தன்மையுடைய கற்பகம் முதலிய தருக்களையும் கவர்ந்து கொண்டு திரும்பினார்.

624. இவ்வாறே மற்றைய திசைக் காப்பாளர்கள் அனைவரிடமும் சென்று அவர்கள் வீரம் கெடுமாறுபோரிட்டு வென்று அவர்கள் தருகின்ற திரைப் பொருளைப் பெற்றுக் கொண்டு திரும்பினார். அப்படியே வெற்றி பெற வேண்டும் என்று கருதி, மூன்று மதில்களை அழித்த, மேருமலையை வில்லாக உடைய சிவபெருமானுடைய கைலாய மலையை நோக்கிச் செல்வாராயினர்.

625 சலிக்கும் புரவித் தடந்தேருடைத் தம்பி ராட்டி
கலிக்கும் பலதூ ரியங்கைவரை தெய்வத் திண்டேர்
வலிக்கும் பரிமள் ளர்வழங்கொலி வாங்கி நேர
ஒலிக்கும் படிகிட் டினளூழிதொ றோங்கு மோங்கல்.

626 வானார் கயிலை மலையான்மக டன்னை நீத்துப்
போனாள் வந்தாளென் றருவிக்கட் புனலுக் கந்நீர்
ஆனா வொலியா லனைவாவென் றழைஇத் தன்றேசு
தானா நகையாற் றழீஇஎதி ரேற்பச் சென்றாள்.

627 கிட்டிப் பொருப்பைக் கிரியோடு கிரிக டாக்கி
முட்டிப் பொருதால் எனவேழ முழங்கிப் பாயப்
புட்டிற் புறத்தார் மறத்தார்கணை பூட்டு வில்லார்
வட்டித் துருமே றெனவார்த்து வளைந்து கொண்டார்.

628 ஓடித் திருமா மலைகாவல ரும்பர் ஆர்க்கும்
நாடிப் பணிதற் கரிதாகிய நந்தி பாதங்
கூடிப் பணிந்தித் திறங்கூறலுங் கொற்ற வேனந்
தேடிக் கிடையா னுளந் தேர்ந்தன னந்தி யெந்தை.

கயிலை மலையைப் பிராட்டியார் வளைத்தல்

625. விரைந்து செல்லுகின்ற குதிரைகளைப் பூட்டிய தேரினையுடைய தடாதகைப் பிராட்டியார், ஒலிக்கின்ற பல வாத்தியங்கள் ஒலியையும், யானைகளும், வலிய தேர்களும், எண்ணியபடி செல்லுகின்ற குதிரைகளும் வீரர்களும் செல்லுகின்ற ஒலியையும் ஏற்றுக் கொண்டு எதிரொலி செய்யுமாறு ஊழிக்காலம் தோறும் வளருகின்ற கயிலாய மலையை அடைந்தார்.

626. திருக்கயிலை மலையானது, 'மலையரசன் புதல்வியாகிய பார்வதி தேவியார் அன்று தன்னைவிட்டு நீங்கிப் போயினவர் இன்று திரும்பி வந்தார்', என்று அருவியாகிய கண்ணீரைச் சிந்தின. அந்நீரின் ஒலியானது 'அன்னையே! வா!' என்றழைத்துத் தன்னுடைய வெண்மையான புன்முறுவலால் தழுவி எதிர்கொள்ளுமாறு அம்மையார் சென்றருளினார்.

627. இவ்வாறு திருக்கைலாய மலையை நெருங்கியவுடன் மலைகள் மலைகளோடு மோதியது போன்று யானைகள் யானைகளோடு மோதின. வீரத்தினையுடையவரும், அம்புக் கூடுகளை முதுகில் தாங்கிக் கணை பூட்டிய வில்லையுடையவரும் இடியேற்றைப் போல ஆரவாரமாகச் சூழ்ந்து கொண்டனர்.

628. அதனைக் கண்ட, அத்திருக்கயிலை மலையின் காவலர்கள் விரைந்து சென்று, காலமறிந்து தேவர்களும் வணங்குவதற்கு அருமையாகிய திருநந்திதேவரின் திருவடிகளை அடைந்து வணங்கி இச்செய்தியினை விண்ணப்பித்தனர். அந்த நந்திதேவர் எம்பெருமானான இறைவனுடைய திருவுள்ளக் குறிப்பினை ஆராய்ந்து அறிந்தார்.

629 வென்றிக் கணத்தை விடுத்தான்கனன் மீது பெய்த
குன்றிக் கணம்போற் சுழல்கண்ணழல் கொப்ப ளிப்பச்
சென்றிக் கனைய மொழியாள்பெருஞ் சேனை யோடும்
ஒன்றிக் கடலுங் கடலும்பொருவ தொத்தது அன்றே.

630 சூலங் கண்மழுப் படைதோமர நேமி பிண்டி
பாலங் கள்கழுக் கடைவாட்படை தண்ட நாஞ்சில்
ஆலங் கவிழ்க்கின் றவயிற்படை வீசி யூழிக்
காலங் கலிக்குங் கடல்போன்ற களம ரார்ப்பு.

631 எறிகின் றனவோச் சுவவெய்வன வாதி யாகச்
செறிகின் றனபல் படைசெந்நிறப் புண்ணீர் மூழ்கிப்
பறிகின் றனவும் பிழைக்கின்றனவும் பட்டுத் தாக்கி
முறிகின் றனவு முயன்றார்வினைப் போகம் ஒத்த.

632 தெரிசிக் கவந்த சில தேவர் சிறைப்புள் ஊர்தி
வெருவிப் பறந்த வொழிந்தோர்விலங் கூர்தி மானங்
கருவிப் படையாற் சிதைபட்டன கால னூர்தி
குருதிப் புனலுக் கதுகொற்றவை யுண்ட தென்ன.

சிவ கணங்களுடன் போர் செய்தல்.

629. அவ்வாறு அதனை அறிந்து கொண்ட திருநந்தி தேவர் வெற்றி பொருந்திய பூதகணங்களை அனுப்பினார். அப் பூதகணங்கள் குன்றிமணிக் கூட்டம் போல் சுழலும் கண்களில் இருந்து அனல்வீச, இனிய மொழி பேசும் பிராட்டியாரின் பெரும் சேனையோடு ஒன்று கலந்து போர் புரியும் காட்சியானது கடலும் கடலும் தம்முட் போர் செய்வதைப் போன்றிருந்தது.

630. வீரர்கள், சூலங்கள், மழுவாட் படைகள், பெரிய ஈட்டிகள், சக்கரங்கள், எறிபடைகள், சிறிய ஈட்டிகள், வாட் படைகள், தண்டங்கள், கலப்பைகள், வேற்படைகள் முதலிய வற்றை ஒருவர் மேல் ஒருவர் வீசி ஆரவாரிக்கும் ஆரவாரங்கள் ஊழிக்காலத்தில் ஒலிக்கும் கடலின் ஒலிகளை ஒத்தன.

631. எறியப்படுவனவும், வீசப்படுவனவும், எய்யப்படுவனவும் ஆகிய பலவகைப் படைகளில் சில சிவந்த நிறத்தினையுடைய உதிரத்தில் மூழ்கி மறைந்து போயின. உடம்பில் தாக்காது தவறிப் போனவைகளும், உடம்பில் பட்டு முறிந்து போயினவைகளும் 'முயன்று செய்தவர்களின் இருவினைக்கு ஈடாக வரும் பயனைப் போல்,' விளங்கின.

632. இவ்வாறு போர் நடந்து கொண்டிருக்கும் போது, கயிலைமலையில் சிவபெருமானைத் தரிசித்து வணங்குவதற்கு வந்த திருமால் முதலியவரின் பறவை ஊர்திகள் அஞ்சிப் பறந்தன. மற்றைத் தேவர்களின் விலங்கு ஊர்திகளும் விமானங்களும் படைக்கலங்களினால் சிதைந்தன. காளியினால் கொல்லப்பட்ட அரசனாகிய கடாவானது குருதி ஒழுகியது போல, கூற்றுவனின் ஊர்தியான எருமைக்கடா குருதிநீரைக் கக்கியது.

633 பொருகின் றதுகண் டுவிச்சாதரர் போகம் வீடு
தருகின் றவனைத் தொழவானெறி சார்ந்து நேரே
வருகின் றவர்வே றுவழிக்கொடு போவர் அன்புக்
குருகின் றளிர்மெல் லடியாரொடு மூற்ற மஞ்சா.

634 திங்கட் படைசெங் கதிரோன்படை சீற்றம் ஏற்ற
அங்கிப் படைதீம் புனலான்படை நார சிங்க
துங்கப் படைசிம் புணெடும்படை சூறைச் செல்வன்
வெங்கட் படைபன் னகவெம்படை மாறி விட்டார்.

635 கொட்புற் றமரா டுமிக்கொள்கையர் தம்மி னந்தி
நட்புற் றவர்கைப் படைதூட்பட ஞானமூர்த்தி
பெட்புற் றருள வருமெங்கள்பி ராட்டி வெய்ய
கட்புற் றரவிற் கணைமாரிக டூற்றி நின்றாள்.

636 கையிற் படையற் றனர்கற்படை தொட்டு வீரர்
மெய்யிற் படுகென் றுவிடுக்குமுன் வீரக் கன்னி
பொய்யிற் படுநெஞ் சுடையார்தவம் போல மாய
நெய்யிற் படுவச் சிரவேலைநி மிர்த்து வீசி.

637 துண்டம் படவே துணித்தக்கண வீரர் தம்மைத்
தண்டங் கொடுதாக் கினள்சாய்ந்தவர் சாம்பிப் போனார்
அண்டங் கள்சரா சரம்யாவையுந் தானே யாக்கிக்
கொண்டெங் குநின்றாள் வலிகூற வரம்பிற் றாமோ.

633. போகத்தையும் வீடுபேற்றையும் அளிக்கின்ற இறைவனைத் தரிசிக்க எண்ணி வானின்வழி வருகின்ற வித்தியாதரர்கள், போர் நடைபெற்றுக் கொண்டிருத்தலைக் கண்டு, தமக்குத் துன்பம் உண்டாகும் என்றெண்ணி அஞ்சி அன்பினால் உருகுகின்ற தளிர் போல மெல்லிய அடிகளையுடைய பெண்களோடு வேறு வழியில் திருக்கயிலையை அடைந்தார்கள்.

634. இரு திறத்துப் படையினரும், திங்கட் படைக்குச் செங்கதிரோன் படையும், அக்கினிப் படைக்கு, வருணப்படையும், நரசிம்மப் படைக்கு நீண்ட சரபப்படையும், கொடிய முனையையுடைய வாயுப் படைக்கு, கொடிய நாகப் படையுமாக மாறி மாறி விடுத்தனர்.

635. அப்பொழுது நந்தியெம் பெருமானிடம் அன்பு பூண்ட படை வீரர்களின் கையில் ஏந்தி இருந்த படைகளை, ஞான வடிவினனாகிய எம்பெருமான் - சிவபெருமான் விரும்பியருள, வருகின்ற பிராட்டியார் தம் கொடிய கணைகளிலிருந்து பாம்பினைப் போன்று அம்பு மழையினைச் சொரிந்து தூளாக்கினார். இத்தன்மையோடு இரு திறத்துப் படைகளும் போரிட்டன.

636. கையில் உள்ள படைகள் அழிந்தவுடன், சிவகண வீரர்கள், கற்களை எடுத்துப் பிராட்டியாரின் படைவீரர்களின் உடம்பில் படுமாறு வீசினார். அவர்களின் உடம்பில் படு முன்னரே, 'பொய்மையுடைய மனத்தினர் செய்யும் தவம் அழிவதுபோல'ப் பிராட்டியார் அவற்றை நெய்பூசிய வச்சிரப் படையை ஓங்கி வீசி அக்கற்களை அழித்தார்.

637. பிராட்டியார் அக்கணவீரர்களின் படைகளைத் துண்டு துண்டாகத் துணித்தார். பிறகு அச்சிவ கணங்களைத் தண்டப் படையால் அடித்தார். அவர்கள் வலிமையிழந்து புறம் கொடுத்து ஓடினர். அண்டங்களையும், அவற்றின் சராசரங்கள் எல்லா வற்றையும் தாமே தோற்றுவித்து, அவை எல்லாவற்றிலும் கலந்திருக்கும் பராசக்தியின் வலிமையை நாம் கூறுவதற்கு இயலுமோ? இயலாது.

638 படையற் றுவிமா னமும் பற்றற வற்றுச் சுற்றுந்
தொடையற் றிகன்மூண் டெழுதோள்வலி யற்றுச் செற்றம்
இடையற் றுவீர நகையற்றடல் ஏறு போலும்
நடையற் றடைவார் நிலைகண்டன னந்தி யண்ணல்.

639 உடயா னடிதாழ்ந் திவையோதலும் ஒத நீத்தச்
சடையா னிளவா ணகைசெய்து தருமச் செங்கண்
விடையான் சிலையா னி கல்வென்றி விளைக்குந் தெய்வப்
படையா னெழுந்தா னமராடிய பாரிற் சென்றான்.

வேறு

640 மேவி யாகவப் பாரிடைப் பாரிட வீரரை யமராடி
ஒவி லாவலி கவர்ந்தது மன்றினி யுருத்தெவர் எதிர்ந்தாலுந்
தாவி லாவலி கவரவு மடங்கலின் றனிப்பிணா வெனநிற்குந்
தேவி யார்திரு வுருவமுஞ் சேவகச் செய்கையு
மெதிர்கண்டான்.

641 ஒற்றை வார்கழற் சரணமும் பாம்பசைத் துடுத்த
வெம் புலித்தோலுங்
கொற்ற வாண்மழுக் கரமும்வெண் ணீறணி கோலமுந்
நூன்மார்புங்
கற்றை வேணியுந் தன்னையே நோக்கிய கருணைசெய்
திருநோக்கும்
பெற்றதன்வலப் பாதியைத் தடாதகைப் பிராட்டியும்
எதிர்கண்டாள்.

638. படைக்கலங்களை இழந்தும், ஊர்திகளை இழந்தும், அணிந்த மாலைகள் அழிந்தும், தோள்வலி அழிந்தும், சினம் அழிந்தும், வீரச்சிரிப்பு அழிந்தும், வலிமைமிக்க ஆண்சிங்கம் போன்ற நடை அழிந்தும் வருகின்ற வீரர்களின் அவல நிலையை திருநந்தி தேவர் கண்டார்.

பிராட்டியார் சிவபெருமானைக் காணல்.

639. உடனே நந்திதேவர் இறைவனின் திருமுன் சென்று திருவடிகளை வணங்கி, இந்நிகழ்ச்சிகளைக் கூறினார். இதனைக் கேட்ட சடையில் கங்கையைக் கொண்ட இறைவன், ஒளிமிக்க புன்முறுவலைச் செய்தார். பின்னர் சிவந்த கண்களையுடைய அற ஏற்றினையுடையவராய், வில்லையுடையவராய், போரில் வெற்றியைத் தரும் தெய்வத் தன்மையுடைய படைகளை யுடையவராய், எழுந்து போர் செய்யும் களத்திற்குச் சென்றார்.

640. போர்களத்தில் பூத கண வீரர்களோடு போர் புரிந்து அவரை வெற்றி கொண்டதும் அல்லாமல், 'இனி மேல் சினந்து எவர் எதிரே வரினும் அவரின் வலிமையைப் போக்கி, வெற்றி கொள்ள நிற்கின்ற பெண் சிங்கத்தைப் போன்ற அம்மையாரின் திருவுருவத்தை நேரில் சென்று கண்டார்.

641. வீர கண்டையை அணிந்த திருவடியையும், பாம்பாகிய கச்சினால் இறுகக் கட்டப்பட்டுள்ள புலித்தோலையும், வெற்றியையும் ஒளியையும் உடைய மழுப்படை ஏந்திய திருக்கரத்தையும், திருநீறு தரித்த கோலத்தினை யுடைய பூணூலணிந்த திருமார்பையும், திரண்ட சடையையும், தன்னையே பார்க்கின்ற அருள்புரியும் திருக்கண்களையும் உடைய இறைவரின் வலப்பாதியைத் தடாதகைப் பிராட்டியார் நேரில் கண்டார்.

642 கண்ட வெல்லையில் ஒருமுலை மறைந்தது கருத்தினாண் மடனச்சங்
கொண்ட மைந்திடக் குனிதர மலர்ந்தபூங் கொம்பரி னொசிந்தொல்கிப்
பண்டை யன்புவந் திறைகொளக் கருங்குழற் பாரமும் பிடர்தாழக்
கெண்டை யுண்கணும் புறவடி நோக்கமண் கிளைத்துமின் னெனநின்றாள்.

643 நின்ற மென்கொடிக் ககல்விசும் பிடையர னிகழ்த்திய திருமாற்றம்
அன்ற றிந்தமூ தறிவனாஞ் சுமதிசீ றடிபணிந் தன்னாயிக்
கொன்றை யஞ்சடைக் குழகனே நின்மணக் குழகனென் றலுமன்பு
துன்ற நின்றவட் பார்த்தருட் சிவபரஞ் சோதிமற் றிதுகூறும்.

644 என்று தொட்டுநீ திசையின்மேற் சயங்குறித் தெழுந்துபோந் தனையாமும்
அன்று தொட்டுநம் மதுரைவிட் டுனைவிடா தடுத்துவந் தனமுன்னைத்
தொன்று தொட்ட நான் மறையுரை வழிவரு சோமவா ரத்தோரை
நன்று தொட்டநாண் மணஞ்செய வருதுநின் னகர்க்குநீ யேகென்றான்.

645 என்ற நாதன்மேல் அன்பையு முயிரையு மிருத்தியா யஞ்சூழக்
குன்ற மன்னதேர் மேற்கொடு தூரியங் குரைகட லெனவார்ப்ப
நின்ற தெய்வமால் வரைகளும் புண்ணிய நீத்தமு நீத்தேகி
மன்றன் மாமது ராபுரி யடைந்தனல் மதிக்குல விளக்கன்னாள்.

642. அவரைக் கண்டவுடன் அம்மையாரின் ஒரு தனம் மறைந்தது. உடனே அவர் உள்ளத்தில் நாணமும் அச்சமும் மடமும் உண்டாயின். வளையும்படி பூத்த கொடி போன்ற இடை துவளவும், பழைய அன்பானது மீண்டும் மனதில் வந்து தங்கவும், கரிய கூந்தலானது பிடரியில் சரியவும், மையுண்ட கண்கள் பாதங்களை நோக்கவும் மண்ணைத் தன் திருவிரலால் கீறிக்கொண்டு மின்னலைப் போல் நின்றார்.

643. மெல்லிய கொடிபோல் நின்ற பிராட்டியாரிடம், தான் முன்னாளில் அசரீரியாய் வானத்தில் கேட்ட இறைவனின் திருவாக்கினை மனத்தில் கொண்டு 'சுமதி' என்ற அமைச்சன் சென்று அவர் திருவடியை வணங்கி, ''தாயே! கொன்றை மாலையை அணிந்த, அழகிய சடையையுடைய சிவபெருமானாகிய இப்பேரழகனே, நின் மணாளனாவான்,'' என்று கூறினான். இதனைக் கேட்ட சிவபரஞ்சுடராகிய இறைவர், பிராட்டியாரை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

இறைவர், பிராட்டிக்கு அருளுதல்

644. ''நீ எந்தக் காலம் முதல் திசைகளின் மேல் போர் செய்யப்புறப்பட்டாயோ, அந்தக்காலம் முதல் நானும் நம்முடைய மதுரையை விட்டு உன்னைச் சற்றும் பிரியாது தொடர்ந்து வந்தோம். பழைய நான்மறைகளில் கூறியபடி வருகின்ற திங்கள்கிழமையன்று நல்ல முகூர்த்தம் கூடிய பொழுதில் திருமணம் செய்ய வருவோம். நீ உன் நகரமாகிய மதுரைக்குச் செல்வாயாக!'' என்று கூறியருளினார்.

645. அவ்வாறு கூறிய தலைவனிடம் அன்பையும், உயிரையும் வைத்த தடாதகைப் பிராட்டியார் பெண்கள் கூட்டம் புடைசூழத் தேரின் மேல் எழுந்தருளிக் கடல் ஒலி போல் வாத்தியங்கள் ஒலிக்க, பெரியமலைகளையும் புண்ணிய நதிகளையும் கடந்து சென்று மணம்மிக்க பெருமையினையுடைய மதுரையம்பதியை அடைந்தார்.

646 மங்கை நாயகி மங்கலம் எதிர்கொள வந்துவா னிழிசெல்வம்
பொங்கு மாளிகை புகுந்தன ளாகமேற் புதுமணத் திறந்தீட்டி
எங்கு மோலையுய்த் தமைச்சர்மங் கலவினைக் கியைவன
அமைக்கின்றார்
அங்கண் மாநக ரெங்கணுங் கடிமுர சானைமே லறைவித்தார்.

வேறு

647 கன்னிதன் மணமுர சறைதலுங் கடிநகர் உறைபவர் கரைகெடத்
துன்னிய வுவகையர் கடவுளைத் தொழுகைய ருடல
முகிழ்ப்பெழப்
பன்னிய துதியின ரியலெழின் மகளிரை யழகுசெய் பரிசென
இன்னிய லெழில்வள நகரெலாஞ் செயல்வினை யணிபெற
எழில்செய்வார்.

648 கோதையொ டும்பரி சந்தனக் குப்பை களைந்தனர் வீசுவார்
சீதள மென்பனி நீர்கடுய்ச் சிந்தின பூழி யடக்குவார்
மாதரு மைந்தரும் இறைமகண் மன்றன் மகிழ்ச்சி மயக்கினாற்
காதணி குழைதொடி கண்டிகை கழல்வன தெரிகிலர் தொழில்
செய்வார்.

649 மங்கலம் என்றெென வினவுவார் வருமதி நாளென உரைசெய்வார்
தங்களை யொல்லை தழீஇக் கொள்வார் தாங்கரு மோகை
தலைக்கொள்வார்
திங்களி னெல்லையு மாறுநா ளாறுக மென்று செலுத்துவார்
நங்கைய ருங்கடி காணவோ துடித்தன தோள்கள் நமக்கென்பார்.

646. மங்கையர்க்கரசியாகிய பிராட்டியார் எட்டு மங்கலமும் ஏந்தியவர்கள் வந்து எதிரே வாழ்த்தி அழைக்க, செல்வம் மிக்க மாளிகையினுள் நுழைந்தார். பின்னர் திருமணச் செய்தியை ஓலையில் எழுதி எல்லா இடங்களுக்கும் அனுப்பினார். மணமுரசினை யானைமேல் ஏற்றி அழகிய பெரிய நகரம் முழுவதும், மந்திரிகளும் விழாவிற்கு ஏற்பாடு செய்தவர்களும் இச்செய்தியினை அறிவித்தார்கள்.

மதுரை மாநகரத்தை மக்கள் அலங்கரித்தல்

647. பிராட்டியாருடைய இத் திருமணச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே, அப்பெரிய மதுரைத் திருநாட்டில் உள்ள அனைவரும் எல்லையற்ற மகிழ்வடைந்தனர். துதிப்பாடல்களைப் பாடி இறைவனை வணங்கினர். இயற்கை அழகுள்ள பெண் களுக்குச் செயற்கை அழகு செய்யும் தன்மைபோல, வளப்ப முடைய அந்நகர் முழுவதும் அழகு பெற அலங்கரித்தனர்.

648. மகளிரும் ஆடவரும் மாலையோடு நீங்கிய சந்தனக் குப்பைகளைக் களைந்து புறத்தே கொண்டுபோய் வீசினர். குளிர்ச்சியான பன்னீரைத் தெளித்து நிலத்தில் உள்ள புழுதியைப் போக்கினர். பிராட்டியாரின் திருமணம் காரணமாக எழுந்த மகிழ்ச்சி மயக்கத்தால் குழைகளும், வளையல்களும் கழுத்தணிகளும் கழன்று விழுவதை அறியாமல் வீடுகளை அலங்காரம் செய்வதில் ஈடுபட்டனர்.

மக்கள் மகிழ்வுடன் பேசுதல்.

649. திருமணம் எப்போது என்று ஒருவரையொருவர் கேட்பார்கள். வருகின்ற திங்கள்கிழமை என்று பதில் கூறுகிறவர் களை மகிழ்ச்சியோடு தழுவிக் கொள்வார்கள். அத்திங்கள்கிழமை வருவதற்கு உள்ள ஆறு நாள்களையும் ஆறு யுகங்களைப் போலக் கழிப்பார்கள். நம் பிராட்டியாரின் திருமண விழாவைக் கண்டு களிக்கவோ நமக்குத் தோள்கள் துடித்தன என்று கூறி மகிழ்வார்கள்.

650 பித்திகை வெள்ளை புதுக்குவார் பெட்புறு வார் களும் பெட்புறச்
சித்திர பந்தி நிறுத்துவார் தெற்றிகள் குங்கும நீவு வார்
வித்திய பாலிகை மென்றழை விரிதலை நீர்நிறை பொற்குடம்
பத்தியின் வேதி நிரப்புவார் தோரணம் வாயில் பரப்புவார்.

651 நீளிடை மணிமறு கெங்கணு நெடுநடைக் காவண நாட்டுவார்
பாளைகொள் கமுகு சுவைக்கழை பழுக்குலை வாழை யொழுக்குவார்
கோளிறை கொண்டென ஆடிகள் கோத்தணி வார்மிசைக் கொடிநிரை
வாளரி யெழுபரி யடிபட மத்திகை நிறையென வைப்பரால்.

652 பூவொடு தண்பனி சிந்துவார் பொரியொடு பொற்சுணம் வீசுவார்
பாவை விளக்கு நிறுத்துவார் பைந்தொடை பந்தரின் ஆற்றுவார்
ஆவண மென்ன அயிர்ப்புற வணிமறு கெங்கணு மரதனக்
கோவையு மரகத மாலையுங் கோப்பமை யாரமுந் தூக்குவார்.

மனைகள் அலங்கரிப்பு

650. சுவர்களைச் சுண்ணாம்பால் புதுப்பித்தார்கள். யாவரும் விரும்புகின்ற, சிற்பநூல் வல்லாரும் விரும்பும் வண்ணம் சித்திரங்களை எழுதுவித்தனர். திண்ணைகளைக் குங்குமக் குழம்பால் மெழுகுவார்கள். அத்திண்ணையில், முளைத்த பாலிகைகளையும், பொன்னாலாகிய பூரண கும்பங்களையும் வரிசைப்பட வைப்பார்கள். வாயிலிலே தோரணங்களைக் கட்டுவார்கள்.

651. அகலமான நெடிய வீதிகள் தோறும் நடைப்பந்தர் அமைப்பர். பாளைகள் நிறைந்த பாக்கு மரங்களையும், சுவையுடைய கரும்புகளையும், பழுத்த குலைகளையுடைய வாழை மரங்களையும் வரிசையாகக் கட்டுவார்கள். ஒன்பது கோளும் வந்து தங்கி இருத்தல் போல ஆங்காங்கே கண்ணாடிகளைக் கோத்துக் கட்டுவார்கள். ஒளிமிக்க சூரியனின் ஏழு குதிரைகளும் அடிபடுமாறு சம்மட்டியின் வரிசைபோல மீன்வடிவு எழுதிய கொடிகளை வரிசையாக நிறுத்துவார்கள்.

652. மலர்களோடு குளிர்ந்த பனிநீரைத் தெளிப்பார்கள். பொரிகளோடு பொற்சுண்ணத்தையும் இறைப்பார்கள். பாவை விளக்குகளை வரிசையாக நிறுத்துவார்கள். பசிய மலர் மாலைகளைப் பந்தலில் கட்டித் தொங்கவிடுவார்கள். இது கடைவீதியோ? எனக் கண்டோர் ஐயுறுமாறு அழகிய வீதிகளெங்கும் இரத்தின மாலைகளையும், மரகத மாலைகளையும் முத்து மாலைகளையும் வரிசைப்படத் தொங்கவிடுவார்கள்.

653 அடுகரி சிந்துர மப்புவார் அழன்மணி யோடை மிலைச்சுவார்
கடுநடை யிவுளி கழுத்தணி காலணி கலணை திருத்துவார்
சுடர்விடு தேர்பரி பூட்டுவார் தொடையொடு கவரிக டுக்குவார்
வடுவறு பொற்கல நவமணி மங்கல தீப மியற்றுவார்.

654 பழையன கலனை வெறுப்பரால் புதியன பணிகள் பரிப்பராற்
குழைபனி நீரளை குங்குமங் குவிமுலை புதைபட மெழுகுவார்
மெழுகிய ஈரம் புலர்த்துவார் விரைபடு கலவைகள் அப்புவார்
அழகிய கண்ணடி நோக்குவார் மைந்தரை யாகுல மாக்குவார்.

655 அஞ்சனம் வேல்விழி தீட்டுவார் ஆடவர் மார்பிடை நாட்டுவார்
பஞ்சுகள் பாதமிருத்துவார் பரிபுர மீது திருத்துவார்
வஞ்சியர் தேற லருந்துவார் மருங்குல் தளாட வருந்துவார்
கொஞ்சிய கனிமொழி கழறுவார் குழுவொடு குரவைக்ள்
குழறுவார்.

யானைகள் அலங்கரிப்பு

653. வீரர்கள், கொல்கின்ற யானையின் நெற்றியில் சிந்துரத் திலகம் சாத்துவர். நெருப்புப்போல் ஒளிவீசும் மணிகள் பதித்த நெற்றிப் பட்டத்தைச் சூட்டுவார்கள். குதிரைகளின் கழுத்தணி, காலணி, சேணம் முதலியவற்றைத் திருத்தமுற அணிவர். தேர்களில் குதிரைகளைப் பூட்டுவார்கள். மாலைகளையும் வெண்சாமரைகளையும் அத்தேர்களில் கட்டித் தொங்க விடுவார்கள். பெண்கள் வீடுதோறும் குற்றமற்ற பொன் தட்டுகளில் நவரத்தினங்களாலாகிய மங்கல தீபங்களை ஏற்றி வைப்பார்கள்.

பெண்களின் அலங்காரம்

654. பெண்கள் தாங்கள் அணிந்திருந்த பழைய அணிகளை வெறுத்து நீக்கிப் புதிய அணிகளைத் தரிப்பர். பனி நீரில் குழைத்த குங்குமக் குழம்பை மார்பிலே பூசிக் கொள்வர். அவ்வாறு பூசியதால் உண்டான ஈரத்தை அகிற்புகையால் உலர வைப்பார்கள். பிறகு மணம்மிக்க கலவைச் சந்தனத்தைப் பூசுவார்கள். கண்ணாடியில் அழகு பார்ப்பார்கள். இத்தகைய அழகுத் தோற்றத்துடன் ஆடவரின் முன்னே தோன்றி அவர்களின் மனத்தை வருத்தமடையச் செய்வார்கள்.

655. வஞ்சி போலும் கொடி இடை உடைய பெண்கள் வேல் போன்ற தம் கண்களுக்கு மைதீட்டுவார்கள். அவற்றை ஆடவர்களின் மார்பில் படுமாறு ஊன்றுவார்கள். பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பைப் பூசி, அங்குள்ள சிலம்பைத் திருத்தமாக அணிவார்கள். கள்ளைக் குடித்து அம் மயக்கத்தால் இடை தள்ளாட வருந்துவார்கள். தம் கணவன் பாராட்ட, சுவைமிக்க மொழிகளைப் பேசுவார்கள்.கூட்டத்தோடு குரவைப் பாட்டினைப் பாடி ஆடுவார்கள்.

656 கின்னிர மிதுன மெனச் செல்வார் கிளைகெழு பாணொடு விறலியர்
கன்னியர் அரசை வணங்குவார் கடிமண மெய்து களிப்பினால்
இன்னிசை யாழொடு பாடுவா ரீந்தன துகில்விரித் தேந்துவார்
சென்னியின் மீது கொண் டாடுவார் தேறலை யுண்டு செருக்குவார்.

657 மன்னவர் மகளிரு மறையவர் மகளிரும் வந்துபொன் மாலையைத்
துன்னினர் சோபனம் வினவுவார் தோகைதன் மணவணி நோக்குவார்
கன்னிதன் ஏவலர் வீசிய காசறை கர்ப்புர வாசமென்
பொன்னறுங் கலவையின் மெய்யெலாம் புதைபட வளனொடும் போவரால்.

658 அங்கன கஞ்செய் தசும்பின ஆடை பொதிந்தன தோடவிழ்
தொங்கல் வளைந்தன மங்கையர் துள்ளிய கவரியின் உள்ளன
கங்கையு வாணியும் யமுனையுங் காவிரி யும்பல துறைதொறும்
மங்கல தூரிய மார்ப்பன மதமலை மேலன வருவன.

659 அங்கவர் மனைதொறு மணவினை யணுகிய துழனியர் எனமறைப்
புங்கவ ரினுதுண அறுசுவைப் போனக மடுவினை புரிகுவார்
இங்கடு வனபலி யடிகளுக் கெனயதி களையெதிர் பணிகுவார்
சங்கர னடியரை யெதிர்கொள்வார் சபரியை விதிமுறை புரிகுவார்.

656. விறலியர் தம் கணவராகிய பாணரோடு கின்னர மிதுனம் போலச் சென்று தடாதகைப் பிராட்டியாரை வணங்குவார்கள். திருமணம் நடைபெறப் போகிறது என்ற மகிழ்ச்சியால் இனிய இசைப் பாட்டினை யாழோடு பாடுவார்கள். அம்மையார் அளிக்கும் பொருளை ஆடையை விரித்து வாங்குவார்கள். அவற்றைத் தலையின் மேல் வைத்துக் கொண்டு கூத்தாடுவார்கள். மதுவை உண்டு மகிழ்வார்கள்.

657. அரச மகளிரும், அந்தண மகளிரும் காஞ்சன மாலையை அடைந்து திருமண விழா பற்றி விசாரிப்பார்கள். பிராட்டியின் திருமணக் கோலத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள். அப்பிராட்டியின் ஏவல் மகளிர் அளிக்கும் மயிர்ச்சாந்து, நறுமணம் கமழும் கலவை, இவற்றை உடல்மறையப் பூசிக் கொண்டு மகிழ்ச்சியோடு தங்கள் வீட்டிற்குச் செல்வார்கள்.

658. பெண்கள், கங்கை, சரஸ்வதி, யமுனை, காவிரி முதலிய நதிகளின் தீர்த்தங்களைப் பொற்குடத்தில் நிறைத்துத் தூய ஆடையால் போர்த்து மலர் மாலைகளால் அலங்கரித்து, சாமரை வீச, மங்கல இசைக்கருவிகள் ஒலிக்க யானை மத்தகத்தில் ஏற்றிச் சிறப்பாகக் கொண்டு வரலாயினர்.

659. மதுரை மாநகரத்தவர் தத்தம் வீடுகள் தோறும் திருமணம் நிகழ்வதைப் போல்- ஆர்வம் கொண்டவர் போல் ஆரவாரம் செய்தனர். வேத உணர்ச்சியும் தூய்மையும் உடைய அந்தணர்கள் அருந்துமாறு அறுசுவையினை உடைய உண்டிகளைச் சமைப்பர் சிலர். துறவிகளை எதிர் சென்று வணங்கி, ''அடிகள் இங்கே உண்ண வேண்டும்'' என்று அழைப்பர் சிலர். சிவனடியார்களை எதிர்கொண்டு பூசனையை ஆகம விதிப்படி செய்வர் சிலர்.

660 இன்னண நகர்செயல் அணிசெய விணையிலி மணமகன் மணவினைக்
கன்னியு மனையவள் என்னினிக் கடிநகர் செயுமெழில் வளனையாம்
என்னவ ரியநகர் செயலெழி லிணையென வுரைசெய்வ தெவனிதன்
முன்னிறை மகடமர் மணவணி மண்டப வினைசெயு முறைசொல்வாம்.

வேறு

661 கருவி வான்முகில் ஊர்தியைப் பொருதநாட் கலைமதி மருமாட்டி
செருவில் வாங்கிய விமானமா லைகளெனத் தெய்வத வரையெல்லா
மருவி யந்நகர் வைகிய தம்மிறை மடமக டனைக்காண்பான்
துருவி நின்றென நட்டன ரெட்டிவான் றொடுநிலை நெடுந்தேர்கள்.

662 பளிக்கி னேழுயர் களிறுசெய் தமைத்தபொற் படியது பசுஞ்சோதி
தெளிக்கு நீலத்தி னாளிக ணிரைமணித் தெற்றிய துற்றோர்சாய்
வெளிக்குள் ஆடிய வோவியப் பாவைபோன் மிளிர்பளிங் காற்சோதி
தளிர்க்கும் பித்திய திடையிடை மரகதச் சாளரத் ததுமாதோ.

663 பல்லு ருச்செய்த பவளக்கால் ஆயிரம் படைத்ததிந் திரநீலக்
கல்லு ருத்தலைப் போதிய தாடகக் கவின்கொ ளுத்தரமேல
தல்லு ருக்கிய செம்மணித் துலாத் ததா லமுதுடற் பசுந்திங்கள்
வில்லு ருக்குகன் மாடம தாகிய வேள்விமண் டபஞ்செய்தார்.

660. இவ்வாறு அந்நகர மாந்தர் அப்பகுதிக்குச் செயற்கை அழகைச் செய்தனர். மணவாளரோ ஒப்பற்றவர், மணமகளாரோ அத்தன்மையர். ஆகையால் இக் காவலையுடைய நகரத்தை அலங்கரிக்கும் அழகின் சிறப்பை நம்மால் எடுத்துக் கூற இயலுமா? இனிமேல் பிராட்டியாரின் சுற்றத்தார் அழகிய திருமண மண்டபத்தை ஒப்பனை செய்யும் தன்மையினைக் கூறுவோம்.

திருமண மண்டபத்தை அலங்கரித்தல்

661. வானத்தில் உள்ள மேகத்தை வாகனமாக உடைய இந்திரனை, சந்திரனது மரபில் தோன்றிய பிராட்டியார் போரில் வென்ற காலத்துத் திறையாகப் பெற்ற விமான வரிசைகள் நின்றாற் போலவும், தெய்வத் தன்மை பொருந்திய மலைக ளெல்லாம் வந்து தம் இறைவனாகிய மலையரசனின் புதல்வியைக் காண நின்றது போலவும், நீண்ட நெடிய நிலைத் தேர்களை வானுலகத்தைத் தொடும் அளவிற்கு வரிசையாக நிறுத்தினார்கள்.

662. அவர்கள் அமைத்த திருமண மண்டபமானது, பளிங்கினால் செய்த ஏழு முழம் உயரமுள்ள யானைகளை இருபுறம் அமைத்து, பொன்னாற் படிகளையும், நீலமணிகளால் செய்த சிங்கங்களின் (யாளிகளின்) வரிசையுடைய மணிகள் பதித்த திண்ணைகளையும், அருகே நெருங்கி வருபவர்களின் சாயல் வெளிப்புறத்தில் ஆடுகின்ற ஓவியப் பதுமைகள் போல் விளங்குகின்ற பளிங்கினாலாகிய சுவர்த் தலங்களையும், இடையிடையே மரகதச் சாளரங்களையும் உடையது.

663. பல வடிவங்களாகச் செய்யப்பட்ட பவளத் தூண்கள் ஆயிரம் உடையது. அவற்றின் மேல் இந்திர நீலக்கல் பொருத்தப் பட்டது. பொன்னால் செய்த அழகிய உத்தரங்களையுடையது. இருளை ஓட்டிய மாணிக்க மணிகளால் செய்யப்பட்ட தூலங்களையும், சந்திரக்கல்லால் செய்த மேல் நிலையையும் உடையது. இத்தகைய தோற்றத்துடன் அத் திருமண மண்டபத்தை அழகுறச் செய்து அமைத்தார்கள்.

664 முத்திற் பாளைசெய் தவிர்மர கதத்தினான் மொய்த்தபா
சிலைதுப்பின்
கொத்திற் றீம்பழம் வெண்பொனாற் கோழரை குயின்றபூ
கமுந்துப்பின்
றொத்திற் றூங்குபூச் செம்பொனாற் பழுக்குலை தூக்கிபொன்
னாற்றண்டு
வைத்துப் பாசொளி மரகத நெட்டிலை வாழையு நிரைவித்தார்.

665 பித்தி மாதவி சண்பகம் பாதிரி பிறவுமண் டபஞ்சூழப்
பத்தி யாவளர்த் தளிகள்வாய் திறந்துபண் பாடஇன் மதுக்காலத்
தத்தி யாய்மணங் கவர்ந்துசா ளரந்தொறுந் தவழ்ந்தொழு
கிளந்தென்றல்
தித்தி யாநிற்கு மதுத்துளி தெளித்திடச் செய்தனர் உய்யானம்.

666 வேள்விச் சாலையும் வேதியுங் குண்டமு மேகலை
யொடுதொன்னூற்
கேள்விச் சார்பினாற் கண்டுகண் ணடிவிடை கிளர்சுடர் சீவற்சம்
நீள்விற் சாமரம் வலம்புரி சுவத்திக நிரைகுடம் எனஎட்டு
வாள்விட் டோங்குமங் கலந் தொழில் செய்பொறி வகையினா
னிருமித்தார்.

667 மணங்கொள் சாந்தொடு குங்குமப் போதளாய் மான்மதம்
பனிநீர்தோய்த்
திணங்கு சேறுசெய் திருநிலந் தடவிவான் இரவிமண்
டலம்நாணப்
பணங்கொ ணாகமா மணிவிளக் கிருகையும் பாவைக
ளெடுத்தேந்தக்
கணங்கொள் தாரகை யெனநவ மணிகுயில் கம்பலம்
விதானித்தார்.

664. முத்தினால் பாளையும், மரகதத்தினால் பசிய இலையும், பவளக் கொத்தினால் பழங்களும், வெள்ளியினால் வழு வழுப்பான அரையும் செய்தமைத்த கமுக மரங்களையும், பவளக் கொத்தினால் தொங்கும் பூவோடு பொன்னால் பழுத்த குலையையும் தொங்கவிட்டு, பொன்னால் தண்டு செய்து மரகதத்தினால் நீண்ட இலையை அமைத்த வாழை மரங்களையும் வரிசைபடக் கட்டினார்கள்.

665. சிறு செண்பகம், குருக்கத்தி, சண்பகம், பாதிரி முதலான மரங்களை அம் மண்டபத்தைச் சுற்றி வரிசையாக வளர்த்தனர். வண்டுகள் வாயினைத் திறந்து இசைபாடவும், இனிய மதுவைச் சிந்தவும் இம்மலர்களே காரணமாயின. மென்மையான வாசனையை முகர்ந்து கொண்டு தென்றல் காற்றானது, இனிக்கும் தேனைத் தெளிக்கவும் சாளரங்கள் தோறும் தவழ்ந்து செல்லுமாறு பூங்காவினை அமைத்தார்கள்.

666. வேள்விச் சாலையையும், வேதியையும், ஓம குண்டங்களையும் அவ்வவற்றின் மேகலையோடு (வரம்பு களோடு) வேதாகம விதிப்படி ஆராய்ந்து அமைத்தனர். கண்ணாடி, இடபம், விளக்கு, திருமகள் வடிவாகிய பாவை, சாமரம், வலம்புரிச் சங்கு, சுவத்திகம், நிறைகுடம் என்னும் அட்டமங்கலப் பொருள்களையும் இந்திர வகையினால் அமைத்தார்கள்.

667. வாசனையுள்ள சந்தனத்தையும், குங்குமப் பூவையும் கத்தூரியையும் கலந்து பனிநீரில் கரைத்துக் குழம்பாக்கி அதனால் தரையை மெழுகினார்கள். வானத்தில் உள்ள சூரிய மண்டலமும் வெட்கப்படுமாறு மாணிக்க தீபங்களை இரண்டு கைகளிலும் பாவைகள் ஏந்தி நின்றன. நட்சத்திரக் கூட்டம் போன்று நவமணிகளை இடை இடையே கோவையாக அமைத்த கம்பளங்களை மேலே விரித்துக் கட்டினார்கள்.

668 செம்பொற் கோயின்முன் சேண்டொடு காவணந் திசையெலாம் விழுங்கச்செய்
தம்பொற் பாலிகை பாண்டில் வாய்முளைத்தெளித் தம்புயத் தவனாதி
உம்பர்க் கேற்றபொற் கம்பல மேல்விரித் துள்ளுறத் தவிசிட்டுத்
தும்பைத் தாழ்சடை யான்றமர்க் காதனஞ் சூழவிட் டதனாப்பண்.

669 கற்ப கந்தரு வயிரவா ளரிப்பிடர் கதுவப்பொற் குறடேற்றி
எற்ப டுந்துகி ராற்குடஞ் சதுரமா வியற்றிய வெருத்தத்தூண்
விற்ப டும்பளிக் குத்தரந் துப்பினால் விடங்கமே னிலமூன்றாப்
பொற்ப நூல்வழி விமானம்பன் மணிகளாற் பொலியச் செய்துள்ளாக.

670 அங்க மாறுமே கால்களாய் முதலெழுத் தம்பொற்பீ டிகையாகித்
துங்க நான்மறை நூல்களே நித்திலந் தொடுத்தசை தாம்பாகி
எங்க ணாயகன் எம்பெரு மாட்டியோ டிருப்பதற்கு உருக்கொண்டு
தங்கி னாலென நவமணி குயின்றபொற் றவிசது சமைத்திட்டார்.

தேவர்கள் சிவனடியார்கள் அமர இடம் அமைத்தனர்

668. செம்பொன்னாலாகிய திருமண மண்டபத்தின் முன்னால் திசையெல்லாம் மறையும்படி வானை எட்டிப் பிடிக்கும் பெரிய பந்தல்களைப் போட்டார்கள். பொன் பாலிகை வட்டில்களில் முளைகளைத் தெளித்தனர். பிரமன் முதலிய தேவர்களுக்குத் தகுதியான பொற் கம்பளத்தை மேலே விரித்து அதன் உள்ளே பொருத்தமான ஆசனங்களை அமைத்தனர். தும்பை மாலையை அணிந்த நீண்ட சடையை உடைய சிவபெருமானின் அடியார்கள் அமருவதற்குச் சுற்றிலும் ஆசனம் இட்டனர்.

திருமண மண்டபத்தின் பொற்பீடம்

669. திருமண மண்டபத்தின் நடுவில் கற்பகமரம் அளித்த வயிரத்தால் செய்யப் பெற்ற சிங்கத்தின் பிடரியிலே பொற்பலகையை அமைத்தனர். அதன் மேலே ஒளி பொருந்திய பவளத்தால் ஆன குடத்தோடு சதுரமாகச் செய்த கழுத்தையுடைய தூண்களை நிறுத்தினார்கள். ஒளி பொருந்திய பளிங்கினால் உத்தரங்களையும் பவளத்தினால் கொடுங்கைகளையும் பரப்பி மூன்று அடுக்குகளை அமைத்துச் சிற்ப நூல் முறைப்படி பலமணிகளால் விமானத்தை எழிலுற விளங்கச் செய்தனர்.

670. சோமசுந்தரப் பெருமான் பெருமாட்டியாரோடு இருப்பதற்கு ஆறு அங்கங்களுமே கால்களாகவும், பிரணவமே அழகிய பொற்பீடமாகவும், வேதங்களாகிய நூல்களே முத்தினால் தொடுத்து அசைகின்ற தாம்புகளாகவும் வடிவம் கொண்டு தாங்கினாற்போல நவரத்தினங்களை இழைத்த பொன் தவிசு ஒன்றைச் செய்து அமைத்தார்கள்.

671 புரந்த ரன்றரு கற்பகம் பொலந்துகில் பூண்முத லியநல்கச்
சுரந்தரும்பெற லமுதமை வகையறு சுவையுணா முதலாகப்
பரந்த தெய்வவான் பயப்பச்சிந் தாமணி பற்பல வுஞ்சிந்தித்
திரந்து வேண்டுவ தரத்தர ஈட்டினார் இந்திர நகர்நாண.

672 தென்னர் சேகரன் றிருமக டிருமணத் திருமுகம் வரவேற்று
மன்னர் வந்தெதிர் தொழுதுகைக் கொண்டுதம் மணிமுடி மிசையேற்றி
அன்ன வாசகங் கேட்டனர் கொணர்ந்தவர்க் கருங்கலந் துகில்நல்கி
முன்னர் ஈர்த்தெழு களிப்புற மனத்தினு முந்தினர் வழிக் கொள்வார்.

673 கொங்கர் சிங்களர் பல்லவர் வில்லவர் கோசலர் பாஞ்சாலர்
வங்கர் சோனகர் சீனர்கள் சாளுவர் மாளவர் காம்போசர்
அங்கர் மாகத ராரியர் நேரிய ரவந்தியர் வைதர்ப்பர்
கங்கர் கொங்கணர் விராடர்கண் மராடர்கள் கருநடர் குருநாடர்.

674 கலிங்கர் சாவகர் கூவிள ரொட்டியர் கடாரர்கள் காந்தாரர்
குலிங்கர் கேகயர் விதேகர்கள் பௌரவர் கொல்லர்கள் கல்யாணர்
தெலுங்கர் கூச்சரர் மச்சர்கண் மிலேச்சர்கள் செஞ்சையர் முதலேனைப்
புலங்கொண் மன்னருந் துறைதொறு மிடைந்துபார் புதைபட வருகின்றார்.

அரண்மனையில் எல்லாப் பொருளும் நிறைந்திருத்தல்

671. இந்திரனிடமிருந்து பிராட்டியார் திறைப்பொருளாகக் கொண்டு வந்த கற்பகமரம், பொன்னாடை அணிகலன் முதலியவற்றைக் கொடுத்தது. காமதேனு அறுசுவையோடு கூடிய அமுதம் போன்ற அறு உணவு முதலான பல்வகை உணவுகளைச் சுரந்து கொடுத்தது. சிந்தாமணி, நினைத்துக் கேட்ட பற்பல பொருள்களையெல்லாம் கொடுத்தது. இந்திரனுடைய பொன்னுலகமும் வெட்கப்படுமாறு அவற்றை வாங்கி ஏவலர்கள் தொகுத்தனர்.

அரசர் முதலானோர் வருகை

672. மலயத்துவசப் பாண்டியனின் திருமகளாராகிய தடாதகைப் பிராட்டியாரின் திருமணம் குறித்த ஓலையை வரவேற்று மன்னர்கள் எதிர் கொண்டு வந்து கையில் வாங்கி, தம் மணி முடிமேல் வைத்து அத்திருமணச் செய்தி கேட்டு மகிழ்ந்தனர். திருமணச் செய்தியைத் தாங்கி வந்தவர்களுக்கு அணிகலன் களையும், ஆடைகளையும் கொடுத்து அனுப்பினர். பிறகு திருமணத்தினைக் காண விரைந்து சென்றனர்.

673. கொங்கர், சிங்களர், பல்லவர், வில்லவர், பாஞ்சாலர், வங்கர், சோனகர், சீனர், சாளுவர், மாளுவர், காம்போசர், அங்கர், மாகதர், ஆரியர், சோழர், அவந்தியர், விதர்ப்பர், கங்கர், கொங்கணர், விராடர், மராடர், கருநாடர், குருநாடர் என இப்பெயருடைய நாட்டரசர் பலர் வந்தனர்.

674. அத்துடன் கலிங்கர், சாதகர், கூவிளர், ஒட்டியர், கடாரர், காந்தாரர், குலிங்கர், கேகயர், விதேகர், பௌரவர், கொல்லர், கலியாணர், தெலுங்கர், கூர்ச்சரர், மச்சர், மிலேச்சர், செஞ்சயர் முதலான பல நாட்டரசர்கள் பூமி மறையும்படி வருகிறார்கள்.

675 இத்த கைப்பல தேயமன் னவர்களும் எண்ணிடம்
பெறாதீண்டிப்
பைத்த வாழிபோ னிலமகண் முதுகிறப் பரந்ததா
னையராகித்
தத்த நாட்டுள பலவகை வளனொடுந் தழீஇப்பல
நெறிதோறும்
மொய்த்து வந்தனர் செழியர்கோன் றிருமகள் முரசதிர்
மணமூதூர்.

676 வந்த காவலர் உழையர்சென் றுணர்த்தினர் வருகென
வருகுய்ப்பச்
சந்த வாளரிப் பிடரணை மீதறந் தழைத்தருள்
பழுத்தோங்குங்
கந்த நாண்மலர்க் கொம்பினைக் கண்டுகண் களிப்புற
முடித்தாமஞ்
சிந்த வீழ்ந்தருள் சுரந்திடத் தொழுதுபோய்த் திருந்துதம்
இடம்புக்கார்.

677 வரைவ ளங்களும் புறவினில் வளங்களு மருதத்தண்
பணைவேலித்
தரைவ ளங்களுஞ் சலதிவாய் நடைக்கலந் தருவளங்
களுமீண்டி
உரைவ ரம்பற மங்கலம் பொலிந்ததிவ் வூரினி நால்வேதக்
கரைக டந்தவன் றிருமணஞ் செயவரு காட்சியைப்
பகர்கின்றேன்.

678 ஏக நாயகி மீண்டபின் ஞாட்பிகந் திரசத கிரியெய்தி
நாக நாயக மணியணி சுந்தர நாயகன் உயிர்க் கெல்லாம்
போக நாயக னாகிப்போ கம்புரி புணர்ப்பறிந் தருள்நந்தி
மாக நாயகன் மாலய னுருத்திரர் வரவின்மேன்
மனம்வைத்தான்.

675. இத்தன்மையுடைய நாட்டரசர்களும் எள் போட இடம் இல்லாமல் நெருங்கி வருகின்றார்கள். அவர்கள் பரந்த சேனையோடு நிலமகளின் முதுகு ஒடியுமாறு அதிக எண்ணிக் கையை யுடையவர். அவர்கள் தத்தம் நாட்டில் உள்ள பலவகை வளங்களையும் எடுத்துக் கொண்டு, பல வழிகள் தோறும், மலயத்துவச பாண்டியனின் திருமகளது மணமுரசுகள் ஒலிக்கின்ற மதுரை நகருக்கு வந்தார்கள்.

676. அரசர்கள் வருகையை அறிந்த வாயில் காப்போர்கள், பிராட்டியாரிடம் சென்று அறிவித்தனர். அரசியார் அவர்கள் உள்ளே வரக்கடவர் எனக்கட்டளை யிட்டவுடன், அரசர்கள் உள்ளே சென்று அமர அனுமதிக்கப் பட்டனர். சிங்காதனத்தின் மேல் தருமம் தழைத்து அருள் கனிந்து விளங்கும் பிராட்டியாரைத் தம் கண்களால் களிப்புறக் கண்டு மகிழ்ந்து முடியின்கண் அணிந்த மலர் மாலைகள் கீழே சிதற விழுந்து வணங்கினார்கள். பிராட்டியாரின் திருவருள் கிடைக்கப் பெற்ற பின்னர், தத்தமக்கு அமைந்த இடங்களை அடைந்தனர்.

677. மலை நாட்டுப் பொருள்களும், காட்டில் விளைந்த பொருள்களும், மருத நிலத்துப் பொருள்களும், கடலின் மரக் கலங்கள் கொணர்ந்த பொருள்களும் நிறையப்பெற்ற மதுரை நகரின் பெருமையைச் சொல்லின் எல்லையில் அடங்காது. மங்கலகரமாக விளங்கியது. இனி நான்கு வேதங்களின் வரம்பைக் கடந்தவனாகிய சிவபெருமான் திருமணம் செய்ய வருகின்ற அழகினைக் கூறுகிறோம்.

678. ஒப்பற்ற தடாதகைப் பிராட்டியார் மதுரை சென்றபின், அனந்தன் ஆகிய அணியைப் பூண்ட சோமசுந்தரக் கடவுள், போர்க் களத்திலிருந்து நீங்கி வெள்ளியம்கிரியை அடைந்தார். உயிர்க்கெல்லாம் போகத்தை அளிக்கின்ற அச்சிவபெருமானின் உள்ளக் குறிப்பை உணர்ந்த நந்தியெம்பெருமான், வானுலகின் இறைவர்களான இந்திரன் திருமால், பிரமன், உருத்திரர்கள் ஆகியவர்களை அங்கு வரவழைக்க ஏற்பாடுகள் செய்தான்.

679 சங்கு கன்னனை யாதிய கணாதிபர் தமைவிடுத்
தனனன்னார்
செங்க ணேற்றவர் மாலயன் முதற்பெருந் தேவர்வான்
பதமெய்தி
எங்க ணாயகன் றிருமணச் சோபன மியம்பினார்
அதுகேட்டுப்
பொங்கு கின்றபே ரன்புபின் றள்ளூறப் பொள்ளென
வருகின்றார்.

680 அஞ்சு கோடியோ சனைபுகைந் திருமடங் கழன்றவர்
தமைப்போலீ
ரஞ்சு தீயுருத் திரர்புடை யுடுத்தவர் அழற்கணாற் பூதங்கள்
அஞ்சு நூறுருத் திரரண்டத் துச்சிய ரரியயன் முதற்றேவர்
அஞ்சு மாணையு மாற்றலும் படைத்தவ ரடுகுறள்
படைவீரர்.

681 புத்தி யட்டகர் நாலிரு கோடிமேற் புகப்பெய்த நகரங்கள்
பத்தி ரட்டியுங் காப்பவர் பாரிடப் படையுடைக்
கூர்மாண்டர்
சத்தி யச்சிவ பரஞ்சுடர் உதவிய சதவுருத் திரரன்னார்
உய்த்த ளித்தவீ ரைம்பது கோடிய ருருத்திரர் கணநாதர்.

682 பட்ட காரிவா யர வணி பவர்பசு பதியுருத் திரராதி
அட்ட மூர்த்திகண் மேருவி னவிர்சுட ராடகர் தோடேந்தும்
மட்ட றாமலர் மகன்செருக் கடங்கிட மயங்கிய விதிதேற்ற
நிட்டை யாலவ னெற்றியிற் றோன்றிய நீலலோ கிதநாதர்.

திருமால் முதலியோர் திருமணத்திற்குப் புறப்படுதல்

679. சங்குகன்னன் ஆகிய கணத் தலைவர்களைக் கொண்டு இந்திரன், பிரமன், திருமால் உருத்திரர் ஆகியவர்களை அழைத்து வர அனுப்பினான். அவர்கள் இப்பெரிய தேவர்களின் உலகங்களை அடைந்து, சிவபெருமானின் திருமணச் செய்தியைக் கூறினார்கள். அவர்கள் அச்செய்தியைக் கேட்டு மேன்மேலும் எழுகின்ற பேரன்பு பின்னிருந்து தள்ள விரைந்து வருகின்றார்கள்.

680. ஐந்து கோடி அளவு புகைந்து, பத்துக்கோடியளவு தீக்கொழுந்து விட்டெரியும் காலாக்கினியுருத்திரரும், அவரைப் போலப் பத்து காலாக்கினியுருத்திரரும், புடை சூழ்ந்து சேவித்து நிற்கும் ஒவ்வொரு கோடி உருத்திரரும், நெருப்புப் போலக் கண்களையுடைய நால் வகைப்பூதங்களும், அண்டத்து உச்சியில் உள்ள உருத்திரரும், பிரமன், திருமால் முதலிய தேவர்களும், ஆணையும் வலிமையும் படைத்தவர்களாகிய படை வீரர்களும் கயிலைக்கு வந்தார்கள்.

681. எட்டு வித்தியேச்சுரர்களும், இருபத்தெட்டு நகரங்களைக் காப்பவர்களாகிய பூதப் படையினையுடைய கூர்மாண்டரும், உண்மை வடிவமான சிவபரஞ்சோதி அருளிய நூறு உருத்திரர்களும், அவர்கள் தந்தருளிய நூறு கோடியராகிய உருத்திரர்களும், கணத் தலைவர்களும் கயிலைக்கு வந்தார்கள்.

682. பாம்புகளை அணிந்தவர், பசுபதி, உருத்திரர் முதலான எட்டு மூர்த்திகளும், ஆடகேச்சுரர்களும், இதழ்களை ஏந்திய தேனையுடைய தாமரை மலரில் வசிக்கும் பிரமனின் செருக்கு அடங்கிட நிட்டையால் அவன் நெற்றியில் தோன்றிய நீலலோகித உருத்திரரும் கயிலைக்கு வந்தார்கள்.

683 பால மேற்றசெந் தழல்விழி யுருத்திரர் பதினொரு
பெயர் வாகைச்
சூல மேற்றகங் காளக பாலியர் துரகத நெடுங்காரி
நீல மேற்றபைங் கஞ்சுகப் போர்வையி னெடியவர்
நிருவாணக்
கோல மேற்றவர் எண்மர்ஞா ளிப்புறங் கொண்டகேத்
திரபாலர்.

684 செய்ய தாமரைக் கண்ணுடைக் கரியவன் செம்மலர் மணிபீடத்
தையன் வாசவ னாதியெண் டிசைப்புலத் தமரரெண் வசுதேவர்
மையில் கேள்விசால் ஏழெழு மருத்துகள் மருத்துவ
ரிருவோர்வான்
வெய்ய வாள்வழங் காறிரண் டருக்கரோர் வெண்சுடர்
மதிச்செல்வன்.

685 கையுங் கால்களுங் கண்பெற்றுக் கதிபெற்ற கடும்புலி
முனிச்செல்வன்
பைய ராமுடிப் பதஞ்சலி பாற்கடல் பருகிமா தவன்சென்னி
செய்ய தாள்வைத்த சிறுமுனி குறுமுனி சிவமுணர் சனகாதி
மெய்யு ணர்ச்சியோர் வாமதே வன்சுகன் வியாதனார்
அதன்மன்னோ.

686 எழுவ ரன்னையர் சித்தர்விச் சாதரர் இயக்கர்கின் னரர்வேத
முழுவ ரம்புணர் முனிவர்யோ கியர்மணி முடித்தலைப்
பலநாகர்
வழுவில் வான்றவ வலியுடை நிருதர்வாள் வலியுடை
யசுரேசர்
குழுவொ டும்பயில் பூதவே தாளர்வெங் கூளிக ளரமாதர்.

683. நெற்றியில் கண்ணையுடைய பதினாறு உருத்திரர்களும், சூலத்தை ஏந்தி முழு எலும்பைத் தரித்துக் கபாலத்தைக் கையில் ஏந்திய சிவகணத் தலைவரும், குதிரையையுடைய பெரிய சாத்தானும், கரிய நிறமுடைய சிவகணத் தலைவர்களும், ஆடையில்லாக் கோலமுடையவராய் ஞாளியின் முதுகில் தங்குதலைக் கொண்ட ஷேத்திரபாலர் எண்மரும் கயிலையை அடைந்தார்கள்.

684. செந்தாமரை மலர் போன்ற கண்ணையுடைய திருமாலும், செந்தாமரை மலரை அழகிய பீடமாகக் கொண்ட பிரமனும், இந்திரன் முதலான எட்டுதிக்குப் பாலகர்களும், எட்டு வசுதேவர்களும், நாற்பத்தொன்பது மருத்துவர்களும், அச்சுவனி தேவர் இருவரும், பன்னிரண்டு சூரியர்களும், வெள்ளிய ஒளியையுடைய சந்திரனும் கயிலைக்கு வந்தார்கள்.

685. கையும் காலும் கண்ணும் பெற்று வீடு பேற்றை அடைந்த தவமுனிவனாகிய புலிக்கால் முனியும், படத்தைக் கொண்ட முடியினையுடைய பாம்பாகிய பதஞ்சலி முனியும், பாற்கடலைக் குடித்துத் திருமாலின் முடியில் சிவந்த அடிகளை வைத்த உபமன்னியு முனியும், அகத்திய முனியும் சிவத்தை உணர்ந்த சனகர் முதலிய நான்கு முனிவர்களும், வாமதேவ முனியும், சுகமுனியும் வியாத முனியும் நாரத முனியும் கயிலைக்கு வந்தார்கள்.

686. ஏழு மாதரும், சித்தரும், வித்தியாதரரும், இயக்கரும், கின்னரரும், முனிவர்களும், யோகிகளும், மணிவிளங்கும் தலையினை யுடைய பல உரகர்களும் வலிமையுடைய குற்றமற்ற அரக்கர்களும், அசுரர் தலைவர்களும், கூட்டத்தோடு உலாவும் பூத வேதாளர்களும், கொடிய கூளிகளும், தேவ மகளிரும் கயிலைக்கு வந்தார்கள்.

687 ஆண்டி னோடய னம்பரு வந்திங்கள் ஆறிரண் டிருபக்கம்
ஈண்டு மைம்பொழு தியோகங்கள் கரணங்க ளிராப்பக
லிவற்றோடும்
பூண்ட நாழிகை கணமுதற் காலங்கள் பொருகடல் நதிதிக்கு
நீண்ட மால்வரை திக்கய மேகமின் நிமிர்ந்தவைம்
பெரும்பூதம்.

688 மந்திரம்புவ னங்கட த் துவங்கலை வன்னங்கள் பதம்வேதந்
தந்தி ரம்பல சமயநூல் புறந்தழீஇச் சார்ந்தநூ றருமாதி
முந்தி ரங்கிய சதுர்விதஞ் சரியையே முதலிய சதுட்பாதம்
இந்தி ரங்குநீர் முடியவ ரடியவ ரிச்சியா வெண்சித்தி.

689 ஆயி ரங்கடல் அனையவாய்ப் பரந்தெழு மாயிர மனிகத்துள்
ஆயி ரங்கதி ரனையரா யுருத்திர ரந்தரத் தவரண்டம்
ஆயி ரந்தகர் பட்டெனத் துந்துபி யாயிரங் கலந்தார்ப்ப
ஆயி ரஞ்சத கோடியோ சனைவழி யரைக்கணத்
திடைச்செல்வார்.

690 சித்தந் தேர்முனி வேந்தருந் தேவருஞ் சிவனுருத்
தரித்தோருந்
தத்தந் தேர்முத லூர்தியர் வார்திகழ் சந்தன
மணிக்கொங்கைக்
கொத்தந் தேமலர்க் குழன்மனை யாரொடுங் குளிர்விசும்
பாறாச்சென்
றத்தந் தேரிடை யாள்பங்க னணிவரைக் கணியராய்
வருகின்றார்.

687. ஆண்டுகளும், அயனங்களும், பருவங்களும், பன்னிரண்டு மாதங்களும், இரண்டு பக்கங்களும், ஐந்து பொழுதுகளும், யோகங்களும், கரணங்களும், இரவும், பகலுமாகிய இவற்றினோடு நாழிகையும், கணமும், காலங்களும், கடல்களும், ஆறுகளும், திசைகளும், நெடிய பெரிய மலைகளும், திக்கு யானைகளும், மேகங்களும், மின்னல்களும், ஐந்து பெரிய பூதங்களும் கயிலைக்கு வந்தார்கள்.

688. மந்திரங்களும், புவனங்களும், தத்துவங்களும், கலைகளும், எழுத்துகளும், பதங்களும், மறைகளும், ஆகமங் களும், சமய நூல்களும், இவற்றைச் சார்ந்த நூல்களும், அறம் முதலாகச் சொல்லப்பட்ட நான்கு உறுதிப் பொருள்களும், சரியை முதலிய நான்கு பாதங்களும், சிவபெருமானுடைய அடியார்கள் வெறுத்தொதுக்கும் அட்டமாசித்திகளும், கயிலைக்கு வந்தன.

689. ஆயிரம் கடல்களும், ஒன்று திரண்ட சேனைகளும் ஆயிரம் சூரியர்களை ஒத்த உருத்திரர்களும், தேவர்களும், பல்லாயிரம் அண்டங்களும் உடைபட்டன என்று சொல்லப் படுவது போன்று அளவற்ற வாத்தியங்கள் ஒலிக்க, நூறாயிரம் கோடி யோசனை வழியை அரைக்கணப் பொழுதில் சென்று கடந்தார்கள்.

690. மனம் தெளிந்த முனிவர்களும், தேவர்களும், உருத்திரர்களும் தங்கள் தங்கள் தேர் முதலிய ஊர்தியை உடைய வராய், கச்சணிந்து சந்தனம் பூசப்பட்ட கொங்கைகளையும், பூங்கொத்துக்களை அணிந்த கூந்தலையும் உடைய தத்தம் மனைவியாரோடும், வான் வழியாகச் சென்று அச் சிவபெருமா னுடைய அழகிய கயிலாய மலையை நெருங்கினார்கள்.

691 இழிந்த வூர்தியர் பணிந்தெழும் யாக்கையர் இறைபுகழ் திருநாமம்
மொழிந்த நாவினர் பொடிப்பெழு மெய்யினர் முகிழ்த்தகை முடியேறக்
கழிந்த வன்பினர் கண்முதற் புலங்கட்குங் கருணைவான் சுவையூறப்
பொழிந்த ஆனந்தத் தேனுறை திருமலைப் புறத்துவண் டெனமொய்த்தார்.

692 விரவு வானவர் நெருக்கற வொதுக்குவான் வேத்திரப் படையோச்சி
அரவு வார் சடை நந்தியெம் பிரானவர் அணிமணி முடிதாக்கப்
பரவு தூளியிற் புதைபடு கயிலையம் பருப்பதம் பகல்காலும்
இரவி மண்டலத் தொடுங்குநா ளொடுங்கிய இந்துமண் டலமானும்.

693 வந்தவானவர் புறநிற்பநந்தியெம் வள்ளலங் குள்ளெய்தி
எந்தை தாள்பணிந் தையவிண் ணவரெலாம் ஈண்டினா ரெனவீண்டுத்
தந்தி டென்னவந் தழைத்துவேத் திரத்தினால் தராதரந் தெரிந்துய்ப்ப
முந்தி முந்திவந் திறைஞ்சினார் சேவடி முண்டக முடிசூட.

691. வாகனங்களில் இருந்து, இறங்கி, விழுந்து பணிந்து எழுந்து வாயால் அவன் திருநாமத்தைச் சொன்னார்கள். இறைவனுடைய திருப்பெயரையும் திருப்புகழையும் சொல்லி மகிழ்வு கொண்ட உடலை உடையவர்கள். தலையில் கையைக் கூப்பிய மிக்க அன்புடையவர்கள். அவர்கள் கண் முதலிய ஐம்பொறிகளிலும் கருணை பெருகிடக் காட்சி தரும் சிவபெருமானுடைய திருமலையின் வெளியில் வண்டுகள் போல் நெருங்கி இருந்தார்கள்.

692. ஒருங்கு கூடிய தேவர்களின் நெருக்கத்தை ஒதுக்கும் பொருட்டு, சடையில் பாம்பை அணிந்திருக்கின்ற திருநந்திதேவர் பிரம்புப் படையை வீசி, அத்தேவர்களின் மணிமுடியில் தாக்கி விலக்கினார். அப்பிரம்பினால் தாக்குண்டு அத்தேவர்களின் மணிமுடியிலிருந்து சிதறிய மணித்துளிகளினுள் மறைந்த கயிலை மலையானது, சூரிய மண்டலத்துள் அமாவாசையில் ஒடுங்கிய சந்திர மண்டலம் போல் தோற்றம் அளித்தது.

இறைவர் யாவருக்கும் அருள் நோக்கம் புரிதல்

693. அங்கு வந்த தேவர்கள் அனைவரும் வெளியிலேயே நிற்க, திருநந்திதேவர் மட்டும் உள்ளே சென்று சிவபெருமானின் திருவடிகளில் வணங்கி, ''ஐயனே! தேவர்கள் அனைவரும் வந்திருக்கின்றார்கள்'' என்று கூறினார். பெருமானும், ''அவர் களை இங்கு அழைப்பாயாக,'' என்று கட்டளை இட்டார். நந்திதேவரும் அவர்களை அழைத்துச் சென்று அவரவர் தகுதியை அறிந்து, தம் பிரப்பங் கோலால் குறிப்பிட்டுக் காட்ட, சிவபெருமானின் திருவடித் தாமரை மலர்களைத் தங்கள் முடிகள் சூடுமாறு முற்பட்டு, முற்பட்டு வந்து வணங்கினார்கள்.

694 தீர்த்தன் முன்பணிந் தேத்துகின் றார்களிற் சிலர்க்குத்தன்
றிருவாயின்
வார்த்தை நல்கியுஞ் சிலர்க்கருண் முகிழ்நகை வழங்கியுஞ்
சிலர்க்குக்கண்
பார்த்து நீண்டமுடி துளக்கியுஞ் சிலர்க் கருட் பரிசிறந்
தெழுந்தண்டங்
காத்த கண்டனோர் மண்டபத் திடைப்புக்குக் கடிமணக்
கவின்கொள்வான்.

695 ஆண்ட நாயகன் றிருவுளக் குறிப்புணர்ந் தளகைநா
யகனுள்ளம்
பூண்ட காதன்மேற் கொண்டெழு மன்புந்தன் புனிதமெய்த்
தவப்பேறும்
ஈண்ட ஆங்கணைந் தெண்ணிலா மறைகளும் இருவரு
முனிவோருந்
தீண்ட ருந்திரு மேனியைத் தன்கையாற் றீண்டிமங்
கலஞ்செய்வான்.

696 பூந்து கிற்படாங் கொய்சகத் தானைபின் போக்குகோ
வணஞ்சாத்தி
ஏந்தி ரட்டைஞாண் பட்டிகை யிறுக்கிவண் டிரைக்குநாண்
மலர்க்குஞ்சி
வேய்ந்து கற்பகப் புதுமலர்ச் சிகழிகை மிலைந்துநீ
றணிமெய்யிற்
சாந்த மான்மதந் தண்பனி நீரளாய்த் தடக்கையான்
மட்டித்தான்.

சிவபெருமான் திருமணக் கோலம் கொள்ளல்

694. சிவபெருமான் தமது திருவடியில் வணங்கித் துதிக்கின்றவர்களில் அவரவர் தகுதிக்கு ஏற்பச் சிலருக்குத் தன் திருவாயால் வார்த்தை நல்கியும், சிலருக்கு அருளோடு கூடிய புன்னகை புரிந்தும், சிலருக்குத் திருநோக்கு அருளியும், சிலருக்கு திருமுடியினை அசைத்தும் திருவருள் பாலித்தார். பின்னர், நஞ்சினையுண்டு காத்தருளிய திருமிடற்றினையுடைய இறைவன் எழுந்து திருமணக் கோலம் கொள்ளச் சென்றார்.

695. இந்த உலக உயிர்களை ஆண்டருளிய இறைவனது எண்ணத்தை உணர்ந்து கொண்டு, மிகுந்த விருப்புடையவனாய், அன்பு மேலோங்கத் தனது தூய உண்மைத் தவப்பயனும் கைகூட அளகைப் பதியை உடைய குபேரன் உள்ளே சென்று எண்ணில்லாத மறைகளும், திருமால் பிரமன் முதலிய தேவர்களும் தீண்டுவதற்கு அரிய அவ்விறைவனின் திருமேனியைத் தன் கையால் தொட்டுத் திருமணக் கோலம் செய்யத் தொடங்கினான்.

696. அழகிய ஆடையை முன்புறத்தில் (அடுக்கடுக்காக மடித்து) கொய்சகமாகவும், பின்புறத்தில் கோவணமாகவும் சாத்தி, அதன்மேல் இரட்டை அரைஞாணைப் பட்டிகையோடு இறக்கினான். வண்டுகள் ஒலிக்க அன்றலர்ந்த மலர்களையுடைய சிகையைக் கொண்டையாகப் புனைந்தான். புதிய கற்பக மலரை அதில் சூட்டினான். திருநீறு அணிந்த திருமேனியில் சந்தனத்தோடு, கத்தூரியும், பனிநீரையும் கலந்து தன் நீண்ட கையால் பூசினான்.

697 இரண்டு செஞ்சுடர் நுழைந்திருந் தாலென விணைமணிக்
குழைக்காதிற்
சுருண்ட தோடுபொற் குண்டலந் தனியிருள் துரந்துதோட்
புறமதுள்ள
மருண்ட தேவரைப் பரமென மதிப்பவர் மையல்வல்
லிருண்மான
இருண்ட கண்டமேன் முழுமதி கோத்தென விணைத்தகண்
டிகைசாத்தி.

698 வலங்கி டந்தமுந் நூல்வரை யருவியின் வயங்குமார்
பிடைச்சென்னித்
தலங்கி டந்தவெண் டிங்களூற் றமுதெனத் தரளமா லிகைசாத்தி
இலங்கி டந்தமா லிகைப்பரப் பிடையிமைத் திருண் முகம்
பிளந்தாரங்
கலங்கி டந்த பாற் கடல்முளைத் தெழுமிளங் கதிர்எனக்
கவின்செய்து.

699 திசைக டந்தநாற் புயங்களிற் பட்டிகை சேர்த்துவாள்
எறிக்குந்தோள்
நசைக டந்தநல் லார்மனங் கவர்ந்துயிர் நக்கஅங் கதஞ்சாத்தி
அசைக டங்கலுழ் வாரண வுரிவைநீத் தணிகொளுத் தரீயம்பெய்
திசைக டந்தமந் திரபவித் திரமெடுத் தெழில்விரல் நுழைவித்து.

700 உடுத்த கோவண மிசைப் பொலந் துகிலசைத்து உரகமைந்
தலைநால
விடுத்த போல்வெயின் மணித்தலைக் கொடுக்குமின் விடவரு
புறந்தூக்கித்
தொடுத்த தார்புயந் தூக்கிநூ புரங்கழல் சொற்பதங் கடந்தன்பர்க்
கடுத்த தாளிலிட் டிருநிதிக் கோமகன் அருந்தவப்
பயன்பெற்றான்.

697. சங்கக் குழைகள் அணிந்த திருச் செவிகளிலும் இரண்டு சூரியர்கள் குடிபுகுந்து இருந்தாற்போல் விளங்கும் சுருண்ட பொற்றோடும், பொற் குண்டலமும் தோள்புறத்தில் அசைந்தாடத் தரித்தான். தேவர்களைப் பரம்பொருளென்று மயக்கமுற்றுக் கருதுபவரின் மன இருளைப் போலத் திருமிடற்றின் மேல் முழுமதியைக் கோவை செய்தாற்போல வைரக்கண்டிகையை அணிந்தான்.

698. வலப்புறம் கிடந்த முந்நூல், மலையின் அருவி போன்று புரளும் அகன்ற மார்பின் கண், திருமுடியில் உள்ள சந்திரன் அமுதைப் பொழிவதைப் போல ஒளிவீசும் முத்துக்களைச் சாத்தினான். இருளினை ஓட்டும் மாணிக்க மாலையை முத்து மாலைகளின் நடுவில் திருப்பாற் கடலில் முளைத்தெழுந்த இளம் கதிரவனைப் போல் விளங்கத் தரித்தான்.

699. திக்குகளைக் கடந்த நான்கு திருத்தோள்களில் பட்டிகைகளைத் தரித்தான். ஒளி வீசும் அத்தோள்களில் விருப்பம் மிக்க முனிவர்களின் மனம் கவர்ந்து அவர்தம் உயிரையும் உண்ட அங்கதம் என்னும் தோளணிகளைப் புனைந்தான். மதம் பொழியும் யானைத் தோலை நீக்கிவிட்டு அழகிய மேலாடையைச் சாத்தினான். மந்திர வடிவமான பவித்திரத்தை எடுத்து விரலில் அணிந்தான்.

700. உடுத்தி இருந்த கோவணத்தின்மேல் பொன்னாடையை அணிந்தான். அதன் மேல் ஐந்துதலைப் பாம்பு தொங்குவதைப் போல ஒளிவீசும் மாணிக்கத் தலைக் கொடுக்கு இரண்டு புறமும் தொங்கவிட்டான். பூமாலைகளைத் திருத்தோள் களில் சாத்தினான். சொல்லவும் அருமையான திருவடிகளில் சிலம்பையும் வீரக்கண்டையும் அணிவித்தான். இவ்வாறு பெருநிதித் தலைவனாகிய குபேரன் சிவபெருமானுக்குத் திருமணக் கோலம் செய்து பெரும் தவப்பயனை அடைந்தான்.

701 செங்கண் மாலயன் இந்திரன் முதற்பெருந் தேவர்க்கும் யாவர்க்கும்
மங்க லந்தரு கடைக்கணா யகனொரு மங்கலம் புனைந்தான்போற்
சங்கை கொண்டுகும் போதரன் முதுகின்மேற் சரணம் வைத் தெதிர்போந்த
துங்க மால்விடை மேற்கொடு நடந்தனன் சுரர்கள்பூ மழைதூர்த்தார்.

702 அந்த ர த்தவ ரந்தர துந்துபி யைந்துமார்த் தனர்சூழ
வந்த ரக்கரும் இயக்கரும் பூதரு மங்கல வியங்கல்லக்
கொந்த லர்க்கருங் குழலர மடந்தையர் கொளை வல்விஞ் சையர்தாளந்
தந்த சைத்திட மலர்ந்தபூங் கொம்பர்போற் சாய்ந்தசைந் தனராட.

703 துங்க மாயிரங் கருவியா யிரமலைத் தூங்கிருண் முழைதோறுஞ்
சிங்க மாயிரம் வாய்திறந் தார்த்தெனச் சிரங்கள்ஆ யிரந்திண்டோள்
அங்க மாயிர மாயிர முடையவ னாயிர முகந்தோறுஞ்
சங்க மாயிர மாயிர மாயிரந் தடக்கையும் பிடித்தூத.

704 போக்கு மாயவன் புணர்ப் பையு மிருண்மலப் புணர்ப்பையுங் கடந்தெம்மைக்
காக்கு நாயகன் அருச்சனை விடாதருட் கதியடைந் துளவாணன்
தூக்கு நேர்பட. வாயிரங் கரங்களாற் றொம்மென முகந்தோறுந்
தாக்க வேறுவே றெழுகுட முழாவொலி தடங்கட லொலிசாய்ப்ப.

திருமணத்திற்காக இறைவர் மதுரைக்கு எழுந்தருளல்

701. திருமால், பிரமன், இந்திரன் முதலான பெரிய தேவர்க்கும், மற்றைய யாவர்க்கும் கடைக்கண் நோக்கத்தால் எல்லா மங்கலத்தையும் அளிக்கவல்ல சிவபெருமான், தாமும் ஒரு மங்கலக் கோலம் கொண்டருளிக் குண்டோதரன் முதுகின் மேல் தன் திருவடியை வைத்து, எதிரே வந்த பெரிய இடபத்தின் மீது எழுந்தருளினார். அப்போது தேவர்கள் மலர் மழை பொழிந்தனர்.

702. தேவர்கள் தேவதுந்துபி ஐந்தினையும் முழக்கிச் சூழ்ந்தனர். அரக்கர்களும் இயக்கர்களும், பூதங்களும் வந்து மங்கல இயங்களை இசைத்தனர். இசையில் வல்லவர்களாகிய வித்தியாதரர் தாளம் போட்டு ஆட்டுவிக்க தேவ மகளிர், பூக்களையுடைய கொம்புகள் அசைந்தாடுவது போல் ஆடினர்.

703. ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் தோள்களையுமுடைய பானுகம்பன் தன் ஆயிரம் வாய்கள் தோறும் ஆயிரம் சங்குகளை வைத்து இரண்டாயிரம் கைகளாலும் பிடித்து, ஆயிரம் சிங்கங்கள், மிக்க சப்தமுடைய அருவியுடைய மலைக்குகையிடத்துச் சப்தமிட்டதைப் போன்று ஊதினான்.

704. மாயையின் தொடக்கையும் இருள் மனப்புணர்ப்பையும் கடந்து, ஆணவ மலத்தின் தொடக்கையும் நீக்கி, எம்மை ஆளும் சிவபெருமானது, பூசனையை இடைவிடாது செய்து கொண்டு அவன் திருவருளால் வீடுபேற்றை அடைந்துள்ள 'வாணாசூரன்' தாளத்திற்குப் பொருந்த தன் ஆயிரம் கைகளினாலும் பெரிய கடல் ஒலியும் கீழ்ப்படுமாறு, 'தொம்' என்று மோதிக் குடமுழவின் ஒலியை எழுப்பினான்.

705 முனிவர் அஞ்சலி முகிழ்த்தசெங் கையினர் மொழியுமா
சியருள்ளங்
கனிவ ரும்பிய வன்பினர் பரவவுட் கருத்தொரு
வழிக்கொண்டோர்
துனிவ ருங்கண நாதர்கொட் டதிர்கரத் துணையினர்
மழைபோலப்
பனிவ ருங்கண ராடிய தாளினர் பாடுநா வினரேத்த.

706 இந்தி ரன்மணிக் களாஞ்சிகொண் டொருமருங்கு
எய்தமெல் லிலைவாசந்
தந்தி லங்குபொன் னடைப்பைகொண் டீசனோர் சார்வர
மருத்துக்கோ
வந்தி ரங்கொலி யாலவட் டம்பணி மாறவா ரழறூபந்
தந்து நேரநீர்க் கடவுள்பொற் கோடிகந் தாமரைக் கரந்தூக்க.

707 நிருதி யாடிகொண் டெதிர்வர அடிக்கடி நிதிமுகந்
தளகைக்கோன்
கருதி யாயிரஞ் சிதறிடத் தண்டிநன் காஞ்சுகர்
வினைசெய்யப்
பரிதி யாயிரம் பணாடவி யுரகரும் பன்மணி விளக்கேந்தச்
சுருதி நாயகன் திருவடி முடியின்மேற் சுமந்துபின்
புறஞ்செல்ல.

708 கங்கை காவிரி யாதிய நவநதிக் கன்னியர் குளிர்தூங்கப்
பொங்கு வார்திரைக் கொழுந்தெனக் கவரிகள்
புரட்டவெண் பிறைக்கீற்றுத்
துங்க வாளெயிற் றிருளுடற் குழிவிழிச் சுடரழற்
செம்பங்கிச்
சங்க வார்குழைக் குறியகுண் டோதரன் றண்மதிக்
குடைதாங்க.

705. தம்முடைய சிவந்த கைகளைக் கூப்பி வாழ்த்து மொழிகளைக் கூறிக்கொண்டு, உள்ளத்தில் கனிந்த அன்பு வெளிப்படும்படியாக முனிவர்கள் வந்தார்கள். துன்பமற்ற கணத் தலைவர்களோ ஒத்த கருத்துடையவர்களாய் இரண்டு கைகளையும் தட்டி ஓசை எழுப்பும் தன்மையராய், ஆனந்தக் கூத்து ஆடினர். மழைபோல ஆனந்தக் கண்ணீர் சொரியப் பாடியவர் களாய் ஒரு பால் சென்றனர்.

706. இந்திரன் மணிகள் பதித்த களாஞ்சியைக் கையில் ஏந்திக் கொண்டு ஒரு பக்கம் சென்றான். ஈசானன் வெற்றிலையையும், வாசனைப் பொருள்களையும், கொண்டு விளங்கும் பொன்னாலாகிய அடப்பையைத் தாங்கி ஒரு பக்கம் சென்றான். வாயுதேவன் ஒலி ஆலவட்டம் உண்டாக்கி ஒரு பக்கம் வந்தான். அக்கினி தேவன் தூபத்தை ஏந்தி ஒரு பக்கம் வந்தான். வருண தேவன் பொற்பூந்தட்டை ஏந்தி ஒரு பக்கம் வந்தான்.

707. நிருதி, கண்ணாடியை எதிரே ஏந்தி வந்தான். குபேரன் திருமணத்தின் சிறப்பை எண்ணிப் பெரும் பொருளை அடிக்கடி வாரி வழங்கினான். எமன் பெரும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்தான். ஆயிரம் படங்களையுடைய ஆதிசேடன் சூரியன் போன்று ஆயிரம் விளக்குகளை (இரத்தின தீபங்களை) ஏந்தி வந்தான். வேதபுருடன் இறைவனின் திருவடியைத் தன் முடிமேல் சுமந்து பின் புறமாக வந்தான்.

708. கங்கை, காவேரி போன்ற ஒன்பது நதிப் பெண்கள் குளிர்ச்சி மேலோங்க அலைகளைப் புரட்டிச் சாமரைகள் போன்று வீசி வந்தனர். வளைந்த பிறைச் சந்திரனைப் போன்று வெள்ளிய பற்களையும், கரிய உடலையும், குழிந்த கண்களையும், சிவந்த தலை மயிரையும் சங்காலாகிய குண்டலங்களையும் உடைய குறுகிய வடிவம் உடைய குண்டோதரன், குளிர்ந்த சந்திர வட்டக் குடையைத் தாங்கி வந்தான்.

709 இடிக்கும் வானுரு மேறுயர் நெடுங்கொடி எகினவெண்
கொடிஞாலம்
முடிக்கும் ஊழிநா ளுளர்கடுங் காலென மூச்செறி விடநாகந்
துடிக்க வாய்விடும் உவணவண் கொடிமுதற் சூழ்ந்துசே
வகஞ்செய்யுங்
கொடிக்கு ழாத்தினுட் கொடியர சாய்விடைக் கொடிபுடை
பெயர்ந்தாட.

710 கண்ணு தற்பிரான் மருங்கிரு கடவுளர் கப்புவிட்
டெனத்தோன்றும்
வண்ண முத்தலைப் படையெடுத் தொருகுட வயிறுடைப்
பெரும்பூதம்
பண்ண வப்பதி னெண்படைக் கலமுந்தன் பக்கமாச் சேவிப்ப
அண்ணல் முச்சுடர் முளைத்தொரு வரைநடந்து அனையதோர்
மருங்கெய்த.

711 பந்த நான்மறைப் பொருள்திரட் டெனவட பாடல்செய்
தெதிர்புட்ப
தந்த னேத்தவா னுயிருண வுருத்தெழு தழல்விடத்
தெதிர்நோக்கும்
அந்த மாதியில் ஆல்நிழல் வடிவமா யாடியி னிழல்போல
வந்த சுந்தரன் சாத்துநீ றொடுதிரு மாலையும் எடுத்தேந்த.

712 அன்னத் தேரினன் அயன்வலப் பாங்கரு மராவலி கவர்சேன
வன்னத் தேரினன் மாலிடப் பாஙகரு மலர்க்கரங் குவிந்தேத்தப்
பொன்னத் தேமலர் கொன்றையான் வெள்ளியம் பொருப்பொடு
மெழீஇப் போந்தான்
என்னத் தேரணி மதுரைமா நகர்ப்புறத் தெய்துவா னவ்வேலை.

709. மழைபொழியும் வானமானது இடிக்கும் மேகம் போன்று உயர்ந்த நெடிய இடிக் கொடியும் வெள்ளிய அன்னக் கொடியும், உலகத்தை அழிக்கின்ற ஊழிக் காலத்தில் வீசுகின்ற சண்ட மாருதம் என்ற காற்றைப் போல நஞ்சினையுடைய பாம்புகள் துடிக்குமாறு ஆர்க்கின்ற கொடிக் கூட்டங்களுள் பெருமானுடைய இடபக் கொடியானது, கொடிகளுள் அரசர் போன்று அசைந்தாடியது.

710. நெற்றிக் கண்ணையுடைய இறைவனின் இரண்டு புறங்களிலும் திருமாலும் பிரமனும் தோன்றினாற் போல் அழகிய மூன்று தலையை உடைய சூலப் படையைத் தெய்வத் தன்மையுடைய பதினெட்டுப் படைக்கலங்களும் சூழ்ந்து சேவித்து வரப்பெறும் குடம்போலும் வயிற்றை உடைய ஒரு பெரிய பூதமானது அதனைக் கையில் ஏந்தி, பெருமை மிக்க மூன்று சுடர்களும் உதிக்கப்பட்ட ஒரு மலை நடந்ததைப் போல ஒரு பக்கம் நடந்து வந்தது.

711. நான்கு வேதங்களின் உண்மைப் பொருளைத் திரட்டிக் கூறினாற்போல, வடமொழியில் பாடல்களைக் கூறி எதிரே புட்ப தந்தன் துதித்து வந்தான். தேவர்களின் உயிரை மாய்க்கச் சினந்தெழுந்த 'தீ' போலச் செல்லும் நஞ்சினுக்கு எதிரே செல்லும் இறைவனது சாயையாகிய வடிவினராய் 'ஆலால சுந்தரர்' திருநீற்றையும், திருப்பள்ளித் தாமத்தையும் ஏந்தி வந்தார்.

712. அன்னத்தை வாகனமாக உடைய பிரமதேவன் வலப்பக்கத்திலும், பாம்பின் வலிமையைக் கொல்லும் கருடனை வாகனமாக உடைய திருமால் இடப்பக்கத்திலும் கை கூப்பித் தொழுது வந்தனர். கொன்றை மாலையையுடைய சிவபெருமான் வெள்ளியங்கிரியோடு புறப்பட்டு வந்தது போல இடபத்தின் மேலேறிப் பெரிய நிலைத் தேர்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ள மதுரை மாநகரின் புறத்தேவந்து சேர்ந்தார்.

713 தேவர்க டேவன் வந்தான் செங்கண்மால் விடையான் வந்தான்
மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணெம் பெருமான் வந்தான்
பூவலர் அயன்மால் காணாப் பூரண புராணன் வந்தான்
யாவையும் படைப்பான் வந்தா னென்றுபொற் சின்ன மார்ப்ப.

714 பெண்ணினுக் கரசி வாயிற் பெருந்தகை யமைச்ச ரேனை
மண்ணினுக் கரசர் சேனை மன்னவர் பிறரும் ஈண்டிக்
கண்ணினுக் கினியான் தன்னைக் கண்டெதிர் கொண்டு தாழ
விண்ணினுக் கரச னூரின் வியத்தகு நகரிற் புக்கான்.

715 முகிறவழ் புரிசை மூதூர் முதற்பெரு வாயி னீந்தி
அகிறவழ் மாட வீதி வலம்பட அணைவா னாக
நகிறழை பொலங்கொம் பன்ன நன்னகர் மகளிர் அம்பொற்
றுகிறழை மருங்கு லாயத் தொகைபுறந் தழுவச் சூழ்ந்தார்.

716 தமிழ்முதற் பதினெண் டேத்து மகளிருந் தாரு நாட்டின்
அமிழ்தமன் னவரு முல்லை யம்புயங் குமுத நீலம்
குமிழ்நறுங் கோங்கு காந்தள் கோழிண ரசோகம் வாசம்
உமிழ்தர மலர்ந்த நந்த வனமென ஒருங்கு மொய்த்தார்.

மணமகனைச் சிறப்புடன் வரவேற்றல்

713. அப்போது பொற்சின்னங்கள் பின்வருமாறு ஆரவாரம் செய்தன. தேவர்களுக்கெல்லாம் தேவனானவன் வந்தான்! சிவந்த கண்களையுடைய திருமாலான இடபவாகனத்தையுடையவன் வந்தான்! மூன்று கடவுளர்க்கும் முதன்மையானவன் வந்துவிட்டான்! மூன்று கண்களையுடைய இறைவன் வந்தான்! தாமரை மலரில் உள்ள பிரமனும் திருமாலும் காணாப் பழமையான திருப்பாதங்களையுடைய பெருமான் வந்தான்!

714. மங்கையர்க்கரசியம்மையாரின் சிறப்பான அரண் மனை வாயிலில் பிராட்டியாரின் 'சுமதி' முதலிய மந்திரிகளும், சேனாதிபதிகளும், பிறநாட்டு அரசர்களும், மற்றையோரும் கூடி நகர மதில் வாயிலின் கண் சென்று கண்ணுக்கினிய கோலம் கொண்டுள்ள சிவபெருமானைத் தரிசித்து எதிர் கொண்டு வணங்கினார்கள். இந்திர உலகத்திலும் சிறந்த திருநகரான மதுரைத் திருநாட்டிற்குள் இறைவன் சென்றடைந்தார்.

715. மேகம் தவழுகின்ற உயர்ந்த மதிலையுடைய மதுரையின் பெருவாயிலைக் கடந்து, அகிற்புகை தவழுகின்ற மாளிகைகளை யுடைய வீதியில் எழுந்தருளினார். அந்நகரில் உள்ள பூங்கொத்தினைப் போன்ற பெண்கள், பொன்னாலாகிய ஆடைகளை அணிந்த தோழிகள் சூழ்ந்துவர அங்கே வந்து கூடினார்கள்.

பல நாட்டுப் பெண்கள் எதிர் கொண்டு வந்து தரிசித்தல்.

716. தமிழ்நாடு முதலிய பதினெட்டு நாட்டுப் பெண்களும், கற்பக நாட்டின் அமுதம் போன்ற பெண்களும், முல்லை, தாமரை, குமுதம், நீலோற்பலம், குமிழம், கோங்கு, காந்தள் அசோகம் ஆகிய இவை மணம் கமழ மலர்ந்த நந்தவனம் போல ஒரு சேரச் சிவபெருமானைக் காணச் சூழ்ந்தார்கள்.

717 எம்மைநீர் விடுதி ரேயோ வென்பபோற் கலையுஞ் சங்கும்
விம்மநாண் மடனும் உங்க ணெஞ்சுடை வெளியா றாக
உம்மைநீத் தோடுமந்தோ வுரைதந்தன முரைத்தோம் என்று
தம்மைநூ புரங்கால் பற்றித் தடுப்பபோ லார்ப்பச் சென்றார்.

718 கடியவிழ் கமலக் காடு பூத்ததோர் கருணை வாரி
அடிமுதன் முடியீ றாக அலர்விழிக் குவளை சாத்திக்
கொடியசெம் பதுமப் போது குழல்மிசைச் சூடு வார்போற்
தொடியணி கரங்கள் கூப்பித் துதியென வினைய சொல்வார்.

719 நங்கையென் னோற்றாள் கொல்லோ நம்பியைத் திளைத்தற்
கென்பார்
மங்கையை மணப்பான் என்னோ வள்ளலு நோற்றா னென்பார்
அங்கடி மதுரை யென்னோ ஆற்றிய தவந்தா னென்பார்
இங்கிவர் வதுவை காண்பா னென்னநாம் நோற்றோ மென்பார்.

720 தென்னவன் வருந்தி மேனாட் செய்தவப் பேறாப் பெற்ற
தன்மகள் வதுவை காணத் தவஞ்செய்தான் இலனே யென்பார்
கன்னித னழகுக் கேற்ற அழகனிக் காளை யென்பார்
மன்னவ னிவனே யன்றி வேறிலை மதுரைக் கென்பார்.

717. ''எங்களை நீங்கள் கைவிடுகின்றீர்களே'' என்ற முறையிடுதல் போலச் சோருகின்ற மேகலையும் வளையல்களும் ஒலித்தன. ''நாணமும் மடமும் உங்கள் உடைந்த மனவெளி யினையே வழியாகக் கொண்டு உங்களைவிட்டு ஐயோ ஓடிவிடும். அதனைச் சொன்னோம் சொன்னோம்,'' என்று தங்கள் காலைப்பிடித்துத் தடுப்பன போலச் சிலம்புகள் வாய்விட்டு ஒலிக்கவும் அம்மாதர்கள் சென்றார்கள்.

718. மணம் விரிந்த தாமரைக் காடு மலர்ந்தது போன்ற அருட் கடலாகிய இறைவனின் திருவடி முதல் திருமுடி ஈறாக கண்களாகிய நீல மலரைச் சூட்டி, கொடியையுடைய செந்தாமரை மலர்களைக் கூந்தலில் அணிந்து கொள்வார் போல வளையல் அணிந்த தம் கைகளைத் தலைமேல் குவித்துச் சிவபெருமானை நோக்கித் துதிமொழிகள் பலவற்றைக் கூறலாயினர்.

மணமக்களை வியந்துரைத்தல்

719. ''நம் தடாதகைப் பிராட்டியார் இப்பெருமானை அடைய என்ன தவம் செய்தாளோ!'' என்பார் சிலர், ''இந்த வள்ளலும் இப் பெருமாட்டியை அடைய என்ன தவம் செய்தாரோ!'' என்பார் சிலர், ''இம்மதுரை மாநகரம் செய்த தவம்தான் யாதோ?'' என்பார் சிலர். ''இங்கு இவர்களின் திருமணத்தைக் காண்பதற்கு நாம் என்ன தவம் செய்தோமோ?'' என்பார் சிலர்.

720. ''மலயத்துவசப் பாண்டியன் மிகவும் கஷ்டப்பட்டுச் செய்த தவத்தின் பயனாக அவதாரம் செய்த தன் புதல்வியின் திருமணத்தைக் காணுதற்கு மட்டும் தவம் செய்யாமல் போனானே'' என்பார் சிலர். ''கன்னியின் அழகிற்குத் தகுந்த காளை இவனே'' என்றும், ''மதுரை நாட்டை ஆளும் மன்னன் இவனே'' என்றும் சிலர் சொல்வார்கள்.

721 நங்கைதன் னலனுக் கேற்ப நம்பியைத் தந்த திந்தத்
துங்கமா மதிநூல் வல்ல சுமதிதன் சூழ்ச்சி யென்பார்
அங்கவ டவப்பே றென்பார் அன்னைதன் கன்னிக் கன்றி
இங்கிவண் மருக னாக வெத்தவ முடையா ளென்பார்.

722 பூந்துகி னெகிழ்ப்பர் சூழ்வர் புணர்முலை யலைப்பர் பூசு
சாந்தினை யுகுப்பர் நாணந் தலைக்கொண்டார் போலச் சாய்வர்
கூந்தலை யவிழ்ப்பர் வாரிக் கூட்டுவர் முடிப்பர் மேனி
மாந்தளிர் எங்கு மாரன் வாளிகள் புதையச் சோர்வார்.

723 தண்ணளி யொழுக்கஞ் சார்ந்த குணத்தினைச் சார்ந்து மிந்த
வண்ணமென் மலர்கள் என்னே வாளியாய்த் தைத்த வென்பார்
கண்ணறுங் கூந்தல் வேய்ந்த கடியவிழ் நீலத் தாரும்
வெண்ணகை யரும்பு முல்லைத் தாமமும் வெறுத்து வீழ்ப்பார்.

721. ''பெண்களில் சிறந்தவராகிய நம்முடைய பிராட்டிக்கு ஏற்ற நம்பியைக் கொண்டு வந்தது, இந்த உயர்ந்த பெருமை மிக்க நூல்வல்ல அமைச்சனான 'சுமதி' யின் சூழ்ச்சித் திறன்தான்'' என்று சிலர் சொல்வார்கள். ''பிராட்டியாருடைய தவப் பயன்தான் காரணம்'' என்று சிலர் சொல்வார்கள். ''பிராட்டியாரின் அன்னையான காஞ்சனமாலை பிராட்டியைப் பெறுவதற்கு நோற்ற தவமல்லால், இந்த நம்பியை மருமகனாகப் பெறுவதற்கு அதனினும் பெரிய தவத்தை அல்லவா செய்திருக்கிறாள்!'' என்று சிலர் சொல்வார்கள்.

சில மங்கையர் தம் நிலையழிதல்

722. மணமகன் கோலத்தில் எழுந்தருளிய சிவபெருமானைக் கண்ட சில மங்கையர் தம் வசம் இழந்தனர். சிலர் தாம் அணிந்திருந்த அழகிய ஆடையை நெகிழச் செய்து பின் ஒழுங்கு செய்து உடுத்துக் கொள்வர். நெருங்கிய கொங்கைகளை வருத்திப் பின் பூசிய சந்தனத்தை உதிர்ப்பர் சிலர். சிலர் நாணம் கொண்டவர்களைப் போலத் தலை சாய்ப்பர். சிலர் வாரி முடித்த கூந்தலை அவிழ்த்துப் பின்னர் மீண்டும் முடித்துக் கொள்வர். சிலர் மாந்தளிர் போன்ற தங்கள் உடல்களில் மன்மதனுடைய கணைகள் தைக்க ஆவி சோர்வர்.

723. குளிர்ச்சி பொருந்திய அருளையும், நல்ல குணத்தையும் உடைய மென்மையான இவ்வண்ண மலர்கள், மன்மதனின் வில்லின் நாணினை அடுத்தும் கணைகளாக வந்து தைத்தன. ''இஃது என்ன அதிசயம்''- என்பார் சிலர். தேன் மணம் கமழும் கூந்தலில் அணிந்த மணத்தோடு மலர்ந்த நீலமலர் மாலையையும், முல்லை மலர் மாலையையும் அவர்கள் வெறுத்து நீக்குவார்கள்.

724 விம்மிச்செம் மாந்த கொங்கை மின்னனார் சிலர்விற் காமன்
கைம்மிக்க கணையே றுண்டு கலங்கிய மயக்கால் தங்கள்
மைம்மிக்க நெடுங்கண் மூரல் வதனமும் அவனம் பென்றே
தம்மிற்றம் முகத்தை நோக்கார் தலையிறக் கிட்டுச் செல்வார்.

725 பற்றிய பைம்பொன் மேனிப் பசப்பது தேறா ரண்ணல்
ஒற்றைமால் விடையின் மேற்கொண் டிருந்துநம் முளத்து மேவப்
பெற்றனம் இதென்கொல் மாயம் பேதைமீர் பெருமா னீண்ட
கற்றைவார் சடைப்பூங் கொன்றை யிதுவன்றோ காண்மி
னென்பார்.

726 திங்களென் றெழுந்து நம்மைச் சுடுவதென் செந்தீ யென்பார்
புங்கவன் சென்னி மீதும் கிடப்பதே போலு மென்பார்
அங்கவற் கிந்த வெப்ப மிலைகொலென் றயிர்ப்பார் ஆற்றக்
கங்கைநீர் சுமந்தா னென்பா ரதனையுங் காண்மி னென்பார்.

727 கலையொடு நாணம் போக்கிக் கருத்தொடு வண்ணம் வேறாய்
உலையொடு மெழுகிட் டென்ன வுருகுகண் ணீரர் ஆகிக்
கொலையொடு பயில்வேல் கண்ணார் குரிசில்தன் பவனி
நோக்கி
அலையொடு மதியஞ் சூடு மையன்மெய் யன்ப ரொத்தார்.

724. பெரிய தனங்களையுடைய சில பெண்கள், காமனின் வலிமை மிக்க கணைகள் தைத்த மயக்கத்தால் கலங்கி, தங்களின் மை தீட்டப்பட்ட நீண்ட கண்களும், பற்களும், முகங்களும் அம்மன்மதனின் அம்புகளே என்று கருதி ஒருவர் மற்றொருவர் முகத்தைப் பார்க்காதவர்களாகிக் கவிழ்ந்த தலையோடு செல்வார்கள்.

725. ''நம் கண் எதிரே, ஒப்பற்ற பெரிய இடபத்தின்மேல் இறைவன் ஏறி இருந்தும், பொன் போன்ற நம் உடம்பில் ஏறியுள்ள பசப்பினை அறியாதவராய் உள்ளாரே? நம் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ளாரே! இஃது என்ன மாயம்! பெண்களே, அச்சிவபெருமானின் சடையில் உள்ள கொன்றை மலர் இதோ நம் உடம்பில் தோன்றும் (பசப்பினைச் சுட்டிக் காட்டி) இது தானோ? பாருங்கள்!'' என்று சிலர் சொல்வார்கள்.

726. ''பெரிய நெருப்பானது சந்திரன் என்ற பெயரோடு தோன்றி நம்மைச் சுட்டெரிப்பது ஏனோ?'' என்று சிலர் கேட்பார்கள். ''இச்சந்திரன் இறைவனின் திருமுடியில் இருப்பதே அதற்குக் காரணம்,'' என்பார் சிலர் விடையாக. ''அவருக்கு இந்த வெம்மை இல்லையோ?'' என்று சந்தேகத்தோடு கேட்பார் சிலர். ''அந்த வெப்பத்தை நீக்கும் பொருட்டே கங்கை நீரைத் தன் தலையில் தாங்கியுள்ளார்,'' என்பார் சிலர். ''அதனைப் பாருங்கள்'' என்பார் சிலர்.

727. ஆடவர்களின் உயிரைக் கொல்லுகின்ற அழகு மிகுந்த வேல் போன்ற கண்களையுடைய சில பெண்கள் ஆடையோடு வெட்கத்தையும் நீக்கிவிட்ட ார். அவர்களின் உள்ளமும் நிறமும் வேறுபாடு உடையதாயிற்று. உள்ளம் உருகுதலால் கண்ணீரானது உலையில் உருகும் மெழுகு போல் உருகி ஒழுகி, இறைவனின் மெய்யடியார்களைப் போல் கரைந்து உருகும் தன்மையை அவர்கள் அடைந்தனர்.

728 நட்டவர்க் கிடுக்க ணெய்த நன்றிகொன் றவர்போற் கையில்
வட்டவாய்த் தொடியுஞ் சங்கு மருங்குசூழ் கலையு நீங்க
இட்டபொற் சிலம்பிட் டாங்கே நன்றியி னிகவார் போற்கால்
ஒட்டியே கிடப்ப நின்றா ருகுத்தபூங் கொம்பர் அன்னார்.

729 மின்னகு வேற்க ணாளோர் விளங்கிழை விடைமே லையன்
புன்னகைப் போது நோக்கப் போதுமுப் புரமும் வேனில்
மன்னவன் புரமுஞ் சுட்ட வல்லவோ கெட்டேன் வாளா
இன்னவை சுடாது போமோ வேழையேம் புரமும் என்றாள்.

730 உழைவிழி யொருத்தி தன்க ணுருவெளி யாகித் தோன்றுங்
குழகனை யிரண்டு செம்பொற் கொங்கையும் ஒன்றாய் வீங்கத்
தழுவுவா ளூற்றங் காணாள் தடமுலை யிரண்டே யாகி
யிழையுடை கிடக்க நீங்கி யிருக்கைகண் டிடைபோ
லெய்த்தாள்.

731 வாரிருங் கொங்கை யாளோர் மாதராள் வானோர் உய்யக்
காரிருள் விடமுண் டன்று கறுத்ததே யன்று கொன்றைத்
தாரிருஞ் சடையார் கண்டத் தையன்மீர் தமது நெஞ்சங்
காரிரும் பென்றே காட்டக் குறியிட்ட கறுப்பே யென்றாள்.

728. நண்பர்க்கு வறுமை வந்துற்ற காலத்து அந்நண்பரை விட்டு விலகும் நன்றி கொன்ற மக்களைப் போல அம்மகளிர் கையில் அணிந்திருந்த வட்டவடிவமான தொடியும், வளைகளும், இடையில் சூழ்ந்த மேகலையும் சோர்ந்து விலகின. ஆனால் அவர்களின் கால்களில் அணிந்திருந்த சிலம்புகள் மட்டும் வறுமைக் காலத்தும் விட்டுப் பிரியாத நன்றி மிக்க மக்களைப் போல் கால்களில் அணிந்தபடியே கிடந்தன. இதனால் மலர்களை உதிர்த்து விட்டு நிற்கின்ற பூக் கொம்புகளைப் போன்ற தோற்றத்துடன் அப்பெண்கள் காட்சியளித்தனர்.

729. ''இடப வாகனத்தின் மேல் அமர்ந்திருக்கும் இப்பெருமானின் புன்னகையும், இனிய பார்வையும் ஒரு காலத்தில் திரிபுரத்தையும், மன்மதனையும் எரித்தன அல்லவா? ஐயோ! கெட்டேனே! இப் புன்னகையானது எளியேனது உடலையும் சுடாமல் விட்டு விடுமோ?'' என்று வேல் போன்ற கண்களையுடைய ஒரு பெண் எண்ணிக் கலங்கினாள்.

730. மான் போன்ற மருண்ட பார்வையுடைய ஒரு பெண் தன் கண்களுக்குப் பொய் உருத் தோற்றமாய் வெளியில் தோன்றும் இறைவனின் திருமேனியைத் தன்னிரண்டு தனங்களும் ஒன்றாக வீங்கிப் பொங்கத் தழுவுகின்றாள். அப்போது உண்மை உருவைத் தழுவும்போது உண்டாகும் இன்பம் இங்கு காணப்படாததை உணர்ந்து, நூலிழை இடையே தங்குமாறு பெரிய முலைகள் பிரிந்து இருப்பது கண்டு தன் இடை மெலிந்திருப்பது போல் உடலும் மெலியப் பெற்றாள்.

731. கச்சினை அணிந்த தனங்களை உடைய ஒரு பெண், ''பெண்களே! கொன்றை மாலையை அணிந்த சடையையுடைய இப்பெருமானது கண்டம் கறுத்திருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? முன்னொரு காலத்தில் தேவர்கள் உயிர் பிழைக்க நஞ்சை உண்டதால் ஏற்பட்ட கருமையன்று. நம்மைப் போன்ற பெண்களுக்கு இரக்கம் காட்டாததால் இவர் உள்ளம் வலிய இரும்பைப் போன்றது. அதனைக் காட்டவே அவ்விரும்பின் நிறமான கருமை இவர் கண்டத்தில் உள்ளது'' என்றாள்.

732 பொன்னவிர் சடையான் முன்னே போனதென் நெஞ்சு தூதாய்
அன்னது தாழ்த்த தென்னென் றழுங்குவாள் ஒருத்தி கெட்டேன்
என்னது நெஞ்சும் போன தென்றன ளொருத்தி கேட்ட
மின்னனாள் வேற்கண் சேந்தாள் விளைத்தன ளவளும் பூசல்.

733 செப்பிளங் கொங்கை யாளோர் தெரிவைநீர் திருநோக் கெம்பால்
வைப்பதென் மதன்போல் எம்மைச் சுடுவதே மதனுக் காவி
அப்பொழு தளித்தாற் போலெம் மாவியு மளித்தாலின்று
மெய்ப்புக ழுமக்குண் டின்றேல் பெண்பழி விளையு மென்றாள்.

734 கவனமால் விடையான் தன்னைக் கடைக்கணித் திலனென் றங்கோர்
சுவணவான் கொடியோர் ஓவத் தொழில்வல்லான் குறுக நோக்கி
இவனைநீ யெழுதித் தந்தால் வேண்டுவ ஈவ னென்றாள்
அவனை யாரெழுத வல்லா ரென்றன னாவி சோர்ந்தாள்.

735 வலத்தயன் வரவு காணாள் மாலிடங் காணாள் விண்ணோர்
குலத்தையுங் காணாள் மண்ணோர் குழாத்தையுங் காணாள் ஞானப்
புலத்தவர் போலக் கண்ட பொருளெலா மழுமான் செங்கைத்
தலத்தவன் வடிவாக் கண்டாள் ஒருதனித் தையன் மாது.

732. ஒருத்தி, ''என்னுடைய மனம் தூதாகப் பொன் போன்ற சடையையுடைய இறைவனிடம் சென்றது. அஃது ஏன் இன்னும் என்பால் மீண்டு வரக் காலம் தாழ்ந்தது?'' என்று துயரத்துடன் கூறினாள். அதைக் கேட்ட மற்றொரு பெண் ஒருத்தி, ''ஆ! கெட்டேன்! என்னுடைய மனமும் தூதாக அவரிடம் சென்றதே'' என்று கூறினாள். அதனைக் கேட்ட மின்னலைப் போன்ற முதற் பெண், ''எனக்குரியவரிடத்தில் நீ காதல் வைத்தது என்ன? என்று வேல் போன்ற கண்களில் கோபம் பொங்கச் சண்டையிடத் தொடங்கினாள்.

733. ''நீர் என்னிடம் பார்வை வைத்திருப்பது எதற்கு? உம் பார்வை மன்மதனை எரித்தது போல் என்னையும் எரிக்கின்றதே! எரித்த அப்பொழுதே அம்மன்மதனுக்கு உயிர் கொடுத்தீர். அது போல் இன்றைக்கு எமது உயிரையும் கொடுப்பீரானால் உமக்கு உண்மையான புகழ் ஏற்படும். இல்லாவிடில் பெண் பழிதான் உண்டாகும்'' என்று செப்பினைப் போன்ற தனங்களை உடைய பெண் கூறினாள்.

734. பொற்கொடி போன்ற அழகிய பெண்ணொருத்தி, விரைந்து செல்கின்ற சிவபெருமான் தன்னைக் கவனிக்காமல் செல்கின்றார் என்று கருதி, அங்கு எதிரே வந்த ஒரு ஓவியனைப் பார்த்து, ''இதோ இங்குச் செல்லும் அழகனை எழுதித் தந்தால் நீ வேண்டும் பொருளைத் தருவேன்,'' என்றாள். அதற்கு அவ்வோவியனோ, ''அவனை ஓவியத்தில் யாரால் எழுத முடியும்?'' என்று சொன்னான். அதைக் கேட்டு அவள் ஆவி சோர்ந்தாள்.

735. ஓர் அழகிய பெண்ணொருத்தி சிவபெருமானின் வலப்பக்கத்திலே வந்த பிரமனையும், இடப்பக்கத்திலே வந்த திருமாலையும், தேவர்கள் கூட்டத்தையும், மக்கள் கூட்டத்தையும் காணாதவளாய், மெய்யுணர்வுடைய ஞானிகள் போல் பார்த்த பொருள் அனைத்தையும் மான் மழுவேந்திய சிவபெருமானின் திருவுருவமாகவே கண்டாள்.

736 முன்பெற்றங் காலிற் செல்ல அண்ணலை முன்போய்க்
காண்பான்
பின்பற்றி யாசைப் பாசம் பிணித்தெழ வோடு வாளோர்
பொன்பெற்ற முலையாள் கொம்ப ருகுமலர் போலத் தாளின்
மின்பெற்ற காஞ்சி தட்ப விலங்கொடு நடப்பாள் ஒத்தாள்.

737 விதுக்கலை மிலைந்து செங்கண் விடையின்மேல் வருமா னந்த
மதுக்கடல் தனைக்கண் வாயான் முகந்துண்டு மகளிர் எல்லாம்
புதுக்கலை சரிவ தோரார் புரிவளை கழல்வ தோரார்
முதுக்குறை வகல்வ தோரார் மூழ்கினார் காம வெள்ளம்.

738 பைத்தழ கெறிக்கு மாடப் பந்திமேல் நின்று காண்பார்
கைத்தலங் கூப்பி யாங்கே கண்களு நோக்கி யாங்கே
சித்தமுங் குடிபோய்ச் சொல்லுஞ் செயலுமாண் டங்கண் மாண
வைத்தமண் பாவை யோடு வடிவுவேறு அற்று நின்றார்.

739 அன்பட்ட புரமுங் காம னாகமுஞ் சுட்ட தீயிம்
மின்பட்ட சடிலத் தண்ணல் மெய்யென்ப தறியார் நோக்கிப்
பொன்பட்ட கலனு மெய்யும் பொரிகின்றார் அவனைப் புல்லின்
என்பட்டு விடுமோ ஐய ஏழைய ராவி யம்மா.

736. பொன்போலும் தனங்களையுடைய ஓர் அழகிய பெண், இடபத்தினையுடைய பெருமானை முன் சென்று காண வேண்டும் என்ற ஆசையால் கட்டி இழுக்கப்பட்டு, கொம்பிலிருந்து உதிர்கின்ற மலர் போன்ற இடையில் இருந்து நழுவிய மேகலையானது தன் காலில் விழுந்து தடுக்கவும், விலங்கிடப்பட்டவர் தடுமாறி ஓடுவது போன்று மிக வேகமாக ஓடத் தொடங்கினாள்.

737. கீற்றுப் போன்ற பிறைச் சந்திரனை அணிந்த பெருமான் சிவந்த கண்களையுடைய இடபத்தின் மேல் வருகின்ற பேரின்பமாகிய தேன்கடலை மாதர் அனைவரும் கண்களாகிய வாயால் முகந்து குடித்துக் காமமாகிய வெள்ளத்தில் மூழ்கினர். அதனால் அவர்கள் ஆடைகள் சோர்வதையும், தம் கையில் உள்ள வளையல்கள் கழலுவதையும் தம் பேரறிவு நீங்குதலையும் உணராதவர்களாயினர்.

738. பெரிய மாட வரிசையில் நின்று காணுகின்ற பெண்கள் தம்முடைய கைகளைக் குவித்து அவரைக் கண்கள் பார்த்த வண்ணம் இருக்க மனம் மட்டும் பெருமானிடம் சென்றடைந்தன. அவர்களின் சொல்லும் செயலும் அசைவற்று நின்றுவிட, மண்ணால் செய்யப்பட்ட பொம்மைகட்கும் அவர்கட்கும் வித்தியாசம் இன்றிக் காட்சி அளித்தனர்.

739. திரிபுரத்தையும், மன்மதனையும் சுட்டெரித்த நெருப்பு இச்சிவபெருமானுடைய திருவுருவமே என்பதைச் சிறிதும் அறியாதவராய் இம்மங்கையர்கள் அவரை விரும்பிப் பார்த்துப் பொன்னாலாகிய அணிகலன்களும் உடலும் பொரியப் பெறு கிறார்கள். அப்பெருமானுடைய திருமேனியைத் தழுவுவாராயின் அவர்கள் உயிர் என்ன பாடுபடுமோ?

740 கொடிகள்பூத் துதிர்ந்த போதிற் கொம்பனார் கலையுஞ் சங்குந்
தொடிகளுஞ் சுண்ணத் தூளுஞ் சுரர்பொழி மலரு நந்தி
யடிகள்கைப் பிரம்பு தாக்கச் சிந்திய அண்ட வாணர்
முடிகளின் மணியுந் தாருங் குப்பையாய் மொய்த்த வீதி.

741 துன்னிய தருப்பை கூட அரசிலை துழாவித் தோய்த்துப்
பொன்னியல் கலச நன்னீர் பூசுரர் வீச அன்னார்
பன்னியர் வட்டமாக வானவிற் பதித்தால் என்ன
மின்னிய மணிசெய் நீரா சனக்கலம் விதியாற் சுற்ற.

742 கொடிமுர சாடி செம்பொற் குடமணி நெய்யிற் பூத்த
கடிமலர் அனைய தீப மங்குசங் கவரி யென்னும்
படிவமங் கலங்க ளெட்டும் பரித்துநேர் பதுமக் கொம்பர்
வடிவினார் வந்து காட்ட மாளிகை மருங்கிற் செல்வான்.

743 செப்புரங் கவர்ந்த கொங்கை யரம்பையர் தீபங் காட்டுந்
துப்புர வன்பி னார்க்குத் தூயமெய்ஞ் ஞான நல்கும்
முப்புரங் கடந்தான் தன்னை மும்முறை யியங்கள் ஓங்கக்
கப்புர விளக்கந் தாங்கி வலஞ்செயக் கருணை பூத்தான்.

744 கோயில்முன் குறுக லோடு மைம்புலக் குறும்பு தேய்த்த
தூயநால் வேதச் செல்வர் சுவத்திக ளோத நந்தி
சேயிருந் தடக்கை பற்றிச் செங்கணே றிழிந்துநேர்ந்து
மாயனும் அயனு நீட்டு மலர்க்கர மிருபாற் பற்றி.

பெருமான் அரசமாளிகையை அடைதல்

740. கொடிகளில் இருந்து சிந்திய மலர் போல, பூங்கொம்பைப் போன்ற அழகிய பெண்கள் சிந்திய மேகலைகளும், வளைகளும், தொடியும், சுண்ணப்பொடியும், தேவர்கள் பொழிந்த மலரும், நந்தி தேவரின் கையில் உள்ள பிரம்பு தாக்குதலால் சிதறுண்ட தேவர்களின் முடிகளில் உள்ள மாணிக்கங்களும், கற்பகப் பூமாலைகளும் அத்தெருக்களில் விழுந்து குப்பைகளாயின.

741. அந்தணர்கள் பொற்கலசத்தில் தருப்பைப் புற்களோடு கூடியிருக்கும் நீரில் அரசிலையைத் துழாவித் தோய்த்துத் தெளித்தனர். அந்தணர் மனைவிமார்கள் இந்திரவில்லை வட்டமாக வைத்தாற் போல இரத்தினங்களை வட்டமாக வைத்து இழைக்கப் பெற்ற தட்டினை ஏந்தி முறைப்படி ஆலத்தி சுற்றினர்.

742. பூங்கொத்தை ஒத்த வடிவத்தினையுடைய பெண்கள் கொடியும், பேரிகையும், கண்ணாடியும், பொற் குடமும், மணியும், நெய்யேற்றிய மலர் போன்ற விளக்கும், அங்குசமும், சாமரையும் என்று சொல்லப்படுகின்ற எட்டு மங்கலப் பொருள்களையும் ஏந்தி வந்து காட்டவும், இறைவன் திருமாளிகையின் பக்கத்தில் செல்கின்றான்!

அரண்மனையில் எழுந்தருளல்

743. திருவிளக்கிடுகின்ற உண்மையான அன்பினையுடைய தொண்டர்களுக்குத் தூய்மையான மெய்ஞ்ஞானத்தைத் தந்தருளும் இறைவன், செப்பு போன்ற வடிவினையுடை கொங்கைகளுடைய தேவப் பெண்கள் கற்பூர தீபத்தினை ஏந்தி இசைக் கருவிகள் முழங்க மூன்று முறை வலம் வரவும் அவன் அவர்கட்கு அருள் செய்தான்.

744. ஐம்புலன்களின் குறும்புகளை அழித்த தூய்மையான வாழ்க்கையையுடைய அந்தணர்கள், திருக்கோயிலின் முன்னே இறைவன் சென்றவுடன் மங்கல வாழ்த்துக்களைக் கூறினார்கள். உடனே இறைவன் நந்திதேவரின் சிவந்த நீண்ட பெரிய கரங்களைப் பிடித்துக் கொண்டு இடப வாகனத்தினின்றும் இறங்கினார். பின்னர் திருமாலும், பிரமனும் இருபக்கமும் வந்து கைகளை நீட்ட அவற்றைப் பற்றிக் கொண்டார்.

745 எதிர்ந்தரு மறைகள் காணா திளைத்தடி சுமந்து காணும்
முதிர்ந்தவன் புருவ மான பாடிகை முடிமேற் சத்தி
பதிந்தவர் தலைமேற் கொண்டு பாசவல் வினைதீர்த்
துள்ளம்
பொதிர்ந்துபே ரின்ப நல்கும் பொன்னடிப் போது சாத்தி.

746 பையரா வுரியி னன்ன நடைப்படாம் பரப்பிப் பெய்த
கொய்யவிழ் போது னீத்தம் குரைகழல் அடிந னைப்பத்
தெய்வமந் தார மாரி திருமுடி நனைப்பத் தென்னர்
உய்யவந் தருளு மைய னுள்ளெழுந் தருளுமெல்லை.

747 மங்கல மகளி ரோடுங் காஞ்சன மாலை வந்து
கங்கையின் முகந்த செம்பொற் கரகநீர் அனையார் வாக்கத்
திங்களங் கண்ணி வேய்ந்த சிவபரஞ் சோதி பாத
பங்கயம் விளக்கி யந்நீர் தலைப் பெய்து பருகி நின்றாள்.

748 பாதநாண் மலர்மேல் ஈரம் புலரவெண் பட்டால் நீவிச்
சீதமென் பனிநீ ராட்டி மான்மதச் சேறு பூசித்
தாதவிழ் புதுமந் தாரப் பொன்மலர் சாத்திச் சென்னி
மீதிரு கரங்கள் கூப்பி வேறுநின் றிதனைச் சொன்னாள்.

745. அரிய வேதங்கள் இறைவனின் திருவடிகளைத் தேடிக் காணாமல் மெலிந்து, பின்னர் முதிர்ந்த அன்பின் காரணமாக அத்திருவடிகளைச் சுமந்து கண்டது. அத்தகைய திருவடிகளைக் காண வேண்டுமென்று கருதி, அன்புருவான அடியார்கள் தம் முடி மேல் சத்தினிபாதம் பெற்றனர். அவ்வாறு கொள்ளப் பெற்றதால், வினையைப் போக்கி, உள்ளத்தில் நீங்காது நின்று பேரின்பத்தை அருளும் திருவடி மலர்களை அவர்கட்கு இறைவன் சாத்தினார்.

746. பாம்பின் தோலைப் போன்ற நடைப் பாவாடையை விரித்து அதன் மேல், காம்பு நீக்கப்பட்ட மலர்களைத் தூவினர். அம்மலர்த் தொகுதி வீரக்கண்டையை அணிந்த திருவடிகளை நனைக்கவும், தெய்வத்தன்மை பொருந்திய மந்தார மலர் மழை திருமுடியினை நனைக்கவும் பாண்டியர்கள் உய்யும் பொருட்டுத் தலைவனாய் வந்த சிவபெருமான் திருக்கோயிலினுள் எழுந்தருளினார்.

காஞ்சனமாலையின் வேண்டுகோள்

747. அப்போது மங்கலநாண் அணிந்த பெண்கள் சூழக் காஞ்சன மாலை வந்தாள். கங்கையில் இருந்து கொண்டு வந்த பொற்கலசங்களில் உள்ள நீரை அப்பெண்கள் சிவபெருமானின் திருவடித் தாமரைகளில் வார்க்க, காஞ்சன மாலை சிவபரஞ்சுடரின் திருவடித் தாமரைகளை விளக்கி அந்நீரைத் தன் தலையில் தெளித்துக் கொண்டு உள்ளும் பருகினாள்.

748. தாமரை மலரில் உள்ள ஈரம் நீங்குமாறு வெண் பட்டாடையால் துடைத்தனர். குளிர்ந்த பனிநீரால் திருமஞ்சனம் செய்தனர். மான்மதச் சாந்தைப் பூசினர். புதிய மகரந்தத்தோடு விளங்கிய மலர்களைச் சூட்டினர். பின்னர் காஞ்சனமாலை ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று தன்னிரண்டு கைகளையும் தலையின் மேல் குவித்துக் கொண்டு சொல்லத் தொடங்கினாள்.

749 அரு மையால் அடியேன் பெற்ற வணங்கினை வதுவை செய்தித்
திருநகர்த் திருவுங் கன்னித் தேயமுங் கைக்கொண் டாள்கென்
றுரைசெய்தா ளதற்கு நேர்வார் உண்ணகை யுடைய ராகி
மருகனா ரியங்க ளார்ப்ப வதுவைமண் டபத்தைச் சேர்ந்தார்.

750 அருத்தநான் மறைகள் ஆர்ப்ப வரிமணித் தவிசிலேறி
நிருத்தனாங் கிருந்து சூழ நின்றமா லயனை யேனை
உருத்திரா தியரைப் பின்னு மொழிந்தவா ணவரைத் தத்தந்
திருத்தகு தவிசின் மேவத் திருக்கடை நாட்டம் வைத்தான்.

751 விண்டல வானோ ரேனோர் மிடைதலான் ஞாலச் செல்வி
பண்டைய ளன்றி யின்று பரித்தனள் பௌவ மேழும்
உண்டவன் றன்னைத் தானின் றுத்தரத் திருத்தி னானோ
அண்டர்நா யகன்ற னாணை வலியினோ வறியேம் அம்மா.

752 மாமணித் தவிசில் வைகி மணவினைக் கடுத்த ஓரை
தாம்வரு மளவும் வானத் தபனிய மலர்க்கொம் பன்னார்
காமரு நடன நோக்கிக் கருணைசெய் திருந்தா னிப்பாற்
கோமகள் வதுவைக் கோலம் புனைதிறங் கூறல் உற்றேன்.

749. ''பெரிய தவத்தால் நான் பெற்ற தெய்வக் கன்னியைத் திருமணம் செய்து கொண்டு, இந்த அழகிய நாட்டின் செல்வத்தையும், கன்னிநாடாகிய பாண்டிய நாட்டையும் கைக் கொண்டு அரசாள வேண்டும்'' என்று வேண்டி நின்றாள். அதற்கு உடன்படுபவராகிய மருமகன் புன்னகையுடன் வாத்தியங்கள் ஒலிக்கத் திருமண மண்டபத்தை அடைந்தார்.

மணமண்டபத்தில் இறைவர் வீற்றிருத்தல்

750. பொருளுடைய நான்கு மறைகளும் ஒலிக்க இரத்தின சிங்காதனத்தில் ஏறி இறைவன் வீற்றிருந்தார். சுற்றி நின்ற பிரமனையும், திருமாலையும், உருத்திரர் முதலானவரையும், மற்ற தேவர்களையும் அவரவர்களுக்குரிய இருக்கையில் அமரும்படி திருக்கடைக்கண் செய்தருளினார்.

751. வான உலகத்தைச் சேர்ந்த தேவர்களும் ஏனைய உலகத்தவர்களும் திருமண மண்டபத்தில் கூடி நெருங்கி இருந்தனர். அப்போது நிலமகள் முன் போல் ஒரு புறம் சாயாது இன்று சம நிலையில் நின்றே யாவரையும் தாங்கினாள். ஏழு கடலையும் பருகிய அகத்திய முனிவரை இப்போது சிவபெருமான் வடதிசையில் இருக்கச் செய்தாரோ? அல்லது சிவபெருமானின் ஆணையின் வலிமையினாலே பூமி சமமாக நிற்கின்றதோ? இந்நிலையை நாம் அறியோம்!

752. திருமணத்திற்குரிய நல்ல முகூர்த்த நேரம் வரும் வரையில் எம்பெருமான் பெரிய மணிகள் பதித்த சிங்காதனத்தில் வீற்றிருந்து வானுலகின் பூங்கொத்தைப் போன்ற தேவ மகளிரின் அழகிய ஆட்டத்தைப் பார்த்து அருள் புரிந்து இருந்தார். இனி தடாதகைப் பிராட்டியார் திருமணம் செய்து கொள்ளும் கோலத்தைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

753 மாசறுத் தெமையா னந்த வாரிநீ ராட்டிப் பண்டைத்
தேசுரு விளக்க வல்ல சிவபரம் பரையைச் செம்பொன்
ஆசனத் திருத்தி நான மணிந்துகுங் குமச்சே றப்பி
வாசநீ ராட்டி னார்கள் மதிமுகக் கொம்பர் அன்னார்.

754 முரசொடு சங்கம் ஏங்க மூழ்கிநுண் டூசு சாத்தி
அரசிய லறத்திற் கேற்ப வந்தணர்க் குரிய தானம்
விரைசெறி தளிர்க்கை யார வேண்டுவ வெறுப்பத் தந்து
திரைசெய்நீ ரமுத மன்னாள் திருமணக் கோலங் கொள்வாள்.

755 செம்மலர்த் திருவும் வெள்ளைச் செழுமலர்த் திருவுந் தங்கள்
கைமலர்த் தவப்பே றின்று காட்டுவார் போல நங்கை
அம்மலர் அனிச்ச மஞ்சு மடியிற்செம் பஞ்சு தீட்டி
மைம்மலர்க் குழன்மேல் வாசக் காசறை வழியப் பெய்து.

756 கொங்கையின் முகட்டிற் சாந்தங் குளிர்பனி நீர்தோய்த் தட்டிப்
பங்கய மலர்மேல் அன்னம் பவளச்செவ் வாய்விட் டார்ப்பத்
தங்கிய என்ன ஆர நூபுரந் ததும்பச் செங்கேழ்
அங்கதிர்ப் பாத சாலங் கிண்கிணி யலம்பப் பெய்து.

தடாதகைப் பிராட்டியார் திருமணக் கோலம் கொள்ளல்

753. பாசமாகிய குற்றத்தை நீக்குவித்து, பேரின்ப வெள்ளநீரில் மூழ்குவித்துப் பண்டைய ஒளியுருவை விளக்கவல்ல சிவசக்தியாகிய தடாதகைப் பிராட்டியாரை, சந்திரனைப் போன்ற முகத்தையுடைய பூங்கொத்துப் போன்ற பெண்கள், சிவந்த பொன்னாசனத்தில் அமரச் செய்து, கஸ்தூரி கலந்த குங்குமக் குழம்பைப் பூசி, நறுமணம் கமழும் நன்னீர் கொண்டு திருமஞ்சனம் செய்வித்தார்கள்.

754. பேரிகையும், சங்கமும் ஒலிக்க நீராடி முடிந்த பின்னர் மெல்லிய ஆடையை அணிந்தார். அரச தர்மங்கட்கு ஏற்ப அந்தணர்களுக்குத் தம் தளிர்க் கரங்களினால் அவர்கள் வேண்டும் பொருளை வெறுக்குமாறு நிறைய தானம் வழங்கினார். பின்னர் அமுதம் போன்ற பிராட்டியார் திருமணக் கோலம் செய்து கொள்ளத் தொடங்கினார்.

755. செந்தாமரை மலரில் இருக்கும் திருமகளும் வெண்டாமரையில் இருக்கும் கலைமகளும் தங்கள் மலர்க்கை செய்த தவப்பயனின் காரணமாக, பிராட்டியாரின் அழகிய அனிச்ச மலரை மிதிக்க அஞ்சுகின்ற மென்மை வாய்ந்த திருவடிகளில் செம்பஞ்சுக் குழம்பைத் தீட்டினர். மேகம் போன்ற கூந்தலில் மலர்களை அணிவித்து மணமுள்ள மயிர்ச் சாந்தை நிறையப் பூசினர்.

756. கொங்கைகளின் உச்சியில் சந்தனத்தைக் குளிர்ந்த பனிநீரில் குழைத்து அப்பினார்கள். தாமரை மலர் மேல் அன்னங்கள் சிவந்த வாயினைத் திறந்து ஒலிக்கும் தன்மை போல் திருவடிகளில் சிலம்பையும், சிவந்த நிறமுடைய அழகிய ஒளியையுடைய பாதசாலமும் கிண்கிணியும் அணிவித்தனர்.

757 எண்ணிரண் டிரட்டி கோத்த விரிசிகை யிருபத் தொன்றிற்
பண்ணிய கலாபம் ஈரேழ் பருமநா லிரண்டிற் செய்த
வண்ணமே கலையி ரண்டிற் காஞ்சியிவ் வகையோ ரைந்தும்
புண்ணியக் கொடிவண் டார்ப்பப் பூத்தபோற் புலம்பப் பூட்டி.

758 பொன்மணி வண்டு வீழ்ந்த காந்தளம் போது போல
மின்மணி யாழி கோத்து மெல்விரற் செங்கைக் கேற்ப
வன்மணி வைர யாப்புக் கடகமுந் தொடியும் வானத்
தென்மணிக் கரங்கள் கூப்ப விருதடந் தோளில் ஏற்றி.

759 மரகத மாலை யமபொன் மாலைவித் துருவ மாலை
நிரைபடு வான வில்லி னிழில்பட வாரத் தாமம்
விரைபடு களபச் சேறு மெழுகிய புளகக் கொங்கை
வரைபடு மருவி யன்றி வனப்புநீர் நுரையு மான.

760 உருவமுத் துடுவாய் அம்முத் துடுத்தபல் காசு கோளாய்
மருவவக் காசு சூழ்ந்த மாமணிக் கதிராய்க் கங்குல்
வெருவவிட் டிமைக்கு மார மேருவின் புறஞ்சூழ்ந் தாடுந்
துருவசக் கரம்போற் கொங்கை துயல்வர விளங்கச் சூட்டி.

761 கொடிக்கயல் இனமாய் நின்ற கோட்சுறா ஏறும் வீறு
தொடிக்கலை மதியுந் தங்கோன் றொல்குல விளக்காய்த் தோன்றும்
பிடிக்கிரு காதி னூடு மந்தணம் பேசு மாபோல்
வடிக்குழை மகரத் தோடு பரிதிவாண் மழுங்கச் சேர்த்து.

757. முப்பத்திரண்டு வடம் கொண்ட விரிசிகையையும் இருபத்தொரு வடம் கொண்ட கலாபத்தையும், பதினான்கு வடம் கொண்ட பருமத்தையும், எட்டு வடம் கொண்ட மேகலையையும், இரண்டு வடம் கொண்ட காஞ்சியையும், ஆக இவ்வாறு வெவ்வேறு பட்டையையுடைய ஐந்து அணிகளையும், ஒரு புண்ணியக்கொடி வண்டுகள் ஒலிக்க பூத்திருத்தல் போல ஒலிக்கும்படி இடையில் பூட்டினர்.

758. பொன் நிறமும், நீல நிறமும் உள்ள பொன் வண்டுகளும், கருவண்டுகளும் தங்கிய காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களில், ஒளிவிடும் நீலமணி பதித்த பொன் மோதிரத்தை அணிவித்தனர். சிவந்த கைகட்கு ஏற்ப வலிய வைரத்தால் செய்த தலைப்பூட்டை யுடைய கடகங்களையும், பிணைத்த இரண்டு தோள்களில் தொடிகளையும், வானில் உள்ள சூரியன் கரங்களைக் குவிக்குமாறு அதனை அணிவித்தனர்.

759. மணம்மிக்க களபக் குழம்பு பூசப்பட்ட புளகம் அரும்பிய கொங்கைகளில், மரகத மாலையையும், அழகிய பொன் மாலையையும், பவள மாலையையும், வரிசைப்பட இந்திர வில்லைப் போன்ற ஒளியை வீசும்படி அணிவித்தார்கள். அவர்கள் அணிந்த முத்துமாலையானது மலையிலிருந்து விழும் அருவியைப் போன்றி ருப்பதன்றி அவ்வருவியின் நுரையைப் போலவும் இருந்தது.

760. பருத்த முத்துக்கள் விண்மீன்களாகவும், அம்முத்துக் களைச் சூழ்ந்த பன்மணிகள் கோள்களாகவும், நடு நாயக பெரிய மணி சூரியனாகவும் பொருந்த அணியப்பட்ட பெரிய ஆரத்தினால் இருளானது அஞ்சி ஓடியது. மேருமலையின் புறத்தைச் சூழ்ந்து செல்லும் துருவச் சக்கரம் போல கொங்கைகளில் பதக்கம் அசையு மாறு அதனை அணிவித்தனர்.

761. கொடியில் எழுதிய மீனுக்குச் சுற்றமாக நின்ற வலிய மகர ஏறும், உயரும் கலைகளையுடைய வட்டமான சந்திரனும், தலைவனாகிய மலயத்துவசப் பாண்டியனுக்கு குல விளக்காய்த் தோன்றிய பிராட்டியாரின், இரண்டு திருக்காதுகளிலும் இரகசியம் பேசும் தன்மைபோல மகரக் குண்டலங்களோடு வடித்த குழைகளை அணிவித்தனர்.

762 மழைக்குமா மதிக்கு நாப்பண் வானவிற் கிடந்தால் ஒப்ப
இழைக்குமா மணிசூழ் பட்ட மிலம்பக மிலங்கப் பெய்து
தழைக்குமா முகிலை மைந்தன் றளையிடல் காட்டு மாபோற்
குழைக்குநீர்த் தகர ஞாழற் கோதைமேற் கோதை யார்த்து.

763 கற்பகங் கொடுத்த இந்தக் காமரு கலன்கள் எல்லாம்
பொற்பமெய்ப் படுத்து முக்கட் புனிதனுக் கீறி லாத
அற்புத மகிழ்ச்சி தோன்ற வழகுசெய் தமயந் தோன்றச்
சொற்கலை யாளும் பூவின் கிழத்தியுந் தொழுது நோக்கி.

764 சுந்தர வல்லி தன்னைச் சோபனம் என்று வாழ்த்தி
வந்திரு கையுந் தங்கண் மாந்தளிர்க் கைக ணீட்டக்
கொந்தவிழ் கோதை மாது மறமெலாங் குடிகொண் டேறும்
அந்தளிர்ச் செங்கை பற்றா வெழுந்தனண் மறைக ளார்ப்ப.

வேறு

765 அறைந்தன தூரியம் ஆர்த்தன சங்கம்
நிறைந்தன வானவர் நீண்மலர் மாரி
எறிந்தன சாமரை யேந்திழை யார்வாய்ச்
சிறந்தன மங்கல வாழ்த்தெழு செல்வம்.

766 அடுத்தனள் சுந்தரி யம்பொன டைப்பை
எடுத்தனள் ஆடி திலோத்தமை ஏந்திப்
பிடிந்தனள் விந்தை பிடித்தனள் பொற்கோல்
உடுத்த நெருக்கை யொதுக்கி நடந்தாள்.

762. இலம்பகமென்னும் நெற்றிச் சூட்டாகிய மாலையை மேகத்திற்கும் சந்திரனுக்கும் நடுவில் இந்திரவில் கிடந்தாற் போல நெற்றியில் அணிவித்தார்கள். புதல்வனாகிய உக்கிர குமாரப் பாண்டியன் பின்னர் தலையிடுதலை முன் கூட்டிக் காட்டுதலைப் போலப் பனிநீரில் குழைத்த மயிர்ச் சாந்தணிந்த கூந்தலின் மேல் மலர் மாலையைச் சூட்டினார்கள்.

அண்ணலும் அம்மையும்

763. கற்பகத்தரு கொடுத்த விரும்பத்தக்க அணிகளை யெல்லாம் அழகு பொருந்திய திருமேனியில் அணிவித்தார்கள். மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்கு முடிவில்லாத வியப்பும் மகிழ்வும் உண்டாக ஒப்பனை செய்து அம்மகளும், திருமகளும் தொழுது வணங்கி அவ்வழகைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தார்கள்.

764. சுந்தர வல்லியாகிய தடாதகைப் பிராட்டியாரை 'மங்கலம்' என்று வாழ்த்தினார்கள். கலைமகளும் திருமகளும் இருபக்கமும் வந்து தங்களுடைய கைகளை நீட்ட, அவற்றைப் பிராட்டியாரும் முப்பத்திரண்டு அறங்களும் விளங்கும் தம் திருக்கரங்களால் பற்றிக் கொண்டு, வேதங்கள் ஒலிக்க எழுந்தருளினார்.

765. திருமண முரசங்கள் ஒலித்தன. சங்குகள் ஒலித்தன. தேவர்கள் மலர் மாலை பொழிந்தனர். சாமரைகள் வீசப் பெற்றன. எல்லா மகளிரும் மங்கல வாழ்த்துக் கூறினர்.

766. இந்திராணி வந்து அழகிய பொன் அடைப்பையை ஏந்தினாள். திலோத்தமை கண்ணாடி ஏந்தினாள். வீரமகள் பொற் பிரம்பு கொண்டு நெருங்கியவர்களை விலக்கிக் கொண்டு நடந்தாள்.

767 கட்டவிழ் கோதை யரம்பை களாஞ்சி
தொட்டன ளூர்ப்பசி தூமணி யால
வட்ட மசைத்தனள் வன்ன மணிக்கா
சிட்டிழை கோடிக மேனகை கொண்டாள்.

768 கொடிகள் எனக்குளிர் போதொடு சிந்தும்
வடிபனி நீரினர் வீசுபொன் வண்ணப்
பொடியின ரேந்திய பூம்புகை தீபத்
தொடியணி கையினர் தோகையர் சூழ்ந்தார்.

769 தோடவி ழோதியர் சோபன கீதம்
பாட விரைப்பனி நீரொடு சாந்தம்
ஏடவிழ் மென்மலர் இட்ட படத்திற்
பாடக மெல்லடி பைப்பய வையா.

770 செம்மல ராளொடு நாமக டேவி
கைம்மலர் பற்றின கல்வியொ டாக்கம்
இம்மையி லேபெறு வார்க்கிது போதென்
றம்மணி நூபுர மார்ப்பந டந்தாள்.

771 ஒல்கினள் மெல்ல வொதுங்கினள் அன்பு
பில்கி யிருந்த பிரானரு கெய்தி
மெல்கி யெருத்த மிசைத்தலை தூக்கிப்
புல்கிய காஞ்சி புலம்ப விருந்தாள்.

வேறு

772 அற்பக விமைக்குஞ் செம்பொன் அரதன பீடத் தும்பர்ப்
பொற்பக லாத காட்சிப் புனிதனோ டிருந்த நங்கை
எற்பகல் வலங்கொண் டேகு மெரிகதிர் வரையி னுச்சிக்
கற்பக மருங்கிற் பூத்த காமரு வல்லி யொத்தாள்.

767. முருக்கவிழ்ந்த மலர் மாலையணிந்த அரம்பை 'களாஞ்சியை' ஏந்தினாள். ஊர்வசி புனித மணிகள் பதித்த ஆலவட்டம் அசைத்தாள்; மேனகை அழகும் நிறமும் உள்ள மணிகள் பதித்த 'பூந்தட்டினை' ஏந்தினாள்.

768. பலமகளிர் கொடிபோல மலர்களுடன் பனிநீரைச் சிந்தினர். சிலர் மணம் கமழும் பொன்னிறப் பொடியைத் தூவினர். வளையல் அணிந்த கையினை உடைய அவர்கள் தூபத்தையும் தீபத்தையும் ஏந்திச் சூழ்ந்து வரலாயினர்.

769. மலர் மாலையை அணிந்த கூந்தலையுடைய பெண்கள் மங்கல வாழ்த்துப் பாடினர். மணம் பொருந்திய சந்தனத்தையும் மலரையும் இட்ட நடைப் பாவாடையின் மீது பிராட்டியார், பாடகமணிந்த மெல்லிய திருவடிகளை மெல்லென வைத்து நடந்து வந்தார்.

770. "செந்தாமரை மலரில் உள்ள திருமகளையும், கலைமகளையும் அம்மையாரின் கைகளாகிய மலர்கள் பற்றிக் கொண்டன. ஆதலின் செல்வப் பொருளையும் கல்விப் பொருளையும் இம்மையில் ஒருசேரப் பெற விரும்புவோருக்கு இதுவே சமயம்" என்று கூறுவதுபோல் மணிகள் பதித்த நூபுரங்கள் ஒலித்தன.

771. இவ்வாறு அம்மையார் அசைந்து மெல்ல ஒதுங்கி நடந்து, அன்பு நிறைந்த இறைவன் பக்கத்தில் சென்று, மென்மைக் குணம் நிரம்பிய பிடரின் மேல் தன் திருவடியை வைத்து, காஞ்சி என்ற அணி ஒலிக்க அமர்ந்தருளினார்.

772. இருள்கெட ஒளிவீசும் செம்பொன்னாலாகிய மணிகள் பதித்த தவிசின் மேல் சிவபெருமானோடு இருந்த பிராட்டியார் வீற்றிருந்த காட்சி, ஒளியையுடைய சூரியன் இரவும் பகலும் வலம் வரப் பெற்ற மேருமலையின் உச்சியில் கற்பகத் தருவின் பக்கத்திலே மலர்ந்த அழகிய கொடியினை ஒத்திருந்தது.

773 பண்ணுமின் னிசையு நீருந் தண்மையும் பாலும் பாலின்
நண்ணுமின் சுவையும் பூவு நாற்றமு மணியு மங்கேழ்
வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தால் ஒத்தது
அண்ணலு முலக மீன்ற வம்மையு மிருந்த தம்மா.

774 விண்ணுளார் திசையி னுள்ளார் வேறுளார் பிலத்தி னுள்ளார்
மண்ணுளார் பிறரும் வேள்வி மண்டபத் தடங்கி யென்றும்
பண்ணுளா ரோசை போலப் பரந்தெங்கு நிறைந்த மூன்று
கண்ணுளார் அடியி னீழல் கலந்துளார் தம்மை யொத்தார்.

775 ஆயபோ தாழி யங்கை யண்ணல்பொற் கரக நீரால்
ஏயவான் சோதியாடற் சேவடி விளக்கிச் சாந்தந்
தூயபோ தவிழச் சாத்தித் தூபமுஞ் சுடருங் கோட்டி
நேயமோ டருச்சித் தைய னிறையருள் பெற்று நின்றாள்.

776 விண்டலத் தவருள் ஆதி வேதியன் பாத தீர்த்தம்
முண்டகத் தவனு மாலு முனிவரும் புரந்த ராதி
அண்டரு நந்தி தேவு மடுகணத் தவரு மேனைத்
தொண்டரும் புறம்பு முள்ளு நனைத்தனர் சுத்தி செய்தார்.

773. சிவபெருமானும், உலகங்களைப் பெற்ற அன்னையும் வெவ்வேறு வடிவம் கொண்டிருந்தது, பண்ணும் இனிய இசையும், நீரும் குளிர்ச்சியும், பாலும் அப்பாலில் உள்ள இனிய சுவையும், பூவும் வாசனையும், மணியும் அழகிய ஒளியும் வெவ்வேறு வடிவம் கொண்டு ஓரிடத்தில் இருந்த தன்மையை ஒத்திருந்தது.

திருமணச் சடங்குகள்

774. வான் உலகத்தில் உள்ளவர்களும், எட்டுத் திசையில் உள்ளவர்களும், ஏனைய இடங்களில் உள்ளவர்களும், நிலவுலகில் உள்ளவர்களும், மற்றவர்களும் திருமண மண்டபத்தில் ஒன்று சேர்ந்திருந்தனர். அவர்கள் எப்பொழுதும் பண்ணின் கண் நிறைந்த இசைபோலப் பரவி, எங்கும் நிறைந்து நிற்கும் இறைவனின் திருவடிநிழலில் கலந்துள்ளவரை ஒத்திருந்தார்.

775. அப்போது திகிரிப் படையைக் கையில் கொண்ட திருமால், பொற்கலசத்திலுள்ள நீரினால், சிவந்த ஒளிப்பிழம்பாகிய சிவபெருமானது திருக்கூத்தாடும் சிவந்த திருவடிகளை விளக்கினார். சந்தனத்தையும், மணம் வீசும் மாலையையும் சாத்தினார். தூப தீபங்களை முறைப்படி காட்டி, மலர்களைத் தூவி அன்போடு அருச்சனை செய்து சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று நின்றார்.

776. தேவர்களில் முதன்மையானவனான இறைவனது திருவடித் தீர்த்தத்தால் திருமால் நான்முகன், முனிவர்கள், இந்திரன் முதலிய தேவர்கள், திருநந்தி தேவர், சிவகணங்கள் மற்றைய அடியார் முதலான எல்லோரும் தங்கள் தங்கள் சிரசிலே தெளித்து உட்கொண்டு தூய்மை பெற்றனர்.

777 அத்தலை நின்ற மாயோ னாதிசெங் கரத்து நங்கை
கைத்தலங் கமலப் போது பூத்ததோர் காந்த ளொப்ப
வைத்தரு மனுவா யோதக் கரகநீர் மாரிபெய் தான்
தொத்தலர் கண்ணி விண்ணோர் தொழுதுபூ மாரி பெய்தார்.

778 ஆடினா ரரம்பை மாதர் விஞ்சையர் அமுத கீதம்
பாடினா ரரவென் றார்த்துப் பரவினார் முனிவர் வானோர்
மூடினார் புளகப் போர்வை கணத்தவர் முடிமேற் செங்கை
சூடினார் பலரு மன்றல் தொடுகட லின்பத் தாழ்ந்தார்.

779 புத்தனார் எறிந்த கல்லும் போதென மிலைந்த வேத
வித்தனா ரடிக்கீழ் வீழ விண்ணவர் முனிவ ரேனோர்
சுத்தநா வாசி கூறக் குங்குமத் தோயந் தோய்ந்த
முத்தவா லரிசி வீசி மூழ்கினார் போக வெள்ளம்.

780 அம்மையோ டப்பன் என்ன வலர்மணம் போல நீங்கார்
தம்மருள் விளையாட் டாலே யாற்றநாள் தமியர் போல
நம்மனோர் காணத் தோன்றி நன்மணம் புணர ஞாலம்
மும்மையு முய்ந்த வென்னாத் தத்தமின் மொழிய லுற்றார்.

781 காமரு சுரபித் தீம்பால் கற்பகக் கனிநெய் கன்னல்
நாமரு சுவைய இன்ன நறுமது பருக்கஞ் செம்பொன்
ஆமணி வட்டத் திண்காற் பாசனத் தமையப் பெய்து
தேமரு கொன்றை யானைத் திருக்கைதொட்
டருள்க வென்றார்.

777. பிறகு அங்கு நின்ற திருமால் தாமரை மலரில் ஒரு காந்தள் மலர் மலர்ந்ததைப் போலச் சிவபெருமானுடைய சிவந்த திருக்கரத்தில் தடாதகைப் பிராட்டியாரின் திருக் கரத்தை வைத்து வேத மந்திரம் சொல்லி 'தாராதத்தம்' செய்தார். பூங்கொத்து அலர்ந்த மாலையையுடைய தேவர்கள் வணங்கி மலர் மழை பொழிந்தனர்.

778. அரம்பையர்கள் ஆடினார்கள். வித்தியாதரர்கள் அமுதம் போன்ற இசையைப் பாடினார்கள். முனிவர்கள் 'அரஅர' என்று தோத்திரம் செய்தார்கள். தேவர்கள் உரோமம் சிலிர்ப்ப, பரவசமடைந்தார்கள். சிவ கணத்தவர் முடியின் மீது செங்கை கூப்பி அஞ்சலி செய்தனர். இவ்வாறு அங்குள்ளவர் அனைவரும் திருமண இன்பமாகிய கடலில் மூழ்கினர்.

779. சாக்கிய நாயனார் எறிந்த கல்லையும் மலரைப் போல் சூடி அருளிய சிவபெருமானுடைய திருவடியின் கீழ் விழுமாறு தேவர்களும் முனிவர்களும் மற்றையரும் புனித மொழிகளால் ஆசி கூறிக் குங்கும நீரில் கலந்த முத்துப் போன்ற அரிசியை வீசி இன்ப வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

780. ''அம்மையும் அப்பனுமாக மலரும் மணமும் போலப் பிரியாதவராகிய பெருமானும் பிராட்டியும் தமது அருள் விளையாட்டினால் நீண்ட நாள் பிரிந்தவர் போல நம் போன்றவர் காணுமாறு தோன்றித் திருமணம் செய்தருளினர். அதனால் மூன்று உலகங்களும் ஈடேறின'' என்று யாவரும் தத்தமக்குள் கூறி மகிழ்ந்தனர்.

781. பிறகு அழகிய காமதேனுவின் இனிய பாலும், கற்பகக் கனியும், நெய்யும், சர்க்கரையும் கலந்த சுவையுடைய இனிய மது பருக்கத்தைச் செம் பொன்னாலான மணிகள் பதித்த வட்டமான தட்டிலே வைத்து, அதனைத் தேன் பொருந்திய மாலை அணிந்த சிவபெருமானைத் ''திருக்கை தொட்டருள்க'' என்று வேண்டினர்.

782 அங்கைவைத் தமுது செய்தாங் ககமகிழ்ந் திட்ட மூர்த்தி
கொங்கவிழ் குமுதச் செவ்வாய் கோட்டிவாண்
முறுவல் பூத்தான்
புங்கவர் முனிவர் கற்பின் மகளிரும் போதின் மேய
மங்கையர் இருவ ரோடு மங்கலம் பாட லுற்றார்.

783 மாக்கடி முளரி வாணன் மைந்த ரோ டொருங்கு வைகி
நாக்களி னடுநாவாரத் துடுவையா னறுநெ யார்த்தி
வாக்கிட வார மாந்தி வலஞ்சுழித் தகடு வீங்கித்
தேக்கிடு மொலியின் ஆர்த்து நிமிர்ந்தது தெய்வச் செந்தீ.

784 சுற்றுநான் மறைகள் ஆர்ப்பத் தூரியஞ் சங்க மேங்கக்
கற்றநான் முகத்தோன் வேள்விச் சடங்குநூல்
கரைந்த வாற்றால்
முற்றமங் கலநாண் சாத்தி முழுதுல கீன்றாள் செங்கை
பற்றினன் பற்றி லார்க்கே வீடருள் பரம யோகி.

785 இணரெரித் தேவுந் தானே யெரிவளர்ப் பவனுந் தானே
உணவுகொள் பவனுந் தானே யாகிய வொருவன் வையம்
புணர்வுறு போக மூழ்கப் புருடனும் பெண்ணு மாகி
மணவினை முடித்தான் அன்னான் புணர்ப்பையார்
மதிக்க வல்லார்.

782. எட்டு மூர்த்தங்களையுடைய சிவபெருமான் அவற்றைத் தம் திருக்கரத்தால் தொட்டருளினார். அமுது செய்தருளினாற் போலத் திருவுள்ளம் மகிழ்ந்து புன்னகை செய்தருளினார். தவத்தால் உயர்ந்தவர்களாகிய முனிவர்களின் மனைவியர்களும், தாமரை மலரில் வசிக்கும் திருமகளும், கலைமகளும் சேர்ந்து மங்கலம் பாடினார்கள்.

மங்கலநாண் சூட்டல்

783. பெருமை மிக்க தாமரை மலரில் வசிக்கும் பிரமன் தம்முடைய புதல்வர்களோடு ஒருங்கு இருந்து சுருக்கு சுருவங்களால் நறுமணம் கமழும் நெய்யை நிரப்பித் தீயினில் வார்த்தனன். செந்தீயும் தன் ஏழு நாக்குகளில் நடுநாவால் சுவையறிய நிரம்ப நெய்யை உண்டு, வலமாகச் சுழிந்து வயிறு நிரம்பித் தேக்கு எரியும் ஒலிபோல ஒலி மிகுந்து மேலெழுந்து ஓங்கியது.

784. நான்கு புறத்திலும் நான்கு வேதங்கள் நின்று முழங்கின. இயங்களும் சங்கங்களும் ஆர்த்தன. வேதங்களை உணர்ந்த பிரம தேவன் திருமணச் சடங்குகளை வேத சிவாகம முறைப்படி குறைவின்றிச் செய்து முடிக்க இருவகைப் பற்றும் அற்றவர்க்கே வீடு பேற்றையருளும் பரமயோகியாகிய சிவபெருமான், தடாதகைப் பிராட்டியாருக்குத் திருமங்கல நாணைப் பூட்டித் திருக்கரம் பற்றியருளினார்.

785. பல சுடரை உடைய தீக்கடவுள் அவனே! அத்தீயை வளர்க்கின்றவனும் அவனே! அத்தீயின் மூலம் அவியை கொள்பவனும் அவனே! ஆகிய இம் மூன்றிற்கும் தான் ஒருவனே ஆகிய சிவபெருமான், உயிர்கள் புணர்தல் முதலிய போகத்தில் மூழ்க, ஆணும் பெண்ணுமாகிய மணச் செயலை முடித் தருளினான். அவ்விறைவனுடைய செயலை அளந்தறிய வல்லார் யார்?

786 பின்புதன் பன்னி யோடு பிறைமுடிப் பெருமான் கையில்
நன்பொரி வாங்கிச் செந்தீ நாமடுத் தெனைத்து மான
தன்படி வுணர்ந்த வேத முனிவர்க்குத் தக்க தானம்
இன்பகந் ததும்ப நல்கி யெரிவல முறையால் வந்து.

787 மங்கலம் புனைந்த செம்பொன் அம்மிமேன் மணாட்டி பாத
பங்கய மலரைக் கையாற் பரிபுரஞ் சிலம்பப் பற்றிப்
புங்கவன் மனுவா லேற்றிப் புண்ணிய வசிட்டன் றேவி
எங்கெனச் செங்கை கூப்பி யெதிர்வர வருட்கண் சாத்தி.

788 விதிவழி வழாது வேள்வி வினையெலா நிரம்ப விங்ஙன்
அதிர்கடல் உலகந் தேற வாற்றிநான் மறைக ளார்ப்பக்
கதிர்மணி நகையார் வாழ்த்தக் காமனைக் காய்ந்த நம்பி
மதிநுதன் மங்கை யோடு மணவறை தன்னிற் புக்கான்.

789 மனிதரு மிமையா தையன் மங்கல வனப்பு நோக்கிப்
புனிதவா னவரை யொத்தார் அவர்க்கது புகழோ வெந்தை
கனிதரு கருணை நாட்டம் பெற்றவர் கடவு ளோராற்
பனிதரு மலரிட் டேத்தி வழிபடற் பால ரன்றோ.

790 மானிட ரிமையோர் என்னும் வரம்பில ராகி வேள்வி
தானிட ரகல நோக்கித் தலைத்தலை மயங்கி நின்றார்
கானிட நடனஞ் செய்யுங் கண்ணுத லருட்க ணோக்கால்
ஊனிட ரகலு நாளி லுயர்ந்தவ ரிழிந்தோ ருண்டோ.

திருமண அறையில் புகுதல்

786. பின்பு, சந்திரனை அணிந்த முடியையுடைய பெருமான் தம்முடைய தேவியாரோடும் திருக்கரத்திலே நெற்பொரியை வாங்கிச் செந்தீயின் நாவில் ஓமம் செய்து, வேதங்களை உணர்ந்த முனிவர்களுக்குத் தக்க தானங்களை மகிழ்ச்சி மேலோங்கக் கொடுத்துத்தீயினை முறைப்படி வலம் வந்தார்.

787. மங்கலமாக அலங்கரித்த பொன் அம்மியின் மேல் தேவியாரது திருவடித் தாமரை மலரைச் சிலம்பு ஒலிக்கத் திருக்கையால் பிடித்து, மந்திரத்தோடு தூக்கி வைத்துப், 'புண்ணிய வடிவாகிய வசிட்டன் மனைவி அருந்ததி எங்கே' என்று கேட்க, அவ்வருந்ததி கைகளைக் கூப்பி எதிரே வர, அவள் மீது அருட்பார்வை வைத்தருளினார்.

788. இவ்வாறு விதிகளின் முறைப்படி மணச்சடங்குகள் நடந்து முடிய, ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த உலகில் உள்ளோர் தெளிந்து உய்யச் செய்து முடித்து, நான்கு வேதங்கள் ஒலிக்கவும், பெண்கள் வாழ்த்தொலிகளைக் கூறவும், மன்மதனை எரித்தருளிய பெருமானாகிய சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரோடு திருமண அறையில் புகுந்தருளினார்.

789. மக்களும் கண்கள் இமையாமல் சோமசுந்தரப் பெருமானின் திருமணக் கோலத்தினைப் பார்த்துத் தூய தேவர்களை ஒத்திருந்தனர். இங்ஙனம் கூறுவது மனிதர்களுக்கு ஒரு புகழாமோ? எம் பெருமானாகிய இறைவனின் முதிர்ந்த அருட் பார்வையினைப் பெற்ற மக்கள் தேவர்களால் வழிபட்டு ஏத்தும் தன்மை பெற்றவர் அன்றோ?

790. மக்கள் தேவர் என்னும் வரம்பு இல்லாராய், எம்பெருமானின் திருமணத்தைக் கண்டு மக்கள் யாவரும் பிறவித் துன்பம் நீங்கி இருந்தனர். சுடுகாட்டிலே திருக்கூத்தாடி அருளிய நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானது திருவருட் பார்வையால் பிறவித் துன்பம் நீங்கும் காலத்து உயர்ந்தவரென்றும் தாழ்ந்தவரென்றும் வேறுபாட்டிற்கு இடம் உண்டோ? இல்லை.

791 மணவறைத் தவிசி னீங்கி மன்றன்மண் டபத்திற் போந்து
கணமணிச் சேக்கை மேவிக் கருநெடுங் கண்ணன் வாணி
துணைவனே முதல்வா னோர்க்குஞ் சூழ்கணத் தொகைக்கும் என்றும்
தணவறு செல்வந் தந்தோன் சாறுசால் சிறப்பு நல்கி.

792 ஏட்டுவாய் முளரி யான்மா லேனைவா னவருந் தத்தம்
நாட்டுவாழ் பதியிற் செல்ல நல்விடை கொடுத்து வேந்தர்க்
காட்டுவா னாடிக் காட்டுந் தன்மைபோல் அரசு செய்து
காட்டுவா னாகி யையன் றிருவுளக் கருணை பூத்தான்.

வேறு

793 அதிர்விடைக் கொடியங் கயற்கொடி யாக வராக்கலன் பொற்கலனாகப்
பொதியவிழ் கடுக்கை வேம்பல ராகப் புலியதள் பொலந்துகிலாக
மதிமுடி வைர மணிமுடியாக மறைகிடந் தலம்புமா மதுரைப்
பதியுறை சோம சுந்தரக் கடவுள் பாண்டியன் ஆகிவீற்றிருந்தான்.

வேறு

794 விண்டலம் மதியஞ் சூடுஞ் சுந்தர விடங்கப் புத்தேள்
கொண்டதோர் வடிவுக் கேற்பக் குருதிகொப் புளிக்குஞ் சூலத்
திண்டிறற் சங்கு கன்னன் முதற்கணத் தேவர் தாமும்
பண்டைய வடிவ மாறிப் பார்த்திபன் பணியில் நின்றார்.

791. சோமசுந்தரக் கடவுள் திருமண அறையிலிருந்து நீங்கி, திருமண மண்டபத்தை அடைந்து, மணிகள் இழைத்த அரியணையில் அமர்ந்தருளினார். பிறகு கரிய நெடிய திருமாலுக்கும், கலைமகள் தலைவனாகிய பிரம தேவனுக்கும் தேவர்களுக்கும், சிவகணங்களுக்கும் எப்போதும் நீங்காத அருட் செல்வத்தை அருளிய சிவபெருமான் முறைப்படி அனைவருக்கும் வரிசைகள் கொடுத்தருளினார்.

792. தாமரை மலரில் வசிப்பவராகிய பிரமனுக்கும் திருமாலுக்கும் மற்ற தேவர்களுக்கும் தங்கள் தங்கள் நாட்டிற்குச் செல்லுமாறு விடை கொடுத்து அனுப்பி வைத்தார். அதன் பின் சிவபெருமான் ஆட்டுவிப்பான் ஒருவன் தான் முன்னர் ஆடிக் காட்டும் தன்மைபோல் அரசர்களுக்குத் தாம் நடத்திக் காட்டத் திருவுள்ளம் கொண்டருளினார்.

பெருமான் அரசியல் நடத்திக் காட்டுதல்

793. ஒலிக்கும் இடபக் கொடி மீன் கொடியாகவும், பாம்பணிகள் பொன்னணிகளாகவும், இதழ் விரிந்த கொன்றை மலர் மாலை வேப்பம்பூ மாலையாகவும், புலித்தோல் ஆடை பொன்னாடையாகவும், சந்திரனைத் தரித்த சடாமுடி வைர முடியாகவும் மதுரைப் பதியில் சோமசுந்தரப் பாண்டியனாய் வீற்றிருந்து அருளினார்.

794. சந்திரனை அணிந்த சோம சுந்தரக் கடவுள், தாம் கொண்ட ஒப்பற்ற திருக் கோலத்திற்குப் பொருந்தும்படியாக, உதிரம் கொப்பளிக்கும் சூலப் படையை உடைய மிகுந்த வலிமையுடைய 'சங்கு கன்னன்' முதலான சிவ கணத்தவர்களும், முன்னை வடிவம் நீங்கி, அரசர் பணிக்கேற்ற உருவம் கொண்டு அம்மன்னனின் ஏவலர்களாக நின்றார்கள்.

795 தென்னவன் வடிவங் கொண்ட சிவபரன் உலகங் காக்கும்
மன்னவர் சிவனைப் பூசை செய்வது மறையா றென்று
சொன்னது மன்ன ரெல்லாந் துணிவது பொருட்டுத் தானும்
அந்நகர் நடுவூ ரென்றோ ரணிநகர் சிறப்பக் கண்டான்.

796 மெய்ம்மைநூல் வழியே கோயில் விதித்தருட் குறிநி றீஇப்பேர்
இம்மையே நன்மை நல்கும் இறையென நிறுவிப்பூசை
செம்மையாற் செய்து நீப வனத்துறை சிவனைக் கால
மும்மையுந் தொழுது வைய முழுவதுங் கோன டாத்தும்.

797 பூவரு மயன்மால் ஆதிப் புனிதரு முனிவ ரேனோர்
யாவருந் தனையே பூசித் திகபர மடைய நின்ற
மூவருண் மேலா முக்கண் மூர்த்தியே பூசை செய்த
தாவர விலிங்க மேன்மைத் தகுதியா ரளக்க வல்லார்.

வேறு

798 மனித்த ருக்கர சாகித்தெவ் வேந்தர்க்கு மடங்கலாய் மடநல்லார்க்
கினித்த வைங்கணைக் காளையாய் நிலமகட் கிணர்த்துழா யணிமாலாய்
அனித்த நித்தமோர்ந் திகபரத் தாசைநீத் தகந்தெளிந் தவர்க்கொன்றாய்த்
தனித்த மெய்யறி வானந்த மாம்பர தத்துவ மாய்நின்றான்.

திருமணப் படலம் முற்றிற்று.

795. உலகத்தைக் காக்கும் அரசர்கள் சிவபெருமானைப் பூசித்தல் வேதநெறி என்று தாம் திருவாய் மலர்ந்தருளியதை அரசர் அனைவரும் துணிந்து மேற் கொள்ளுதற் பொருட்டுப் பாண்டியர் திருக்கோலம் தாங்கிய பரம் பொருள், மதுரை நகரில் 'நடுவூர்' என்னும் திருநகரம் ஒன்றை மேன்மைப்பட ஆக்கினார்.

796. உண்மையான சிவாகமத்தில் கூறிய சிற்ப முறைப்படி திருக்கோயிலை எடுத்து, அருள் வடிவாகிய சிவலிங்கத்தை நிலை நாட்டி, ''இம்மையே நன்மை நல்கும் இறை'' எனத் திருப் பெயரிட்டு முறைப்படி பூசை புரிந்து கடம்ப வனத்தில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளை மூன்று காலங்களிலும் வணங்கி உலகம் முழுவதும் தம் செங்கோலை நடத்தி அருளினார்.

797. பிரமன், திருமால் முதலிய தேவர்களும், முனிவரும் மற்றைய ஏனையோரும் தம்மை வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களை அடையுமாறு அருள் புரிந்து நின்ற முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே பூசித்த, சிறந்த தன்மையுடைய இந்தச் சிவலிங்கத்தின், பெருமையை அளந்து கூறவல்லார் யாவர்? ஒருவரும் இல்லை.

798. பாண்டியர் கோலம் பூண்ட எம் பெருமான் மக்களுக்கு மன்னனாகியும், பகையரசர்களாகிய யானைகளுக்குச் சிங்கமாகியும், மகளிருக்கு இனிமையான ஐந்து பாணங்களை யுடைய மன்மதனாகியும், நில மகளுக்குத் திருமாலாகியும், இம்மை மறுமை இன்பங்களை வெறுத்து மனம் தெளிந்த மெய் ஞானியர்களுக்கு முழு முதலாகியும், ஒப்பற்ற சச்சிதானந்தப் பொருளாகியும் நின்றருளினார்.

திருமணப் படலம் முற்றிற்று.

6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

799 உலகிய னிறுத்து வான்வந் தொருபரஞ் சுடர்வான் றிங்கட்
குலமணி விளக்கை வேட்டுக் கோமுடி கவித்துப் பாராண்
டிலகுறு தோற்ற மீதால் முனிவரர் இருவர் தேற
அலகிலா னந்தக் கூத்துச் செய்தவா றறைய லுற்றாம்.

800 புண்ணிய மலர்மென் கொம்பை வேட்டபின் புவனந் தாங்கும்
கண்ணுதன் மூர்த்தி யாய கவுரியன் மணத்தில் வந்த
மண்ணியல் வேந்தர் வானோர் மாதவர் பிறரு முண்ண
நண்ணுதிர் என்ன லோடு நண்ணுவார் விரைவி னெய்த.

801 பொன்னவிர் கமலம் பூத்த புனிதநீ ராடித் தத்தம்
நன்னெறி நியம முற்றி நண்ணினார் புலிக்கா லோனும்
பன்னக முனியுந் தாழ்ந்து பரவியம் பலத்துள் ஆடும்
நின்னரு ணடங்கண் டுண்ப தடியேங்க ணியம மென்றார்.

6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

799. ஒப்பற்ற பரஞ்சோதியாகிய இறைவன், உலகினை நிறுத்துவதற்காகச் சுந்தர பாண்டியனாய் வந்து, சந்திரன் மரபுக்கு மாணிக்க விளக்காகிய தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்து கொண்டு, முடிசூடி உலகை ஆண்டு விளங்கும் வரலாறு இது. இரண்டு முனிவர்கள் தெளிந்து உய்யுமாறு அளவில்லாத ஆனந்தக் கூத்தை ஆடியருளிய திருவிளையாடலை இனி கூறத் தொடங்குவோம்.

சுந்தரபாண்டியர் அமுதுண்ண அழைத்தல்

800. அறவடிவான பூங்கொம்பு போன்ற பிராட்டியைத் திருமணம் செய்து கொண்டபின், உலகையாளும் நெற்றிக் கண்களையுடைய சிவபெருமான் திருமணத்திற்கு வந்திருந்த மன்னர்களையும், தேவர்களையும், முனிவர்களையும் ஏனையோரையும், ''அமுதுண்ண வாருங்கள்'' என்று கட்டளையிட, விரைந்து வருகின்றார்கள்.

பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் இறைவனை வேண்டுதல்

801. அவர்கள் விரைந்து சென்று பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி தங்கள் தங்கள் நியமங்களை விதிமுறை தவறாமல் முடித்து வந்தனர். அப்போது பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும் எம் பெருமானை விழுந்து வணங்கி, ''பரம கருணாநிதியே! பொன்னம்பலத்தில் ஆடியருளும் தேவரீரது திருநடனத்தைத் தரிசித்த பின்னரே உண்பது அடியேங்களுக்கு நியமம்'' என்று கூறினர்.

802 என்னலு மந்தக் கூத்தை யிங்குநாஞ் செய்துந் தில்லைப்
பொன்னகர் உலக மெல்லா முருவமாம் புருடர்க் குள்ளம்
இன்னது துவாத சாந்த மென்றிறை யருளிச் செய்ய
மன்னவ வேனை யங்கம் யாவென மன்னன் சொல்வான்.

803 அரைக்குமே லுலகே ழென்று மரைக்குக்கீ ழுலகே ழென்றும்
உரைக்கலால் உலக மெல்லா முருவமாம் புருடற் கிந்தத்
தரைக்குமே லனந்தந் தெய்வத் தானமுண் டனைத்துங் கூறின்
வரைக்குறா சிலதா னங்கள் வகுத்துரை செய்யக் கேண்மின்.

804 திருவளர் ஆருர் மூலந் திருவானைக் காவே குய்யம்
மருவளர் பொழில்சூ ழண்ணா மலைமணி பூர நீவிர்
இருவருங் கண்ட மன்ற மிதயமாந் திருக்கா ளத்தி
பொருவருங் கண்ட மாகும் புருவமத் தியமாங் காசி.

805 பிறைதவழ் கயிலைக் குன்றம் பிரமரந் திரமாம் வேதம்
அறைதரு துவாத சாந்த மதுரையீ ததிக மெந்த
முறையினா லென்னின் முன்னர்த் தோன்றிய முறையா லென்றக்
கறையறு தவத்த ரோடு கவுரியன் கோயில் புக்கான்.

சுந்தரபாண்டியர் முனிவர்கட்குக் கூறுதல்

802. இவ்வாறு அவர்கள் சொன்னவுடன் அவர்களை நோக்கி, ''இந்நடனத்தினை இம்மதுரைப் பதியில் செய்து காட்டுவோம், உலகம் என்ற தலைவனுக்கு அழகிய தில்லையே இதயமாகும்! இம் மதுரையே! 'துவாத சாந்தத் தானம்' ஆகும்'' என்று அருளிச் செய்தார். உடனே முனிவர்கள் இருவரும், ''அரசே! மற்றைய உறுப்புகள் யாவை?'' என்று வினவினர். இறைவராகிய சுந்தர பாண்டியர் உடனே கூறத் தொடங்கினார்.

803. ''இடைப்பட்ட இவ்வுலகிற்கு மேலாக ஏழுலகம் என்றும் கீழாக ஏழுலகம் என்றும் சொல்லப்படுவதால் உலகமனைத்தும் உருவமாகிய தலைவனுக்கு (விராட்புருடனுக்கு) இந்நிலவுலகில் அளவற்ற தெய்வத் தன்மை பொருந்திய தானங்கள் உள்ளன. இவை முழுதும் எடுத்துச் சொல்ல முடியாத தன்மையுடையன. சில திருப்பதிகளை மட்டும் கூறுகின்றேன் கேளுங்கள்.

804. செல்வம் ஓங்கும் திருவாரூர் மூலத்தானமாகும். திருவானைக்கா மறைவிடம் (சுவாதிட்டானத் தானம்) ஆகும். மணி ஓங்கும் சோலைகள் சூழ்ந்த திருவண்ணாமலை மணி பூரகத் தானம் (நாபி) ஆகும். நீங்கள் இருவரும் வணங்கிய தில்லை இதயத் தானம் (அநாகதத்தானம்) ஆகும். திருக்காளத்தி ஒப்பில்லாத கண்டம் (விசுத்தித்தானம்), காசித்தலம் ஆஞ்ஞைத் தானம் (புருவ மத்தியம்) ஆகும்.

805. பிறை தவழும் கயிலைமலை பிரமரந்திரத்தானம் (சுழிமுனையின் உச்சியாகிய இடம்) ஆகும். கூறுகின்ற இம்மதுரை நாடு துவாத சாந்தத் தானம் (உச்சிக்கு மேற் பன்னிரண்டு அங்குல அளவில் உள்ள பாகம்) ஆகும். இஃது எந்த வகையினால் மேலோங்கியது என்றால் முன்னர்த் தோன்றிய முறையால் ஆகும்'' என்று அருளிச் செய்து அந்தக் குற்றமற்ற முனிவரோடு சுந்தர பாண்டியர் திருக்கோயிலினுட் புகுந்து அருளினார்.

806 தன்னருள் அதனா னீத்த தன்னையே தேடிப் போந்த
மின்னவிர் கயிலை தானோ விடையுரு மாறிமன்றாய்
மன்னிய தேயோ திங்கண் மண்டல மேயோ வென்னப்
பொன்னவிர் விமானக் கீழ்பால் வெள்ளியம் பொதுவுண்டாக.

807 மின்பயில் பரிதிப் புத்தேள் பாற்கடல் விளங்கி யாங்குப்
பின்பதன் மிசைமா ணிக்கப் பீடிகை தோன்றிற் றன்ன
தன்பர்த முளமே யாகு மல்லது வேதச் சென்னி
என்பதா மஃதே யன்றி யாதென இசைக்கற் பாற்றே.

808 அன்னதோர் தவிசி னும்ப ராயிரங் கரத்தால் அள்ளித்
துன்னிருள் விழுங்குங் கோடி சூரிய ரொருகா லத்து
மன்னின ருதித்தா லொப்ப மனமொழி பக்கங் கீழ்மேல்
பின்முதல் கடந்த ஞானப் பேரொளி வடிவாய்த் தோன்றி.

809 முந்துறு கணங்கண் மொந்தை தண்ணுமை முழக்கஞ் செய்ய
நந்திமா முழவந் தாக்க நாரணன் இடக்கை யார்ப்ப
வந்துகந் தருவ நூலின் மரபுளி யிருவர் பாட
ஐந்துதுந் துபியுங் கல்லென்று ஆர்கலி முழக்கங் காட்ட

810 மதுமுகத் தலர்ந்த வெண்டா மரைமகள் சுருதி கூட்டச்
சதுமுகத் தொருவன் சாம கீதயாழ் தடவிப் பாட
விதுமுகத் தருகு மொய்க்கு மீனென ஞான வெள்ளிப்
பொதுமுகத் தமரர் தூற்றும் பூமழை யெங்கும் போர்ப்ப.

வெள்ளியம்பலத் தோற்றம்

806. தனது திருவருளால் தன்னை விடுத்து வந்த சிவபெருமானையே தேடி வந்தமர்ந்த ஒளி விளங்கும் திருக்கைலை மலைதானோ? அல்லது இடப ஊர்தியானது தனது வடிவம் வேறாகி இம்மன்றமாய் நிலை பெற்றதோ? அன்றிச் சந்திர மண்டலமோ? என்று கூறுமாறு பொன்னாலான விமானத்தின் கீழ்ப்புறத்தில் வெள்ளியம்பலம் ஒன்று தோன்றியது.

807. திருப்பாற்கடலில் ஒளி விளங்கும் சூரிய தேவன் தோன்றியது போல வெள்ளியம்பலம் தோன்றியபின் அதன் மேல் மாணிக்க பீடம் ஒன்று தோன்றியது. அது அடியார்களின் உள்ளத் தாமரையேயாகும். அல்லது மறைமுடி என்று சொல்லத் தக்கது ஆகும். அதை இவ்வாறன்றி வேறொரு உவமையால் கூற முடியாது.

திருநடனம்

808. அம் மாணிக்கப் பீடத்தின் மேல் ஆயிரம் கைகளால் இருளை ஓட்டும் ஒரு கோடி சூரியர்கள் ஒரே நேரத்தில் உதித்தாற் போன்று உள்ளம், உரை, பக்கம், கீழ், மேல், பின், முன் என்னும் இவற்றைக் கடந்த மெய்ஞ் ஞானமாகிய பெரிய ஒளி வடிவாக சிவ பெருமான் தோன்றியருளினார்.

809. முதன்மையான சிவகணங்கள் மொந்தை, தண்ணுமை என்னும் கருவிகளை முழங்கின. திருநந்தி தேவர் பெரிய மத்தளத்தை வாசித்தார், திருமால் இடக்கை என்னும் இசைக் கருவியை ஒலிக்கவும், தும்புரு, நாரதர் என்னும் இருவரும் இசை நூலின் வழி நின்று பாடினர். பஞ்ச துந்துபிகளும் கல்லென்னும் ஒலியோடு கடலின் ஒலியைப் போல் ஒலித்தன.

810. தேன் ஒழுகும் மலர்களான வெள்ளிய தாமரை மலரில் உள்ள கலை மகள் சுருதி கூட்டவும், நான்முகன் யாழினை மீட்டிச் சாமகீதம் பாடவும், சந்திர மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்கள் போல ஞானமாகிய வெள்ளியம்பலத்தில் தேவர்கள் மலர் மழையை எங்கும் பொழிந்தனர்.

811 பொருங்கட னிறத்த செந்தீப் பொங்குளைக் குறளன் மீது
பெருங்கடல் வடவைச் செங்கண் பிதுங்கமேற் றிரிந்து நோக்கி
முருங்கடல் எரியிற் சீற முதுகிற வலத்தா ளூன்றிக்
கருங்கடன் முளைத்த வெய்யோன் காட்சியிற் பொலிந்து நின்று.

812 கொய்யுஞ்செங் கமலப் போது குவிந்தென வெடுத்துக் கூத்துச்
செய்யும்புண் டரிகத் தாளுந் திசைகடந் துளவீ ரைந்து
கையுந்திண் படையுந் தெய்வ மகளிர்மங் கலநாண் காத்த
மையுண்ட மிடறுஞ் சங்க வார்குழை நுழைந்த காதும்.

813 செக்கரஞ் சடையுந் தேசார் வெண்டிரு நீறுந் தெய்வ
முக்கணு முரகக் கச்சு முள்ளெயி றிமைக்கு மார்பும்
மைக்கருங் கயற்க ணங்கை வல்லியின் ஒதுங்கி நிற்கும்
பக்கமு மவள்மேல் வைத்த பார்வையு நகையும் தோன்ற.

814 கங்கையா றலம்பு மோசை கடுக்கைவண் டிரங்கும் ஓசை
மங்கல முழவி னோசை மந்திர வேத வோசை
செங்கையா டெரியி னோசை திருவடிச் சிலம்பி னோசை
எங்கணு நிரம்பி யன்ப ரிருசெவிக் கமுத மூற்ற.

811. கடல் போன்ற நிறத்தையும், செந்தீ போன்ற புறமயிரையும் உடைய முயலகன் மேல், பெரிய கடலின் வடவைத் தீப் போல் அவன் சிவந்த கண்கள் பிதுங்கவும், மேலே சுழன்று பார்த்து உலகை அழிக்கும் வலிமையுடைய அவ் வடவைத்தீப் போல் கோபம் கொள்ளவும், வலக் கால் திருவடியை அவன் முதுகு முறியும்படி ஊன்றிக் கரிய கடலின் கண் தோன்றும் சூரியனின் காட்சி போலத் தோற்றம் அளித்தார்.

812. செந்தாமரை மலர் குவிந்தாற் போல, திருநடனம் ஆடும் திருவடித் தாமரையும், திக்குகளைக் கடந்த பத்துத் திருக்கைகளும், அவற்றில் உள்ள வலிய படைகளும் தெய்வப் பெண்களின் மங்கல நாணைக் காத்தருளிய நஞ்சுண்ட திருக்கண்டமும், நீண்ட சங்க குண்டலம் பூண்ட திருச் செவியும், அசைய திருநடனம் ஆடத் தொடங்கினார்.

813. அழகிய செஞ்சடையும், வெள்ளிய திருநீற்றொளி வீசும் திருமேனியும், தெய்வங்களாகிய மூன்று திருக் கண்களும், அரவக் கச்சையும், முள் போன்ற பன்றிக் கொம்பு விளங்கும் திருமார்பும், மை எழுதிய கரிய கயல் போன்ற கண்களையுடைய உமையம்மையார், கொடி போன்று ஒரு பக்கம் ஒதுங்கி நிற்கவும், அவ்வம்மை மேல் வைத்த பார்வையும் புன்னகையும் தோன்ற திருநடனம் ஆடினார்.

814. அப்போது கங்கையாறு ஒலிக்கும் ஒலியும், கொன்றை மாலையில் நிறைந்துள்ள வண்டுகள் ஒலிக்கும் ஒலியும், மங்கல முழவின் ஒலியும், மந்திர ஒலியும், மறையொலியும், சிவந்த கையில் ஏந்திய தீயின் அசையும் ஒலியும், திருவடியில் அணிந்த சிலம்பின் ஒலியும், ஆகிய இவை ஒன்றாய்க் கலந்து எங்கும் பரவி அடியார்களின் இரு செவிகளுக்கும் அமுதத்தைப் பொழிந்தன.

815 ஆடினான் அமல மூர்த்தி அஞ்சலி முகிழ்த்துச் சென்னி
சூடினா ரடியில் வீழ்ந்தார் சுருதியா யிரநா வாரப்
பாடினார் பரமா னந்தப் பரவையிற் படிந்தா ரன்பு
நீடினார் நிருத்தா னந்தங் காண்பது நியமம் பூண்டார்.

816 முனிவர்கந் தருவர் வானோர் தானவர் மோன யோகர்
புனிதகிம் புருட ராதிப் புலவரும் இறைஞ்சி யன்பிற்
கனிதரு மின்பத் தாழ்ந்தார் திருமணங் காண வந்த
மனிதருங் காணப் பெற்றார் மாதவர் பொருட்டான் மன்னோ.

817 அனந்தனா முனிவர் வேந்தன் அளவிலா னந்த மூறி
மனந்தனி னிரம்பி மேலும் வழிவது போல மார்பம்
புனைந்தபுண் ணியவெண் ணீறு கரைந்திடப் பொழிகண்
ணீருள்
நனைந்திரு கரமுங் கூப்பி நாதனைப் பாடு கின்றான்.

818 பராபர முதலே போற்றி பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய் நின்றதற் பரனே போற்றி
கராசல வுரியாய் போற்றி கனகவம் பலத்துளாடும்
நிராமய பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி.

819 ஒன்றாகி யைந்தா யையைந் துருவாகி வருவாய் போற்றி
இன்றாகிச் சென்ற நாளா யெதிர்நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீய தாகி நடுவாகி முடிவாய் மன்றுள்
நின்றாடும் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி.

முனிவர் இருவரும் திருநடனத்தைத் தரிசித்தல்

815. இவ்வாறு தூய மூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுள் திருக்கூத்தாடியருளியதை, அக்கூத்தைக் காண்பதே நியமம் எனக் கொண்ட முனிவர் இருவரும் கைகளைச் சிரமேற் கூப்பித் தரிசித்துத் திருவடியில் விழுந்து வணங்கினார்கள். அளவற்ற மறைமொழிகளை வாய் நிறையப் பாடினார்கள். பேரின்பக் கடலில் மூழ்கி அன்பு வடிவானார்கள்.

816. அம்முனிவர் இருவர் பொருட்டு ஆடிய அத்திருக்கூத்தைப் பிற முனிவர், தேவர்கள், கந்தருவர், அவுணர், யோகிகள், கிம்புருடர்கள் முதலான தேவ கணங்களும் தரிசித்து வணங்கி அன்பின் முதிர்ந்த இன்பத்தில் ஆழ்ந்தார்கள். திருமணம் காண வந்த மக்களும் அதனைக் காணப் பெற்றார்கள்.

817. பதஞ்சலி முனிவர் அளவில்லாத சிவானந்தம் ஊற்றெடுத்து உள்ளத்தில் நிரம்பி, மேலும் வழிந்து வருவது போல மார்பில் தரித்த வெள்ளிய திருவெண்ணீறு கரையும் வண்ணம் பொழிகின்ற ஆனந்தக் கண்ணீர் அருவியில் நனைந்து, இரு கைகளையும் கூப்பி நின்று இறைவனைத் துதிப்பாராயினார்.

818. முன்பின்னாகிய முதல்வனே வணக்கம்! அன்பின் விளைவானவனே வணக்கம்! சரமும் அசரமும் ஆகியும், அவற்றின் வேறாகியும் நின்ற சிவ பரம்பொருளே வணக்கம்! யானைத் தோலைப் போர்த்தவனே வணக்கம்! பொன்னம் பலத்துள் தினந்தோறும் திருநடனம் புரிபவனே வணக்கம்! பிறவிப் பிணியினைப் போக்கும் திருக்கூத்தினையுடையவனே வணக்கம்! வணக்கம்!

819. ஒன்றாகியும், ஐந்துருவாகியும், இருபத்தைந் துருவாகியும் உயிர்களின் பொருட்டு வந்தருள்பவனே வணக்கம்! இன்று, நேற்று, நாளை என்ற மூன்று காலங்களும் ஆகித் தோன்றுபவனே வணக்கம்! நன்மையும் தீமையும் நடுவும் முடிவும் ஆகி மன்றுள் நின்றாடும் பரமானந்த நிருத்தனே வணக்கம்! வணக்கம்!

820 அடியரேம் பொருட்டு வெள்ளி யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி
நெடியநற் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி.

821 என்றுநின் றேத்தி னான்பின் இருவரை நோக்கி வெள்ளி
மன்றுள்நின் றாடா நின்ற மறைமுதல் கருணை கூர்ந்து
நன்றுநீர் வேட்ட தென்னென் றருள்செய்ய நாதன் பாதந்
துன்றுமெய் யன்பிற் றாழ்ந்து தொழுதுநின் றிதனைச் சொல்வார்.

822 எந்தையித் திருக்கூத் தென்றும் இந்நிலை நின்றி யார்க்கும்
பந்தவெம் பாச நீங்கப் பரித்தருள் செய்தி யென்னச்
செந்தமிழ்க் கன்னி நாடு செய்தமா தவப்பே றெய்தத்
தந்தன மென்றான் வேதந் தலைதடு மாற நின்றான்.

823 அராமுனி யீது வேண்டும் ஆதியெம் பெரும இந்த
நிராமய பரமானந்த நிருத்தநேர் கண்டோ ரெல்லாந்
தராதல மிசைவந் தெய்தாத் தனிக்கதி பெறுதல் வேண்டும்
பராபர என்று தாழ்ந்தான் பகவனு மதற்கு நேர்ந்தான்.

820. அடியேம் பொருட்டு வெள்ளியம்பலத்தில் ஆடப்பெற்ற திருக்கூத்திற்கு வணக்கம்! திருநீறு பூசிய பெரிய தோள்களுக்கு வணக்கம்! மணம்வீசும் மலர்களையுடைய மென் கூந்தலுடைய அங்கயற்கண்ணம்மை அமர்ந்திருக்கும் இடப்பாகத்திற்கு வணக்கம்! என்றும் அழியாத சிவானந்த திருக்கூத்தினை யுடையவனே வணக்கம்! வணக்கம்!

முனிவர் வேண்டும் வரத்தை அளித்தல்

821. என்று வணங்கி நின்று துதித்தனர். பின்பு வெள்ளியம்பலத்துள் நின்று திருநடனம் புரிந்த வேத முதல்வனாகிய இறைவன், இரு முனிவர்களையும் பார்த்துக் கருணை கூர்ந்து, ''நன்று. நீங்கள் விரும்பியது யாது?'' என்று வினவியருள, அம் முனிவர் இருவரும், இறைவனின் திருவடிகளில் உண்மை அன்போடு விழுந்து வணங்கி நின்று வேண்டத் தொடங்கினர்.

822. ''எந்தையே! இத் திருக்கூத்துடன் எப்போதும் இவ்வெள்ளியம்பலத்துள் நின்று, எல்லோருடைய பாச பந்தங்களைப் போக்கி, அருள்புரிய வேண்டும்,'' என்று வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, ''செந்தமிழுக்கு நிலைக்களமாகிய இக்கன்னி நாடு (பாண்டிய நாடு) செய்த தவப்பயன் காரணமாக நீங்கள் விரும்பிய வரத்தையே அளித்தோம்,'' என்று அருள் புரிந்தார்.

பதஞ்சலி முனிவர் வேண்டுகோள்

823. பிறகு பதஞ்சலி முனிவர் மேலும் சிவபெருமானை நோக்கி வேண்டத் தொடங்கினார். ''ஆதியாகிய எம் பெருமானே! பரமும் அபரமும் ஆனவனே! நிராமயமாயும், பரமானந்தமாயும் உள்ள இத்திருக் கூத்தை நேரே தரிசித்தவர் அனைவரும் பூமியில் மீண்டும் வந்து பிறவாத ஒப்பற்ற சிவகதியை அடைய வேண்டும்,'' என்று கூறி வணங்கினார். சிவபெருமானும் அதற்கு இசைந்து அருள் புரிந்தார்.

824 ஆர்த்தனர் கணத்தோர் கைகோத் தாடினர் அலர்பூ மாரி
தூர்த்தனர் விண்ணோர் கண்ணீர் துளும்பினர் முனிவர் ஆகம்
போர்த்தனர் புளக மன்பிற் புதைந்தனர் விழுங்கு வார்போற்
பார்த்தனர் புல்லிக் கொண்டார் பரவியவ் விருவர் தம்மை.

வேறு

825 அனித்த மாகிய பூதமைம் பொறிபுல னாதியா றாகி
இனித்த மாயையோ டிருவினைத் தொடக்கினும்
இருளினும் வேறாகித்
தனித்த யோகிக ளகநிறைந் தாடிய தனிப்பெருந்
திருக்கூத்தைக்
குனித்த வண்ணமாக் கண்டவர்க் கிகபரங் கொடுத்தவ
னுறைகின்றான்.

826 குனிவி லாதிரைத் தினந்தொடுத் தெதித்திரு கொடுவி
லாதிரை யெல்லை
புனித வாடக முளரிதோய்ந் தத்தனிப் பொதுநட தரிசித்தங்
கினித மர்ந்துநூற் றெண்மடங் கைந்தெழுத்
தெண்ணியிந் நிலைநிற்கும்
கனியு மன்பினார் எண்ணியாங் கெய்துவர் கருதுநல்
வரமெல்லாம்.

வெள்ளியம்பலத்திருக்கூத்தாடிய படலம் முற்றிற்று.

சிவகணத்தவர் மகிழ்ச்சி

824. சிவகணத்தவர் ஆரவாரம் செய்து கைகோத்துக் கொண்டு குரவை யாடினர். தேவர்கள் மலர்ந்த மலர் மழையைப் பொழிந்தனர். முனிவர்கள் கண்ணீர் ததும்ப உடல் மகிழ் வெய்தினர். அன்பினால் அவ்விரு முனிவரையும் துதித்துக் கண்களால் விழுங்குபவரைப் போல் பார்த்துத் தழுவிக் கொண்டனர்.

825. பூதம் ஐந்தும், பொறி ஐந்தும் முதலிய முப்பத்தாறு தத்துவங்களாய்ச் சுவை கொடுக்கும் மாயையோட இருவினைக் கட்டினின்றும், ஆணவத்தினின்றும் வேறாகித் தனித்து நிற்கும் யோகிகளின் உள்ளத்தில் நிறைந்து ஆடி அருளிய ஒப்பற்ற திருக்கூத்தினை, ஆடிய கோலமாகப் புறத்தில் தரிசித்தவர் களுக்கு இம்மை மறுமைப் பயன்களைக் கொடுத்துக் கொண்டு அவ் வெள்ளியம்பலத்துள் எழுந்தருளியிருக்கின்றார்.

826. மார்கழித் திங்கள் திருவாதிரை நாள் முதல் அடுத்த மார்கழித் திங்கள் திருவாதிரை வரையில் தூய்மையுடைய பொற்றாமரையில் நீராடி அவ் வொப்பற்ற வெள்ளியம்பலத் திருக்கூத்தைத் தரிசித்து அங்கே தங்கித் திருவைந்தெழுத்தை நூற்றெட்டு முறை உச்சரித்தவரும் அன்பு நிறைந்த அடியார்கள் அனைவரும் எண்ணிய வரங்களை எல்லாம் எண்ணியபடி அடைவர்.

வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம் முற்றிற்று.

7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

827 பன்ன கேசனு மடுபுலிப் பாதனும் பணிய
மின்னுவார்சடை மன்னவன் வெள்ளிமன் றாடல்
சொன்ன வாறிது பசித்தழல் சுடஒரு பூதம்
அன்ன மாமலை தொலைத்தவா றெடுத்தினி யறைவாம்.

828 கன்னி யர்க்கர சாயினாள் கடிமனை புகுந்த
மின்னி யற்சடை மாதவர் வேதியர் ஏனோர்
எந்நி லத்துள மன்னவர் யாவர்க்கு முறையே
பொன்னி யற்கலத் தறுசுவைப் போனக மருத்தா.

829 பூசு கின்றவு முடுப்பவும் பூண்பவும் பழுக்காய்
வாச மெல்லிலை யேனவு மம்முறை வழங்காத்
தேச மன்னவர் ஏனையோர் செல்லுநர் செலுத்தி
ஈச னன்புறு கற்பினா ளிருக்குமவ் வேலை.

830 மடைவ ளத்தொழிற் புலவர்வந் தடியிணை வணங்கி
அடிய ரேமட்ட போனகம் ஆயிரத் தொன்றின்
இடைய தாயினுந் தொலைந்தில தியாங்கண்மேற் செய்யக்
கடவ தேதெனப் பிராட்டிதன் கணவர்முன் குறுகா.

7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

827. ஒளிவீசும் நீண்ட சடையை உடைய இறைவனாகிய சுந்தரபாண்டியன், பாம்புகளின் தலைவனாகிய பதஞ்சலி முனியும், கொல்லும் புலியின் கால்களையுடைய வியாக்கிரபாத முனியும் வணங்க, வெள்ளியம்பலத்துள் ஆடி அருளிய திருவிளையாடலைக் கூறிய வரலாறு இது. இனி பசித் தீ சுட்டு வருத்துதலால் ஒரு பூதமானது சோற்று மலையை உண்ட திருவிளையாடலை எடுத்துக் கூறுவோம்.

828. தடாதகைப் பிராட்டியார், திருமணத்திற்காக அரண்மனை வந்த சடையையுடைய முனிவர்கள், மறையவர்கள், ஏனைய, பிறநாட்டு மன்னர்கள் ஆகிய அனைவருக்கும் பொன்னாலாகிய கலங்களில் அறுசுவையுடன் கூடிய உணவை உண்பித்தார்.

829. சாந்து முதலிய பொருள்களையும், பொன்னாடை முதலிய பொருள்களையும், இரத்தினாபரணம் முதலிய அணிகலன்களையும், பாக்கு வாசம் வெற்றிலை போன்ற பிறவற்றையும் முறையே அம்மன்னர்களுக்குக் கொடுத்து, பல நாட்டு மன்னர்களையும் வழி அனுப்பி வைத்தார், சோமசுந்தரக் கடவுளாகிய வேந்தனால் அன்பு செய்யப்பட்ட கற்பினையுடைய தடாதகைப் பிராட்டியார்.

830. சமையல் தொழிலைச் செய்யும் தொழில் வல்ல சமையல்காரர்கள் பிராட்டியாரிடம் வந்து வணங்கி, ''நாங்கள் சமைத்த உணவில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் இன்னும் சாப்பிட்டுத் தீர்ந்த பாடில்லை. மேலே செய்ய வேண்டியது யாது?'' என்று கேட்டனர். உடனே பிராட்டியும் தம் நாயகரான கணவரின் முன் சென்றார்.

831 பணிந்தொ துங்கிநின் றடிகண்முப் பத்துமுக் கோடி
கணங்கள் தம்மொடு மிங்கெழுந் தருள்வது கருதி
இணங்கு மின்சுவைப் போனகம் எல்லையின் றாக்கி
உணங்கு கின்றதுண் டெஞ்சியது எனைத்தென வுரைக்கின்.

832 இமையக் குன்றமு மடைகலா யிதன்புறங் கிடந்த
சிமையக் குன்றுக ளீட்டமுஞ் சேர்ந்தென நிமிரச்
சமையக் கொட்டிய வாலரிப் புழுக்கலுஞ் சாதக்கு
அமையக் கொட்டிய கறிகளின் வருக்கமு மனைத்தே.

833 என்ற போதிறை யெம்பிரான் றேவியா ரிடத்தில்
ஒன்று மன்பினால் ஒருவிளை யாடலை நினைந்தோ
தன்ற னிக்குடைப் பாரிடத் தலைவன தாற்றல்
அன்றி யாவரு மறிந்திடக் காட்டவோ வறியேம்.

834 சிறிது வாணகை செய்துமூ வேந்தரிற் சிறந்த
மறுவின் மீனவ னரும்பெறன் மகளுனக் கரிதிற்
பெறுவ தேதுவான் றருவுநின் பணிசெயப் பெற்றிங்
குறைவ தேற்பிறர் திருவெலாம் உன்னதே யன்றோ.

835 அளவி லாதநின் செல்வத்தின் பெருக்கைநாம் அறிய
விளைவு செய்தனை போலுநின் விருந்துணப் பசியாற்
களைய டைந்தவ ராகிநங் கணத்தினுட் காணேந்
தளவ மூரலா யாஞ்செயத் தக்கதே தென்றான்.

பிராட்டி இறைவரிடம் முறையிடல்

831. கணவரை வணங்கி நின்று, ஒரு பக்கமாக ஒதுங்கி, ''தேவரீர் முப்பத்து முக்கோடி தேவகணங்களோடும் இங்கு எழுந்தருளியதைக் கருத்தில்கொண்டு, இனிமையான உணவை அளவில்லாமல் சமைத்து, சாப்பிடுவாரின்றி எஞ்சி நின்றுள்ளது. உண்டு மிகுந்தது அளவற்றது.

832. அவற்றைச் சொல்லத் தொடங்கினால் பெருகும். இமய மலையும் அதன் புறத்தே அடுக்கடுக்காய்க் கிடந்த உச்சியையுடைய மலைக் கூட்டமும் போல, வானைத் தொடும் அளவு சமைத்துக் கொட்டிய வெண்மையான அரிசியில் அமைந்த சோறும் அப்புழுக் கலுக்குப் பொருந்திய கறிகளின் வகைகளும் அளவிறந்தன.''

சிவபெருமான் குண்டோதரனை அனுப்புதல்

833. என்று அம்மையார் கூறியவுடன், எம்பெருமான் பிராட்டி யாரிடம் கொண்ட அன்பினாலோ, அன்றி ஒரு திருவிளையாடலைக் கருதியோ, அன்றித் தன் ஒப்பற்ற குடையைத் தாங்கி வரும் பூதகணத் தலைவனாகிய குண்டோதரனது வன்மையை யாவரும் அறியுமாறு காட்டவன்றோ? அறியேம். பின்வருமாறு பேசத் தொடங்கினார்.

834. இறைவன் சிறிது புன்னகையுடன், ''மூன்று அரசர்களுக்கும் மேம்பட்ட குற்றமற்ற மலயத்துவசப் பாண்டியனுக்கு அரிய பேறாம் புதல்வியாகிய உனக்கு அரிதில் பெறும் பொருள் யாது? கற்பக மரமும் உனக்குப் பணி செய்யும் பேற்றினைப் பெற்று இருப்பதாயின் ஏனையோர் செல்வ மெல்லாம் உன்னுடைய தல்லவா!'' என்றார்.

835. மீண்டும், ''அழகிய முல்லை போன்ற பல் வரிசை யுடையாய் அளவில்லாத உன்னுடைய செல்வத்தின் மிகுதியை நாம் அறிந்து கொள்ள இவ்வாறு செய்தாய் போல் உள்ளது. ஆயின் உன் விருந்தை உண்பதற்கு, பசியால் களைப்படைந்து உள்ளவர் நம் கணங்களுள் ஒருவரையும் கண்டிலேன். என்னால் செய்யத்தக்கது யாது?'' என்று கேட்டார்.

836 அடுக்க நின்றகுண் டோதர னகட்டிடை வடவை
மடுக்க வுன்னினான் அதுவந்து வயிற்றெரி பசியாய்த்
தொடுக்க வாலமுண் டாங்குடல் சோர்ந்துவேர்த் தாவி
ஒடுக்க முற்றைய பசியினா லுயங்கினே னென்றான்.

837 குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடிசோ
றிடுமி னப்புறஞ் சோறுமா லெனத்தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினாள் குறியனும் உடனே
நடைத ளர்ந்துகண் புகைந்துவாய் புலர்ந்திட நடந்தான்.

838 படைக்க ணேவல ரிறைமகள் பணியினாற் பசிநோய்
தொடுத்த வன்றனைக் கொண்டுபோய்ச் சொன்றிமுன் விடுத்தார்
அடுத்தி ருந்ததே கண்டனர் அன்னமா மலையை
எடுத்த யின்றது மடிசிலங் கிருந்ததுங் காணார்.

839 சிலம்பு நூபுரச் சீறடிச் சேடியர் சில்லோர்
அலம்பு வால்வளைக் கைநெரித்து அதிசய மடைந்தார்
புலம்புமேகலை யார்சிலர் பொருக்கென வெருண்டார்
கலம்பெய் பூண்முலை யார்சிலர் கண்புதைத் திரிந்தார்.

840 முரவை போகிய முரிவில்வான் மூரல் பால் வறையல்
கருணை தீம்பய றடுதுவை பல்வகைக் கறிகள்
விரவு தேம்படு பால்தயி ரிழுதுதேன் வெள்ளம்
வரைவி லாதன மிடாவொடு வாரிவாய் மடுத்தான்.

836. அங்ஙனம் கூறியபடியே பக்கத்தில் நின்ற குண்டோதரன் வயிற்றினிடத்தில் வடவைத் தீ புகுமாறு திருவுள்ளம் கொண்டார். அத்தீ வந்து வயிற்றின் கண் காந்துகின்ற பசியைத் தொடர நஞ்சுண்டவன் போல் உடல் தளர்ந்து உயிர் ஒடுங்கி, ''பெருமானே! நான் பசியால் வாடினேன்,'' என்று கூறினான்.

837. ''பெண்ணே, எனது குடையைத் தாங்கி வரும் இச்சிறிய பூதத்திற்கு ஒரு பிடி சோறு கொடுப்பாயாக! பின்னர் கூறுவோம்,'' என்று சொன்னார். எல்லாவற்றையும் உடைய பிராட்டியார் வணங்கிப் போயினார். குண்டோதரனும் நடை தளர்ந்து, கண் குழிந்து, வாய் புலர நடந்தான்.

குண்டோதரன் உண்ணும் காட்சி

838. வாள் போலும் கண்களையுடைய ஏவல் மகளிர் தம் தலைவியின் கட்டளையால், பசி நோயால் பீடிக்கப்பட்ட குண்டோதரனை அழைத்துக் கொண்டு போய் சோற்றின் முன்விட்டார்கள். அங்ஙனம் விட்டவர்கள் அக்குண்டோதரன் அச்சோற்றை அடுத்து இருந்ததையே கண்டார்கள். ஆயின் அம்மலை போன்ற சோற்றை எடுத்து உண்டதையும், சோற்றையும் காணாமல் தவித்தனர்.

839. ஒலிக்கும் சிலம்பினை அணிந்த சிறிய அடியை உடைய அப்பெண்களில் சிலர், ஒலிக்கும் வளையலை அணிந்த கையை நெரித்து அதிசயித்தார். ஒலிக்கும் மேகலையை அணிந்த சிலர் பொட்டென்று பயமடைந்தார். அணிகலம் அணிந்த தனங்களையுடைய சிலர் கண்களை மூடிக் கொண்டு ஓடினார்.

840. முனை முரியாத வெள்ளிய அரிசியால் ஆகிய அன்னத்தையும், பால் பெய்து செய்த துவட்டலும், பொரிக்கறியும், இனிய பயற்றொடு கலந்து சமைத்த புளியங்கறியும் ஆகிய பலவகைக் கறிகளையும், இனிமையுடைய பாலும் தயிரும் நெய்யும் தேனுமாகிய இவற்றின் பெருக்கினையும், அளவில்லாத பண்டங்களையும் மிடாக்களோடு வாரி வாரியுண்டான்.

841 பல்ப ழக்குவை வேற்றுருப் பண்ணியங் கன்னல்
மெல்சு வைத்தண்டு தெங்கிவை யன்றியும் வேவா
வல்சி காய்களின் வருக்கமு நுகர்ந்துமா றாமல்
எல்லை தீர்நவ பண்டமும் எடுத்துவாய் மடுத்தான்.

842 பாரித் துள்ளவிப் பண்டமும் பரூஉக்குறுங் கையால்
வாரித் தன்பெரு வயிற்றிடை வைப்பவுந் துடுவை
பூரித் தாகுதி பண்ணிய தழலெனப் பொங்கிக்
கோரித் தொன்பது வாயிலும் பசித்தழல் கொளுத்த.

843 அலங்க லோதிகண் டதிசயம் அடைந்துதன் னன்பின்
நலங்கொ ணாயகன் முன்புபோய் நாணமுட் கிடப்ப
இலங்கு பூங்குழல் சுவன்மிசை யிறக்கியிட் டொல்கி
நிலங்கி ளைத்துநின் றாணிலை கண்டன னிருபன்.

844 அஞ்சி லோதியை வினவுவான் அறிகலான் போலக்
குஞ்சி யாரழ லன்னவக் குடவயிற் றவனுண்
டெஞ்சி யுள்ளவேல் பூதங்க ளின்னமும் விடுத்துன்
நெஞ்சு வப்பவே யருத்துது மென்னலு நிமலை.

845 ஐய வின்னுமி குறட்பசி யடங்கிடா வேறு
வெய்ய பாரிட வீரரை விடுத்தியேல் எடுத்து
வையம் யாவையும் வயிற்றிடை வைப்பரே யதனாற்
செய்ய காலருத் திரப்பெயர் தேற்றமா முனக்கே.

841. பல கனிக் குவியல்கள், வெவ்வேறு வடிவப் பண்ணிகாரங்கள், சருக்கரை, கரும்பு, தேங்காய், ஆகிய இவை எல்லாவற்றையும், அரிசியும், காய்களின் கூட்டத்தையும் உண்டு பசி தீராமையினால் அளவற்ற நவதானியங்களையும் எடுத்து உண்டான்.

842. இப்பொருள்கள் யாவற்றையும் தன்னுடைய குட்டையான கையினால் வாரிப் பெரு வயிற்றிடை வைக்கவும், நெய்யை நிரப்பி ஆகுதி செய்த வேள்வித் தீயைப் போலப் பசித்தீயானது அதிகமாகப் பொங்கி நவத் துவாரங்களிலும் கொளுத்தியது.

பிராட்டி குண்டோதரன் பற்றி இறைவரிடம் கூறுதல்

843. மாலையை அணிந்த பிராட்டியார் இதனைக் கண்டு வியப்படைந்து, தன்மேல் அன்பு கொண்ட கணவனிடம் சென்று, நாணம் உள்ளத்தில் கிடப்ப, மலரணிந்த கூந்தலைத் தாழ்த்தி, தன் பெருவிரலால் நிலத்தைக் கீண்டிக் கொண்டு நின்றார். அந் நிலையை அரசனாகிய சுந்தர பாண்டியர் கண்டார்.

844. ஒன்றுமே அறியாதவர் போல் சிவபெருமான், அழகிய கூந்தலையுடைய பிராட்டியாரை, கேட்கத் தொடங்கினார். ''நெருப்புப் போன்ற மயிர்க்கற்றையையுடைய அக்குண்டோதரன் உண்டு உணவு எஞ்சி இருக்குமாயின், இன்னும் சில பூதகணங்களை அனுப்பி உன் உள்ளம் மகிழுமாறு உண்பிப்போம்,'' என்று கூறினார்.

845. பிராட்டியார் ''ஐயனே! இக்குட்டையான பூதத்தின் பசி இன்னும் அடங்கவில்லை. வேறு கொடிய பூதகணங்களை விடுப்பீர்களானால் உலகம் அனைத்தையும் எடுத்து விழுங்கி விடுவார்கள். இந்நிகழ்ச்சியால் உனக்குக் காலஉருத்திரன் என்னும் பெயர் உறுதியாகும்.

846 சங்க வார்குழைக் குறள்மகன் றன்செய றானே
இங்கு வந்துரை செய்திட வறிதியென் றிறைமுன்
மங்கை நாயகி குமுதவாய் மலர்பொழுது எயிற்றுத்
திங்கள் வாய்முழை யான்பசித் தீச்சுட வந்தான்.

847 நட்ட மாடிய சுந்தர நங்கையெம் பிராட்டி
அட்ட போனகம் பனிவரை யனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவுமென் சுடுபசி தணியா
திட்டு ணாதவர் வயிறுபோற் காந்துவது என்றான்.

848 கையர் முப்புரத் திட்டதீக் கடும்பசி யுருவாய்ப்
பொய்ய னேன் வயிற் றிடைக்குடி புகுந்ததோ என்னுங்
கையெ றிந்திடும் அண்டங்கள் வெடிபடக் கதறும்
ஐய கோவெனும் உயிர்த்திடு மாவிசோர்ந் தயரும்.

குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் முற்றிற்று.

8. அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்

849 வேத நாயகன் பாரிட வேந்தனுக் கமையா
ஓத னாதிக ளருத்திய தன்மையீ திவையும்
போத ராமையால் அமைவுறப் போனகக் குழிதந்
தோத மாநதி யருத்திய செய்தியு முரைப்பாம்.

846. ''சங்காலாகிய நீண்ட குண்டலத்தையுடைய குண்டோதரன் தன் செயலைத் தானே இங்கு வந்து கூற அறிவாய்'', என்று இறைவன் முன் மங்கையர்க்கரசியான பிராட்டியார் குமுதம் போன்ற தம் திருவாயால் கூறும் போது, கோணல்பல்லாகிய அரைமதியும், குகைபோன்ற வாயினையும் உடைய குண்டோதரன் பசித்தீச்சுட அவ்விடம் வந்தான்.

குண்டோதரன் இறைவனிடம் கூறல்

847. ''வெள்ளியம்பலத்துள் திருநடனம் புரிந்த பெருமானே! எம்பிராட்டியார் சமைத்து அருளிய அமுது வகைகள் இம்மலை போல் கிடந்தன. அவற்றை எடுத்து உண்ணவும், என் சுடுகின்ற பசியானது தணியாமல், முற்பிறவியில் ஐயம் இட்டு உண்ணாதவர் வயிறு இப்பிறவியில் காந்துவது போன்று எரிகின்றது'' என்றான்.

848. மேலும், ''வஞ்சகர்கள் மூன்று புரங்களில் இட்ட நெருப்பானது, கடிய பசிவடிவமாய் வந்து, பொய்மையேனது வயிற்றினிடத்தில் குடிபுகுந்ததோ?'' என்பான். கையை ஒன்றோடொன்று தாக்குவான்! அண்டங்கள் பிளக்குமாறு கதறுவான்! ''ஐயகோ'' என்பான். பெருமூச்செறிவான்! உயிர் சோர்ந்து அயருவான்.

குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் முற்றிற்று.

8. அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்

849. வேதத்தின் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுள் பூதகணத்தின் தலைவனாகிய குண்டோதரனுக்கு எவ்வளவு உண்டும் போதாத அளவில் அன்னம் முதலியவற்றை உண்ண வைத்த திருவிளையாடல் இது. அவ்வன்னம் முதலியவை போதாமையால் நிறைய அன்னக்குழியைத் தந்தருளி, பெரிய வெள்ளத்தையுடைய வையை நதியை அழைத்து உண்பித்த திருவிளையாடலைக் கூறுவோம்.

850 கவன மால்விடை யாளிபின் கடிகமழ் தென்றற்
பவன மாமலை யாட்டியைப் பார்த்துளே நகைத்துத்
தவன மாப்பசி யுடையவன் றன்பொருட் டன்ன
புவன மாதினை நினைந்தனன் நினைக்குமுன் போந்தாள்.

851 நாற்ற டந்திசைத் தயிர்க்கடல் நனந் தலை நலங்கீண்
டூற்றெ ழுந்துநாற் கிடங்கரா யுதித்தெழுந் தாங்கு
மாற்ற ருஞ்சுவைத் தீந்தயிர் வாலரிப் பதத்தோ
டேற்றே ழுந்தது நாற்குழி யிடத்திலும் பொங்கி.

852 குரும திக்குல மன்னவன் மருகனக்குண்டடப்
பெருவ யிற்றிரு பிறையெயிற் றெரிசிகைப் பேழ்வாய்
ஒருகு றட்குடை வீரனை யுன்பசி தணியப்
பருகெ னப்பணித்து அருளலும் பாரிடத் தலைவன்.

853 அத்த யிர்ப்பதக் கிடங்கரி லலைகடல் கலக்கும்
மத்தெ னக்கரம் புதைத்தெடுத் தெடுத்துவாய் மடுத்துத்
துய்த்தி டப்பசி விடுத்தது சுருதிநா யகன்றாட்
பத்தி வைத்துவீ டுணர்ந்தவர் பழவினைத் தொடர்போல்.

854 வாங்கி வாங்கிவாய் மடுத்தலும் உடம்பெலம் வயிறாய்
வீங்கி னான்தரை கிழிபடப் பொருப்பென வீழ்ந்தான்
நீங்கு நீளுயிர்ப் பிலனுடல் புரண்டன னீர்வேட்
டாங்கு நீர்நிலை தேடுவா னாயினா னெழுந்தான்.

குண்டோதரன் பசி நீங்குதல்

850. பெரிய இடப ஊர்தியை உடைய சோமசுந்தரக் கடவுள், பெரிய பொதிய மலையை உடைய தடாதகைப் பிராட்டியாரைப் பார்த்து, தனக்குள்ளே முறுவல் செய்து, எரிகின்ற பெரிய பசியினை உடைய குண்டோதரனுக்காக, தன் சக்தியாகிய அன்ன பூரணியை நினைத்தனன். நினைத்த அளவில் அவளும் அன்ன வடிவில் வருகின்றாள்.

851. நான்கு பெரிய திசைகளிலும் சூழ்ந்த தயிர்க் கடலானது, பூமியின் நடுவைக் கிழித்து ஊற்று எழுந்து நான்கு குழிகளாய்த் தோன்றி எழுந்தாற் போன்று, சுவையுடைய தயிர், வெள்ளிய அரிசியால் ஆகிய அன்னத்தோடு நான்கு குழிகளிலும் உயர்ந்து பொங்கி எழுந்தது.

852. சந்திர குலத்தில் தோன்றிய மலயத்துவசப் பாண்டியனுக்கு மருமகனாகிய சுந்தர பாண்டியன், அந்தக் குழிந்த பெரிய வயிற்றினையும், பிளந்த வாயினையும் உடைய ஒப்பற்ற குடையைத் தாங்கி வரும் பூத வீரனை நோக்கி, ''உன் பசி தணியப் பருகு,'' என்று கட்டளை இட்டு அருளினார்.

853. அந்தத் தயிர் சோற்றுக்குழியில், மத்தைப்போல கையைச் செருகி வாரிவாரி உண்ண, வேத நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளில் அன்பு வைத்து வீட்டினை உணர்ந்த பெரியாரது பழவினை ஒழிதல் போல, குண்டோதரனுக்குப் பசிநோய் விட்டகன்றது.

நீர்வேட்கை

854. அவ்வாறு வாரி வாரி உண்ட அளவில் உடம்பு எல்லாம் வயிறாகப் பருத்தது. பூமி கிழியுமாறு மலை போலக் கீழே விழுந்தான். வெளியே செல்ல முடியாதவனாய்ப் புரண்டான். பின்னர் நீர்வேட்கை மேலோங்க நீர் நிலைகளைத் தேடத் தொடங்கினான்.

855 ஆவி யன்னவர்ப் பிரிந்துறை யணங்கனார் போலக்
காவி நாண்மலர் தாமரைக் கடிமலர் வாட
வாவி யோடையுங் குளங்களும் வறப்பவாய் வைத்துக்
கூவ நீணிலை நீர்களும் பசையறக் குடித்தான்.

856 அனையன் ஆகியு நீர்நசை யாற்றலன் வருந்தும்
வினைய னாகிவா னதிச்சடை வேதியன் பாதத்
தினைய நாதனுந் தன்றிரு முடியின்மீ திருக்கும்
நனைய நாண்மல ரோதியைப் பார்த்தொன்று நவில்வான்.

857 தேங்கு நீர்த்திரை மாலிகைச் செல்விநீ யிந்த
வாங்கு நீர்த்தடம் புரிசைசூழ் மதுரையின் மாடோர்
ஒங்கு நீத்தமா யொல்லென வருதியென்று உரைத்தான்
நீங்கு நீர்த்திரு மாதவ ளொருமொழி நிகழ்த்தும்.

858 அன்று மெம்பிரான் ஆணையாற் பகீரதன் பொருட்டுச்
சென்று நீயொரு தீர்த்தமாய்த் திளைப்பவர் களங்கம்
ஒன்று தீவினைத் தொடக்கறத் தொழுகெனப் பணித்தாய்
இன்று மோர்நதி யாகெனப் பணித்தியே லென்னை.

859 தெரிசித் தோர்படிந் தாடினோர் செங்கை யாலேனும்
பரிசித் தோர்பவத் தொடர்ச்சியின் பற்றுவிட் டுள்ளத்
துருசித் தோர்வுறு பத்தியும் விச்சையு முணர்வாய்
விரிசித் தோர்வுறு மெய்யுணர் வால்வரும் வீடும்.

855. உயிர்போன்ற தண் கணவனைப் பிரியும் தலைவியைப் போல, அன்று மலர்ந்த நீலோற்ப மலர்களும், தாமரை மலர்களும் வாட்டமடைய, கிணறுகளும், ஓடைகளும், குளங்களும் வற்றுமாறு, வாயினை வைத்து உறிஞ்சி பசையில்லை யாகக் குடித்தான்.

கங்கையை இறைவன் அழைத்தல்

856. அவ்வாறு குடித்தும் நீர் வேட்கை நீங்கப்பெறாத வனாய், கங்கை ஆற்றினை சடையாக உடைய சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளில் விழுந்து வருத்தமடைந்தான். அவ் விறைவனும் தனது திருமுடியில் இருக்கின்ற தேனை உடைய புதிய மலரை அணிந்த கூந்தலையுடைய கங்கையை நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

857. ''ததும்புகின்ற நீரினையும், அலையை மாலையாகவும் உடைய பெண்ணே! நீ இந்த வளைந்த அகழியும் பெரிய மதிலும் சூழ்ந்த மதுரை நாட்டில் வந்து ஒரு பெரிய வெள்ளமாக விரைவாய்'' என்று கட்டளையிட்டான். உடனே சடையிலுள்ள கங்கா தேவி ஒரு பதிலைச் சொல்லத் தொடங்கினாள்.

858. ''எம்பெருமான்! அக்காலத்தும் 'நம் கட்டளையால் நீ பகீரதன் பொருட்டுச் சென்று ஒரு தீர்த்தமாகி, முழுகுவோரின் பாவத்தினைப் போக்குவாய்' என்று பணிந்தருளினீர்கள். இப்பொழுது என்னை 'ஒரு நதியாவாய்' என்று கட்டளை இட்டுள்ளீர்.

859. ''கண்ணால் கண்டவர், திளைத்து மூழ்கியவர், சிவந்த கையினாலேனும் தொட்டவர், ஆகிய இவர்களுக்குப் பிறவித் தொடர்பின் பற்றானது நீங்க, உள்ளம் மகிழ சிந்தித்தல் பொருந்திய அன்பும் மெய்ஞ் ஞானமும், அறிவாகி எங்கும் விரிந்த சித்தாகிய உன்னை உணரும் மெய்ஞ்ஞானத்தால் வரும் வீடு பேறும்,

860 தந்தி டப்பணித் தருளெனாத் தடம்புனற் செல்வி
சுந்த ரப்பெருங் கடவுளை வரங்கொண்டு தொழுது
வந்த ளப்பிலா வேகமோ டெழுந்துமா நதியாய்
அந்த ரத்துநின் றிழிபவ ளாம்என வருமால்.

வேறு

861 திரைவளை யணிகரம் உடையவள் செழுமணி
நகையுடையாள்
நுரைவரை துகிலுடை யவள்கொடி நுணுகிடை யவளறல்நீள்
விரைவளை குழலுடை யவள்கயல் விழியுடை
யவள்வருவாள்
வரைவளை சிலையவன் முடிமட வரனதி வடிவினுமே.

862 விரைபடும் அகிலரை பொரிதிமில் வெயில்விடு
மணிவரையோ
டரைபட முதுசினை யலறிட அடியொடு கடிதகழாக்
குரைபடு கழலிற வுளர்சிறு குடியடி யொடுபறியாக்
கரைபட எறிவது வருவது கடுவிசை வளியெனவே.

863 பிணையொடு கலைபிடி யொடுகரி பிரிவில வொடுபழுவப்
பணை யொடு கருமுசு வயிறணை பறழொடு தழுவியதன்
துணையொடு கவிபயின் மரநிரை தொகையொடு
மிறவுளர்வெங்
கணையொடு சிலையித ணொடுமெறி கவணொடு
கொடுவருமால்.

864 அடியிற நெடுவரை யுதைவன வகழ்வன அகழ்மடுவைத்
திடரிடு வனமழை செருகிய சினைமர நிரைதலைகீழ்
படஇடி கரைதொறு நடுவன படுகடல் உடைமுதுபார்
நெடுமுது கிருபிள வுறவரு நெடுநதி யினவலையே.

கங்கை நதி வடிவாக வருதல்

860. தந்தருளக் கட்டளை இடுக,'' என்று கங்கையானவள் சோமசுந்தரப் பெருமானை வணங்கி அவ்வரத்தினைப் பெற்றுக் கொண்டு, விரைந்து வேகத்துடன் பெரிய நதி வடிவாய் வானின்று இறங்குபவள் போல் வருகின்றாள்.

861. மேருமலையை வில்லாக உடைய சிவபெருமானது தலையில் உள்ள கங்கையானவள் ஆற்றின் வடிவமாக வரும் பொழுதும், அலைகளாகிய வளையல் அணிந்த கைகள் உடையவளாகியும், முத்துக்களாகிய பல் வரிசையை உடைய வளாகியும், நுரை ஆடைகளை உடையவளாகியும், பூங்கொடி யாகிய சிறிய கூந்தலையுடையவளாகியும் கயல்களாகிய கண்களை யுடையவளாகியும் வருகின்றாள்.

862. மணம் மிக்க அகிலும், பெரிய வேங்கையும், ஒளி வீசும் மணியை உடைய மலையோடு மோதி அரைபடவும், அவற்றின் பெரிய கிளைகள் புலம்பவும், விரைந்து பறித்தும் வேட்டுவர்களின் சிற்றூரை அடியோடு பெயர்த்தும் கரைகளில் எடுத்து வீசுவதாகிய அந்நதி, மிக்க விரைவோடு வரும் பெரும் காற்று போல வருகின்றது.

863. ஒன்றாகக் கலந்திருக்கும் பெண் மானும் ஆண் மானும், பெண் யானையோடு, ஆண் யானையும் காட்டில் உள்ள ஒரு மரத்தைக் கிளைகளோடும், வயிற்றில் உள்ள குட்டிகளை யுடைய பெண் குரங்கோடும், குரங்குகள் உலாவும் மரங்களை வரிசையாகிய தொகுதியோடும், வேட்டுவர்கள் வில்லை கொடிய அம்புகளோடும், அவர்களின் கவண்களோடும் அந்நதி வாரிக் கொண்டு வரும்.

864. கடலை ஆடையாக உடைய பெரிய பூமியின் முதுகு இரண்டாகப் பிளக்க வருகின்ற நீண்ட நதியின் அலைகள், பெரிய மலைகளின் அடிகெட மோதித் தோண்டுவனவும், பள்ளங்களை மேடாக்குவனவும், பெரிய மரங்களை இடித்த கரைகளில் தலைகீழாக நடுவனவும் ஆயின.

865 பிளிறொலி யினமுது மரமகழ் பெருவலி யினஅசையா
வெளிறடி வனவெறி மணியின விரைசெல வினமதமோ
டொளிறளி யினநுரை முகபட முடையன எனவரலால்
களிறனை யதுமது விதழிகள் கவிழ்சடை யணிகுடிஞை.

866 நீடிய பிலமுறு நிலையின நிருமலன் மதிமுடிமீ
தாடிய செயலின வெயிலுமி ழருமணி தலையினநீள்
கோடிய கதியின நிரைநிரை குறுகிய பலகாலின்
ஒடிய வலியின வளையுட லுரகமும் எனவருமால்.

867 மண்ணகழ் தலின்வளை யணிகரு மாவனை யதுமிசைபோய்
விண்ணள வலினவு ணர்களிறை விடுபுன லொடுநெடுகும்
அண்ணலை யனையது சுவையிழு தளையளை வுறுசெயலாற்
கண்ணனை யனையது நெடுகிய கடுகுறு கதிநதியே.

868 திகழ்தரு கரிபரி கவரிகள் செழுமணி யொடுவருமா
றிகழ்தரு குடபுல வரசர்க ணெறிசெய்து கவர்திருவோ
டகழ்தரு பதிபுகு மதிகுல அரசனை யதையலதேற்
புகழ்தரு திறையிட வருகுட புலவர சனுநிகரும்.

865. அக்கங்கையாற்றின் அலைகள் ஒலிக்கும் பேரொலியை உடையனவும், மரங்களைப் பறிக்கும் பெரிய வலிமை உடையனவும் அசையாத விளா மரங்களை முறிப்பனவும், முத்துக்களை உடையனவும், நுரையாடையை உடையனவும், வேகத்தை உடையனவும், மான் மதத்தோடு விளங்கும் வண்டுகளை உடையனவும் நுரையாகிய ஆடையை உடையனவும் ஆக உள்ளமையால் யானைகளை ஒத்தன. (பேரொலி, வலிமை, முறிக்கும் தன்மை, கோடு-முத்து, நுரை ஆடை, வேகம், மான் மதம் போன்றவை யானைக்கு உரியவை)

866. அந்நதியின் தன்மை ஆழ்ந்த பாதாலத்தில் பொருந்தும். இறைவனது பிறையை அணிந்த முடிமேலும் அசையும். பெரிய ஒளி பொருந்திய மணிகளைத் தம்மிடத்தும் உடைய மிக்க வளைந்த நடையினை உடைய, பல்வழிகளில் பிரிந்து ஓடும் தன்மையுடையது. எனவே வளைந்த உடலையுடைய பாம்புகள் போலவும் காணப்பட்டது.

(பாதாலம், பெருமான் திருமுடி, மணி, வளைந்த தன்மை, பலவழிகளில் ஓடுதல் போன்றவை பாம்பிற்கு உரியவை)

867. மிக்க வேகத்தினையுடைய அந்நதி மண்ணைத் தோண்டிச் செல்லுதலால் சங்கினை ஏந்திய 'வராக மூர்த்தி'யைப் போன்றிருந்தது. மேலே போய் வான் உலகத்தைத் தடவுதலால், அவுணர்களின் தலைவனாகிய 'மாபலிச் சக்கரவர்த்தி' தாரை வார்த்துத் தந்த நீரைப் பெற்றுக் கொண்டவுடன் பேருருக்கொண்ட 'வாமன மூர்த்தி'யை ஒத்திருந்தது. சுவையையுடைய வெண்ணையும் தயிரும் அளைந்து வருதலால் 'கண்ண பெருமா'னை ஒத்திருந்தது.

868. யானைகள், குதிரைகள், சாமரைகள், முத்துகள் இவைகளோடு வருகின்ற அந்நதி, இகழ்ந்து பேசிய மேற்புல மன்னர்களை வெற்றி கொண்டு அடிமைப்படுத்தி, அவர்களிடம் உள்ள செல்வத்தைக் கவர்ந்து கொண்டு மதுரைக்கு வரும் சந்திரகுலத்து அரசனாகிய பாண்டியனை ஒத்திருந்தது. அல்லது மதுரை நகருக்குத் திரை செலுத்த வரும் மேற்புல மன்னர்களையும் ஒத்திருந்தது.

869 ஆரோடு மடல விழ் பனையொடு அரநிகர் இலைநிம்பத்
தாரொடு புலியொடு சிலையொடு தகுகய லொடுதழுவாப்
பாரொடு திசைபர வியதமிழ் பயிலர சர்கள்குழுமிச்
சீரொடு பலதிரு வொடுவரு செயலனை யதுநதியே.

வேறு

870 கல்லார் கவிபோற் கலங்கிக்கலை மாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பல வான்றுறை தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருளாழ்ந்து தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள இறுத்த தன்றே.

871 வண்டோதை மாறா மலர்வேணியின் வந்த நீத்தங்
கண்டோத நஞ்சுண் டருள்கண்ணுதல் மூர்த்தி பேழ்வாய்
விண்டோ தணியா தென்விடாயென வெம்பி வீழ்ந்த
குண்டோ தரனை விடுத்தான்அக் குடிஞை ஞாங்கர்.

872 அடுத்தா னதியின் னிடைபுக்கிருந்து ஆற்ற லோடும்
எடுத்தான் குறுங்கை யிரண்டுங்கரை யேற நீட்டித்
தடுத்தான் மலைபோ னிமிர்தண்புனல் வாயங் காந்து
மடுத்தான் விடாயுங் கடலுண்ணு மழையு நாண.

873 தீர்த்தன் சடைநின் றிழிதீர்த்த மருந்தி வாக்குக்
கூர்த்தின்பு கொண்டு குழகன்றிரு முன்ன ரெய்திப்
பார்த்தன் பணிந்த பதமுன்பணிந் தாடிப் பாடி
ஆர்த்தன் புருவாய்த் துதித்தானள வாத கீதம்.

869. அந்நதியானது ஆத்திமாலையோடும், இதழ் விரிந்த பனை மாலையோடும், வேப்பமாலையோடும், புலியோடும், வில்லோடும், தக்க கயலோடும் தழுவி வருதல், மண்ணுலகுடன் எட்டுத்திக்குகளிலும் தமிழின் புகழ்பரப்பிய சேர சோழ பாண்டியர்கள் குழுமி சிறப்போடு பல செல்வங்களைக் கொண்டு வரும் தன்மையோடு ஒத்திருந்தது.

870. கல்லாதவர்களின் கவி தெளிவின்றி இருத்தல் போலக் கலங்கி, கலைகளில் சிறந்த மாட்சிமைப்பட்ட கேள்வி வல்லுநர் இயற்றிய செய்யுள் போலச் சிறந்து, பலவாகிய நீர்த்துறைகளில் பொருந்திச் செல்லும் இடங்களில் எல்லாம் மணி பொன் முதலிய பொருள்களையுடையதாய் ஆழமுடையதாகித் தெளிவடைந்து தேயத்தில் உள்ள அனைவரும் விரும்பிப் பயன் அடையுமாறு நிலை பெற்றது.

குண்டோதரன் நீர்வேட்கை தணிதல்

871. வண்டுகளின் ஒலியை உடைய கொன்றை மலரை அணிந்த சடையினின்றும் வந்த வெள்ளத்தை, நெற்றிக் கண்ணுடைய அவ்விறைவன் நோக்கி, பெரிய வாயைத திறந்து ''ஐயகோ! என் நீர் வேட்கை தணியவில்லையே,'' என்று வெதும்பி வீழ்ந்த குண்டோதரனை அந்நதியின் பக்கத்தில் செல்லுமாறு விடுத்தான்.

872. அடுத்து அக்குண்டோதரன் அந்நதியினிடத்தில் சென்று வலிமையுடைய தன்னுடைய இரண்டு சிறிய கைகளையும் எடுத்து கரையில் செல்லும் நீரைத் தடுத்து வாய் திறந்து நீர் வேட்கையும், கடல் நீர் உண்ணும் மேகமும் வெட்கப்படும் அளவிற்கு மலைபோல் உயர்ந்த அந்நீரைப் பருகினான்.

873. இறைவன் சடையினின்று இறங்கிய அந்நீரைப் பருகி மகிழ்ந்து, இறைவன் திருமுன்னர் சென்று, அருச்சுனன் வழிபட்ட அந்த அழகான திருவடிகளில் வணங்கி, கூத்தாடு முழக்கம் செய்து, அளவில்லாத கீதங்களைப் பாடித் துதித்தான்.

874 பாட்டின் பொருளான அவன் பாரிட வீரன் பாடல்
கேட்டின்ப மெய்திக் கணங்கட்குக் கிழமை நல்கி
மோட்டின் புனல் மண்முறைசெய் திருந்தா னளகக்
காட்டின் புறம்போய் மடங்குகயற் கண்ணியோடும்.

வேறு

875 தீர்த்த னிதழிச் சடைநின்றும் இழிந்து வரலாற் சிவகங்கை
தீர்த்த னுருவந் தெளிவோர்க்கு ஞானந் தரலாற் சிவஞான
தீர்த்தங் காலிற் கடுகிவருஞ் செய்தி யாலே வேகவதி
தீர்த்தங் கிருத மாலையென வைகை நாமஞ் செப்புவரால்.

அன்னக்குழியும் வைகையையும் அழைத்த படலம் முற்றிற்று.

9. எழு கடலழைத்த படலம்

876 முடங்கன்மதி முடிமறைத்த முடித்தென்னன் குறட்கன்னக்
கிடங்கரொடு நதியழைத்த கிளர்கருணைத் திறனிது மேல்
மடங்கல்வலி கவர்ந்தான்பொன் மாலைபடிந் தாடவெழு
தடங்கடலும் ஒருங்கழைத்த தன்மைதனைச் சாற்றுவாம்.

874. சொல்லின் உட்பொருளாய்க் கலந்துள்ள சுந்தர பாண்டியனாகிய இறைவன், அக்குண்டோதரனின் பாடலைக் கேட்டு, இன்பம் எய்தி, பூதகணங்களுக்குத் தலைமையாம் உரிமையை மீண்டும் தந்தருளினான். கயல் போன்ற கண்ணையுடைய பிராட்டியோடு பெருமையுடைய கடலால் சூழப்பட்ட நிலவுலகை ஆட்சி புரிந்து செங்கோல் முறை சிறப்புற, சுந்தரபாண்டியன் வீற்றிருந்தான்.

வையையின் பெயர்கள்

875. இறைவனது கொன்றை மாலையை உடைய சடையில் இருந்து இறங்கி வருவதால் 'சிவகங்கை' என்றும், இறைவனின் எட்டு வடிவங்களில் இதுவும் ஒன்று, என்று தெளிகின்றவர்களுக்கு ஞானத்தை அருளுவதால் 'சிவஞானதீர்த்தம்' என்றும், காற்றைப் போல விரைந்து வருகின்ற செய்கையாலே 'வேகவதி' ஆறு என்றும், மதுரையைச் சூழ்ந்து வருதலால் 'கிருத மலை' என்றும் வையை நதிக்குப் பெரியோர் பெயர் கூறுவார்கள்.

அன்னக்குழியும் வையையும் அழைத்த படலம் முற்றிற்று.

9. எழு கடலழைத்த படலம்

876. வளைந்த பிறையை உடைய முடியை மறைத்த மகுடத்தையுடைய சுந்தர பாண்டியன் குண்டோதரனுக்கு அன்னக் குழியையும் வையையையும் கருணையினாலே அழைத்த திருவிளை யாடல் இது. இது நரசிங்கத்தின் வலிமையைக் கவர்ந்த அச்சுந்தர பாண்டியன் காஞ்சன மாலை நீராடல் பொருட்டு ஒரு சேர ஏழு பெரிய கடலையும் அழைத்த திருவிளையாடலைக் கூறுவோம்.

877 ஓதவரும் பொருள்வழுதி யுருவாகி உலகமெலாஞ்
சீதளவெண் குடைநிழற்றி யறச்செங்கோல் செலுத்துநாள்
போதவரும் பொருளுணர்ந்த விருடிகளும் புனிதமுனி
மாதவரும் வரன்முறையாற் சந்தித்து வருகின்றார்.

878 வேதமுனி கோதமனுந் தலைப்பட்டு மீள்வானோர்
போதளவில் கற்புடைய பொன்மாலை மனைபுகுந்தான்
மாதவளும் வரவேற்று முகமன் உரை வழங்கிப்பொன்
ஆதனமிட்ட டஞ்சலிசெய் தரியதவத் திறங்கேட்பாள்.

879 கள்ளவிளைப் பொறிகடந்து கரைகடந்த மறைச்சென்னி
உள்ளபொருள் பரசிவமென் றுணர்ந்தபெருந் தகையடிகேள்
தள்ளரிய பவமகற்றுந் தவமருள்செய் கெனக்கருணை
வெள்ளமென முகமலர்ந்து முனிவேந்தன் விளம்புமால்.

880 தவவலியான் உலகீன்ற தடாதகைக்குத் தாயானாய்
சிவபெருமான் மருகனெனுஞ் சீர்பெற்றாய் திறன்மலயத்
துவசனருங் கற்புடையாய் நீயறியாத் தொல்விரதம்
அவனியிடத் தெவரறிவா ரானாலு மியம்பக்கேள்.

காஞ்சன மாலையும் கௌதம முனிவரும்

877. சொல்லுதற்கரிய உண்மைப் பொருளான சோமசுந்தரக் கடவுள், சுந்தர பாண்டியனாகி, இவ்வுலகமனைத் தையும் தன் குளிர்ந்த குடையால் காத்துச் செங்கோல் செலுத்தி வரும் நாளில் ஞான நூலின் அரிய பொருளை உணர்ந்த முனிவர்களும், தூய தவப்பெரியவரும், வரன் முறைப்படி அப்பாண்டிய மன்னனைச் சந்தித்து வருகின்றார்கள்.

878. வேத முனிவனாகிய கௌதமனும் சந்தித்துத் திரும்புகின்றான். அப்போது ஒரு நாள், அளவில்லாத கற்புடைய காஞ்சன மாலையின் மனையின் கண் சென்றான். அக்காஞ்சன மாலையும் அம்முனிவனின் வருகையை அறிந்து, எதிர் கொண்டு உபசார மொழிகள் கூறி, பொன்னாசனம் இட்டு அதில் அமரச் செய்து வணங்கி அறத்தின் பாகுபாடுகளைக் கேட்கின்றாள்.

879. ''வஞ்சனையுடைய ஐந்து பொறிகளைக்கடந்து, அளவு கடந்த மறை முடிவில் உள்ள பொருள் பரசிவமே என்று தெளிந்த பெரிய தகுதியை உடைய அடிகளே! 'பிறவியை நீக்கும் வலிமையுடைய தவத்தினைக் கூறி அருள்க'' என்று கேட்க, கருணை வெள்ளம் போல முக மலர்ச்சியுடையவனாய்க் கோதமன் கூறுகின்றான்.

தவச்செயல்கள்

880. ''வெற்றி மிக்க மலையத்துவசப் பாண்டியனுக்கு வாழ்க்கைத் துணையாகிய அரிய கற்பினை உடைய பொன்மாலையே! நீ செய்த தவத்தின் பயனால் உலகங்களை யெல்லாம் பெற்று அருள் செய்த தடாதகைப் பிராட்டியாருக்குத் தாய் ஆனாய். சிவபெருமான் உனக்கு மருமகன் என்னும் கூற்றிற்குரிய தகுதியினைப் பெற்றாய். அதனால் நீ அறியாத பழைய விரதங்களை இவ்வுலகின்கண் அறிபவர் வேறு யார்? அப்படி இருப்பினும் நீ கேட்டமையால் நான் சொல்லக் கேட்பாயாக!

881 மானதமே வாசிகமே காயிகமே யெனவகுத்த
ஈனமில்சீர்த் தவமூன்றாம் இவற்றின்மா னதந்தரும
தானமிசை மதிவைத்தல் தயவுபொறை மெய்சிவனை
மோனமுறத் தியானித்த லைந்தடக்கல் முதலனந்தம்.

882 வாசிகமைந் தொழுத்தோதல் மனுப்பஞ்ச சாந்திமறை
பேசுசத வுருத்திரந் தோத் திரமுரைத்தல் பெருந்தருமம்
காசகல வெடுத்தோதன் முதலனந்தங் காயிகங்கள்
ஈசனருச் சனை கோயில் வலஞ்செய்கை யெதிர்வணங்கல்.

883 நிருத்தனுறை பதிபலப்போய்ப் பணிதல் பணி நிறைவேற்றல்
திருத்தன்முடி நதியாதி தீர்த்தயாத் திரைபோய்மெய்
வருத்தமுற வாடலிவை முதற்பலவவ் வகைமூன்றிற்
பொருத்தமுறு காயிகங்கள் சிறந்தனவிப் புண்ணியத்துள்.

884 திருத்தயாத் திரையதிகம் அவற்றதிகஞ் சிவனுருவாந்
திருத்தமாங் கங்கை முதல் திருநதிக டனித்தனி போய்த்
திருத்தமா டுவதரிதத் திருநதிக டனித்தனிபோய்த்
திருத்தமாய் நிறைதலினால் அவற்றதிகந் திரைமுந்நீர்.

881. ''நூல்களில் கூறப்பட்ட குற்றமில்லாத சிறப்பினை யுடைய தவம், மானதம் எனவும், வாசிகம் எனவும், காயகம் எனவும் மூன்று வகைப்படும். இம்மூன்றில் மானதம் மனத்தாற் செய்யப்படுவன. தருமமும் தானமும் செய்வதில் கருத்து வைத்தல், பிற உயிர்களுக்கு இரங்கல், பொறுமை காத்தல், உண்மை கூறல், மௌன நிலை பொருந்த இறைவனைச் சிந்தித்தல், ஐந்து பொறிகளை அடக்கி ஆளுதல் முதலாக இவை அளவில்லாதனவாம்'' என்றான் கௌதமன்.

882. மேலும் ''வாக்கால் செய்யப்படுவன திருஐந்தெழுத்தை உச்சரித்தலும், பஞ்ச பிரம மந்திரங்களையும் உபநிடதப் பகுதிகளையும் வேதம் கூறும் சத உருத்திர மந்திரங்களை ஓதுதலும் துதிப்பாடல்களைக் கூறுதலும், பெரிய அறங்களை எடுத்துக் கூறுதலும், முதலாக அளவில்லாதனவாம். சிவபெருமானைப் பூசனை செய்தலும், திருக்கோயிலை வலம்வருதலும், இறைவனை வணங்கலும் உடலால் செய்யப்படுவன ஆகும்.

883. சிவபெருமான் உறையும் பல திருக்கோயில்கட்குச் சென்று வணங்கலும், திருப்பணி செய்தலும், கங்கை போன்ற நதிகட்குச் சென்று நீராடலும், ஆகிய இவை முதலாகப் பலவாம். இவ்வகை மூன்றில் உடலால் செய்யப்படும் அறங்களே புண்ணியங்கள் மிக்க சிறந்த அறமாகும்.

884. தீர்த்தங்களில் சென்று நீராடுவது சிறந்தது. அவ்வகைத் தீர்த்தங்களில் கங்கை முதலிய நதிகளுக்குத் தனித்தனியே சென்று நீராடுவது மேன்மையுடையது. அவ்வழகிய நதிகள் சென்று கலப்பதினால் அந்நதிகளில் நீராடுவதை விட அலைகளையுடைய கடலில் ஆடுவது சிறப்புடையது.

885 என்றுமுனி விளம்பக்கேட் டிருந்தகாஞ் சனமாலை
துன்றுதிரைக் கடலாடக் துணிவுடைய விருப்பினளாய்த்
தன்றிருமா மகட்குரைத்தாள் சிறிதுள்ளந் தளர்வெய்திச்
சென்றிறைவற் குரைப்பலெனச் செழியர்தவக்
கொழுந்தனையாள்.

886 தன்றன்னை யுடையபெருந் தகைவேந்தர் பெருமான்முன்
சென்றன்ன மெனநின்று செப்புவாள் குறள்வீரற்
கன்றன்னக் குழியினொடும் ஆறழைத்த வருட்கடலே
இன்றன்னை கடலாட வேண்டினாள் என்றிரந்தாள்.

887 தேவி திருமொழிகேட்டுத் தென்னவராய் நிலம்புரக்குங்
காவிதிகழ் மணிகண்டர் கடலொன்றோ வெழுகடலுங்
கூவிவர வழைத்துமென உன்னினார் குணபாலோர்
வாவியிடை யெழுவேறு வண்ணமொடும் வருவனவால்.

888 துண்டமதித் திரளனைய சுரிவளைவாய் விடஉதைத்து
வெண்டவள நுரைததும்பச் சுறாவேறு மிசைக்கொட்பத்
தண்டரள மணித்தொகுதி எடுத்தெறியுந் தரங்கநிரை
அண்டநெடு முகடுரிஞ்ச ஆர்த்தெழுந்த கடலேழும்.

பிராட்டியார் இறைவனை வேண்டுதல்

885. என்று கௌதம முனிவன் சொல்லக் கேட்டக் காஞ்சன மாலை, நெருங்கிய அலைகளை உடைய கடலில் ஆடுவதற்கு மிகுந்த விருப்பம் உடையவளானாள். தடாதகைப் பிராட்டியார் சிறிது உள்ளம் தளர்ந்து, ''இறைவனுக்கு இதனைக் கூறுவேன்!'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

886. தன்னை மனைவியாக உடைய பெரிய தகுதியை யுடைய பெருமானாகிய சுந்தர பாண்டியரின் திரு முன்னர் சென்று அன்னக் குழியையும் வையையும் அழைத்துத் தந்த அருட் கடலே! இப்போது என் தாய் கடலில் சென்று நீராட விரும்பினாள்'' என்று சொல்லி வேண்டி நின்றார்.

இறைவர் ஏழுகடலையும் அழைத்தல்

887. தேவியாரின் திருவார்த்தையைக் கேட்டு, தென்னவராய் இந்நிலவுலகைக் காக்கும் நீல மலர் போன்ற அழகிய மிடற்றினையுடைய இறைவர் ''ஒரு கடல் மாத்திரமோ? ஏழு கடலும் கூவி வரவழைப்போம்'' என்று கூறி, அவை வருமாறு நினைத்தார். கீழ்ப்பால் உள்ள ஒரு வாவியிடத்தே ஏழுவகைப் பட்ட நிறங்களோடு உடனே அவை வந்து நின்றன.

888. சந்திரனது துண்டத்தின் தொகுதிபோல சுரித்த முகத்தினை உடைய சங்குகள் வாய்விட்டு ஒலிக்குமாறு தள்ளி நுரை ததும்ப, ஆண் சுறா மீன்கள் மேலே சுழலவும், குளிர்ந்த முத்துக்களை எடுத்து வீசுகின்ற அலை வரிசைகள் அண்டத்தின் நெடியமுகத்தினைத் தடவவும் ஏழுகடல்களும் ஆரவாரம் செய்து எழுந்தன.

889 காணுமா நகர்பனிப்பக் கலிமுடிவின் அயன்படைப்புக்
கோணுமா றெழுந்ததெனக் கொதித்தெழுந்த கடலரவம்
பூணுநா யகனகில புவனமெலாங் கடந்ததிரு
ஆணையா லவனடிசென் றடைந்தாற்போ லடங்கியதால்.

890 தன்வண்ணம் எழுகடலின் றனிவண்ண மொடுகலந்து
பொன்வண்ண நறும்பொகுட்டுப் பூம்பொய்கை பொலிவெய்தி
மின்வண்ணச் சடைதாழ வெள்ளிமணி மன்றாடும்
மன்வண்ண மெனவெட்டு வண்ணமொடும் வயங்கியதால்.

எழுகடலழைத்த படலம் முற்றிற்று.

10. மலயத்துவசனை அழைத்த படலம்

891 எழுகடல் அழைத்தவா றியம்பி னாமினிச்
செழுமதி மரபினோன் சேணி ழிந்துதன்
பழுதில்கற் பில்லொடும் பரவை தோய்ந்தரன்
அழகிய திருவுரு வடைந்த தோதுவாம்.

892 புரவலன் றடாதகைப் பூவை யோடும்வந்
துரவுநீர்க் கடன்மருங் குடுத்த சந்தனம்
மரவமந் தாரமா வகுளம் பாடலம்
விரவுநந் தனத்தரி யணையின் மேவினான்.

889. அக்கடல்களின் வரவைக் கண்ட மதுரை நகர மக்கள் நடுங்கினர். கலியுக முடிவின் போது பிறப்புக் கடவுளான பிரம்மனின் படைப்புகள் அழியுமாறு எழுதல் போலப் பொங்கி எழுந்த ஏழு கடல்களும், பாம்பினை அணிந்த சிவபெருமானது எல்லாப் புவனங்களையும் கீழ்ப்படுத்திய திரு ஆணையினாலோ அவ்விறைவன் திருவடியைச் சென்று அடைந்தாற்போல அடங்கின.

890. பொன் வண்ணம் உடைய மொட்டுகளை உடைய தாமரைகள் நிறைந்த அவ்வாவியானது தன் வண்ணத்தோடு ஏழு கடலின் வண்ணமும் கலந்து பொலிவுற்றது. மின்னல் போன்ற நிறமுடைய சடைகள் தாழ அழகிய வெள்ளியம்பலத்துள் ஆடுகின்ற சிவ பெருமானது எட்டு வகை வண்ணங்கள் போல விளங்கியது.

ஏழு கடலழைத்த படலம் முற்றிற்று.

10. மலயத்துவசனை அழைத்த படலம்

891. ஏழுகடலையும் அழைத்த திருவிளையாடலைக் கூறினோம். இனிமேல், குளிர்ந்த சந்திரனது குலத்தில் வந்த மலையத்துவசப் பாண்டியன் வான் உலகில் இருந்து இறங்கி, தன் மனைவியோடும் கடலில் நீராடிச் சிவபெருமானது அழகிய திருவுருவத்தைப் பெற்ற திருவிளையாடலைக் கூறுவோம்.

892. இறைவன் தடாதகைப் பிராட்டியாராகிய பூவையோடு வந்து, வலிய நீரினையுடைய ஏழுகடல் வாவியின் அருகில் சூழ்ந்த, சந்தன மரமும், மாமரமும் மந்தாரை மரமும், மரவமரமும், பாதிரி மரமும் கலந்து நெருங்கிய நந்தவனத்தின் கண் உள்ள சிங்காதனத்தில் அமர்ந்தருளினான்.

893 தாதவிழ் மல்லிகை முல்லை சண்பகப்
போதுகொய் திளையருஞ் சேடிப் பொற்றொடி
மாதருங் கொடுத்திட வாங்கி மோந்துயிர்த்
தாதர மிரண்டற வமரும் எல்லையில்

894 தன்னமர் காதலி தன்னை நோக்கியே
மன்னவன் உன்பொருட் டேழு வாரியும்
இந்நக ரழைத்தனம் ஈண்டுப் போந்துநின்
அன்னையை யாடுவா னழைத்தி யாலென.

895 மடந்தையும் அன்னையைக் கொணர்ந்து வாவிமா
டடைந்தன ளாகமற் றவள்பு ராணநூற்
படர்ந்தகேள் வியர்தமை நோக்கிப் பௌவநீர்
குடைந்திடும் விதிஎவன் கூறு மென்னவே.

896 கோதறு கற்பினாய் கொழுநன் கைத்தலங்
காதலன் கைத்தலம் அன்றிக் கன்றின் வால்
ஆதலிம் மூன்றிலொன் றங்கை பற்றியே
ஓதநீ ராடுதன் மரபென் றோதினார்.

897 மறையவர் வாய்மைபொன் மாலை கேட்டுமேற்
குறைவறத் தவஞ்செயாக் கொடிய பாவியேற்கு
இறைவனுஞ் சிறுவனும் இல்லை யேயினிப்
பெறுவது கன்றலாற் பிறிதுண் டாகுமோ.

893. மகரந்தம் நிறைந்த மல்லிகை மலரையும், முல்லை மலரையும், சண்பக மலரையும் பணியாளரும் பணிப் பெண்களும் பறித்துக் கொடுக்க அம்மலரை வாங்கி மோர்ந்து சுவாசித்து இருவர் அன்பும் ஒன்றாகக் கலந்து எழுந்தருளி இருந்தனர்.

894. சுந்தரபாண்டியன் தான் விரும்பும் காதலியான பிராட்டியாரைப் பார்த்து, ''உன்பொருட்டு ஏழுகடலையும் இந்நகருக்கு அழைத்தோம். இங்கு வந்து கடலாடுவதற்கு உன் தாயை அழைப்பாயாக'' என்றார்.

பிராட்டியார் தன் அன்னையை அழைத்தல்

895. பிராட்டியாரும் அன்னையைக் கொணர்ந்து பொய்கையின் பக்கத்தே அடைந்தனராக, அவ்வன்னையானவள் புராணம் முதலிய நூல்களில் சிறந்த அறிவுடைய் முனிவர்களை நோக்கி ''நீராடுவதற்குரிய விதி யாது கூறுவீராக.'' என்று கேட்டார்.

896. ''குற்றமற்ற கற்பினையுடைய காஞ்சனை மாலையே! நாயகன் கையும், புதல்வன் கையும், அல்லாமல் ஆனினது கன்றின் வாலும் ஆகிய இம் மூன்றில் ஒன்றனையாவது அழகிய கையால் பிடித்துக் கொண்டே நீராடுதல் மரபு'' என்று அம்முனிவர் கூறினார்.

897. அந்தணர்களின் மெய் மொழியைக் காஞ்சனை மாலை கேட்டு ''முற்பிறப்பில் குறைவில்லாமல் தவம் செய்யாத கொடிய பாவியாகிய எனக்குக் கணவனும் புதல்வனும் இல்லையே, இனி நான் பெறுவது கன்றின் வாலல்லாமல் வேறுளதோ?'' என்றாள்.

898 ஆதலாற் கன்றின்வால் பற்றி யாடுகோ
மாதராய் என்றுதன் மகட்குக் கூறலும்
வேதன்மால் பதவியும் வேண்டி னார்க்கருள்
நாதனா ருயிர்த்துணை யாய நாயகி.

899 தன்னுயிர்க் கிழவனை யடைந்து தாழ்ந்துதன்
அன்னைதன் குறையுரை யாட ஆண்டகை
மன்னவன் வலாரியோ டொருங்கு வைகிய
தென்னவன் மேன்மனஞ் செலுத்தி னானரோ.

வேறு

900 சிலையைத் திரியார் திருவுள் ளமுணர்ந்
தலையத் திரியட் டவனா தனநீத்
துலையத் திரி யொத் தவிமா னமொடு
மலையத் துவசச் செழியன் வருமால்.

901 மண்பே றடைவான் வருமேழ் கடல்வாய்
எண்பே றடையா வருளின் னமுதைப்
பெண்பே றதனாற் பெறுபே றிதெனாக்
கண்பே றடைவான் எதிர்கண் டனனே.

902 வந்தான் மருகன் சரணம் பணிவான்
முந்தா முனமா மனெனும் முறையால்
அந்தா மரையங் கையமைத் துமகள்
தந்தா னையெதிர்ந் துதழீஇ யினனால்.

903 ஆத்தன் றிருவுள் ளமகிழ்ந் தருளாற்
பார்த்தன் புநிரம் பியபன் னியொடுந்
தீர்த்தம் புகுந்தா டியசெல் கவெனப்
பூத்தண் பொருநைப் புனனா டவனும்.

காஞ்சனமாலை வருத்தம்

898. ''எனவே கன்றின் வாலைப் பற்றியே நீராடுவேன்'' என்று தன் மகளுக்குச் சொல்லிய அளவில், பிரமன் பதவியும் திருமால் பதவியும் வேண்டியவர்க்குக் கொடுக்கும் தலைவரான சிவபெருமானுக்குத் துணைவியராகிய பிராட்டியார் தம் கணவரிடம் சென்றார்.

899. தம் கணவரை அடைந்து, வணங்கித் தன்னுடைய தாயின் குறையைக் கூறவும், ஆண் தன்மையுடைய அரசனாகிய அச்சுந்தரபாண்டியன் 'இந்திரனோடு ஒப்புமைப்பட எண்ணத்தக்க மலயத்துவசப் பாண்டியன் மேல்' மனம் செலுத்தினார்.

மலயத்துவசப் பாண்டியன் வருகை

900. மேருமலையை வில்லாக உடைய இறைவனது திருவுள்ளத்தினை அறிந்து, பறக்கின்ற மலைகளை வென்ற இந்திரனுடைய செல்வத்தை, விடுத்து விரைகின்ற மலை போன்ற விமானத்தில் ஏறி மலையத்துவசன் வருகின்றான்.

901. நிலவுலகில் உள்ளோர் பயன் அடைய வந்த ஏழு கடல் வாவியினிடத்து, அளவற்ற அருள் அமுதாகிய தன் மருமகனை, 'பெண் பெற்றதால் பெற்ற பயன் இது' என்று கண்கள் தன் பயனைப் பெறுமாறு பாண்டியன் இறைவனைக் கண்டான்.

902. அங்ஙனம் கண்டு வந்த மலயத்துவசப்பாண்டியன் மருமகனுடைய திருவடிகளை வணங்க முற்படுமுன்னே, மாமன் என்ற முறைமையால், அழகிய தாமரை மலர் போன்ற தம் கைகளால் தடுத்து, மகள் தந்த அப்பாண்டியனைத் தழுவினார்.

903. இறைவனாகிய சுந்தரபாண்டியன் உள்ளம் மகிழ்ந்து அருளால் நோக்கி, ''அன்பு நிறைந்த மனைவியோடு, தீர்த்தத்தில் ஆழ்ந்து நீராடுங்கள்'' என்று கட்டளை இட, பொருநையாற்றின் நீர்வளம் மிக்க பாண்டிய நாட்டையுடைய மலயத்துவசன், (அடுத்த பாடலுடன் முடிசிறது.)

904 முன்னைத் தவெமய் திமுயன்றுபெறும்
அன்னப் பெடையன் னவள்வந் தெதிரே
தன்னைத் தழுவத் தழுவிக் கிரிவேந்
தென்னக் குறையா மகிழ்வெய் தினனே.

905 தண்டேன் மொழிவேள் விதவக் குறையாற்
கண்டேன் இலனென் றுகருத் தவலம்
உண்டே யஃதிவ் வுவகைக் களிதேன்
வண்டே யெனவுண் டுமறந் தனனால்.

906 சேணுற் றவனைச் சிலநாள் கழியக்
காணுற் றவள்போ னிறைகற் புடையாள்
பூணுற் றுமலர்ந் ததொர்பொற் கொடிபோல்
நாணுற்று எதிர்நண் ணியிறைஞ் சினளால்.

907 மஞ்சோ தியகாஞ் சனமா லைகையிற்
பைஞ்சோ திவிளங் குபவித் திரையாய்ச்
செஞ்சோ திமுடிச் சிவநா மவெழுத்
தஞ்சோ திநெடுங் கடல்ஆ டுமரோ.

908 துங்கக் கலைவே தியர்தொன் மறைநூற்
சங்கற் பவிதிப் படிதன் றுணைகை
அங்கைக் தளிர்பற் றியகத் துவகை
பொங்கப் புணரிப் புனல்ஆ டினளே.

909 குடைந்தார் கரையே றினர்கொன் றைமுடி
மிடைந்தார் கருணைக் கண்விழிக் கமலம்
உடைந்தா ரனைமா ருதரங் குறுகா
தடைந்தார் உமைபா கரருட் படிவம்.

904. சென்ற பிறவியில் தவம் செய்து அரிதாகப் பெற்ற அன்னம் போன்ற பிராட்டியார் எதிரில் வந்து தன்னைத் தழுவ, தானம் தழுவி, மலையரையனைப் போல குறையாத மகிழ்ச்சியை அடைந்தான்.

905. "தேன்போலும் மொழியினையுடைய பிராட்டியாரின், திருமணக் கோலத்தைத் தவக்குறைவினால் காணும் பேற்றை நான் அடையவில்லை என்று என் உள்ளத்தில் கவலை உண்டு. அதனை இம்மகிழ்ச்சியாகிய களிப்பைத் தரும் மதுவை வண்டு போலப் பருகி மறந்தனன்," என்று இருவரும் உடனிருந்த திருக்கோலத்தைக் கண்டதனால் மொழிந்தான்.

906. தூரத்தில் சென்ற தலைவனைச் சிலநாள் கழித்துக் கண்ட தலைவியைப் போல, நிறைந்த கற்புடைய காஞ்சனமாலை மங்கல நாண் முதலிய அணிகலன்களை அணிந்து, பொற்கொடி போல எதிரே சென்று நாணமடைந்து வணங்கினாள்.

மலயத்துவசன் காஞ்சனமாலை கடலாடுதல்

907. முகில் போன்ற கூந்தலையுடைய காஞ்சனமாலை, கையில் ஒளி விளங்கும் பவித்திரத்தை உடையவளாய், சிவந்த ஒளியையும் சடைமுடியையும் உடைய சிவபெருமானுடைய திருநாமமாகிய ஐந்தெழுத்தைச் செபித்து நெடிய கடலில் மூழ்கத் தொடங்கினாள்.

908. உயர்ந்த கலைகளை ஓதிய அந்தணர் கூறிய பழைய வேதங்களின் முறைப்படி, தன் நாயகன் கையைத் தம் தளிர் போன்ற கைகளால் பற்றி, மனத்தின்கண் மகிழ்வு மேலோங்கக் கடல் நீரினில் ஆடினாள்.

909. நீராடிக் கரையை ஏறியவராகிய காஞ்சன மாலையும், மலயத்துவசப் பாண்டியனும், கொன்றை மாலையை அணிந்த சுந்தரேசர் திருவருள் நோக்கினால் பாசம் ஒழிந்தவர்களாய் மீண்டும் பிறப்பு உண்டாகாமல் உமையொரு பாகரது கருணை வடிவினைப் பெற்றார்கள்.

910 ஒண்கொண் டல்மிடற் றொளியும் மொருநால்
எண்கொண் டபுயத் தெழிலும் அழல்சேர்
கண்கொண் டநுதற் கவினும் பொலியா
மண்கண் டுவியப் பவயங் கினரால்.

911 விண்ணின் றுவழுக் கிவிழுங் கதிர்போற்
கண்ணின் றநுதற் கருணா கரன்வாழ்
எண்ணின் றபுரத் தினிழிந் திமையா
மண்ணின் றதொர்தெய் வவிமா னமரோ.

912 அத்தெய் வவிமா னமடுத் திடலும்
முத்தெய் வதமுக் கணவன் பணியால்
நத் தெய் வதருக் கரனங் கையொடும்
எத்தெய் வதமுந் தொழவே றினனால்.

913 தேமா ரியெனும் படிசிந் தநறும்
பூமா ரிபொழிந் ததுபொன் னுலகம்
தூமா மறையந் தரதுந் துபிகார்
ஆமாம் எனஎங் குமதிர்ந் தனவால்.

வேறு

914 எழுந்தது விமானம் வானம் எழுந்ததுந் துபியு நாணி
விழுந்தது போலு மென்ன அரவொலி யெங்கும் விம்மத்
தொழுந்தகை முனிவ ரேத்தச் சுராதிகள் பரவத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்தர் கோநகர் குறித்துச் செல்வார்.

910. இறைவர், ஒள்ளிய முகில் போன்ற திருமிடற்றின் ஒளியும், நான்கு புயங்களின் எழிலும், நெருப்பினையுடைய நெற்றிக் கண்ணின் அழகும், ஆகிய இவைகளால் பொலிந்து இந்த மண்ணுலகத்தார் கண்டு வியக்குமாறு விளங்கினர்.

911. வானில் இருந்து வழுக்கிக் கீழே நிலமிசை விழுகின்ற சூரியனைப் போல, நிலைபெற்ற நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் சிவலோகத்திலிருந்து ஒரு தெய்வ விமானம் கீழே இறங்கி ஒளியோடு மண்ணுலகில் நின்றது.

912. அந்தத் தெய்வ விமானம் வந்தவுடன், மூன்று தெய்வங்களைத் தம் முக்கண்ணாக உடைய இறைவன் ஆணை யால் உயர்ந்த தெய்வத் தன்மையுடைய கற்பகத்தரு போன்ற கொடைத்தன்மை விளங்கும் கையையுடைய மலயத்துவசப் பாண்டியன் தன் மனைவியோடு எல்லாத் தெய்வங்களும் தன்னை வணங்க விமானத்தில் ஏறினான்.

தேவர்கள் மகிழ்வு

913. மண்ணுலகில் மழை என்று சொல்லத்தக்க அளவில் தேவலோகத்தார் பூமழை பொழிந்தனர். தூய பெரிய மறைகளும், தேவதுந்துபிகளும், மேகமுழக்கம் என்று சொல்லும் அளவிற்கு எங்கும் ஒலித்தன.

914. அத்தேவ லோகத்து விமானம் மேலே எழுந்தது. வானத்தில் உண்டான தேவ துந்துபிகளின் முழக்கம் வெட்கப்படும்படி 'அரகர' என்னும் முழக்கம் மிக்கு எங்கும் ஒலித்தது. எவரும் வணங்கும் தகுதியையுடைய முனிவர்கள் வாழ்த்தவும், தேவர் முதலியோர் துதிக்கவும், மதியின் கொழுந்தினை அணிந்த சிவபெருமானது சிவலோகத்தை நோக்கிச் செல்வாராயினர்.

915 முன்புதம் முருவாய் வைய முறைபுரி கோல்கைக் கொண்டு
பின்புதம் முருவந் தந்த மருகனும் பெருகு கேண்மை
அன்புதந் தருகு நின்ற தடாதகை யணங்கு மீண்டு
பொன்புனை குடுமிக் கோயில் புகுந்துநன் கிருப்பக் கண்டார்.

916 முன்னைவல் வினையால் யாக்கை முறைதடு மாறித் தோற்றம்
மன்னிய மனிதர் போலப் பண்டைய வடிவ மாறி
அன்னையே மகளா, வீன்ற வப்பனே மருக னாக
என்னயா நோற்றேம் யார்க்கு மியற்றருந் தவந்தா னென்னா

917 கன்றக லான்போ லையன் கனைகழல் விடாது பற்றி
ஒன்றிய வன்பு பின்னின் றீர்த்தெழ வுள்ளத் தோடுஞ்
சென்றிரு கண்ணு முட்டி யடிக்கடி திரும்பி நோக்கக்
குன்றுறழ் விமானத் தன்னை யஞ்சலி கூப்பிச் செல்வார்.

வேறு

918 புவலோகங் கடந்து போய்ப் புண்ணியருக் கெண்ணிறந்த
போகமூட்டுஞ்
சுவலோகங் கடந்துபோய் மகலோகஞ் சனலோகந்
துறந்து மேலைத்
தவலோகங் கடந்துபோய்ச் சத்தியலோ கங்கடந்து
தண்டு ழாயோன்
நவலோகங் கடந்துலக நாயகமாஞ் சிவலோக நண்ணினாரே.

915. முதலில் தம் வடிவமாகி, உலகினை ஆளும் செங்கோலைக் கையில் ஏற்றுக்கொண்டு பின் தன் வடிவத்தைக் கொடுத்து அருளிய மருமகன் ஆகிய சிவபெருமானும், மிக்க நட்போடு அன்பு செய்து அருகில் நின்ற தடாதகைப் பிராட்டியாரும் மீண்டும் தம்முடைய பொன்னாலான அரண்மனை சென்று இனிது வீற்றிருந்தார்கள்.

916. ''தொன்று தொட்டு வரும் வலிய வினையினால், உடம்பு முறைகள் தடுமாற்றம் அடைந்து பிறப்பினை உடைய மனிதர் போலப் பழைய திருவுருவம் மாறி, உலகங்களை ஈன்ற தாயே தம் புதல்வியாகவும், அப்பனே மருமகனாகவும், வந்தருளுமாறு எவரும் செய்யாத தவங்களுள் என்ன தவத்தினைச் செய்தோமோ!,'' என்று கருதினர்.

917. கன்றினை நீங்கிய பசு திரும்பிப் பார்த்தல் போல, இறைவனது திருவடிகளை விடாதுபற்றிக் கலந்த அன்பானது, பின்னே நின்று இழுத்தலால், தம் உள்ளத்தோடும் இரண்டு கண்களும் சென்று நெருங்கி அடிக்கடி திரும்பிப் பார்க்க, மலையைப் போன்ற விமானத்தைக் கை கூப்பி அனைவரும் வணங்கி நின்றனர்.

இருவரும் சிவபுரம் சேர்தல்

918. பூலோகத்தைக் கடந்து சென்று, அறம் செய்தவர் களுக்கு அளவில்லாத இன்பத்தை நல்கும் சொர்க்கலோகத்தையும் கடந்து சென்று, மகாலோகத்தையும் சனலோகத்தையும் கடந்து, அதற்கு மேல் உள்ள தவலோகத்தையும் கடந்து சென்று சத்திய லோகத்தைக் கடந்து திருமாலின் நவலோகத்தையும் கடந்து உலகங்களுக்கெல்லாம் தலைமையாகிய சிவலோகத்தை அடைந்தனர்.

919 அறக்கொடியின் னிறைமகனை யடிபணிந்து தனையீன்றாக் காதிவேத
மறைப் பொருடன் வடிவளித்த வருளின் மன நிறைமகிழ்ச்சி வாய்கொள்ளாமற்
புறப்படுவ தெனவிரண்டு திருச்செவிக்குஞ் செங்குமுதம் பொதிந்த தீந்தேன்
நிறைப்பதெனப் பன்முறையால் துதிசெய்து தொழுதொன்று நிகழ்த்தா நின்றாள்.

920 எண்ணிறந்த தேவர்க்கும் யாவர்க்கும் பயன்சுரக்கு மிமையோர் நாட்டுப்
புண்ணியவான் றன் புனிற்றுக் கன்றுக்குக் குறைவே தென்பொருட்டென்னீன் றாள்
எண்ணியது கடலொன்றே யெழுகடலு மீண்டழைத்தா யீன்றா ளாட
விண்ணிருந்த கணவனையும் விளித்துனருள் வடிவளித்துன் மேனாடு ஈந்தாய்.

921 தென்னர்மர பிறந்ததெனப் படுபழியிலாழவருஞ் செவ்வி நோக்கிப்
பொன்னவிர்தார் முடிபுனைந்து கோலோச்சி வருகின்றாய் போலு மேலும்
இந்நிலைமைக் கிடையூறு மினியின்றே யெனத்தலைவி யியம்ப லோடுந்
தன்னிறைவி யுட்கோளை யகங்கொண்டு மகிழ்ந்திருந்தான் தமிழர் கோமான்.

மலைத்துவசனை அழைத்த படலம் முற்றிற்று.

11. உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம்.

922 மன்ன வன்குல சேகரன் திருமகன் மனைவி
தன்னொ டுங்கட லாடிய தகுதியீ தந்தத்
தென்ன வன்தனித் திருமக டிருவுளங் களிப்ப
உன்ன ருந்திற லுக்கிரன் உதித்தவா றுரைப்பாம்.

919. தருமத்தாயாகிய பிராட்டியார் தம் தலைவனை வணங்கி, தம்மைப் பெற்றவர்க்குப் பெருமான் தன் சாரூபத்தைக் கொடுத்தருளிய கருணை பற்றி, உள்ளத்துள் நிறைந்த மகிழ்ச்சியானது வாயுள் அடங்காது வெளிப்படுகின்றது என்று எண்ணும்படி, இரண்டு திருச்செவிகளிலும் பன்முறையால் துதிசெய்து வணங்கி ஒன்று கூறுகின்றார்.

920. ''அளவில்லாத தேவர்க்கும், மற்றுள்ளார் பலருக்கும், வேண்டிய பயன் தரும், தேவலோகத்துப் புண்ணிய வடிவமான காமதேனுவின் இளங்கன்றுக்குக் குறைவு ஏது? அதுபோல் நின்னை அடுத்த எனக்கும் ஒரு குற்றமும் இல்லை. என்தாய் நீராட எண்ணியது ஒரு கடலே ஆகும். என் பொருட்டு ஏழு கடலையும் இங்கு அழைத்தீர்! அவள் நீராடுவதற்கு வானுலகத்தில் இருந்த அவள் நாயகனையும் அழைத்து உன் கருணை உருவத்தையும் தந்து உனது மேலான சிவலோகத்தையும் கொடுத்தருளினாய்.

921. பாண்டியர் குலம் ஒழிந்ததென்று சொல்லப்படும் பழியில் அழுந்த வரும் காலத்தை நோக்கி, பொன்னால் செய்யப்பட்டு விளங்கும் மாலையை அணிந்த முடியினைச் சூடி செங்கோல் செலுத்தி வருகின்றாய் போலும். இனி மேலும் இந்நிலைக்கு இடையூறு இல்லையே?'' என்று பிராட்டியார் விண்ணப்பித்த அளவில், பாண்டியர் தலைவனாகிய இறைவன் தன் நாயகியின் உள்ளக் கருத்தைத் திருவுள்ளத்தில் கொண்டு மகிழ்ச்சியுற்றிருந்தார்.

மலயத்துவசனை அழைத்த படலம் முற்றிற்று.

11. உக்கிர பாண்டியன் திருவவதாரப் படலம்

922. குலசேகரப் பாண்டியனுடைய சிறந்த புதல்வனாகிய மலயத்துவசப் பாண்டியன் தன் மனைவியோடும் கடலாடிய திருவிளையாடல் இது. அம்மலயத்துவச பாண்டியனுக்கு ஒப்பற்ற திருமகளாகிய தடாதகைப் பிராட்டியார் திருவுள்ளம் மகிழ நினைத்தற்கரிய வெற்றியையுடைய உக்கிரகுமார பாண்டியன் அவதரித்த திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

வேறு

923 தண்ணிலா மௌலி வேய்ந்த சுந்தர சாமி ஞாலத்
தெண்ணிலா வைகல் தன்ன திணையடி நிழல்போல் யார்க்குந்
தெண்ணிலாக் கவிகை நீழல் செய்தருட் செங்கோல் ஓச்சி
உண்ணிலா உயிர்தா னாகி முறைபுரிந் தொழுகு நாளில்.

924 கரியவன் கமலச் செம்மன் மறைமுதற் கலைகள் காண்டற்
கரியவன் அன்பர்க் கென்று மெளியவ னாகு மேன்மை
தெரியவன் பகன்ற சிந்தைத் தென்னவன் றனக்குங் கற்பிற்கு
உரியவ டனக்குங் காதன் மகளென வுமையைத் தந்தான்.

925 மற்றநற் கிசையத் தானு மருமக னாகி வைய
முற்றும்வெண் குடைக்கீழ் வைக முறைசெய்தா னாக மூன்று
கொற்றவர் தம்மிற் றிங்கட் கோக்குடி விழுப்பம் எய்தப்
பெற்றது போலும் இன்னும் பெறுவதோர் குறைவு தீர்ப்பான்.

926 ஒன்றினைச் செய்கைசெய்யா தொழிகை வே றொன்று செய்கை
என்றிவை யுடையோன் ஆதி யீறிலாப் பரம யோகி
நன்றுதீ திகழ்ச்சிவேட்கை நட்பிகல் விளைக்கு மாயை
வென்றவன் செய்யு மாயை விருத்தியா ரளக்க வல்லார்.

பாண்டியன் குலம் மேன்மை பெறக் காரணம்

923. பிறையைச் சடையில் சூடிய சுந்தரபாண்டியனாகிய இறைவன் நிலவுலகில் அளவில்லாத காலம் தன்னுடைய திருவடிகளைப் போல அனைவர்க்கும் தெளிந்த ஒளியையுடைய வெண்கொற்றக் குடையால் நிழல் செய்து கருணையுடன் செங்கோல் செலுத்தி உள்ளே விளங்கும் உயிர் தானேயாகி முறைசெய்து வந்தார்.

924. திருமாலும், பிரமனும், வேதம் முதலிய கலைகளும் காணுதற்கு அரியவனும், எப்போதும் அன்பர்களுக்கு எளியவனுமாகிய தன்னுடைய பெருமையை அனைவரும் அறியுமாறு இறைவன், மலயத்துவசப் பாண்டியனுக்கும், காஞ்சனமாலைக்கும் உமாதேவியைப் புதல்வி ஆகுமாறு அருளினார்.

925. அதற்கு ஏற்பத் தானும் மருமகனாகி, இவ்வுலகம் முழுவதையும் சிறப்புடைய வெண்கொற்றக் குடையின் அருளால் ஆட்சி புரிந்து வருதலால், சேர, சோழ பாண்டியர் என்ற மூன்று மன்னர்களில், சந்திரகுலத்தைச் சேர்ந்த பாண்டியரது குலம் மிகவும் மேன்மை அடைந்தது. அவ் இறைவனே இன்னமும் ஒரு மரபு பெற வேண்டும் என்று எண்ணினார்.

926. ஒன்றைச் செய்தலும், அதனைச் செய்யாது தவிர்த்தலும் மற்றொன்று செய்தலும், என இவற்றை உடைய வனும், முதலும் முடிவும் இல்லாத பரஞ்சோதியும், நன்மையும் தீமையும் வெறுப்பும் விருப்பும் நட்பும் பகையும் ஆகிய இவற்றை உண்டாக்குகின்ற மாயையை இயல்பாகவே வென்றவனாகிய சிவபெருமான் செய்கின்ற மாயையின் தன்மையை அளந்து காண வல்லமையுடையார் யார்?

927 இந்திர சால விச்சை காட்டுவான் என்னத் தன்பாற்
செந்தழ னாட்ட மீன்ற செல்வனைக் கருப்ப மெய்தா
தந்தமி லுயிரு ஞால மனைத்தையு மீன்ற தாயாஞ்
சுந்தரவல்லி தன்பால் தோன்றுமா றுள்ளஞ் செய்தான்.

928 அங்கவன் வரவுக் கேற்ப வாயமும் பிறருந் தாழ்ந்து
மங்கைநின் வடிவுக் கேற்பக் கருவுரு வனப்புஞ் சீருந்
திங்கடோ றாற்று மன்றற் செவ்வியுங் காண ஆசை
பொங்கிய தெங்கட் கென்றார் புனிதையப் படிபோல் ஆனாள்.

929 கருமணிச் சிகரப் செம்பொற் கனவரை யனைய காட்சித்
திருமுலை யமுதம் பெய்த செப்பிரண் டனைய வாக
வருமுலை சுமந்து மாய்ந்த மருங்குலும் வந்து தோன்ற
அருள்கனிந் தனையாள் நாவிற் கின்சுவை யார்வம் பொங்க.

930 என்னவும் எளிய வேனு மரியன என்ன வேட்டாள்
அன்னவும் போக பூமி யரும்பெற லுணவு நல்கிப்
பன்னக ரமுதுந் திங்கட் படுசுவை யமுதுந் தெய்வப்
பொன்னக ரமுது மாசை புதைபடக் கணங்க ணல்க.

931 புண்ணிய முனிவர் வேத பண்டிதர் போந்து வேந்தர்க்
கண்ணிய சடங்கு மூதூர் அருங்கடி வெள்ளத் தாழ
எண்ணிய திங்க டோறு மியற்றவிக் கன்னித் தேயம்
பண்ணிய தருமச் சார்பாற் படுபயன் தலைப்பா டெய்த

பிராட்டியார் கர்ப்பவதியாக விளங்குதல்

927. இந்திரசால வித்தை காட்டுபவன் போலத் தன்னிடம் உள்ள சிவந்த அனற்கண், தந்தருளிய செல்வனான முருகனை கர்ப்பம் உறாமல், அளவில்லாத உலகையும், உயிர்களையும் பெற்றளித்த அம்மையாகிய தடாதகைப் பிராட்டியாரிடத்தே தோன்றுமாறு திருவுள்ளத்தில் நினைத்தான்.

928. அங்கு அச்செல்வனின் வருகைக்கு ஏற்ப, பிராட்டியாரிடம் சென்று தோழிகளும் மற்றவர்களும் வணங்கி, ''பிராட்டியாரே! தங்களது உடலில் பொருத்தமாய் உண்டாகி யுள்ள கருப்பத்தின் தோற்றத்தையும், அழகையும் சிறப்பையும் மாதந்தோறும் செய்யும் திருவிழாப் பொலிவையும் காண எங்கட்கு ஆசை பொங்குகிறது'' என்றார். பிராட்டியாரும் அங்ஙனம் கர்ப்பவதி ஆயினார்.

929. சிவந்த பொன்போலும் மலை நிகர்த்த தோற்றத்தை யுடைய அழகிய தனங்கள், அமுதம் நிறைந்த இரண்டு செப்புகள் போலாகவும், வளர்கின்ற கொங்கைகளைச் சுமந்திருந்ததால் மறைந்திருந்த இடையானது வெளிப்பட்டுத் தோன்றும் படியாகவும், அருள் பழுத்தது போன்ற பிராட்டியாரின் நாவிற்கு இனிய சுவை ஓங்கியது.

930. புண்ணிய முனிவர்களும், மறையவர்களும் வந்து அசர மரபினர்களுக்குப் பொருந்திய சடங்குகளை, பழமையான மதுரைத் திருநகரில் நடைபெறும் திருவிழாவோ என்று எண்ணும்படி மாதந்தோறும் செய்து முடிக்க, இக்கன்னி நாடானது பல தர்மங்களை இயற்றியதால் உண்டாகும் பயனை அடைந்தது.

923 மாசறத் துறந்தோ ருள்ள மானவான் களங்க நீங்க
ஈசர்தங் கிழமை யென்னு மிந்துவா திரைநாட் செய்த
பூசையின் பயன்றான் எய்த எரிபசும் பொற்கோள் வந்து
தேசொடு கேந்திரத்திற் சிறந்தநல் லோரை வாய்ப்ப.

933 முந்தைநான் மறைக டாமே முழங்கமந் தார மாரி
சிந்தநாண் மலர்பூத் தாடு மின்னெனத் திசைக டோறும்
அந்தர மகளிர் ஆடத் துந்துபி யைந்து மார்ப்ப
விந்தையுந் திருவும் வெள்ளைக் கிழத்தியும் வீறு வாய்ப்ப.

934 அந்தணர் மகிழ்ச்சி தூங்க வடுத்தவர் வளர்க்கு முன்னர்
மந்திர வேள்விச் செந்தீ வலஞ்சுழித் தெழுந்தார்த் தாடச்
சிந்துர நுதன்மா எட்டுஞ் சேடனும் பொறையெய்ப் பாற
இந்திரன் மேருப் புத்தேள் புனலிறைக் கிடத்தோள் ஆட

935 ஆலத்தை யமுத மாக்கும் அண்ணலு மணங்குங் கொண்ட
கோலத்துக் கேற்பக் காலைக் குழந்தைவெங் கதிர்போ லற்றைக்
காலத்தி லுதித்த சேய்போற் கண்மழை பிலிற்று நிம்ப
மாலைத்தோட் செழியன் செல்வ மகள்வயிற் றோன்றி னானே.

932. குற்றமற்ற மனமுடைய பெரியோரின் வெள்ளை மனம் போல ஆகாயம் களங்கமின்றி விளங்கியது. சிவ பெருமானுக்கு உரிய திங்கள்கிழமையும், ஆதிரை நாளும் செய்த வழிபாட்டின் பயனைப் பெற்றன. அதனால் பசுமையான பொன்னாலாகிய கோள் வந்து நல்ல முழுத்தத்தில் ஒளியுடன் விளங்கியது.

933. முதன்மை பெற்ற நான்கு வேதங்களும் தாமே ஒலித்தன. தேவர்கள் மந்தார மலர்மழையைப் பொழிந்தனர். புதிய மலர்களைப் பூத்து ஆடுகின்ற மின்னலைப் போல, திக்குகள் எல்லாவற்றிலும் தேவமகளிர் ஆடினர். ஐந்து வகை வாத்தியங் களும் முழங்கின. வீர மகளும், திருமகளும், கலைமகளும் இறுமாந்திருந்தனர்.

934. அந்தணர்கள் மகிழ்வடைந்தனர். அவர்கள் வந்து ஆகுதி செய்து வளர்ப்பதற்கு முன்னரே, மந்திரப்படிச் செய்யும் வேள்விக் குண்டத்தில் சிவந்த தீயானது வலமாகச் சுழித்து ஓங்கி எழுந்தது. சிந்தூரம் அணிந்த நெற்றியையுடைய திசை ஆனைகள் எட்டும், அனந்தனும் சுமத்தல் இல்லாமல் இளைப்பாறின. இந்திரனுக்கும், மேரு மலைக்கும் வருணனுக்கும் இடத்தோள் துடித்தன.

உக்கிரகுமாரர் திருவவதாரம்

935. நஞ்சினை உண்ட பெருமானும், பெருமாட்டியும் தம் எடுத்த திருக் கோலத்திற்கு ஏற்ப, காலையில் உதித்த இளஞ்சூரியன் போலவும், அந்நாளில் அவதரித்த கந்தவேள் போலவும், தேன் பொழியும் வேப்ப மலர்மாலையை அணிந்த மலையத்துவசப் பாண்டியனது செல்வப் புதல்வியாகிய தடாதகைப் பிராட்டியாரிடத்தே உக்கிரகுமாரன் அவதரித்து அருளினான்.

936 எடுத்தனள் மோந்து புல்லி யேந்தினள் காந்தன் கையிற்
கொடுத்தனள் வாங்கி வீங்கு கொங்கைநின் றிழிபால் வெள்ளம்
விடுத்தனள் குமுதப் போதில் வெண்ணிலா வெள்ளம் போல்வாய்
மடுத்தன ளருத்தி னாள்தன் மைந்தனை யெம்பி ராட்டி.

937 சலத்தலைக் கிடக்கைப் புத்தேள் தருநிழல் வாழ்க்கைப் புத்தேள்
அலர்த்தலை யிருக்கைப் புத்தே ளாதிப்புத் தேளிர் வேதப்
புலத்தலைக் கேள்வி சான்ற புண்ணிய முனிவர் ஏனோர்
குலத்தலை மகளி ரோடுங் கோமகன் கோயில் புக்கார்.

938 குடபுலத் தரசும் பொன்னிக் குளிர்புனற் கோழி வேந்தும்
வடபுலத் தரசர் யாருங் குறுநில வாழ்க்கைச் செல்வத்
தடல்கெழு தொண்டைத் தண்டார் அரசொடும் அனிகஞ் சூழக்
கடல்கள்நாற் றிசையும் பொங்கி வருவபோற் கலிப்ப வந்தார்.

939 மன்னனைத் தேவி தன்னை முறையினால் வழுத்தி வாழ்த்தி
நன்னர்கோ ளாகி ஓகை நவின்றுவெண் மழுமா னீத்த
தென்னவர் பெருமான் றேவி திருமுகக் கருணை பெற்றுப்
பொன்னடி பணிந்து தம்மூர் போகுவார் இனைய சொல்வார்.

936. எம்பிராட்டியார் அங்ஙனம் தோன்றிய புதல்வனை எடுத்து உச்சி மோந்து தழுவி ஏந்தித் தம் நாயகன் கையில் கொடுத்தாள். மீண்டும் வாங்கி, பருத்த கொங்கைகளில் இருந்து சொரியும் பால் வெள்ளத்தை சொரிந்து வள்ளத்தில் விடுத்துத் திருவாயில் புகட்டி உண்பித்தார். இக்காட்சி செவ்வாம்பல் மலருக்கு, சந்திரனானது தனது ஒளி வெள்ளத்தை ஊட்டுவது போல் இருந்தது.

திருமால் முதலியோர் வருகை

937. திருப்பாற் கடலில் பள்ளி கொள்ளும் திருமாலும், கற்பக மரத்தின் நிழலில் வாழும் இந்திரனும், தாமரை மலரில் உள்ள பிரமதேவனும், பிற தேவர்களும், வேதத்தில் மிக்க ஆற்றலுடைய முனிவர்களும் மற்றவர்களும், தலைமை பெற்ற குலமகளிரோடும் சுந்தரபாண்டியனது அரண்மனை அடைந்தார்கள்.

938. மேல்புறத்தை ஆளும் சேரனும், காவிரிபாயும் உறையூரின் சோழ மன்னனும், வடபுலத்தில் உள்ள அரசர் அனைவரும், குறுநில மன்னர்கள் பலரைத் தன்னகத்தே கொண்ட, குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்துள்ள தொண்டை நாட்டு மன்னனும், தம் சேனைகள் சூழக் கடல்கள் நான்கு திக்குகளிலும் புடைபெயர்ந்து வருவது போல ஆரவாரத்துடன் வந்தனர்.

939. சுந்தர பாண்டியரையும், தடாதகைப் பிராட்டி யாரையும் முறைப்படி வாழ்த்தி வணங்கி, அவர்களுக்கே உரிய மகிழ்வான மொழியைப் பேசினர். வெள்ளிய மழுவையும் மானையும் நீக்கி விட்டு வந்த பெருமானும், பிராட்டியும் ஆகிய இவர்களின் கருணையைப் பெற்றுப் பொன் போன்ற திருவடிகளை வணங்கித் தத்தம் இடங்களுக்குச் சென்று பின்வருமாறு கூறத் தொடங்கினார்கள்.

940. வழுதியர் பெருமான் றன்பாற் கந்தனே வந்தான் என்பார்
பழுதரு கற்பி னாள்தன் பாக்கிய மிதுவே யென்பார்
அழகினான் மதனும் பெண்மை யவாவுறு மிவன்கோ லாணை
எழுகட லுலகோ வைய மேழையுங் காக்குமென்பார்.

941 மனிதர்வான் றவமோ தென்பார் வைகுவோர் தவமோ வானப்
புனிதர்வான் றவமோ வேள்விப் பூசுரர் தவமோ கேள்வி
முனிவர்வான் றவமோ வீறு முதலிலா முதல்வன் உள்ளக்
கனிதரு கருணை போலிக் காதலன் தோற்ற மென்பார்.

942 தருமமா தவத்தின் பேறோ வருத்தமா தவத்தின் பேறோ
பெருமைசால் காமநோற்ற பெருந்தவப் பேறோ எய்தற்
கருமையாம் வீடு நோற்ற அருந்தவப் பேறோ இந்தத்
திருமகன் என்று தம்மில் வினாய்மகிழ் சிறப்பச் சென்றார்.

943 அவ்வவர் மனைக டோறு மங்கல அணிக ளாகக்
கௌவைமங் கலங்க ளார்ப்பக் கடிநகர் எங்கும் பொங்க
நெய்விழா எடுப்பக் கேள்வி நிரம்பிய மறையோர்க் கீந்த
தெய்வமா தான நீத்தம் திரைக்கடன் மடுத்த தம்மா.

940. ''இப்பாண்டியப் பெருமானிடம் முருகப் பெருமானே வந்து தோன்றியுள்ளான்'' என்று சிலர் சொல்வார்கள். ''தடாதகைப் பிராட்டியாரின் புண்ணியமே இம்மகப்பேறு பெற்றது'' என்பார் சிலர். ''அழகினால், மன்மதனும் விரும்பத் தக்க அளவில் உள்ள இக்குமாரனது செங்கோல் ஆணையானது ஏழு கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகை மட்டும் காப்பதன்று; ஏழுலகங்களையும் பாதுகாப்பதாகும்'' என்று கூறினர்.

941. ''முடிவும் முதலும் இல்லாத இறைவனது திருவுள்ளத்தின் கருணை போலும் இக்குமாரனது அவதாரத் திற்குக் காரணம். மக்களின் உயர்ந்த தவமோ? வான் உலகில் உள்ள தூய தேவர்களின் மேலான தவமோ? மறையவர்களின் தவமோ? முனிவர்களின் தவமோ?'' என்று சிலர் கூறுவார்கள்.

942. ''இச் செல்வப் புதல்வனின் தோற்றம் தருமத்தினது தோற்றமோ? பெரும் தவத்தின் பயனோ? பெருமை மிக்க இன்பமானது செய்த தவத்தின் பயனோ? அடைவதற்கு அரிய வீடு பேறானது இயற்றிய தவத்தின் பயனோ'' என்று ஒருவருக் கொருவர் தமக்குள் வினாவிக் கொண்டு மகிழ்வு மேலோங்கச் சென்றார்கள்.

மதுரை மாநகர் மக்கள் மகிழ்ச்சி

943. எல்லோருடைய வீடுகளிலும் மங்கல விழாவாக் கொண்டாடுதலால், எங்கும் மங்கல ஒலியை உடைய வாத்தியங்கள் ஒலித்தன. காவலையுடைய மதுரை நாட்டில் சிறப்புடைய எண்ணெய் ஆட்டு விழா எடுத்தனர். கேள்வி ஞானம் உள்ள அந்தணர்களுக்குக் கொடுத்த தான நீரின் பெருக்கு அலையை உடைய கடலில் புகுந்தது.

944 சுண்ணமும் பொரியும் தூவெள் ளரிசியுந் தூர்வைக் காடுந்
தண்ணறுஞ் சிவிறி வீசு தண்பனி நீருஞ் சாந்தும்
எண்ணெயு நானச் சேறும் பசையற வெடுத்து வாரிக்
கண்ணக னகர மெங்குங் கழுவின தான வெள்ளம்.

945 செம்பொன் செய் துருத்தி தூம்பு செய்குழல் வட்ட மாக
அம்பொன்செய் சிவிறி வெண்பொன் அண்டை கொண் டாரந் தூங்கும்
வம்பஞ்சு முலையி னாரு மைந்தரு மாறி யாட
அம்பஞ்சு மாறி மாறி யனங்கனு மாடல் செய்தான்.

946 இன்னணங் களிப்ப மூதூர் இந்துவா திரைநன் னாளிற்
பொன்னவன் கேந்திரித்த புனிதலக் கினத்திற்போந்த
தென்னவர் பெருமான் சேய்க்குச் சாதகச் செய்தி யாதி
மன்னவர்க் கியன்ற வேத மரபினால் வயங்க வாற்றி.

947 கரிய வெண் டிரைநீர்ச் செல்வன் கல்லிற கரிந்த வென்றித்
தெரியலன் உலகந் தாங்கு தெய்வத வரைக்கோ னாதித்
தரியலர் வீரஞ் சிந்தத் தருக்கழிந் தச்சந் தோன்றற்
குரியகா ரணத்தானாமம் உக்கிர வருமன் னென்றான்.

944. அந்த தான நீர் வெள்ளமானது, பொற்சுண்ணத்தையும், நெற்பொரியையும், தூய வெள்ளிய அரிசியையும், அறுகின் குப்பையையும், துருத்தியால் வீசப் பெற்ற குளிர்ந்த மணமுள்ள பனிநீரையும், சந்தனத்தையும், எண்ணெயையும், கஸ்தூரிக் குழம்பையும் பசை இல்லையாக வாரி எடுத்து இடம் அகன்ற நகரம் முழுவதையும் தூய்மை செய்தது.

945. முத்தாரம் தொங்கி அசைய கச்சணிந்த தனங்களை உடைய பெண்களும், ஆடவரும் சிவந்த பொன்னால் செய்த துருத்தியையும், தொளை செய்த குழலையும் வட்டமாக அழகிய பொன்னாற் செய்த சிவிறியையும், வெள்ளியால் ஆகிய அண்டையையும் கொண்டு ஒருவர் மேல் ஒருவர் மாறி மாறி வீசி விளையாடினர். அப்போது மதவேளும், ஐந்து பாணங்களையும் அவர்கள் மேல் மாறி மாறி விடுவான் ஆயினான்.

பெயரிடல்

946. பழமையான மதுரை நாடு இவ்வாறு மகிழ்ச்சி அடைய, திருவாதிரையோடு கூடிய திங்கள் கிழமையாகிய நல்ல நாளில் வியாழன் கேந்திரித்த தூய லக்கினத்தில் அவதரித்த சுந்தர பாண்டியரின் திருக்குமாரர்க்குச் சாத கன்ம முதலியவற்றை, அரசர்களுக்குப் பொருந்திய வேத முறைப்படி நடத்தினார்கள்.

947. அலைகடலை யுடைய கடல் செல்வனாகிய வருணனும், மலையின் சிறகுகளை அறுத்து வெற்றி மாலை சூடிக் கொண்ட இந்திரனும், உலகினைத் தாங்குகின்ற தெய்வத்தன்மை பொருந்திய மேருவென்னும் மலையரசனும், பகைவர்கள், தன்னைக் கண்ட உடனே அச்சம் தோன்றச் செய்தற்குரிய காரணத்தினால் 'உக்கிரவருமன்' என்று பெயரிட்டார்கள்.

948 நாலாகு மதியிற் சந்தி மிதிப்பது நடாத்தி யாறாம்
பாலாக மதியி லன்ன மங்கலம் பயிற்றி யாண்டின்
மேலாக மதியிற் கேச வினைமுடித் தைந்தாம் ஆண்டின்
நூலாறு தெரிந்து பூண நூற்கடி முடித்துப் பின்னர்.

949 பத நிரை பாழி சாகை ஆரணம் பணைத்த வேத
முதனிரைக் கலையும் வென்றி மூரிவிற் கலையும் வாளும்
மதநிரை யொழுகு மையன் மாநிரை வையம் பாய்மா
விதநிரை யேற்ற மற்றும் உணர்த்தினான் வியாழப் புத்தேள்.

950 குருமுகத் தறிய வேண்டும் என்பதோர் கொள்கை யாலே
ஒருமுறை கேட்டாங் கெண்ணெண் கலைகளு மொருங்கு தேறி
அரனல தொருவ ராலுந் தேற்றுவ தருமை யாலப்
பரனிடைத் தெளிந்தான் பாசு பதத்திரப் படையுமன்னோ.

951 எல்லையில் கலைக ளெல்லாம் அகவைநா லிரண்டின் முற்றத்
தொல்லறி வுடைய னாகிக் குரவரைத் தொழுது போற்ற
வல்லவ னாகி யன்னார் மகிழ்ச்சிகொள் கலனாய் வென்றிச்
செல்வவேற் றிளைய ரோடுந் திருவிளை யாடல் செய்வான்.

948. நான்காம் மாதம் சந்தி மிதித்தல் என்னும் சடங்கினை முடித்து, ஆறாம் மாதம் சோறு ஊட்டலாகிய விழாவை நடத்தி, முதலாண்டில் மயிர் வினையை முடித்து, ஐந்தாம் ஆண்டில் மறை நெறியுணர்ந்து, பூணுநூல் (உபநயனம்) விழாவையும் முடித்தனர்.

(சந்தி மிதித்தல்-கோயிலுக்குக் கொண்டு போதல்)

கலைப்பயிற்சி

949. பதஒழுங்கும், பாழியும், சாகையும், ஆரணமும் நிரம்பிய மறை முதலாகிய வரிசைப்பட்ட கலைகளையும், வெற்றியைத் தரும் வலியவிரல் தொழிலுக்குரிய கலையையும், வாள் பயிற்சியும், தொடர்ந்து மதநீர் ஒழுகும் மயக்கத்தையுடைய யானையின் ஏற்றத்தையும், வரிசைப்பட்ட தேரின் ஏற்றத்தையும் மற்றும் பிறவற்றையும் வியாழ பகவான் உணர்த்தினான்.

950. நூல்களை ஒரு ஆசிரியரின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டும் என்னும் கொள்கையில், ஒரு முறை கேட்ட அவ்வளவிலே அறுபத்து நான்கு கலைகளும் ஒரு சேரத் தெரிந்து, சிவபெருமான் அல்லாது வேறு யாராலும் அறிவிப்பதற்கு அருமையால் அம் முதல்வனிடத்தில் பாசுபதப் படைப் பயிற்சிகளையும் உணர்ந்தான்.

951. எட்டு வயதிலேயே எல்லாவித கலைகளையும் அறிந்து கொண்டு, முற்றுணர்வுடையவனாகியும், இருமுது குரவரையும் வணங்கி, அவர்கள் மகிழ்ச்சி கொள்ளும் வகையில் வெற்றிச் செல்வத்தையுடைய ஆண்சிங்கம் போன்ற இளைஞர் களோடும் திருவிளையாடல் செய்வானாயினான்.

952 புகர்மத வேழ முட்டிப் போர்விளை யாடி வென்றுந்
தகரொடு தகரைத் தாக்கித் தருக்கமர் ஆடி வென்றும்
வகிர்படு குருதிச் சூட்டு வாரணம் ஆடி வென்றும்
நகைமணிப் பலகை செம்பொ னான்குறுப் பாடி வென்றும்.

953 காற்றினுங் கடிய மாவிற் காவதம் பலபோய் மீண்டும்
கூற்றினும் கொடிய சீற்றக் குஞ்சர முகைத்தும் வைகை
யாற்றினுய் யானத் தாவி யகத்தினுள் இன்பந் துய்த்தும்
வேற்றிறன் மைந்த ரோடு மல்லமர் விளைத்து வென்றும்.

954 சந்தவெற் படைந்து வேட்டஞ் செய்துமச் சைல வாழ்க்கை
அந்தணர் ஆசி கூற அவர்தொழல் வினாயு மன்னர்
கந்தமென் கனிவி ருத் தூண் கைதழீஇக் களித்து மீண்டும்
இந்தவா றைம்மூ வாண்டு கழியமே லெய்து மாண்டில்.

955 சூர்முத றடிந்த தங்கள் தோன்றலே யிவனென் றெண்ணிக்
கார்முக மயிலும் வேலுங் கைவிடாக் காக்கு மாபோல்
வார்முக முலையி னாரும் வடிக்கணு மருங்கு மொய்ப்பக்
கூர்முக வேலான் இன்ன கொள்கைய னாகத் தாதை.

952. புள்ளிகளையுடைய முகத்தையும், மதத்தையும் உடைய யானைகளோடு யானைகளை விட்டுப் போர் செய்து வெற்றி பெற்றனர். ஆட்டுக்கடாக்களோடு ஆட்டுக்கடாக்களை விட்டுப்போர் செய்து வெற்றி பெற்றனர். பிளவுபட்ட உதிரம் போலும் செந்நிறம் வாய்ந்த உச்சிக் கொண்டையை உடைய சேவல்களைக் சேவல்களோடு போர் செய்வித்து வெற்றி பெற்றனர். தேரும் யானையும், குதிரையும் காலாளுமாகிய நான்கு உறுப்புகளால் ஆகிய சதுரங்கம் ஆடி வெற்றியடைந்தனர்.

953. காற்றைவிட விரைவாகச் செல்லும் குதிரையில் ஏறிப் பலகாத வழி சென்று திரும்பினர். கூற்றுவனை விடக் கொடிய சினத்தையுடைய யானையைச் செலுத்தினர். வையை நதியிலும், பூங்காவிலும், பொய்கையிலும் இன்பம் நுகர்ந்தும் வெற்றியை யுடைய இளைஞர்களோடு மற்போர் புரிந்தும் வெற்றி பெற்றனர்.

954. சந்தன மரங்களையுடைய பொதிய மலையைச் சார்ந்து வேட்டையாடினர். அம்மலையில் வாழும் முனிவர்கள் வாழ்த்துக் கூற அவர் தவத் தொழில் பற்றிக் கேட்டு அறிந்தனர். அம் முனிவர் மகிழ்வுடன் கொடுக்கும் கிழங்குபழம் முதலிய விருந்துணவைக் கைக் கொண்டு மகிழ்ந்து திரும்பினர். இவ்வாறாகப் பதினைந்து ஆண்டுகள் சென்றன. பதினாறாம் ஆண்டு தொடங்கியது.

955. சூரபத்மனாகிய மாமரத்தின் அடியைத் துணித்த தங்கள் தலைவனாகிய முருகக் கடவுளே இவனென்று கருதி மயிலும், வேற்படையும் நீங்காது காக்கின்ற தன்மை போல, கச்சணிந்த தனங்களை உடைய பெண்கள், மாவடு போன்ற தம் கண்களும் (மனமும்) அவனையே சூழ, கூரிய வேல்படையை உடைய உக்கிரவழுதி காளைப் பருவமுற்றுத் திகழ்ந்தார்.

956 பங்கயச் செவ்வித் தாகிக் கண்மனம் பருகு காந்தி
அங்கழற் காலுஞ் சொன்ன அடைவினிற் றிரண்டு நீண்ட
சங்கமும் வட்டம் தோன்றாச் செழுமுழந் தாளு நால்வாய்த்
துங்கவீங் கவுண்மால் யானைத் துதிக்கைபோல் திரள்க வானும்.

957 சிறுகிய வயிறும் தாழ்ந்த நாபியும் செவ்வி நோக்கும்
மறுவில்கண் ணடியின் அன்ன கடியகல் வரைகொண் மார்பும்
எறியிசை வீணைத் தண்டி னிணைந்துநீண் டிழிந்த கையும்
வெறியதார் கிடந்த மேரு வெற்பிரண் டனைய தோளும்.

958 வலம்புரி யென்ன வாய்ந்த கண்டமு மலராள் மன்னும்
பொலம்பரி கமல மன்ன வதனமும் பொதுவா னோக்கி
நிலம்புரி தவப்பே றன்னான் வடிவெலா நின்று நின்று
நலம்புரி நூலா னோக்கிச் சோதிப்பான் நடிக்க வல்லான்.

959 உன்னத மாறு நீண்ட வுறுப் பைந்து சுக்கந் தானும்
அன்னது குறுக்க நான்கா மகலுறுப் பிரண்டே ழாகச்
சொன்னது சிவப்பு மூன்று கம்பீரந் தொகுத்த வாறே
இன்னவை விரிக்கி னெண்ணான் கிலக்கண வுறுப்பாம் என்ப.

956. தாமரை மலர் போன்ற அழகினை உடையதாய், கண்ணையும், மனத்தையும் கொள்ளை கொள்ளும் அழகிய வீரக் கண்டையை அணிந்த அடியையும், முறைப்படி திரண்ட கணைக் காலையும், முழங்காலையும், தொங்கிய வாயும், கபோலமும் மதமயக்கத்தையும் உடைய யானையின் துதிக்கை போலத் திரண்ட தொடையும்,.

957. சிறுத்த வயிற்றினையும், ஆழ்ந்த உந்தியையும், குற்றமில்லாத கண்ணாடியை ஒத்த விளக்கத்தையுடைய மூன்று வரிகளை உடைய அகன்ற மார்பையும், வீணையினது கோல் போல நீண்டு தாழ்ந்த கைகளையும் மலர்மாலை சூட்டப்பட்ட மேருமலை போன்ற தோள்களையும்,

958. வலம்புரிச் சங்கு போல் அமைந்த கழுத்தினையும், திருமகள் உறையும் பொற்றாமரை போன்ற முகத்தையும் உடைய தன் மகனைத் திருக்கூத்தாட வல்லவனாகிய சுந்தர பாண்டியன் பொது வகையால் பார்த்து மகிழ்ந்தார். பின்னர் நிலவுலகத்தார் செய்த தவப்பயனை ஒத்த அவ்வுக்கிர பாண்டியனது உறுப்புகள் அனைத்தையும் அழகினைச் சொல்கின்ற நூலின் இலக்கணப்படி சோதிப் பாராயினார்.

முப்பத்திரண்டு இலட்சணங்கள்

959. உயர்ந்த உறுப்புகள் ஆறும், நீண்ட உறுப்புகள் ஐந்தும், சிறுகிய உறுப்புகள் ஐந்தும், குறுகிய உறுப்புகள் நான்கும், அகன்ற உறுப்புகள் இரண்டும், நூலில் கூறியபடி சிவந்த உறுப்புகள் ஏழும், ஆழ்ந்த உறுப்புகள் மூன்றும், ஆக முப்பத்திரண்டு இலக்கணம் உடையதென்று பெரியோர் கூறுவர். இவற்றை விரித்துக் கூறுங்கால் பின்வருமாறு அமையும்.

960 வயிறுதோ ணெற்றி நாசி மார்புகை அடியிவ் வாறும்
உயிரில்வான் செல்வ னாகும் ஒளிகவர் கண்க போலம்
புயல்புரை வள்ளல் செங்கை புதுமணம் கவருந் துண்டம்
வயின்முலை நடுமார் பைந்து நீண்டதேல் விளைக்கு நன்மை.

961 நறியபூங் குஞ்சி தொக்கு விரற்கணு நகம்பல் லைந்தும்
சிறியவே லாயுள் கோசஞ் சங்கநா முதுகிந் நான்கும்
குறியவேற் பாக்கி யப்பே றாம்சிரங் குளமென் றாய்ந்தோர்
அறியுமிவ் வுறுப்பி ரண்டும் அகன்றவே லதுவு நன்றாம்.

962 அகவடி யங்கை நாட்டக் கடைஇதழ் அண்ண நாக்கு
நகமிவை யேழுஞ் சேந்த நன்மைநாற் பெறுமா வின்பம்
இகல்வலி யோசை நாபி யென்றிவை மூன்றும் ஆழ்ந்த
தகைமையா லெவர்க்கு மேலா நன்மைசால் தக்கோ னென்னா.

963 எல்லையின் மூர்த்தி மைந்தன் இலக்கண நிறைவினோடு
நல்லவாங் குணனு நோக்கிப் பொதுவற ஞாலங் காக்க
வல்லவ னாகி வாழ்நாள் நனிபெற வல்ல னென்னா
அல்லணி மிடற்றான் பின்னு மனத்தினா லளந்து சூழும்.

960. ''வயிறு, தோள், நெற்றி, நாசி, மார்பு, கையின் அடி ஆகிய இந்த ஆறு உறுப்புகளும் உயர்ந்திருந்தால் சிறந்த செல்வமுடையவன் ஆவான். கண்ணும், கபோலமும், சிவந்த கையும், மூக்கும், தோளின் நடுவில் உள்ள பரந்த மார்பும் ஆகிய ஐந்து உறுப்புகளும் நீண்டதாயின் நன்மையைக் கொடுக்கும்.

961. ''மணம் வீசும் மலரை அணிந்த சிகையும், தோலும், விரலின் கணுவும், நகமும், பல்லும் ஆகிய ஐந்து உறுப்புகளும் சிறுயவாயின் ஆயுள் மிகும். ஆண் குறியும், கணைக்காலும், நாவும், முதுகும் ஆகிய இந்நான்கு உறுப்புகளும் குறுகியவாயின் செல்வப் பயன் ஆகும். தலையும் நெற்றியும் ஆகிய இரண்டு உறுப்புகளும் அகன்றனவாயின் நன்மையாகும்.

962. ''உள்ளங்காலும், உள்ளங்கையும், கடைக்கண்ணும் உதடும் மேல் வாயும் நாவும் நகமும் ஆகிய ஏழு உறுப்புகள் சிவந்திருந்தால் இன்பத்தை அடைவான். மிக்க வலியும், ஓசையும் கொப்பூழும், ஆழ்ந்திருக்கும் தகுதியாலே எல்லார்க்கும் மேலாகிய நலம் நிறைந்த தக்கோனாவான்'' என்று சுந்தர பாண்டியன் கருதினார்.

இறைவர் எண்ணம்

963. அளந்தறியப் படாத இறைவனாகிய இருள் போன்ற திருமிடற்றையுடைய சிவபெருமான் புதல்வனுடைய நிறைந்த இலக்கணத்துடன் நல்லனவாகிய குணங்களையும் ஆராய்ந்தறிந்து ''உலகத்தைக் காக்க வல்லவனாகி, வாழ்நாளை மிகப் பெறவும் இவன் வல்லவனாவன்'' எனக் கருதி மேலும் ஆலோசிக்க லானார்.

964 இத்தகு பண்பு சான்ற நீர்மையால் இசைமை நீதி
வித்தக நல்ல உள்ள முடைமைசெய் வீறு தெய்வ
பத்திமை உலகுக் கெல்லா மகிழ்ச்சிசெய் பண்பு சாந்த
சித்தமெவ் வுயிர்க்கு மன்பு செய்கைநல் லீகை கல்வி.

965 வெல்லுதற் கரியார் தம்மை வெல்லுதல் தேவ ராலுஞ்
செல்லுதற் கரிய தேத்தும் சென்றிடு திறையுங் கோடல்
புல்லுதற் கரிய ஞால மாலைபோற் புயத்தில் ஏந்திச்
சொல்லுதற் கரிய சீர்த்தி யுலகெலாம் சுமப்ப வைத்தல்.

966 என்றிவை யாதி யா இயற்குண முடைய னாகி
நன்றிசெய் துலகுக் கெல்லாநாயக னொருவ னாகி
நின்றிடு மிவற்குப் பின்னர் நீண்முடி கவித்து முன்னர்
மன்றல்செய் கென்று சூழ்ந்து மதிஞரோ டுசாவி னானே.

உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம் முற்றிற்று.

12. உக்கிரபாண்டியருக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம்

967 உருக்குந் திறலுக் கிரகுமான் உதய மிதுவால் மதியுநதிப்
பெருக்குங் கரந்த சடைக்கற்றைப் பெருந்தேர்ச் செழியர்
பிரானவற்குச்
செருக்கும் செல்வ மணமுடித்துச் செவ்வேல் வளைசெண்
டளித்துள்ளந்
தருக்கு முடிதந் தரசுரிமை தந்த செயலும் சாற்றுவாம்.

964. ''இத்தகைய குணங்கள் நிறைந்த இயல்பினால், புகழும், நீதியும், வித்தகமும், நன்மனம் உடைமையும் மெய்ம்மை மிக்க பரசிவ பக்தியும், உலகம் முழுவதும் மகிழ்ச்சி விளங்கும் தன்மையும், அசைவில்லாத சிந்தையும் எல்லா உயிர்களுக்கும் அருள் செய்தலும் நல்ல வன்மையும் கல்வியும்,

965. யாராலும் வெல்ல முடியாதவரை வெல்லுதலும், தேவர்களும் செல்ல முடியாத தேயங்களில் சென்று, அவரால் கொடுக்கப்பட்ட திறையைக் கைக் கொள்ளுதலும், அடைதற்கரிய உலகத்தினை, பூமாலையைத் தாங்குதல் போல் தாங்கிச் சொல்லுதற்கரிய ஆணையை உலகத்தார் அனைவரும் சுமக்குமாறு வைத்தலும்,

966. என்ற இவை முதலாகிய இயற்கைக் குணங்கள் உடையவனாகி, உலகம் முழுவதிற்கும் நன்மை புரிந்து, ஒரே தலைவனாகி வீற்றிருப்பான். இவனுக்குப் பெரிய மகுடத்தினைப் பின்னர் சூட்டுவோம். முதற்கண் திருமணம் செய்வோம், என்று ஆலோசித்து அமைச்சரோடு ஆராய்ந்தார்.

உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம் முற்றிற்று.

12. உக்கிரபாண்டியருக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம்

967. வலிமை மிக்க உக்கிரப் பெருவழுதி பாண்டியனது திருவவதாரமாகிய திருவிளையாடல் இது. இனி வெண்மையான சந்திரனையும், கங்கையையும், நீண்ட சடையையும் மறைத்து, பெரிய தேரினையுடைய தென்னர் பெருமானாகிய சுந்தர பாண்டியர் தன் மகனுக்குத் திருமணம் முடித்து, சிவந்த வேலையும், வளையையும், செண்டையும் கொடுத்து, மனம் மகிழ்விற்குரிய திருமுடியைச் சூட்டி, அரச உரிமை கொடுத்தருளிய திருவிளையாடலைச் சொல்வாம் (செண்டு-நீண்ட, முனை பிளவு பட்டு வளைந்த ஓர் ஆயுதம்).

968 வையைக் கிழவன் றன்னருமைக் குமரன் தனக்கு
மணம்புணர்ச்சி
செய்யக் கருதுந் திறனோக்கி யறிஞ ரோடுந் திரண்டமைச்சர்
மையற் றழியா நிலத்திருவு மரபும் குடியும் புகழ்மையுநம்
ஐயற் கிசையத் தக்ககுலத் தரசர் யாரென்று அளக்கின்றார்.

969 தீந்தண் புனல்சூழ் வடபுலத்து மணவூர் என்னுந் திருநகர்க்கு
வேந்தன் பரிதி திருமரபின் விளங்கும் சோம சேகரனென்று
ஆய்ந்த கேள்வி யவனிடத்துத் திருமா தென்ன வவதரித்த
காந்தி மதியை மணம்பேசவிருந்தா ரற்றைக் கனையிருள்வாய்.

970 வெள்ளைக் களிற்றின் பிடர் சுமந்த குடுமிக் கோயில்
மேயவிளம்
பிள்ளைக் கதிர்வெண் மதிமௌலிப் பெருமான் இரவி
மருமானாம்
வள்ளற் கரத்தான் கனவிலெழுந் தருளி வானோர் நனவிற்கும்
கள்ளத் துருவாந் திருமேனி காட்டி யிதனை விளம்புவார்.

971 அன்ன மிறைகொள் வயன்மதுரைச் சிவன்யா மரச நீயீன்ற
பொன்னை யனையா டனைமதுரா புரியிற் கொடுபோய்
மறுபுலத்து
மன்னர் மகுட மணியிடற மழுங்குங் கழற்காற் சுந்தரனாந்
தென்னர் பெருமான் குமரனுக்குக் கொடுத்தி யென்று
செப்புதலும்.

உக்கிரம வருமருக்குப் பெண் தேடுதல்

968. வையை ஆற்றிருந்த தலைவனாகிய சுந்தர பாண்டியன், தன் அருமைப் புதல்வனுக்கு, திருமணம் செய்ய எண்ணி, மந்திரிகள், அறிஞர்கள் இவர்களைத் கலந்து ஆலோசிக்கலானான். அழியாத நிலச் செல்வமும், மரபும், குடிப்பிறப்பும், புகழும் ஆகிய இவற்றால் நம் இறைவனுக்குப் பொருத்தமான குலத்தினையுடைய பெண் தரத்தக்க மன்னர் யார்? என்று ஆராய்கின்றார்கள்.

969. அவ்வாறு ஆராய்ந்து, குளிர்ந்த நீரால் சூழப் பட்ட, வடபக்கம் உள்ள கல்யாணபுரம் (மணவூர்) என்னும் அழகிய நகரின் மன்னனாகிய, சூரிய குலத்தில் உதித்த சோம சேகரன் என்பவனே தகுதியானவன் என்று கண்டனர். அம்மன்னனின் மகளான காந்திமதியை மணம் பேசுவது என்று கருதினார்கள்.

970. அன்றைக்கு நள்ளிரவில், வெள்ளை யானையின் பிடர் சுமந்த சிகரமுடைய திருக்கோயிலில், இளமையான வெண்மையான சந்திரனை அணிந்த சடையையுடைய சோமசுந்தரக் கடவுள், சூரியன் குலத்தில் உதித்த வள்ளல் தன்மை மிக்க சோமசேகரனது கனவில் எழுந்தருளி, தேவர்களுக்கும் எட்டாத தன் திருமேனியைக் காட்டி, பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

971. ''அரசனே! நான், அன்னங்கள் வாழ்தலால் நீர்நிலைகள் மிக்கு உள்ள வயல்களையுடைய மதுரைத் திருநாட்டில் உள்ள சிவபெருமான், திருமகளைப் போன்ற அழகுடைய உன்னுடைய மகள் காந்திமதியை மதுரைக்கு அழைத்துச் சென்று, வேற்று நாட்டு மன்னர் அடிக்கடி வணங்குதலால், தேய்கின்ற வீரக்கழலை அணிந்துள்ள செழியர் பெருமானாகிய சோமசுந்தரப் பெருமானுடைய திருக்குமாரனுக்குக் கொடுப்பாய்!'' என்று கூறினார்.

972 உள்ளக் கமல முககமலம் உடனே மலர இருதடங்கண்
அள்ளற் கமல மலர்ந்துதன தங்கைக் கமல முகிழ்த்தெழுந்து
வள்ளற் பரமன் கருணையெளி வந்த செயலை நினைந்தன்பின்
வெள்ளத் தழுந்தி யெழுந்திரவி வேலை முளைக்கும்
வேலையினில்.

973 நித்த நியமக் கடனிரப்பி நிருபன் அமைச்ச ரொடுநான்கு
பைத்த கருவிப் படையினொடு பல்வே றியமுங் கலிப்பத்தன்
பொய்த்த மருங்குற் றிருமகளைப் பொன்ன னாரோ டிரதமிசை
வைத்து மணம்சேர் திருவினொடு மதுரை நோக்கி
வழிக்கொண்டான்.

974 நென்ன லெல்லை மணம்பேச நினைந்த வாறே யமைச்சர்மதி
மன்னர் பெருமான் தமரோடு மணவூர் நோக்கி வழிவருவார்
அன்ன வேந்தன் றனைக்கண்டா ரடல்வேற் குமரன்
அனையானெம்
தென்னர் பெருமான் குமரனுக்குன் றிருவைத் தருதி
யெனவனையான்.

975 குலனும் குடியுங் கனவின்கட் கொன்றை முடியார் வந்துரைத்த
நலனும் கூறி மணநேர்ந்து நயப்ப வதனை நன்முதியோர்
புலனொன் றுழையர் தமைவிடுத்துப் பொருநைத் துறைவற்
குணர்த்திவரு
வலனுந்து அயில்வேன் மன்னனொடு மதுரை மூதூர்
வந்தணைந்தார்.

972. இறைவனைக் கனவில் கண்டவுடன், நெஞ்சமும் முகமும் மலர்ச்சியடைய, இரண்டு கண்களும் விழித்தான். தனது இரு கைத் தாமரைகளைக் குவித்து எழுந்து, வள்ளலாகிய சிவபெருமானின் அருட்கருணை தனக்கு எளிதில் கிட்டியதை நினைத்து, அன்பாகிய வெள்ளத்தில் மூழ்கி மகிழ்ந்திருந்தான். சூரியன் கடலில் தோன்றும் காலை வேளையும் தோன்றியது.

973. நாள்தோறும் செய்யும் நியமங்களைக் குறைவின்றி முடித்துச் சோமசேகரன், தன் மந்திரியோடும் நான்கு வித சேனைகளோடும், பலவித வாத்தியங்கள் முழங்க, மெலிந்த இடையுடைய தன் மகளோடும், திருமகள் போலும் தோழிகளோடும் தேரேறி, திருமணத்திற்கு வேண்டிய செல்வங்களோடு மதுரை நாட்டிற்குச் செல்லத் தொடங்கினான்.

அமைச்சரும் சோமசேகரனும் சந்தித்தல்

974. அதே போல், முன்னாள் பொழுதில் மணவூரில் உள்ள சோமசேகரன் மகளை மணம் பேச வேண்டும் என்று அமைச்சரோடு ஆலோசனை செய்த சுந்தரபாண்டியன், அவ்வாறு மணம் பேச, மந்திரிகள் பாண்டியனின் சுற்றத்தாரோடு மணவூரை நோக்கிச் செல்லத் தொடங்கினர். ''வெற்றி பொருந்திய வேலை ஏந்திய முருகக் கடவுளைப் போன்ற பாண்டியர் பெருமானின் திருக் குமாரனாகிய உக்கிரவழுதிக்கு உன் மகளைத் தருவாய்!'' என்று வழியில் சந்தித்துக் கேட்டனர்.

975. நேற்றிரவு கனவினிலே கொன்றை மாலையையுடைய சிவபெருமான் எழுந்தருளி குலமும் குடிப்பிறப்பும் மேம்பாடும் கூறி, சொல்லிய மணச்செய்திக்கு உடன்பட்டான். நல்லறிவுடைய முதியோர்கள், அறிவு பொருந்திய தூதரை அனுப்பி சுந்தரபாண்டியனுக்கு அறிவித்தனர். தம்முடன் வருகின்ற, வெற்றி மிக்க வேல் ப்டையை உடைய சோம சேகர மன்னனோடும் அவர்கள் மதுரை நகரத்தை வந்தடைந்தார்கள்.

976 இரவி மருமான் மதிமருமான் எதிரே பணியத் தழீஇமுகமன்
பரவி யிருக்கை செலவுய்த்துப் பாண்டி வேந்த னிருந்தான்மேல்
விரவி யமைச்சர் திருமுகங்கள் வேந்தர் யார்க்கும் விடுத்துநகர்
வரைவு நாள்செய் தணிசெய்ய மன்றன் முரசம் அறைவித்தார்.

977 மாடம் புதுக்கிப் பூகதமும் கதலிக்காடு மறுகெங்கும்
நீட நிரைத்துப் பாலிகையு நிறைபொற் குடமு முறைநிறுத்தி
ஆடு கொடியுந் தோரணமும் புனைவித் தழகுக் கழகாகக்
கூட நெருங்கு நகரைமணக் கோலம் பெருகக் கொளுத்தினார்.

978 தென்ற னாடன் றிருமகளைத் தேவர் பெருமான் மணம்புரிய
மன்ற லழகா லொருநகரொப் பதிக மின்றி மதுரைநகர்
அன்று தானே தனக்கொப்ப தாகும் வண்ண மணியமைத்தார்
இன்று தானே தனக்கதிக மென்னும் வண்ணம் எழிலமைத்தார்.

வேறு

979 முன்னர் மாலை முடியணி சுந்தரத்
தென்னர் ஏற்றின் திருமுகங் கண்டுதாழ்ந்
தன்ன வாசக முட்கொண் டயற்புல
மன்னர் மாதவர் யாரும் வருவரால்.

976. சூரிய மரபில் தோன்றிய சோமசேகரன், சந்திரன் மரபில் தோன்றிய சுந்தரபாண்டியனை எதிரே சென்று வணங்கினான். அப்பாண்டிய மன்னன் அவரைத் தழுவி உபசார மொழிகள் பலவற்றைக் கூறினார். அச்சோமசேகரன் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்குச் செல்லுமாறு அனுப்பி வைத்தான். பின்னர் மந்திரிகள் தம்முள் திருமண நாளை நிச்சயித்து, அரசர் அனைவருக்கும் திருமண ஓலை அனுப்பி, நகரை அலங்கரிக்கு மாறு மணமுரசம் அறைவித்தார்கள்.

977. அந்நகர மக்கள் தங்கள் தங்கள் மாளிகைகளைச் சுற்றி, சுண்ணாம்பு போன்றவற்றால் புதியதாக்கி, கமுகு மரங்களையும், வாழை மரங்களையும், வீதிகளில் வரிசையாக வைத்தனர். முளைப் பாலிகையையும், பொற் குடங் களையும் முறைப்படி அமைத்தனர், அசைகின்ற கொடிகளையும், தோரணங்களையும் கட்டி அழகுக்கு அழகு செய்பவராகக் கூடங்கள் நிறைந்த அந்நாட்டைத் திருமண அழகுச் சிறப்புடன் மேம்படும்படி அலங்கரித்தார்கள்.

978. தென்றல் வீசும் பாண்டிய நாட்டையுடைய மலயத்துவசப் பாண்டியனுடைய மகளான தடாதகைப் பிராட்டியாரை, தேவ தேவனாகிய சுந்தரபாண்டியன் திருமணம் செய்து கொண்ட நாளில், மற்றொரு நகரம் இதற்கு ஈடு இணை இல்லை என்று சொல்லத் தக்க அளவில் அன்று அழகு பெற ஒப்பனை செய்திருந்தார்கள்; இன்று அதனினும் அதிகம் என்று சொல்லத்தக்க அளவில் அழகு பெற அமைத்தார்கள்.

அரசர் முதலியோர் வருகை

979. ஆண் சிங்கம் போன்ற சுந்தரபாண்டிய அரசர் அனுப்பிய திருமண ஓலையைக் கண்டு, தாழ்ந்து வணங்கி, அதில் உள்ள வாசகங்களைப் படித்து வேற்று நாட்டு மன்னரும், பெரிய தவத்தையுடைய முனிவரும் வருகின்றார்கள்.

980 புரவி வெள்ளமும் போர்க்கரி வெள்ளமும்
வரவிற் கால்வலி மள்ளரின் வெள்ளமும்
விரவி யாழிய வெள்ளமும் உள்ளுற
இரவி தன்வழித் தோன்றல்வந் தெய்தினான்.

981 கோடு வில்லொடு மேகக் குழாங்கள்மின்
நீடு வாளொடு நேர்ந்தென மார்புதாழ்ந்
தாடு குண்டலக் காதுடை யாடவர்
சேட னீகத்துச் சேரன்வந் தீண்டினான்.

982 கடலும் உள்ளமும் காற்றும்பல் வண்ணமும்
உடலங் கொண்டன உந்துறு வாம்பரிப்
படுக டற்குட் பரிதியில் தோன்றினான்
அடுப ரிப்பதி யாகிய வேந்தனே.

983 அலகி லாவுத யந்தொறு மாதவர்
அலகி லாருதித் தென்னப்பொன் னோடைசேர்
அலகி லானை யனீகமொ டெ.ய்தினான்
அலகி லாற்றல் கயபதி யண்ணலே.

984 தொக்க மள்ளர் அடிப்படு தூளிபோய்த்
திக்க டங்க விழுங்கித் திரைக்கடல்
எக்கர் செய்ய எழுந்துஇயம் கல்லென
நக்க வேற்கை நரபதி நண்ணினான்.

985 மீன வேலையிற் கந்துக மேற்கொடு
கூனல் வார்சிலை வஞ்சக் கொடுஞ்சமர்க்
கான வாழ்க்கை யரட்டக் கரும்படை
மான வேற்குறு மன்னவர் நண்ணினார்.

980. குதிரையின் பெருக்கத்தையும், யானையின் பெருக்கத்தையும், வீரர்களின் பெருக்கத்தையும், தேரின் பெருக்கத்தையும் உடைய சூரிய குலத்தைச் சேர்ந்த சோழ மன்னன், இந்த நால்வகைச் சேனையுடன் வந்து சேர்ந்தான்.

981. மேகங்கள், வளைந்த வில்லோடும், மின்னலாகிய வாளோடும், வந்தாற் போல, மார்பு வரை அசைந்து ஆடும் குண்டலங்கள் அணிந்த காதுகளை உடைய வீரர்களுடன் சேரமன்னன் வந்தான்.

982. கடல், மனம், காற்று இம்மூன்றும் பல நிறமும் உடலும் கொண்டாற் போல, தாவும் குதிரைப் படையாகிய சூழ்ந்த கடலினுள் துரகபதியாகிய அரசன் சூரியனைப் போல் வந்தான்.

983. அளவில்லாத பல மலைகளில், பல சூரியர்கள் உதித்தாற் போல, பொன்பட்டணிந்த அளவில்லாத யானைப் படையோடு வலிமை மிக்க கயபதி என்னும் மன்னன் வந்து சேர்ந்தான்.

984. நெருங்கிய வீரர்களின் பாதங்களால் எழுந்த புழுதி திசைகள் அனைத்தையும் மூடி, அலைகளை உடைய கடலைத் தீவாக மாற்றவும், எங்கும் வாத்தியங்கள் ஒலிக்கவும், விளங்கிய வேற்படையை ஏந்திய கையையுடைய 'நரபதி' என்னும் அரசன் வந்து சேர்ந்தான்.

985. மீன்கள் துள்ளும் கடலைப் போன்ற குதிரை மேல் இருந்து கொண்டு, வளைந்த நீண்ட வில்லால் கொடிய வஞ்சனையோடு போர் புரியும் காட்டு வாழ்க்கையுடைய குறும்பராகிய கொடிய படையுடன் குறுநில மன்னர்கள் வந்தார்கள்.

986 சீனர் சோனகர் சிங்களர் கொங்கணர்
மான வேல்வல மாளவர் சாளுவர்
தான மாநிரைச் சாவகர் ஆதியாம்
ஏனை நாட்டுள மன்னரு மீண்டினார்.

987 நூலொ டுந்துவக் குண்டு நுடங்குமான்
தோலர் தூங்கு சுருக்குடைத் தானையர்
கோல முஞ்சியர் கிஞ்சுகக் கோ லினர்
நாலு நூல்பயில் நாவினர் நண்ணினார்.

988 வட்ட நீர்க்கலக் கையினர் வார்ந்துதோள்
விட்ட குண்டலக் காதினர் வேட்டதீத்
தொட்ட கோலினர் வேள்வியிற் சுட்டநீ
றிட்ட நெற்றியர் இல்லொடு நண்ணினார்.

989 முண்ட நெற்றியர் வெண்ணிற மூரலர்
குண்டி கைக்கையர் கோவணம் வீக்கிய
தண்டு கையர்கற் றானையர் மெய்யினைக்
கண்டு பொய்யினைக் காய்ந்தவர் நண்ணினார்.

990 தீந்தண் பாற்கடல் செந்துகிர்க் காட்டொடும்
போந்த போல்மெயிற் புண்ணியப் பூச்சினர்
சேந்த வேணியர் வேதச் சிரப்பொருள்
ஆய்ந்த கேள்வி அருந்தவர் எய்தினார்.

991 ஆதி சைவர் முதற்சைவர் ஐவருங்
கோதி லாஅகச் சைவக் குழாங்களும்
பூதி மேனியர் புண்ணிய ஐந்தெழுத்து
ஓது நாவின ரொல்லைவந் தெய்தினார்.

986. சீனரும், சோனகரும், கொங்கணரும், சிங்களரும் வலிமையான வேல் போர் செய்யும் மாளவரும், சாளுக்கியரும் யானைகளையுடைய சாவகரும் மற்றைய நாட்டு அரசர்களும் வந்து சேர்ந்தார்கள்.

987. பூணூலை உடையவரும் மான்தோலை அணிந்த வரும் தொங்கி மடங்கிய ஆடையை உடையவரும், முஞ்சிப் புல்லால் அரை ஞாண் அணிந்தவரும், முள் முருக்கங் கோலினை உடையவரும் ஆன நூலைப் பயில்கின்ற மாணாக்கர் வந்தனர்.

988. வட்டமான கமண்டலம் ஏந்திய கையினரும் தோள்வரை தொங்கும் குண்டலத்தையுடைய காதினரும் வேள்வி செய்வதற்குரிய தீக்கடை கோலினரும், வேள்வியின் போது திருநீற்றையணிந்த நெற்றியினரும் தத்தம் மனைவியரோடு வந்தனர்.

989. திருநீறு அணிந்த நெற்றியினரும், வெண்மையான பற்களை உடையவரும், கமண்டலம் ஏந்திய கையினரும், கோவணம் கட்டப்பட்ட தண்டுடைய கையரும், கல்லாடை யினரும் ஆகிய மெய்ப்பொருளை அறிந்து, பொய்ப்பொருளை வெறுத்த துறவியர் வந்து சேர்ந்தனர்.

990. இனிமையான குளிர்ந்த பாற்கடலானது, செம்மையான பவளக் காட்டோடு வந்தது போன்று, உடல் முழுவதும் திருநீறு பூசியவரும், சிவந்த சடையினை உடைய வரும் ஆகிய உபநிடதப் பொருளை ஆய்ந்தவரான அரிய தவத்தினை உடைய சைவ முனிவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

991. ஆதி சைவர் முதலிய ஐவகைச் சைவரும், குற்றமில்லாத அகச் சைவக் குழுவினர், திருநீறு அணிந்த மேனியராயும், புண்ணியமான திருஐந்தெழுத்தினைப் பயிலும் நாவினை உடையவராயும் விரைவில் வந்து சேர்ந்தார்கள்.

992 வெண்களிற்றவன் வேரியந் தாமரைப்
பெண்க ளிப்புறு மார்பன் பிரமனோ
டொண்க ளிப்புற வும்பர் முதற்பதின்
எண்க ணத்தவர் யாவரும் ஈண்டினார்.

993 அணைந்து கோயில் அடைந்தரிச் சேக்கைமேற்
குணங்க டந்தவன் கோமள வல்லியோ
டிணங்கி வைகு மிருக்கைகண் டேத்தினார்
வணங்கி னார்வணங் கும்முறை வாழ்த்தினார்.

994 விரைசெய் தார்முடிச் சுந்தர மீனவன்
சுரர்கண் மாதவர் வேந்தர்க்குத் தொன்முறை
வரிசை நல்கி யிருந்தனன் மன்னவன்
திரும கண்மணஞ் செய்திறஞ் செப்புவாம்.

995 சோம சேகரன் தோகை வனப்பெலாங்
கோம கன்கண் டுவப்பவக் கொள்கைகண்டு
ஏம மேனிய னூல்வழி யார்க்குமத்
தேமன் கோதை யுறுப்பியல் தேற்றுவான்.

வேறு

996 பெருகநீண் டறவுந் குறுகிடா வாகிப் பிளந்திடாக் கடையவாய்த் தழைந்து
கருவிவான் வண்டின் கணமெனக் கறுத்துக் கடைகுழன்று இயன்மணங் கான்று
புரையறச் செறிந்து நெறித்துமெல் லென்று புந்திகண் கவரநெய்த் திருண்ட
மருமலர்க் குழலாள் தன்பதிக் கினிய மல்லல்வான் செல்வமுண் டாகும்.

992. வெள்ளை யானையை உடைய இந்திரனும், தாமரை மலரில் உள்ள திருமகள் உறையும் மார்பையுடைய திருமாலும், பிரமதேவனும் தேவர் முதலிய பதினெட்டுக் கணத்தவரும் மற்றையோரும் மகிழ்வோடு வந்தார்கள்.

993. குணங்களைக் கடந்த சோமசுந்தரப் பெருமானும், இளம் கொடி போன்ற தடாதகைப் பிராட்டியாரும் ஒரு சேர வீற்றிற்கும் சிறப்பினை அங்கு வந்த அனைவரும் தரிசித்து, வணங்கி, முறையாக வாழ்த்தினார்கள்.

994. மணம்மிக்க மாலையுடைய முடியணிந்த சுந்தர பாண்டியன், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், அரசர்களுக்கும் தொன்று தொட்டு வரும் முறைப்படி வரிசை அளித்து, வீற்றிருந்தான். இனி அப்பாண்டியனின் திருக்குமாரனான உக்கிரவழுதி திருமணம் புரியும் தன்மையைக் கூறுவோம்.

காந்திமதியின் சிறப்பியல்பு

995. சோமசேகரன் புதல்வி காந்திமதியின் அழகு முழுவதையும் சுந்தரபாண்டியன் அறிந்து மகிழ்ந்திருந்தான். அத்தன்மையை உணர்ந்து, பொன் மேனியனாகிய வியாழ பகவான் ஆராய்ந்த நூலின் வழியே யாவருக்கும், காந்தி மதியின் இலக்கணத்தைத் தெரிவிக்கிறான்.

996. மிக நீளாமலும், மிக்க குறுகாமலும் பிளவு படாமல் நுனி தழைவுற்று, வண்டின் கூட்டம் போன்று கருமையுடைதாகி, நுனி குழற்சியுற்று, இயல்பாக மணம் வீசி, நெருக்கமுடன் மெத்தென்று மனத்தையும் கண்களையும் கொள்ளை கொள்ளும் மணம் மிக்க அக் காந்திமதியின் கூந்தலானது. அவளது கணவனுக்கு மிகுந்த செல்வத்தை உண்டாக்கும்.

997 திண்மத வேழ மத்தகம் போலத் திரண்டுயர் சென்னியா
ளவடன்
உண்மகிழ் கணவ னாயுள்நீன் டகில வுலகர சுரியனா மெட்டாந்
தண்மதி போன்று மயிர்நரம் பகன்று தசைந்துமூ விரலிடை
யகன்ற
ஒண்மதி நுதல்தன் பதிக்குநற் றிருவோ டுலப்பிலா ரோக்கிய
முண்டாம்.

998 கண்கடை சிவந்தான் பாலென வெளுத்து நடுவிழி கழியவுங்
கரிதாய்
எண்கவின் அடைந்து கோமள மாகி யிமைகரு மயிர்த்தெனி
னினிய
ஒண்கரும் புருவங் குனிசிலை யொத்த தத்தமி லொத்திரு
துளையும்
பண்கொள வுருண்டு துண்டம்எட் போது பதுமமேற் பூத்தது
போலும்.

999 வள்ளை போல் வார்ந்து தாழ்ந்திரு செவியு மடற்சுழி நல்லவாய்
முன்னர்த்
தள்ளிய காது மனோகரம் ஆகுந் தன்மையால் நன்மையோ
தழைக்கும்
ஒள்ளிய கபோலம் வட்டமாய்த் தசைந்திட் டுயர்ந்துகண் ணாடி
மண்டலம்போற்
தெள்ளிய வூற்ற மினியது நன்றென் றோதினான் திரைக்கடற்
செல்வன்.

997. திண்மையான யானையின் மத்தகம் போன்று திரண்டு உயர்ந்த தலையினை உடையவளின் கணவன் வாழ்நாள் வளர்ந்து அகில உலகையும் அரசாளத் தகுந்தவனாவான். குளிர்ச்சி பொருந்திய எட்டாம் நாள் நிலவின் தோற்றம் போல், மயிரும் நரம்பும் இல்லாமல், தசைப் பற்றுடையதாய், மூன்று விரல் அளவுடையதாய் விரிந்து பரந்த நெற்றியையுடையாள், தன் நாயகனுக்கு நல்ல செல்வமும் கெடுதல் இல்லாத உடல் நலமும் உண்டாக்குவாள்.

998. கண்ணானது கடைப்பகுதியில் சிவந்து, பசுவின் பால் போல் வெளுப்படைந்து, விழியின் நடுப் பகுதி மிகவும் கருமை வாய்க்கப் பெற்று, பொலிவினை உடைய அழகு பெற்று, இமையானது கருமயிரினை உடையதாக இருக்கப் பெற்றால் அது இன்பமுடையதாகும். ஒள்ளிய கருமையான புருவங்கள் வளைந்த வில்லைப் போன்றன. நாசியானது இரண்டு துளையும் தம்முள் வேறுபாடின்றி ஒத்து அழகு பெற உருட்சியுடைத்தாகி எள்ளின் மலர், தாமரை மலரின் மேல் மலர்ந்தது போல் முகத்தில் விளங்குமாயின் நன்மையாகும்.

999. இரண்டு காதுகளும் வள்ளைத் தண்டு போன்று வார் தலையுடையனவாய், தாழ்ந்து மடல் சுழிகள் நல்லனவாய், முன்னே தள்ளிய தோற்றமுடையனவாய் இருப்பின் அழகோடு நன்மையே உண்டாக்கும் தன்மையுடையனவாம். ஒளி பொருந்திய கபோலமானது வட்ட வடிவமாய், தசைப் பற்றுடையதாய் உயர்ந்து, கண்ணாடி வட்டம்போலத் தெளிவு டைய இனிய தன்மையுடையது என்று கடலின் தலைவனான வருணபகவான் கூறினான்.

1000 கொவ்வைவா யதரந் திரண்டிரு புடையுங் குவிந்துசேந்
திரேகைநேர் கிடந்தால்
அவ்வணி யிழைதன் னன்பனுக் கென்று நண்புரு வாகுமெண்
ணான்கு
வல்லவாள் எயிறு மிடைவெளி யின்றி வார்ந்தமேல் கீழிரண்
டொழுங்குஞ்
செவ்வனேர்ந் தாவின் பாலென வெள்கித்திகழின்நன்
றென்பர்நூல் தெளிந்தோர்.

1001 மெல்லிதாய்ச் சிவந்து கோமள மான நாவினாள் வேட்டவேட்
டாங்கே
வல்லைவந் தெய்த நுகர்ந்திடுந் தசைந்து வட்டமா யங்குலம்
இரண்டின்
எல்லைய தாகி மஞ்சுள மாகி யிருப்பத சிபுக நன்றென்பர்
அல்லியம் கமலம் போன்மலர்ந் திருள்தீர்ந் தவிர்மதி போல்வது
முகமே.

1002 திரைவளைக் கழுத்துத் தசைந்துகால் விரலின் அளவதாய்த்
திரண்டுமூன்றி ரேகை
வரைபடிற் கொழுந அகில மன்னவனா மார்பகந் தசைந்து
மூவாறு
விரலள வகன்று மயிர்நரம் பகன்று மிருந்ததேல் விழுமிதாம்
வேய்த்தோள்
புரையறத் தசைந்து மயிரகன் றென்பு புலப்படா மொழி யகோ
மளமாம்.

1000. கொவ்வைக் கனிபோலும் வாயின் இதழ் திரண்டு இரண்டு புறமும் குவிந்து சிவந்து நேரில் இரேகை இருக்குமாயின் அவ்வழகிய பெண் தன் கணவனுக்கு எப்பொழுதும் நட்பின் வடிவமாகத் திகழ்வாள். வலிமையான ஒளி பொருந்திய முப்பத்திரண்டு பற்களும் இடைவெளி இல்லாமல் நெருங்கி இருக்குமாயின், மேலும் கீழும் ஆகிய இரண்டு வரிசைகளும் தம்முள் ஒன்றாகப் பசுவின் பால் போல் வெண்மையுடையவாய் இருப்பின் நன்மை உண்டாகும் என்று நூல்வல்ல மேலோர் கூறுவர்.

1001. மெல்லிய சிவந்த இனிமையான நாக்கினை யுடையவள் வேண்டியவற்றை வேண்டிய அளவு கிடைக்கப் பெற்று அதனை நுகர்கின்ற தன்மையுடையவளாவாள். மோவாயானது தசைப்பற்றுடையதாய் வட்டமாய் அழகுடை யதாய் இருத்தல் நன்மை என்பர் பெரியர். முகமானது அழகிய தாமரை மலர்போல் மணம் வீசி, களங்கமில்லாமல் இருக்கும் அழகிய சந்திரனைப் போன்று குளிர்ச்சி பொருந்தி இருத்தல் நன்மையாகும்.

1002. கடலில் தோன்றிய சங்கு போன்ற கழுத்துத் தசைவுற்று நான்கு அங்குல அளவினையுடையதாய்த் திரண்டு, மூன்று இரேகையாகிய வரையினைப் பொருந்தி இருக்குமாயின் அப்பெண்ணின் கணவன் எல்லா வுலகங்களுக்கும் அரசனாவான். மார்பானது தசையுடையதாய்ப் பதினெட்டு அங்குலம் அளவுடையதாய் மயிரும் நரம்பும் இல்லாமல் உயர்ந்திருக்கு மாயின் நன்மை உடையதாம். மூங்கில் போன்ற தோள்கள் குற்றமறத் தசைப்பற்று உடையனவாய் மயிரில்லாமல் எலும்பு வெளியில் தெரியாமல் இருக்குமாயின் நன்மையாகும்.

1003 செங்கை நீண் டுருண்டு கணுக்கள்பெற் றடைவே
சிறுத்திடிற்செல்வமோ டின்பந்
தங்கும்வள் ளுகிர்சேந் துருண்டுகண் ணுள்ளங் கவர்வதாய்ச்
சரசரப் பன்றால்
அங்கவை நல்ல அகங்கைமெல் லெனச்சேந் திடைவெளி
யகன்றிடையுயர்ந்து
மங்கல மாச்சில் வரைகளி னல்ல விலக்கண வரையுள மாதோ.

1004 முத்தணி தனங்கள் கடினமாய்த் தசைந்து வட்டமாய் முகிழ்ந்திரு
கடநேர்
ஒத்திறு மாந்தீர்க் கிடையற நெருங்கி யுள்ளன மெலிந்தமர்ந்
துரோம
பத்திபெற் றயலே மயிர்நரம் பகன்ற பண்டியாள் உண்டிவேட்
டாங்கே
துயத்திடு நாபி வலம்சுழித் தாழ்ந்தால் தொலைவிலாத் திருவளம்
பெருகும்.

1005 இடைமயிர் நரம்பற் றிருபதோ டொருநான் கெழில்விரல்
அளவொடு வட்ட
வடிவதாய்ச் சிறுகி மெலிவது நிதம்ப மத்தகம் யாமை யின்
புறம்போற்
படிவநே ரொத்தல் நன்றிரு குறங்கும் படுமயி ரென்பகன்
றியானைத்
தடவுடைக் கையுங் கரபமுங் கதலித் தண்டுமொத் திருக்கினன்
றென்ப.

1006 அங்குமுள் மறைந்து வட்டமாய்த் தசைவ தணிமுழந் தாண்மயிர்
நரம்பு
தங்கிடா தடைவே யுருட்சியாய்ச் சிறுத்துச் சமவடி வாயழ
கடைந்த
சங்க மாஞ் சிரை யென் பறத்தசைந் தியாமை முதுகெனத்
திரண்டுயர்ந்தழகு
மங்கலம் பொலிந்த புறவடி மடந்தை மன்னவன் பன்னியா
மன்னோ.

1003. சிவந்த கைகள் உருண்டு கணுக்கள் பெற்றுச் சிறுத்திருக்குமாயின் செல்வத்தோடு இன்பம் தங்கும். சிவந்த நகங்கள் கூர்மையுடையனவாய்க் கண்ணையும் மனத்தையும் கவரும் தன்மையுடையனவாய்ச் சொர சொரப் பில்லாமல் இருப்பின் நன்மையுண்டாகும். உள்ளங்கை மென்மையுடையனவாய்ச் சிவந்து, இடைவெளியின்றி நடுவில் உயர்ந்து, பொலிவுடையன வாய், உத்தம இலக்கணம் உடைய ரேகைகள் இருப்பின் நன்மையுண்டாகும்.

1004. முத்து மாலை அணிந்த கொங்கைகள் இறுகியனவாய் தசைப்பற்றுடையனவாய் வட்டமாக அரும்பி இரண்டு குடங்களைப் போன்று இறுமாத்தலுற்று ஈர்க்குகூட இடையில் புக முடியாதபடி நெருக்கமாக இருப்பின் நன்மை யுண்டாகும். நடுவில் மயிர் வரிசை பெற்றுப்பக்கத்தில் மயிரும் நரம்பும் இல்லாத வயிற்றையுடையவள் விரும்பிய சிறந்த உணவினை நுகர்வாள். நாபியானது வலமாகச் சுழிந்து ஆழமுடையதாயின் செல்வம் பெருகும்.

1005. இடையானது மயிரும் நரம்பும் இன்றி இருபத்து நான்கு விரல் அளவோடு, வட்ட வடிவமாகி சிறுத்து தளர்ந்து இருப்பது அழகாகும். அல்குலானது யானையின் மத்தகமும், ஆமையின் முதுகும் போல வடிவு சமமாய் இருத்தல் நன்மையாகும். இரண்டு தொடையும் மயிரும் எலும்பும் இல்லாமல் யானையினது துதிக்கையும், கையின் அடியையும், வாழைத்தண்டையும் ஒத்திருக்குமாயின் நன்மை என்று கூறுவர்.

1006. அழகிய முழங்கால் எலும்பு வெளித் தோன்றாமல் உள்ளே மறைந்து வட்ட வடிவமாய்த் தசைப்பற்றுடையதாயின் நன்மையாகும். கணைக்கால்கள் மயிரும் நரம்பும் இல்லாமல் திரண்டு முறையே சிறுத்து அழகுடையனவாயின் நன்மை ஆகும். நரம்பும் எலும்பும் இன்றி தசைந்து ஆமையின் முதுகு போலத் திரண்டு உயர்ந்து அழகினாலும் பொலிவினாலும் விளங்கிய புற அடியினை உடைய பெண் அரசனுக்கு மனைவியாவாள்.

1007 அல்லியம் கமலக் கால்விரல் உயர்ந்து தூயவா யழகவாய்க்
கழுநீர்
மெல்லிதழ் நிரைத்தாங் கொழுங்குறத் திரண்டு வாலுகிர்
வெண்மதிப் பிளவு
புல்லிய போன்று மெல்லிய வாகிப் புகரறத் தசைந்தன வகத்தாள்
சொல்லிய தசைவு மென்மையுஞ் சமமும் துகளறப் படைத்தன
நன்றால்.

1008 வண்ணமாந் தளிர்போற் சிவந்தெரி பொன்போல்
வைகலும் வெயர்வையற் றாகம்
உண்ணமா யிருக்கில் செல்வமுண் டாகும் ஒண்மணம் பாடலங்
குவளை
தண்ணறா முளரி மல்லிகை நறுந்தண் சண்பகம் போல்வன
வாகும்
பண்ணவாங் கிளவி குயில் கிளி யாழிற் படின்வரும் பாக்கியம்
என்னா.

வேறு

1009 கருங்குழற் கற்றை தொட்டுச் செம்மலர்க் காலி னெல்லை
மருங்குல்நல் கூர்ந்த கன்னி வடிவெலாம் வாக்கின் செல்வன்
ஒருங்குநூ லுணர்வால் தெள்ளி யிம்பரின் றும்பர் தேத்தும்
இரங்குமிக் குயிலன் னாண்மெய் யிலக்கணம் அரிய தென்றான்.

1010 அங்கது கேட்டோர் யாரும் அகங்களி துளும்ப இப்பாற்
கொங்கலர் நறுந்தார்க் குஞ்சி உக்கிர குமரன் போந்து
மங்கல வரிசை மாண மத்தமான் சுமந்த வைகைச்
சங்கெறி துறைநீ ராடித் தகுங்கடி வனப்புக் கொள்வான்.

1007. அழகிய தாமரை போன்ற காலின் விரல்கள், உயர்ந்து தூய்மையான அழகுடையனவாய், செங்கழுநீர் மலர்களை வரிசையாக வைத்தாற் போல ஒருங்கு பெறத்திரண்டு வெள்ளிய நகங்கள், நிலாக் கீற்றைப்போலப் பொருந்தப் பெற்று, மென்மையுடையனவாய் குற்றமின்றித் தசையுடையனவாய் இருப்பின் நன்மையாம். உள்ளங் கால்கள், நூலில் கூறிய தசைப் பற்றும் மென்மைத் தன்மையும் சமனாதலும் குற்றமறப் பெற்றனவாயின் நன்மையாம்.

1008. மாந்தளிர் போன்ற சிவந்த நிறமுடைய உடம்பு, பொன்போல் பொலிந்து, எப்போதும் வியர்வை தோன்றாமல் வெம்மையாய் இருக்குமாயின் செல்வம் உண்டாகும். பாதரி, நீலோற்பலம், தாமரை, மல்லிகை, சண்பகம், ஆகிய இவற்றின் வாசனையை உடல் கொண்டிருக்க வேண்டும். இசையும் விரும்புகின்ற மொழியானது கிளியும் யாழுமாகிய இவற்றின் ஓசையைப் போல இருப்பின் பாக்கியம் வரும்.

1009. சிறிய இடையை உடைய காந்திமதியின் திரண்ட கரிய கூந்தல் முதல் செம்மலர்க் காலின் எல்லை வரை உள்ள உறுப்புகள் அனைத்தையும், வியாழக் குரவன் உறுப்பு நூலின் உணர்ச்சியால் ஒரு சேர ஆராய்ந்து, இத்தகைய சிறப்புடைய உறுப்பிலக்கணம் முற்றும் வாய்க்கப் பெற்ற பெண் வேறொருத்தி தேவலோகத்திலும் இல்லை என்று கூறினான்.

திருமணம் நடைபெறுதல்

1010. அங்கு அதனைக் கேட்ட அனைவரும் மன மகிழ்வுடன் வீற்றிருந்தனர். மகரந்தம் நிறைந்த மலர் மாலையை அணிந்திருந்த கூந்தலையுடைய உக்கிரவழுதி அங்கிருந்து எழுந்து, எட்டு மங்கல வரிசைகளும் சிறக்க, யானையால் சுமந்து வரப் பெற்ற வையை ஆற்றின் துறைகளில் நீராடிச் சிறந்த திருமணக் கோலம் செய்து கொள்ளத் தொடங்கினான்.

1011 கட்டவிழ் கண்ணி வேய்ந்து மான்மதக் கலவைச் சாந்தம்
மட்டனஞ் செய்து முத்தான் மாண்கலன் முழுதுந் தாங்கி
விட்டவர் கலைவான் திங்கள் வெண்கதிர்ச் செல்வன் போல்வந்
திட்டபூந் தவிசின் மேற்கொண் டிருந்தனன் சங்க மேங்க.

1012 அந்நிலை மணநீர் ஆடி அருங்கலப் போர்வை போர்த்த
கன்னியைக் கொணர்ந்து நம்பி வலவயின் கவின வைத்தார்
பன்னியொ டெழுந்து சோம சேகரன் பரனும் பங்கின்
மன்னிய வுமையு மாக மதித்துநீர்ச் சிரகந் தாங்கி.

1013 மங்கல நீரால் நம்பி மலரடி விளக்கி வாசக்
கொங்கலர் மாலை சூட்டிக் குளிர்மது பருக்க மூட்டி
நங்கைதன் கையைப் பற்றி நம்பிதன் கையி லேற்றிப்
புங்கவர் அறிய நன்னீர் மந்திரம் புகன்று பெய்வான்

1014 இரவிதன் மருமான் சோம சேகர னென்பேர் திங்கண்
மரபினை விளக்க வந்த சுந்தர மாறன் மைந்தன்
உரவுநீர் ஞாலந் தாங்கு முக்கிர வருமற் கின்றென்
குரவலர்க் கோதை மாதைக் கொடுத்தனன் எனநீர் வார்த்தான்.

1015 மைந்துறு மடங்கல் திண்காய் மணிவட வயிரவூசல்
ஐந்துடன் பதஞ்செய் பஞ்சி யணையினோ டன்னத் தூவிப்
பைந்துகில் அணையீ ரைந்து பவளவாய்ப் பசும்பொன் மேனி
இந்திர மணிக்கட் பாவை விளக்குநான் கிரட்டி யென்ப.

1011. முறுக்கவிழ்ந்த மலர் மாலையைச் சூடி, சந்தனத்தைப் பூசிக் கொண்டு, முத்தால் அமைந்த அணி கலன்களை அணிந்து கொண்டு, வெண்மையான ஒளியை உடைய சந்திரனைப் போல வந்து, மண்டபத்தில் உள்ள அழகிய ஆசனத்தின் மேல், சங்குகள் ஒலிக்க ஏறி அமர்ந்திருந்தான்.

1012. அப்பொழுது மணம் உள்ள நீரில் நீராட்டி, அரிய அணிகலன்களை அணிந்துள்ள காந்திமதியைக் கொண்டுவந்து, உக்கிரகுமரனின் வலப்புறம் அழகுற உட்கார வைத்தனர். பின்னர் சோமசேகரனும் அவன் மனைவியும் எழுந்து மணமக்களைச் சிவபெருமானாகவும் அவன் பக்கத்தில் உள்ள உமாதேவியாகவும் எண்ணிப் பார்த்து நீர் நிறைந்த கரகத்தைக் கையில் ஏந்தினர்.

1013. நல்ல அந்நீரினால் உக்கிரவழுதியின் மலர் போன்ற திருவடிகளை விளக்கி, மணம் பொருந்திய மாலையை அணிவித்து, குளிர்ந்த பாலும் பழமும் ஊட்டி, பெண்ணின் கையைப் பிடித்து, மணமகனின் கையில் வைத்துத் தேவர்கள் அறிய மந்திரம் சொல்லி நல்ல நீரினை வார்த்தனர்.

1014. ''சூரியனின் வழித் தோன்றலாகிய சோம சேகரன் என்னும் பெயருடைய நான், சந்திர குலத்தில் வந்துதித்த சுந்தரபாண்டியனின் திருக்குமாரனாகிய, உக்கிர குமாரனுக்கு என் புதல்வியாகிய காந்திமதியை இப்பொழுதே கொடுத்தேன்'' என்று தாரை வார்த்தான்.

வரிசைகள் வழங்குதல்

1015. வலிமையான சிங்கத்தின் கால் போன்ற அமைப்புடைய கால்களும், முத்து வடம் பூட்டிய வயிரத்தால் ஆன ஊசல் ஐந்தும், பஞ்சு பெய்த அணை பத்தும், அன்னத்தின் தூவி பெய்த ஆடையால் அமைந்த அணை பத்தும், பவளத் தாலாகிய வாயும், பசிய பொன்னாலாகிய உடலும், இந்திர நீலக் கல்லால் ஆகிய கண்களும் உடைய பாவை விளக்குகள் எட்டும் வழங்கினான்.

1016 அட்டில்வா யடுக்குஞ் செம்பொற் கலங்கள்நூ றம்பொன் வாக்கி
இட்டிழை மணிக்க ளாஞ்சி யேழுபொற் கவரி யெட்டு
விட்டொளிர் பசும்பொற் கிண்ணப் பந்திசூழ் விளங்க நாப்பண்
நட்டபொற் காலி னோடு நகைமணிக் கலநூ றென்ப.

1017. பெருவிலை யாரப் பேழை யாயிரம் பெற்ற நுண்டூ
சருவிலைப் பாட்டு வெவ்வே றமைந்தன பேழை முந்நூ
றுருவமு தெழுதிச் செய்த வோவியப் பாவை யன்னார்
திருமணிக் கலனோடு ஏவற் சேடியர் எழுநூற் றைவர்.

1018 விளைவொடு மூன்று மூதூர் மின்னுவிட் டெறியுஞ் செம்பொன்
அளவிரு கோடி யின்ன வரும்பெறன் மகட்குச் செல்வ
வளமுற வரிசை யாக வழங்கினான் முழங்கி வண்டு
திளைமதுக் கண்ணிச் சோம சேகர மன்னன் மாதோ.

1019 ஆர்த்தன வியங்க ளெல்லாம் அமரர் மந்தார மாரி
தூர்த்தனர் வேள்விச் செந்தீச் சுழித்தது வலமாய்த் துள்ளி
வார்த்தன மடவார் நாவின் முளைத்தன வாழ்த்து மன்றல்
பார்த்தனர் கண்க ளெல்லாம் பெற்றன படைத்த பேறு.

1020 பொதியவிழ் கடப்பந் தண்டார்ப் புயத்திளங் காளை யன்னான்
முதியவர் செந்தீ யோம்ப இன்னிய முழங்கக் காந்தி
மதியைமங் கல்நாண் பூட்டி வரிவளைச் செங்கை பற்றி
விதிவழி யேனை மன்றல் வினையெல்லா நிரம்பச் செய்தான்.

1016. சிவந்த பொன்னால் அமைந்த அடுக்களைப் பாத்திரங்கள் நூறும், அழகிய பொன்னால் வார்த்து மணிகளைப் பதித்து இழைத்த (எச்சில் உமிழும்) படிக்கம் ஏழும், பொன் காம்பமைந்த சாமரை எட்டும். ஒளிவீசும் பசும் பொன் கிண்ண வரிசை சூழ்ந்து விளங்க நடுவே நடப்பட்ட பொன்னாலாகிய கால்களையுடைய மாணிக்கப் பாத்திரங்கள் நூறும் வழங்கினான்.

1017. முத்துமாலையும், ஆயிரம் காணம் விலையுள்ள வெண்மையான நூல் ஆடையும், அதிக விலையுள்ள பட்டும், ஆகிய இவைகள் வைக்கப்பட்ட தனித்தனிப் பேழைகள் முந்நூறும், அளித்து, எழுதுகோலினை அமுதத்தில் தோய்த்து எழுதப்பட்ட ஓவியப்பாவை போன்று அழகு மிக்க சிறந்த மாணிக்க அணிகள் அணிந்த பணிப்பெண்கள் ஏழு நூற்று ஐவரை ஏவல் செய்ய வழங்கினான்.

1018. நல்ல விளைச்சலையுடைய பெரிய மூன்று ஊர்களையும் ஒளி வீசும் செம்பொன் இரண்டு கோடியும், இவை போன்ற பிறவற்றையும் தன் மகளுக்கு, வண்டுகள் ஒலிக்கும் தேனுடைய மாலையை அணிந்த சோமசேகர மன்னன் தன் செல்வ வளத்திற்கு ஏற்ப வரிசையாகக் கொடுத்தான்.

1019. பல வாத்தியங்கள் ஒலி செய்தன. தேவர்கள் கற்பக மலர்களை மழை போன்று பெய்தனர். வேள்விக் குண்டத்தின் சிவந்த தீயானது வலமாகச் சுழன்று எழுந்தது, பெண்கள் வாழ்த்துப் பாடல்களைப் பாடினர். படைக்கப் பெற்றதனால் உண்டான பயனை, திருமண விழாவைப் பார்த்தவர்களின் கண்கள் அடைந்தன.

1020. கடப்ப மலரின் குளிர்ச்சி பொருந்திய மாலையை யணிந்த, திருத் தோள்களையுடைய, முருகக் கடவுளைப் போன்ற உக்கிரவழுதி, இனிய வாத்தியங்கள் முழங்க, காந்திமதியை மங்கல நாண் அணிவித்து, வளையல் அணிந்த சிவந்த கையைப் பற்றி, மற்ற திருமணச் செயல்கள் யாவும், வேத விதிப்படி செய்து மணம் புரிந்து கொண்டான்.

வேறு

1021 எண்ணி லாத வளத்தினொடும் இரவி மருமான் மடப்பிடியைப்
பண்ணி லாவு மறையொழுக்கம் பயப்ப வேள்வி வினைமுடித்துத்
தண்ணி லாவெண் கலைமதியுந் தாரா கணமுந் தவழ்ந்துழல
விண்ணி லாவு மணிமாட வீதி வலமாய் வருமெல்லை.

1022 மின்னேர் பொன்னந் தொடியினரும் மென்செம் பஞ்சி யடியினரும்
பொன்னேர் மணிப்பூண் முலையினரும் புலம்பு மணிமே கலையினரும்
அன்னே ரோதித் தாரினரு மாகிக் கண்ணு மனமுமவன்
முன்னே தூது நடப்பதென நடப்ப நடந்தார் முகிழ்முலையார்.

1023 சுருங்கும் இடையார் தன்பவனி தொழுது வருவார் தமக்கிரங்கி
மருங்குற் பாரம் கழிப்பான்போற் கலையைக் கவர்ந்தும் வரைத் தோள் மேல்
ஒருங்கு பாரங் கழிப்பான்போல் வளையைக் கவர்ந்தும் உள்ளத்துள்
நெருங்கு பாரங் கழிப்பான்போ னிறையைக் கவர்ந்து நெறிச்செல்வான்.

1024 வான மதிசேர் முடிமறைந்த வழுதி மகனே யிவனென்றால்
ஆனை யெருத்திற் சிங்கஇள வடலே றென்ன வயல்வேந்தர்
சேனை தழுவ வரும்பவனிக் கொப்பேது ஒப்புச் செப்புங்கால்
யானை மகளை மணந்துவரு மிளையோன் பவனிச் செல்வமே.

உலாவருதல்

1021. சூரியன் மரபில் வந்த சோமசுந்தரனின் மகளை அளவில்லாத செல்வத்துடன் வேதமுறைப்படி திருமணம் செய்து கொண்டு ஒளி பொருந்திய சந்திரனும் நட்சத்திரங்களும் தவழ்ந்து வருமாறு, விண்ணை முட்டும் அழகிய மாடங்கள் அமைந்த வீதிகளில் வலமாக உலா வந்தான்.

1022. மின்னல் போன்ற மெல்லிய பொன்னாலமைந்த வளையல்களை அணிந்தவரும், மெல்லிய செம்பஞ்சுக் குழம்பினைப் பூசிய பாதங்களை உடையவரும், அழகிய மணிக்கலன் உடைய கொங்கையினை உடையவரும், ஒலிக்கின்ற மேகலையை அணிந்தவரும், இருள் போன்ற கூந்தலில் மலர் சூடியவரும் ஆகி, கண்களும் மனமும் அவன் முன்னே தூது செல்வது போன்று முன்னே செல்ல, அப்பெண்கள் சென்றார்கள்.

1023. தன்னுடைய திருவுலாவைத் தொழுது வருவாராகிய சிறிய இடையினை உடைய மகளிர்க்காக இரக்கப் பட்ட உக்கிர குமாரன், அவர்களின் இடையின் பாரத்தைக் குறைப்பவன் போல் மேகலையைக் கவர்ந்தும், தோளின் பாரத்தை நீக்குபவன் போல் வளையல்களை அபகரித்தும், உள்ளத்தின் கண் உள்ள பொறையை நீக்குபவன் போல் நிறையைக் கவர்ந்தும் வீதியிற் செல்வான்.

(மேகலை, வளை போன்றவை அவர்களின் உடல் மெலிவால் கழன்றன. அவனிடம் உள்ளம் சென்றதால் நிறை நீங்கியது.)

1024. வானத்தில் உள்ள சந்திரனைத் தன் முடியில் அணிந்த சிவபெருமான் அதனை மறைத்து வந்த சுந்தர பாண்டியனின் புதல்வனே இவ்வுக்கிர குமாரன் என்றால், யானையின் பிடரியில் இளைய ஆண் சிங்கம் போல இவர் வந்தருளுகின்ற திருவுலாவிற்கு ஒப்பாவது வேறு யாது? தெய்வயானையைத் திருமணம் செய்து வருகின்ற முருகப் பெருமானின் திருவுலாச் சிறப்பே இவர்க்கு ஒப்பாகும்.

1025 இம்மை தனிலு நன்மைதரும் ஈசன் றனையும் வாச வற்கு
வெம்மை தருவன் பழிதவிர்த்த விமலன் றனையு மங்கயற்கண்
அம்மை தனையும் பணிந்துமீண் டரசன் கோயி லடைந்தீன்றோர்
தம்மை முறையா லடிக்கமலந் தலையிற் பணிந்தான்
தனிக்குமரன்.

1026 ஆனா வாறு சுவையடிசில் அயில்வோர் தம்மை யயில்வித்து
நானா வரிசை வரன்முறையா நல்கி விடையும் நல்கிப்பின்
வானா டவர்க்கும் விடைகொடுத்து மதிக்கோன்
ஒழுகி வைகுநாட்
டேனார் கண்ணித் திருமகனுக் கிதனைச் செப்பியிதுசெய்வான்.

1027 மைந்த கேட்டி யிந்திரனுங் கடலும் உனக்கு வான்பகையாஞ்
சந்த மேருத் தருக்கடையுஞ் சதவேள் விக்கோன் முடிசிதற
இந்த வளைகொண் டெறிகடலி லிவ்வேல் விடுதி
யிச்செண்டால்
அந்தமேரு தனைப்புடையென் றெடுத்துங் கொடுத்தா
னவைமூன்றும்.

1028 அன்ன மூன்று படைக்கலமுந் தொழுது வாங்கி யடலேறு
தன்னை நேரா யெதிர்நிற்குந் தனையன் றனையுக் கிரவழுதி
என்னவாதி மறைமுழங்க இயங்கள் ஏங்க முடிகவித்துத்
தன்ன தாணை யரசுரிமை தனிச்செங் கோலுந் தானல்கா.

1025. இம்மைப் பயனை அளிக்கும் சிவபெருமானையும், இந்திரனுக்குத் துன்பம் தந்த, வலிய பழியை நீக்கி அருளிய, சோம சுந்தரக் கடவுளையும், அங்கயற்கண் அம்மையாரையும் வணங்கி அரசன் மாளிகையை உக்கிர குமாரன் அடைந்தான். பின்னர் தன்னைப் பெற்ற தந்தை தாயரை முறைப்படி தலையினால் அவர் தம் பாதங்களில் வணங்கினான்.

1026. சந்திர மரபில் தோன்றிய சுந்தரபாண்டியன் அறுவகைச் சுவையுடைய உணவினை, அனைவரையும் உண்ண வைத்து முறைப்படி அவரவர்க்குரிய வரிசைகளை சிறபபுறச் செய்து, விடையும் கொடுத்தனுப்பினார். தேவர்கட்கும் விடை கொடுத்து அனுப்பி விட்டுச் சிறப்புற ஆட்சி செய்து வரும் நாளில், தன் மகனுக்குப் பின் வருவனவற்றைச் சொல்லத் தொடங்கினார்.

1027. ''தேவேந்திரனும், கடலும் உனக்குப் பெரிய பகையாகும். மேருமலை செருக்குடையது. எனவே, இந்த வளையினைக் கொண்டு, இந்திரன் முடி சிதறுமாறு எறிவாய். கடலில் இந்த வேல் படையை விடுவாய். இந்தச் செண்டினால் அந்த மேருமலையைத் தாக்குவாய்'' என்று கூறி மூன்றையும் எடுத்துக் கொடுத்தார். (செண்டு என்பது ஒருவித ஆயுதம்)

1028. அம்மூன்று படைக் கருவிகளை வணங்கி, அவற்றை வாங்கிக் கொள்ள, எதிரே நிற்கும் புதல்வனைப் பாண்டிய வேந்தன் என்று கூறும்படி முதன்மையுடைய வேதங்கள் முழங்கவும், வாத்தியங்கள் ஒலிக்கவும், முடிசூட்டி, தன்னுடைய ஆணையையும் அரசாட்சிக்குரிய ஒப்பற்ற செங்கோலையும் கொடுத்தருளினார்.

1029 சூட்சி வினையிற் பொன்னனைய சுமதி தன்னைத்
தொன்னூலின்
மாட்சி யறிஞர் தமைநோக்கி வம்மின் இவனைக்
கண்ணிமைபோற்
காட்சி பயக்குங் கல்வியும் போற் காப்பீ ரிதுநுங் கடனிம்மன்
ஆட்சி யிவன தென்றிளைய அரியே றனையான் தனைநல் கா

வேறு

1030 வெய்யவேற் காளை யன்னான் றன்னையும் வேறு நோக்கி
ஐயவிவ் வையந் தாங்கி யளித்தன னெடுநா ளிந்த
மையறு மனத்தார் சொல்லும் வாய்மையா றொழுகி நீயுஞ்
செய்யகோன் முறைசெய் தாண்டு திருவொடும்
பொலிக என்றான்.

1031 பன்னருங் கணங்கள் எல்லாம் பண்டைய வடிவ மாகத்
தன்னருட் டுணையாய் வந்த தடாதகைப் பிராட்டி யோடும்
பொன்னெடுங் கோயில் புக்குப் பொலிந்தன னிச்சை தன்னால்
இன்னருட் படிவங் கொள்ளு மீறிலா வின்ப மூர்த்தி.

வேறு

1032 பின்னர் உக்கிரப் பெயர்த ரித்தவத்
தென்னர் கோமகன் தெய்வ நான்மறை
மன்னு நல்லறம் வளர வையகந்
தன்ன தாணையாற் றாங்கி வைகினான்.

உக்கிரபாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம் முற்றிற்று.

1029. ஆலோசனையில் பிரகஸ்பதியைப் போன்ற சுமதியையும், நீதி நூல்களை ஆய்ந்த அறிவுடைய அறிஞரையும் பார்த்து, வாருங்கள் என்றழைத்து, ''இவ்வுக்கிர வழுதியைக் கண்ணின் இமை போலவும், அறிவினைக் கொடுக்கும் கல்வி போலவும், காப்பாற்றுவீர்! இது உங்களது கடமையாகும். இனி இவ்வுலகின் ஆட்சி இவனுடையது ஆகும்'' என்று கூறி உக்கிர வழுதியை அவரிடம் அளித்தார்.

1030. பின்னர், வேல் படையை உடைய முருகப் பெருமானைப் போன்ற தன் புதல்வனையும் நோக்கி, ''ஐயனே, இவ்வுலகினைத் தாங்கி நான் நெடுங்காலம் ஆட்சி புரிந்து விட்டேன். இனி நீயும் இக்குற்றமற்ற உள்ளத்தினர் சொல்லுகின்ற உண்மையான வழியிலே நடந்து செங்கோல் செலுத்திச் செல்வத்தோடு வாழ்க!'' என்று வாழ்த்தியருளினார்.

1031. தனது விருப்பத்தால் இனிய அருளுருவம் கொண்டு நிற்கும் இன்ப வடிவினையுடைய சுந்தரபாண்டியனாகிய இறைவன், சொல்லுதற்கரிய தேவகணங்கள் அனைத்தையும் பண்டைய வடிவமாக மாற்றி, தனக்கு அருள் துணையாக வந்த தடாதகைப் பிராட்டியாருடன் பொன்னாலாகிய பெரிய திருக் கோயிலினுள் சென்று விளங்கினார்.

1032. உக்கிர பாண்டியன் என்னும் பெயர் பெற்ற அப்பாண்டிய மன்னன், தெய்வத் தன்மை பொருந்திய நான்கு மறைகளில் கூறிய சிறப்பான அறங்கள் செழித்து வளரும்படி தன்னுடைய ஆணையால் நாட்டைப் பாதுகாத்து அரசாண்டு இருந்தான்.

உக்கிரபாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம் முற்றிற்று.

13. கடல் சுவற வேல் விட்ட படலம்

1033 வளையொடு செண்டுவேன் மைந்தற் கஞ்சுரும்
பளையவேம் பணிந்தகோன் அளித்த வாறிதத்
தளையவிழ் தாரினான் தனயன் வேலைமேல்
இளையவ னென்னவே லெறிந்த தோதுவாம்.

1034 திங்களின் உக்கிரச் செழியன் வெண்குடை
எங்கணு நிழற்றவீற் றிருக்குநாள் வயின்
சங்கையில் லாதமா தரும வேள்விகள்
புங்கவர் புடைதழீஇப் போற்ற வாற்றுநாள்.

1035 அரும்பரி மகந்தொணூற் றாறு செய்துழிச்
சுரும் பரி பெரும்படைத் தோன்ல் தண்ணறா
விரும்பரி முரன்றுசூழ் வேம்பின் அங்குழைப்
பொரும்பரி வீரன்மேற் பொறாது பொங்கினான்.

1036 மன்னிய நாடெலாம் வளஞ்சு ரந்துவான்
பொன்னியல் நாடுபோற் பொலித லாலிந்த
மின்னிய வேலினான் வேள்வி செய்வதென்
றுன்னிய மனத்தனோர் சூழ்ச்சி யுன்னினான்.

1037 பொருங்கடல் வேந்தனைக் கூவிப் பொள்ளென
இருங்கட லுடுத்தபா ரேழும் ஊழிநாள்
ஒருங்கடு வெள்ளமொத் துருத்துப் போய்வளைந்
தருங்கடி மதுரையை யழித்தி யாலென்றான்.

13. கடல் சுவற வேல் விட்ட படலம்

1033. அழகிய வண்டுகள் ஒலிக்கும் மலர் மாலையை அணிந்த சுந்தரபாண்டியனின் புதல்வனாகிய உக்கிர வழுதிக்கு, வளையும் செண்டும், வேலும், அளித்த திருவிளையாடல் இதுவாகும். அச் சுந்தரபாண்டியனின் மகனாகிய உக்கிரவழுதி கடலின் மேல் வேற்படையை ஏவிய வரலாற்றினை இனிக் கூறுவோம்.

1034. உக்கிரவழுதிப் பாண்டியன், சந்திரன் போன்று தன் வெண் கொற்றக் கொடை எங்கும் நிழல் செய்ய அரசு செய்யும் நாளில், அளவில்லாத பெரிய தருமங்களையும், வேள்விகளையும், தேவர்கள் சூழ்ந்து கொண்டு போற்றுதல் செய்ய இயற்றி வந்தான்.

இந்திரன் பொறாமை

1035. செய்வதற்கரிய அசுவமேதயாகம் தொண்ணூற்று ஆறு செய்த போது, மலைகளின் சிறகுகளை அரிந்த பெரிய உக்கிரப் படையினையுடைய இந்திரனானவன், தேன் உண்ட வண்டுகள் உறையும் வேப்பம் பூ மாலையை அணிந்த, போர் செய்யும் குதிரைகளையுடைய உக்கிரவழுதியின் மேல் கோபம் கொண்டு பொங்கினான்.

1036. ''மழையானது குறைவின்றிப் பெய்வதால், அல்லவா அவனுடைய நிலை பெற்ற சிறப்புடைய நாடானது பொன்னுலகம் போல் பொலிகின்றது. அதனாலன்றோ இவ்வுக்கிரவழுதி வேள்வி செய்து வருகின்றான்'' என்று எண்ணி ஒரு சூழ்ச்சியை மனத்தின்கண் கருதினான்.

1037. உடனே அலைகள் மோதும் கடலினை உடைய மன்னனாகிய வருணனைக் கூவி அழைத்து, ''விரைந்து சென்று ஏழுகடல் சூழ்ந்த தீவுகளையும் ஊழிக் காலத்து வெள்ளம் ஒரு சேர அழிப்பது போன்று, நீ கோபத்துடன் சென்று அழிப்பாயாக,'' என்று கட்டளை இட்டான்.

1038 விளைவது தெரிகிலன் வேலை வேந்தனும்
வளவயல் மதுரையை வளைந்திட் டிம்மெனக்
களைவது கருதினான் பேயுங் கண்படை
கொளவரு நனந்தலைக் குருட்டுக் கங்குல் வாய்.

வேறு

1039 கொதித்தலைக் கரங்களண்ட கூடமெங்கு மூடுபோய்
அதிர்த்தலைக்க ஊழிநாளில் ஆர்த்தலைக்கு நீத்தமாய்
மதித்தலத்தை யெட்டிமுட்டி வருமொரஞ் சனப்பொருப்பு
உதித்தலொத்து மண்ணும்விண்ணு முட்கவந்த துததியே.

1040 வங்கவேலை வெள்ளமாட மதுரைமீது வருசெயல்
கங்குல்வாய திங்கண்மீது காரிவாய காருடல்
வெங்கண்வாள ராவிழுங்க வீழ்வதொக்கும் அலதுகார்
அங்கண்மூட வருவதொக்கு மல்லதேது சொல்வதே.

1041 வட்டயாமை பலகைவீசு வாளைவாள்கண் மகரமே
பட்டயானை பாய்திரைப் பரப்புவாம் பரித்திரள்
விட்டதோணி யிரதமின்ன விரவுதானை யொடுகடல்
அட்ட மாக வழுதிமேல் அமர்க்கெழுந்த தொக்குமே.

கடல் பொங்கி மதுரையை அடைதல்

1038. கடலுக்குத் தலைவனாகிய வருணனும் பின்னால் உண்டாகப் போகும் விளைவுளை எண்ணிப் பார்க்காமல், பேயும் கண்ணுறங்கும், இருள் பொழுதில், வயல்கள் மிக்க வளப்ப முடைய மதுரை நாட்டைச் சூழ்ந்து கொண்டு, விரைந்து, அழித்துவிட எண்ணினான்.

1039. கடலானது தன்னுடைய அலைக் கரங்களால், அண்டகூடம் முழுவதும் ஊடுருவிச் சென்று, நடுக்கம் உண்டாக்கி வருத்தமடையச் செய்து, ஊழிக் காலத்தில் ஆரவாரத்துடன் பொங்குகின்ற வெள்ளம் போன்று சந்திர மண்டலத்தின் உயரத்திற்கு, வருகின்ற ஒரு பெரிய மலை போன்று மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் அஞ்சும்படி வந்தான்.

1040. மரக் கலங்களையுடைய கடலின் வெள்ள மானது, பெரிய மாடங்களையுடைய் மதுரைத் திருநாட்டில் வரும்போது, 'சந்திரனிடம் கரிய உடலையும் கொடிய கண்ணையும் உடைய இராகு என்னும் பாம்பானது அதனை விழுங்க விரைந்து வருகின்ற தன்மை போன்று கரிய மேகங்கள் மூட வருகின்ற தன்மை இருந்தது' என்று சொல்வதன்றி வேறென்ன சொல்ல முடியும்.

1041. கடலின் வட்ட ஆமைகள் கேடயம், வாளை மீன்கள், வாட்படைகள், சுறாமீன்கள், நெற்றிப் படைகளையுடைய யானைகள், பரந்த அலைக் கூட்டங்கள் தாவுகின்ற குதிரைகள், ஓடவிட்ட தோணிகளே இரதம் என்றெண்ணும் இத்தன்மை களோடு கடலானது உக்கிர பாண்டியன் மேல் போருக்கு எழுந்ததைப் போன்று எழுந்தது.

1042 இன்னவா றெழுந்தவேலை மஞ்சுறங்கு மிஞ்சிசூழ்
நன்னகர்க் குணக்கின்வந்து நணுகும் எல்லை யரையிரா
மன்னவன்க னாவின்வெள்ளி மன்றவாணர் சித்தராய்
முன்னர்வந் திருந்தரும்பு முறுவல்தோன்ற மொழிகுவார்.

1043 வழுதியுன்ற னகரழிக்க வருவதாழி வல்லைநீ
எழுதிபோதி வென்றிவே லெறிந்துவாகை பெறுகெனத்
தொழுதசெங் கரத்தினான் துதிக்குநாவி னானெ ழீஇக்
கழுதுறங்கு கங்குலிற் கனாவுணர்ந்து காவலான்.

1043 கண்ணிறைந்த அமளியிற் கழிந்துவாயில் பலகடந்து
உண்ணிறைந்த மதியமைச்ச ருடன்விரைந்து குறுகியே
மண்ணிறந்த தெனமுழங்கி வருதரங்க வாரிகண்டு
எண்ணிறந்த வதிசயத்த னாகிநிற்கும் எல்லைவாய்.

1045 கனவில்வந்த சித்தவேடர் நனவில்வந்து காவலோன்
நினைவுகண்டு பொழுதுதாழ நிற்பதென்கொல் அப்பனே
சினவிவேலை போலவந்த தெவ்வைமான வலிகெட
முனையவே லெறிந்துஞால முடிவுதீர்த்தி யாலென.

1046 எடுத்தவேல் வலந்திரித் தெறிந்தவேலை வேல்முனை
மடுத்தவேலை சுஃறென வறந்துமான வலிகெட
அடுத்துவேரி வாகையின்றி யடிவணங்கு தெவ்வரைக்
கடுத்தவேல் வலான்கணைக் காலின்மட்ட தானதே.

1042. முகில்கள் தங்கும் மதில்களையுடைய அப்பெரிய மதுரை நகரின் கிழக்குப் பக்கத்தில் அக்கடலானது நெருங்கியது. அந்த நடு இரவில் பாண்டிய மன்னனின் கனவில், வெள்ளியம் பலவாணர் ஒரு சித்தர்போல் தோன்றி, புன்னகையோடு சொல்லத் தொடங்கினார்.

1043. ''பாண்டியனே! உனது நகரத்தை அழிக்கும் பொருட்டுக் கடலானது வருகின்றது. ஆதலால் நீ விரைந்து எழுந்து போய் வெற்றி மிக்க வேல் படையை விடுத்து வெற்றி பெறுவாயாக'' என்று கூறினர். உடனே உக்கிர வழுதி, நாவினால் துதித்து எழுந்து, நள்ளிரவில் தான் கண்ட கனவின் பொருளை உணர்ந்து கொண்டான்.

1044. விழித்து எழுந்த அப்பாண்டியன் அரண்மனை வாயில்கள் பலவற்றையும் கடந்து உள்ளே நிறைந்து அறிவுடைய அமைச்சர்களுடன் சென்று, நிலவுலகமே அழிந்து விட்டது என்று தோன்றுமாறு ஆரவாரத்துடன் வருகின்ற அலைகளையுடைய கடலை நோக்கி வியப்படைந்தவனாகி நின்றான்.

1045. கனவிலே தோன்றிய அச்சித்தர் நனவிலும் நேரில் வந்தார். அவர், ''அப்பனே! நீ காலம் தாழ்த்தி நிற்பது எதற்காக? சினந்து கடல் வடிவமாக வந்த பகையை அத்தகைய வலிமையானது நீங்கும்படி, கூரிய வேல் படையை எறிந்து வெற்றி கொண்டு உலகிற்கு வருகின்ற அழிவை நீக்குவாய்,'' என்று கூறினார்.

1046. உடனே உக்கிர வழுதி வேற்படையை எடுத்து அதனை வலமாகச் சுழற்றி வீசினான். வேலின் முனையில் பொருந்திய கடலானது, சுஃறென ஒலியுண்டாகும்படி நீர் வற்றியது. அதன் மன வலிமை கெட, வெற்றி மாலையின்றித் தோல்வியுற்று, வென்றவரின் பாதங்களை வணங்குகின்ற பகைவர்போல உக்கிர வழுதியின் கணைக் காலின் அளவிற்குக் குறைந்து போனது.

1047 சந்தவேத வேள்வியைத் தடுப்பதன்றி உலகெலாஞ்
சிந்தவேறு சூழ்ச்சிசெய்த தேவர்கோவின் ஏவலால்
வந்தவேலை வலியழிந்த வஞ்சகர்க்கு நன்றிசெய்து
இந்தவேலை வலியிழப்ப தென்றுமுள்ள தேகொலாம்.

1048 புண்ணிடை நுழைந்த வேலாற் புணரியைப் புறங்கண்டோன்பால்
மண்ணிடை நின்ற சித்தர் வானிடை மறைந்து ஞானக்
கண்ணிடை நிறைந்து தோன்றுங் கருணையால் வடிவங்கொண்டு
விண்ணிடை அணங்கி னோடு விடையிடை விளங்கி நின்றார்.

1049 முக்கணும் புயங்கள் நான்கு முளைமதிக் கண்ணி வேய்ந்த
செக்கரஞ் சடையுங் காள கண்டமுந் தெரிந்து தென்னன்
பக்கமே பணிந்தெ ழுந்து பரந்தபே ரன்புந் தானுந்
தக்கவஞ் சலிசெய்து ஏத்தித் தரைமிசை நடந்து செல்வான்.

1050 துந்துபி யைந்து மார்ப்பப் பாரிடந் தொழுது போர்ப்பத்
தந்திர வேதகீதந் ததும்பியெண் டிசையுந் தாக்க
அந்தர நாடர் ஏத்த வகல்விசும் பாற தாக
வந்துதன் கோயில் புக்கான் வரவுபோக் கிறந்த வள்ளல்.

1051 அஞ்சலி முகிழ்த்துச் சேவித் தருகுற வந்த வேந்தன்
இஞ்சிசூழ் கோயில் எய்தி யிறைஞ்சினன் விடை கொண் டேகிப்
பஞ்சின்மெல் லடியா ரட்ட மங்கலம் பரிப்ப நோக்கி
மஞ்சிவர் குடுமி மாட மாளிகை புகுந்தான் மன்னோ.

1047. வேதமுறைப்படி நடந்த வேள்வியைத் தடுப்ப தல்லாமல், உலகனைத்தும் அழியுமாறு சூழ்ச்சி செய்த தேவேந்திரனின் கட்டளைப்படி, பெருகி வந்த கடலானது வலிமை இழந்தது. வஞ்சனையுடைய தீயோர்களுக்கு உதவுவதும் அதனால் வலிமையை இழப்பதும் இக்கடலுக்கு எக்காலத்தும் உள்ள ஒரு செயலே போதும்!

இறைவன் காட்சியளித்தல்

1048. புண்ணில் நுழைந்த வேற் படையால், கடலைப் புறம் கொடுக்கச் செய்த உக்கிரவழுதிப் பாண்டியன் முன்னர் நிலத்தில் நின்று கொண்டிருந்த சித்த மூர்த்தி வானில் சென்று மறைந்தார். பின்னர் ஞானக் கண்ணால் கண்டு களிக்கின்ற திருவுருவினனாகி, உமையம்மையாரோடு இடப ஊர்தியில் காட்சியளித்தார்.

1049. மூன்று கண்களையும், நான்கு திருத் தோள்களையும், பிறையை அணிந்த அழகிய சடையையும், நீலகண்டத்தையும் பாண்டியன் கண்டு வணங்கினான். அப் பக்கத்தையே நோக்கி விழுந்து வணங்கி எழுந்தான். விதிப்படி அஞ்சலி செய்து துதித்தான். பின்னர் தரைமீது நடந்து செல்கின்றான்.

1050. பிறப்பு இறப்பு இல்லாத இறைவன், ஐந்து துந்துபிகளும் முழங்கவும், பூத கணங்கள் வணங்கிச் சூழ்ந்து கொள்ளவும், இசையோடு கூடிய சிவாக மங்களும், வேதங்களும் எட்டுத் திக்குகளிலும் ஒலிக்கவும், தேவ உலகினர் துதிக்கவும், அகன்ற வான் வழியாக வந்து தனது திருக்கோயிலினுள் புகுந்து அருளினான்.

1051. இருகைகளையும் கூப்பி வணக்கத்துடன் வந்த பாண்டிய மன்னன், மதில் சூழ்ந்த திருக்கோயிலை வந்தடைந்து வணங்கினான். பின்னர் அவரிடம் விடை பெற்றுச் சென்றான். பஞ்சைவிட மென்மையான பாதங்களை உடைய பெண்கள் எட்டு மங்கலங்களையும் தாங்கி, எதிர் வரப் பார்த்து, மேகம் தவழும் சிகரமுடைய தம் மாளிகையுள் புகுந்தான்.

1052 வளையெயில் மதுரை மூதூர் மறிகடல் இவற்றில் நாப்பண்
விளைவய னகர மெல்லாம் வெள்ளியம் பலத்து ளாடுந்
தளையவிழ் கொன்றை வேணித் தம்பிரான் தனக்கே சேர்த்துக்
களைகணா யுலகுக் கெல்லா மிருந்தனன் காவல் வேந்தன்.

கடல்சுவற, வேல்விட்ட படலம் முற்றிற்று.

14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

1053 மின்னவிர் மணிப்பூண் மார்பன் வேலையை வேலால் வென்று
பொன்னவிர் வாகை வேய்ந்த புகழுரை செய்தே நாக
நன்னகர் ஆளி செம்பொ னகைமுடி சிந்த வந்த
மன்னவன் வளைகொண் டோச்சி வென்றதும்
வகுத்துச் சொல்வாம்.

1054 கோமக னிகழு நாளிற் கோணிலை பிழைத்துக் கொண்மூ
மாமழை மறுப்பப் பைங்கூழ் வறந்துபுல் தலைக டீந்து
காமரு நாடு மூன்றுங் கையற வெய்த மன்னர்
தாமது தீர்வு நோக்கித் தமிழ்முனி யிருக்கை சார்ந்தார்.

1052. வளைந்த மதில்களையுடைய பழைய நகரான மதுரை நகரமும், அலை மடங்கும் கடலும், கழனி சூழ்ந்த விளை நிலங்களும், வெள்ளியம்பலத்திலே திரு நடனம்புரியும் கொன்றை மாலையை அணியும் இறைவனுக்கே சேர்த்து, காவல் வேந்தனாகிய உக்கிர பாண்டியன் உலகங்களுக்கெல்லாம் பற்றுக் கோடாக இருந்தான்.

கடல் சுவற, வேல்விட்ட படலம் முற்றிற்று.

14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

1053. மின்போன்ற மணிகளையுடைய மார்பனான உக்கிர வழுதி, கடலை வேற்படையினால் வெற்றி கொண்டு வாகை மாலை சூடிய புகழுடைய திருவிளையாடலைக் கூறினோம். இனி வானுலகு ஆளும் இந்திரனது பொன்னாலான முடி சிதறுமாறு அவ்வுக்கிர பாண்டியன் வளை கொண்டு எறிந்த வெற்றி பெற்ற திருவிளையாடலைக் கூறுவோம்:

மூவேந்தர் அகத்தியரை அடைதல்

1054. இவ்வாறு உக்கிரவழுதி ஆட்சி செய்து வரும் நாளில், ஒன்பது கோள்களும் தம் தம் நிலையில் இருந்து பிறழ்ந்தன, மழையின்றி அழகிய தமிழ்நாடு மூன்றிலும் பயிர்கள் தீய்ந்தன. புல்லின் முனைகளும் கருகின. வறுமை நிலையை மக்கள் எய்தினர். அந்நாட்டினை ஆளும் வேந்தர் மூவரும், அவ் வறுமையை ஒழிக்க எண்ணி அகத்திய முனிவரின் இருப்பிட மான பொதிய மலையை அடைந்தனர்.

1055 முனிவனை யடைந்து வேந்தர் மூவருந் தங்க ணாட்டிற்
பனிவரு மாரியின்றி வறந்தமை பகர மேருக்
குனிவரு சிலையார்க் கன்பன் கோணிலை குறித்து நோக்கி
இனிவரு மாரி யில்லை யாதினால் என்னிற் கேண்மின்.

1056 காய்சின வெய்யோன் சேயோன் முன்செலக் கதிர்கால் வெள்ளித்
தேசிகன் பின்பு சென்று நடக்குமிச் செயலான் முந்நீர்த்
தூசின வுலகிற் பன்னீ ராண்டுவான் சுருங்கும் என்று
பேசின நூல்கள் மாரி பெய்விப்போள் சென்று கேண்மின்.

1057 என்றவ னெதிர்யா மெவ்வா றேகுது மென்றார் ஐந்தும்
வென்றவன் சோம வார விரதநீர் நோற்று வெள்ளி
மன்றவ னருளைப் பெற்று வான்வ ழிச் சென்மி னென்றக்
குன்றவன் சிலையா னோன்பின் விதியினைக் கூறுகின்றான்.

1058 உத்தம வானோர் தம்மு ளுத்தமு னாகும் ஈசன்
உத்தம சத்தி மாரு ளுத்தமி யுருத்தி ராணி
உத்தம விரதந் தம்மு ளுத்தமம் திங்கள் நோன்பென்
றுத்தம மறைநூ லாதி யுரைக்குமிச் சோம வாரம்.

1055. அம்முனிவனை அடைந்த மூவரும், தங்கள் நாட்டில் குளிர்ச்சியான மழை இல்லாமல், வறுமை உண்டாகி விட்டதைக் கூறினர். மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் அன்பிற்குரிய அவ்வகத்திய முனிவன், இவ்வாறு கோள்கள் மாறி நிற்கும் நிலையை ஆராய்ந்து பார்த்து, ''இனியும் மழை பெய்யாது. அதற்குரிய காரணத்தைக் கேளுங்கள்,'' என்றான்.

1056. ''மிக்க சினமுள்ள சூரியனும் செவ்வாயும் முன்னே செல்ல, சுக்கிரன் அவற்றிற்குப் பின்னே செல்லும் இந்தச் செயலினால், கடலை ஆடையாக உடைய இந்நிலவுலகில் பன்னிரெண்டு ஆண்டுகள் வரை மழை இல்லை என்று நூல்கள் கூறின. அதனால் மழையைப் பெய்விப்பவனாகிய இந்திரனிடம் சென்று அவனிடம் இதனைக் கேளுங்கள்'' என்று அகத்திய முனிவன் கூறினான்.

சோமவாரவிரதம் நோற்கச் சொல்லல்

1057. இவ்வாறு கூறிய அகத்திய முனிவனிடம் அம் மன்னர்கள், ''நாங்கள் எவ்வாறு இந்திரனிடம் செல்ல முடியும்?' என்று கேட்டனர். அதற்கு ஐம்புலன்களையும் வென்றவனாகிய அக் குள்ளமான முனிவன், நீங்கள் சோம வாரவிரதம் அனுஷ்டித்து (நோற்று) வெள்ளியம்பலவாணன் திருவருளைப் பெற்றுக் கொண்டு வானின் வழியே செல்வீராக'' என்று சொல்லி மேலும் மேருமலையை வில்லாகக் கொண்ட அச்சிவபெருமானது விரதத்தை நோற்கும் தன்மையினைக் கூறுகின்றான்.

1058. ''மிக்க மேன்மையுடைய தேவர்களுள் தலை சிறந்தவன் சிவபெருமானே ஆவான்! மிக்க மேன்மையுடைய சக்திகளுள் உமாதேவியாரே மிக உயர்ந்தவர் ஆவார்! மிக்க மேன்மையுடைய விரதங்களுள்ளே, சோமவார விரதமே சிறப்புடையது! என்றிதனைச் சிறப்பான வேத நூல்கள் கூறும்.

1059 மந்தரங் காசி யாதிப் பதிகளில் வதிந்து நோற்கத்
தந்திடும் பயனிற் கோடி தழைத்திடு மதுரை தன்னில்
இந்தநல் விரத நோற்போர்க் கதிகம்யா தென்னிற் சோம
சுந்தர னுரிய வாரம் ஆதலாற் சோம வாரம்.

1060 அங்கதி னதிகப் பேறுண் டருக்கனின் மதிதோய்ந் தொன்றித்
தங்கிய திங்க ணோன்பு தகுதியின் நோற்க வல்லார்க்
கிங்கதி னதிக நீதி யீட்டிய பொருள் கொண் டாற்றும்
மங்கல விரதப் பேறொன் றனந்தமாய் வளரு மன்றே.

1061 நலமலி விரத நோற்பத் தொடங்குநாள் நவில்வாம் தேளிற்
சிலையினி லாத லன்றி யிரட்டிய தெரிசஞ் சேர்ந்த
மலமதி யொழித்து மற்றை மதியிலு முந்தைப் பக்கத்து
அலர்கதிர் வாரத் தல்லூ ணயின்றிடாது அயலிற் றுஞ்சா.

1062 வைகறை யெழுந்து சேற்கண் மணாளனை உள்கி யற்றைச்
செய்கடன் நிறீ இக் காமாதி சிந்தைநீத் தலர்பொற் கஞ்சப்
பொய்கையை யடைந்து கையிற் பவித்திரம் புனைந்து வாக்கு
மெய்கருத் தொருப்பா டெய்தச் சங்கற்பம் விதந்து கூறி.

1059. மந்தரம், காசி போன்ற நகரங்களில் வாழ்ந்து இச்சிறப்புப் பொருந்திய சோமவார விரதத்தை மேற் கொள்வதைக் காட்டிலும் இம்மதுரை நகரில் மேற் கொள்ளுவோர் களுக்குக் கோடி பங்கு பயன் அதிகம் உண்டாகும். இதற்குக் காரணம் என்னவெனில் இச் சோமவார விரதம் சோமசுந்தரக் கடவுளுக்கு உகந்த விரதம் என்பதால் அதிக பயனைத் தருகின்றது.

1060. இம்மதுரை நாட்டில், சூரியனோடு சந்திரன் கூடிய அந்நன்னாளில், விதிப்படி நோற்க வல்லவர்களுக்கு இன்னும் அதிக பயன் கிட்டும். இந்நாட்டில் நீதி வழியாக நிறைய பொருள் சம்பாதித்து அப்பொருளினால் இந்நோன்பு இயற்றப் பெறின் அதனினும் அதிகமாய் நிறையப் பலன் பெருகும்.

சோமவார விரதம் நோற்கும் முறை

1061. இனிநன்மை மிகுந்த இச்சோமவார விரதத்தை நோற்பதற்குரிய நாளைக் கூறுகின்றேன். கார்த்திகை, மார்கழி மாதங்களை நீக்கிவிட்டு, இரண்டு அமாவாசை சேர்ந்து வரும் குற்றமுடைய மாதங்களையும் நீக்கிவிட வேண்டும். மற்றைய மாதங்களில் முதல் ஞாயிற்றுக் கிழமையின் இரவில் உணவு கொள்ளாமல் வேறிடத்தில் நிலத்தில் தூங்க வேண்டும்.

1062. விடியற் காலையில் எழுந்து, அங்கயற்கண்ணம் மையின் கணவனான சோமசுந்தரக் கடவுளை மனத்திலே நினைத்து, அன்றைய கடன்களை முடித்து, காமம் முதலிய குற்றங்களை மனத்தில் இருந்து நீக்கி, மலர்ந்த பொற்றாமரைக் குளம் அடைந்து, விரலில் பவித்திரம் அணிந்து, சொல்லும், உடலும், மனமும் ஒன்றாகச் சங்கற்பம் சிறப்புடன் எடுத்துக் கூற வேண்டும்.

1063 கடம்படி முளைத்த முக்கட் கரும்பினை நினைந்து ஞாலத்
திடம்படு தீர்த்த மெல்லாம் ஆடிய பயனை யீண்டுத்
திடம்படத் தருதி யென்னாத் திரைத்தடம் படிந்து வெண்ணீ
றுடம்பணிந் தக்க மாலை யொளிபெற விதியாற் றாங்கி.

1064 வெள்ளை மந்தார முல்லை மல்லிகை வெடிவாய்ச் சாதி
கள்ளவிழ் மயிலை யாதி வெண்மலர் கவர்ந்து வேழப்
பிள்ளையை முந்தப் பூசித் திரந்துசங் கற்பம் பேசி
உள்ளணைந் துச்சி மேற்பன் னிருவிரல் உயர்ச்சிக் கும்பர்.

1065 சத்திய ஞானா னந்த தத்துவந் தன்னை யுள்கி
வைத்த தன் வடிவங் கொண்டு மண்முதற் சிவம் ஈறான
அத்துவ விலிங்கத் தன்னை யாசன மூர்த்தி மூல
வித்தைமற் றாலு நூலின் விதியினாற் பூசை செய்க.

1066 ஐந்தமு தாவி னைந்து நறுங்கனி யைந்து செந்தேன்
சந்தன தோயம் புட்பத் தண்புனல் மணிநீ ராட்டிச்
சுந்தர வெண்பட் டாடை கருப்புரச் சுண்ணஞ் சாந்தங்
கந்தமல் லிகைமுன் னான வெண்மலர்க் கண்ணி சாத்தி.

1063. கடம்ப மரத்தின் அடியில் தோன்றிய, முக்கண்களையுடைய கரும்பென இனிக்கும் சோமசுந்தரப் பெருமானை, நினைத்து, உலகத்தில் உள்ள சிறப்புப் பொருந்திய தீர்த்தங்களில் எல்லாம் நீராடிய பயனை இங்கு உறுதியாகத் தருவாயாக என்று வேண்டி, அலைகளையுடைய பொற்றா மரைக் குளத்தில் நீராடி, வெண்மையான திருநீற்றை உடலில் தரித்து, உருத்திராக்க மாலையை விதிப்படி அணிந்து கொள்ள வேண்டும்.

1064. வெள்ளை நிறமான மந்தார மலரும், முல்லை மலரும், மல்லிகை மலரும், சாதி மலரும், தேனோடு மலர்ந்த இருவாட்சி மலரும் ஆகிய வெள்ளை மலர்களை எடுத்து, சித்தி விநாயக் கடவுளை முன்னே வழிபட்டு, குறையிரந்து, சங்கற்பம் கூறி உள்ளே சென்று, தலைக்கு மேல் பன்னிரெண்டு அங்குல உயரத்திற்கு மேலாக, (துவாத சாந்தத்தில்)

1065. உண்மை, அறிவு, ஆனந்த வடிவாகிய சோமசுந்தரக் கடவுளைச் சிந்தித்து வைத்து, அச்சிவ வடிவாய் இருந்து, மண் முதல் சிவம் ஈறாக உள்ள மெய்ப் பொருளின் வடிவமான சிவலிங்கப் பெருமானை ஆசனம், மூர்த்தி, மூலம் ஆகிய மந்திரங்களாலும் நூலின் விதிப்படியும் பூசிக்க வேண்டும்.

(மண் முதல் ஈறாக உள்ள தத்துவம் முப்பத்தாறும், தத்துவாத்துவா எனப்படும். இது ஆறு அத்துவாக்களுள் ஒன்று)

1066. பஞ்சாமிர்தமும், பஞ்ச கவ்வியமும், நறுங்கனி ஐந்தும், தேனும் சந்தனக் குழம்பும், மலர் உள்ள குளிர்ந்த நீரும், தூயநீரும் ஆகிய இவைகளால் திருமஞ்சனம் செய்வித்தல் வேண்டும். அழகிய வெண்பட்டும், பச்சைக் கர்ப்பூரச் சுண்ணமும், சந்தனமும், மல்லிகை முதலான மணம் வீசும் மாலையும் அணிவிக்க வேண்டும்.

1067 காசணி பொலம்பூண் சாத்திக் கனைகழல் ஆதி யங்க
பூசனை செய்து சேல்கட் பூரண பரையை யவ்வா
றீசனைந் தெழுத்தைப் பெண்பாற் கிசையவுச் சரித்துப் பூசித்
தாசறு சுரபித் தீம்பா லட்டஇன் னமுதி னோடும்.

1068 பண்ணிய வகைபா னீய நிவேதனம் பண்ணி வாசம்
நண்ணிய அடைக்காய் நல்கி நறுவிரைத் தூபந் தீபம்
எண்ணிய வகையாற் கோட்டிக் கண்ணடிஏனை மற்றும்
புண்ணியன் திருமுன் காட்டி வில்வத்தால் பூசை செய்தல்.

1069 புரகர னிச்சா ஞானக் கிரியையாய்ப் போந்த வில்வ
மரமுத லடைந்து மூன்று வைகலுண் உறக்க மின்றி
அரகர முழக்கஞ் செய்வோ ரைம்பெரும் பாத கங்கள்
விரகில்செய் கொலைக டரு மாதலால் விசேடம் வில்வம்.

1070 மடங்கிதழ் சுருங்கல் வாடி உலர்ந்தது மயிர்சிக் குண்டல்
முடங்குகாற் சிலம்பிக் கூடு புழுக்கடி முதலாம் குற்றம்
அடங்கினுங் குற்றமில்லை யுத்தம மாகும் வில்வம்
தடங்கைகொண் டீச னாமம் ஆயிரஞ் சாற்றிச் சாத்தல்.

1071 அடியனேன் செய்யும் குற்றம் அன்றைக்கண் றனந்த மாகுந்
கொடியநஞ் சமுதாக் கொண்டாய் குற்றமுங்
குணமாகக் கொண்டு
படியெழு தரிய நங்கை பங்கனே காத்தி யென்று
முடியுற வடியில் வீழ்ந்து மும்முறை வலஞ்செய் தேத்தி.

1057. மணிகள் இழைத்த பொன்னாலான அணிகளைப் பூட்டி, ஒலிக்கின்ற வீரக்கண்டை அணிந்த பாதங்கள் தொடங்கித் திருவங்கங்கள் அனைத்தையும் வழிபட்டு, கயல் போன்ற கண்களையுடைய எங்கும் நிறைந்த பராசக்தியை அதே போன்று, இறைவனுக்குரிய திருஐந்தெழுந்தைப் பெண்பாலிற்குப் பொருந்த உச்சரித்துப் பூசித்து, பசுவின் பாலுடன் கலந்த உணவையும்.

1068. பலகாரமும், பானகமும் ஆகிய இவைகளை நிவேதித்து, மணம் மிக்க தாம்பூலம் கொடுத்து வாசனை மிக்க தூபத்தையும், தீபத்தையும் வரையறைப்படி சுழற்றிக் கண்ணாடி போன்ற ஏனைய உபசாரங்களையும் சோமசுந்தரக் கடவுள் திருமுன் காண்பித்து வில்வத்தினால் பூசை செய்ய வேண்டும்.

1069. திரிபுரம் எரித்த இறைவனின் இச்சா, ஞானக் கிரியை வடிவாய் உள்ள வில்வ மரத்தின் அடியைச் சார்ந்து, மூன்று நாட்கள் வரை உணவும் தூக்கமும் இல்லாமல் 'அரகர' என்று முழங்குவோர் செய்த ஐந்து பெரிய பாவங்களும் நீங்கும். ஆதலினால் வில்வம் சிறந்ததாகும்.

1070. வில்வத்தின் இதழ் மடங்கிச் சுருங்கி இருந்தாலும், வாடிக் காய்ந்திருந்தாலும், சிலம்பிப்பூச்சி கூடு கட்டி இருந்தாலும், புழுக்கள் கடித்திருந்தாலும் குற்றமாகா. வில்வம் சிறந்ததாகும். நீண்ட கையில் அதனைக் கொண்டு சிவபெருமானின் ஆயிரம் திருநாமங்களைக் கூறித் துதிக்க வேண்டும்.

1071. எழுதமுடியாத அழகுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவனே! நான் செய்கின்ற குற்றங்கள் மிகப்பலவாகும். கொடிய நஞ்சினையும் அமுதாக உண்ட நீ, நான் செய்த குற்றங்களைக் குணமாகக் கொண்டு காத்தருள வேண்டும் என்று வேண்டி அவனது திருவடியில் முடி பொருந்துமாறு வீழ்ந்து வணங்கி மூன்று முறை வலம் செய்து துதிக்க வேண்டும்.

1072 வன்மனங் கரைய நின்றுவேண்டிய வரங்கள் வேண்ட
நன்மணப் பேறு மக்கட் பேறுநல் வாக்குக் கல்வி
பொன்மனக் கினிய போகந் தெவ்வரைப் புறகு காண்டல்
இம்மையில் அரசு மற்றும் எண்ணியாங் கெய்து மன்னோ.

1073 ஆதியிவ் விலிங்கத் தீண்டற் கருகரல் லாத வேத
வேதியர் முதலோர் இட்ட இலிங்கத்தில் விதியா லர்ச்சித்
தோதிய விரத நோற்க அர்ச்சனைக் குரிய ரல்லாச்
சாதியர் பொருணோர்ந் தாதி சைவராற் பூசை செய்தல்.

வேறு

1074 பொருவிலிவ் விரத மைவகைத் துச்சிப் போதிலூ ணிரவிலூண் இரண்டும்
ஒருவுத லுறங்கா திருத்தலர்ச் சனைநால் யாமமு முஞற்றுத லென்னக்
கருதினிவ் வைந்து மொன்றினுக் கொன்று கழியவு மதிகமா நோற்கும்
வருடமொன் றிரண்டு மூன்றுபன் னிரண்டு வருடம்வாழ் நாளள விவற்றுள்.

1075 உடலள வெண்ணி நோற்பவர் முந்த வுத்தியா பனஞ்செய்து நோற்கக்
கடவரவ் வருடக் கட்டளைக் கிறுதி கழிப்பதுத் தாபன விதிதான்
மடலவிழ் மாலை மண்டபங் குண்ட மண்டலம் வகுத்துமா பதியைப்
படரொளி வெள்ளி முப்பது கழஞ்சிற் படிமை யால் நிருமிதஞ் செய்து.

1072. வலிமையுடைய மனமானது கரைந்து வரும்படி வேண்டி நின்றால் நல்ல கல்யாணப் பேறும், நன்மக்கள் பேறும், நல்ல வாக்கும், கல்வியும், பொருளும் இனிய போகமும், பகைவரைப் புறம் காணும் திண்மையும், இப் பிறவியிலே அரசுரிமையும், பிற நலங்களும் எண்ணியவாறே கிடைக்கும்.

1073. முதன்மை பெற்ற இச்சொக்கலிங்கப் பெருமானைத் தொட்டுப் பூசனை செய்யத் தகுதியற்ற வேத வேதியர், ஆன்மார்த்த சிவலிங்கத்தினிடத்தில் மேலே கூறிய முறைப்படி சோமவார நோன்பு நோற்க வேண்டும். அத்தகைய பூசைக்கு உரிமை அல்லாதவர் பொருள் கொடுத்து இவ்விரதம் நோற்க வேண்டும்.

1074. உச்சிப் பொழுதில் உண்ணுதலும், இரவில் உண்ணுதலும் இரண்டு வேளை உணவையும் நீக்குதலும், உறங்காது இருத்தலும், நான்கு யாமமும் அர்ச்சனை புரிதலும் என்ற ஒப்பற்ற அவ்விரதமானது ஐந்து வகையினை உடையது. ஆராய்ந்து பார்த்தால் இவ்வைந்து வகையும், ஒன்றுக் கொன்று மிகவும் சிறந்ததாகும். ஒன்று, இரண்டு, மூன்று, பன்னிரெண்டு வருடம் ஆகிய ஆண்டின் அளவும், வாழ்நாள் முழுவதும் நோற்க வேண்டும்.

1075. வாழ்நாளளவு நோற்கின்றவர், குறிப்பிட்ட ஆண்டு வரை விரதம் நோற்று முடிக்கும் பொழுது செய்யும் சடங்குகளைச் செய்து முடித்து நோற்கவேண்டும். இவ்வாறு ஆண்டு முழுவதும் இதழ் விரிந்த மணம் வீசும் மாலை மண்டபமும், குண்டமும், மண்டலமும் வகுத்து, உமை கேள்வனாகிய சிவபெருமானைப் பரந்த ஒளியையுடைய முப்பது கழஞ்சு வெள்ளியினால் திருவுருவமாக அமைக்க வேண்டும்.

1076 காலையில் ஆசான் சொல்வழி நித்தக் கடன்முடித் துச்சிதொட்
டந்தி
மாலையி னளவும் புராணநூல் கேட்டு மாலைதொட்
டியாமவோர் நான்குஞ்
சேலன கண்ணாள் பங்கனைப் பூசை செய்க அப்பூசனை
முடிவின்
மூலமந் திரநூற் றெட்டுநூற் றெட்டு முறையினா லாகுதி
முடித்தல்.

1077 வில்வமா யிரங்கொண் டாயிர நாமம் விளம்பிநால் யாமமுஞ்
சாத்தல்
நல்லஐந் தெழுத்தால் ஐந்தெழுத்துருவின் நாதனுக் கருக்கியங்
கொடுத்தல்
எல்லையின் மூலமந்திரத் தாலு மேனைமந் திரங்களி னாலும்
வில்லழ லோம்பிப் பூரணா குதிசெய் தீறிலான் வேள்வியை
முடித்தல்.

1078 புலர்ந்தபின் னித்த வினைமுடித் தரம்பைப் பொதுளும்பா
சிலைபதின் மூன்றின்
நலந்தரு தூவெள் ளரிசிபெய் தினிய நறியகாய் கறியொடு பரப்பி
அலந்தர அன்பா னிறைகுடம் பதின்மூன் றரிசிமேல் வைத்தான்
அடியிற்
கலந்தவன் பினராய்ச் சிவார்ச்சனைக் குரிய கடவுள்வே
தியர்களை வரித்து.

1079 காதணி கலனுங் கையணி கலனுங் கவின்பெற அளித்தர னாக
ஆதரம் பெருக நினைந்தருச் சனைசெய் தரியதக்
கிணையொடும் பாதப்
போதணி காப்பு விசிறிதண் கவிகை பூந்துகில் முதற்பல வுடனே
மேதகு தானஞ் செய்துபின் குருவைக் கற்புடை மின்னிடை
யோடும்.

1076. காலையில் ஆசிரியர் சொற்படி நாள் கடமைகளை முடித்து, உச்சிப்பொழுது தொடங்கி மாலைப் பொழுது வரை, சிவ புராணங்களைக் கேட்டும், மாலைப் பொழுது முதல் இரவு முழுவதும் இறைவியை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமானை வழிபட வேண்டும். அவ்வழிபாட்டின் முடிவில் சிவமந்திரம் நூற்றெட்டினால் நூற்றெட்டு முறையும் ஆகுதி செய்யக் கடவர்.

1077. வில்வம் ஆயிரம் கொண்டு இறைவனின் திருப்பெயர்கள் ஆயிரத்தையும் உச்சரிக்க வேண்டும். நல்ல திரு ஐந்தெழுத்தினால், அவ்வைந்தெழுத்தினையும் உருவமாக உடைய இறைவனுக்கு அருக்கியம் கொடுக்க வேண்டும். அளவில்லாத மூல மந்திரங்களாலும், மற்றைய மந்திரங்களாலும் வேள்வித் தீயை வளர்த்துப் பூரணாகுதி செய்து வேள்வியை முடிக்க வேண்டும்.

1078. பொழுது விடிந்தபின், நித்தியக் கடன்களைச் செய்து முடித்து, வாழையின் செழித்த இலை பதின்மூன்றில் நன்மை தருகின்ற தூய்மையான அரிசியை நிரப்பி, இனிமையுடைய நல்ல காய்கறிகளைப் பரப்பி, பசுவின் பால் நிறைந்த குடங்கள் பதின்மூன்றினை, அவ்வரிசியின் மேல் வைத்து, சிவபெருமானைப் பூசிப்பதற்குரிய ஆதி சைவர்களை அழைக்க வேண்டும்.

1079. காதில் அணிந்துள்ள குண்டலமும், கையில் அணியும் காப்பும் பொலிவு பெறத் தந்து, அன்புமிக, சிவபெருமானாகவே கருதி, பூசனை செய்து அவ்வாதி சைவர்களை வழிபடவேண்டும். அத்துடன் அவர்களுக்குப் பெரிய தக்கிணையுடன், பாதுகையும், விசிறியும், குளிர்ந்த குடையும், அழகிய ஆடை முதலிய இவை பலவற்றையும் சிறந்த தானமாகக் கொடுத்து வழிபட வேண்டும். பின்பு அக்குரவனைக் கற்பு நிறைந்த மனைவியுடன்,

1080 ஆசனத் திருத்திப் பொலந்துகில் காதுக் கணிகள்கைக் கணிகளும்
அணிந்து
வாசநன் மலரிட் டருச்சனை செய்து மலைமள் தலைவஃனை
வரைந்து
பூசனை செய்த படிமையோ டம்பொன் பூதலம் பதாதிகள் பிறவுந்
தூசலர் மாலை கோட்டணி புனைந்த சுரபிமா தானமுஞ் செய்து.

1081 இனையவா றுத்தா பனமுடித் தாசான் ஏவலாற் சிவனடிக் கன்பர்
தனையரோ டொக்க லுடனமு தருந்தல் தகுதியிவ் விரதமுன்
கண்ணன்
அனையதா மரையோ னிந்திரன் முதல்வா னாடவர் மூவறு
கணத்தோர்
அனைவரு நோற்றார் மனிதரும் அனுட்டித் தரும்பெறற்
போகம்வீ டடைந்தார்.

1082 ஈதுநோற் பவர்வெம் பகைமனத் துயர்தீர்ந் தாயிரம் பிறவியில்
இயற்றுந்
தீதுசேர் வினைதீர்ந் தெடுத்தயாக் கையினிற் சிவகதி யடைவரிவ்
விரதம்
ஓதினோர் கேட்டோர் மனைவியர் மக்க ளொக்கலோ
டினிதுவாழ்ந் தும்பர்
மேதகு பதினா லிந்திரன் பதத்தில் வீற்றினி திருப்பரென்
றறவோன்.

1080. ஆசனத்தில் இருக்கச் செய்து, பொன்னாடை, காதணி, கையணி போன்றவற்றை அணிவித்து, மணமுள்ள நல்ல மலர்களால் அருச்சித்து, மலையரையன் புதல்வியாகிய உமா தேவியின் கணவனான சிவபெருமானின் திருவுருவத்துடன், அழகிய பொன்ஊர் நிலமும் ஏவலர்களுக்குக் கொடுக்க வேண்டும். பிற தானங்களையும், ஆடையும், மலர்மாலையும், கொம்பில் அணியும் அணிந்த பெரிய பசுவையும் தானமாகக் கொடுக்க வேண்டும்.

1081. இவ்வாறு உத்தாபனத்தை முடித்து, ஆசிரியனின் கட்டளையினால் சிவபெருமானின் திருவடியில் அன்பு பூண்டவர்களின் மக்களோடும் சுற்றத்தோடும் அமுது உண்ணல் முறையாகும். இச்சோமவார விரதத்தை முன்னர் திருமாலும், பிரமதேவனும், இந்திரன் முதலிய தேவர்களும், பதினெண் கணத்தவரும் நோற்றனர். மனிதர்களும் நோற்றுப் பெறுதற்கரிய போகத்தையும் வீடு பேற்றையும் அடைந்தனர்.

விரதம் நோற்றவர் அடையும் பலன்

1082. இவ்விரதத்தை நோற்றவர் கொடிய பகையும் மனத்துன்பமும் நீங்கப் பெறுவர். ஆயிரம் பிறவிகளில் செய்த அளவில்லாத தீவினை நீங்கப் பெறுவர். இப்பிறவியிலேயே வீடு பேறடைவர். இவ்விரதத்தைக் கூறியவர்களும் கேட்டவர்களும், மனைவிமக்கள் சுற்றத்தோடு இனிது வாழ்வர். தேவருலகில், பதினான்கு இந்திரப்பட்டம் அளவும் அவன் பக்கத்தில் அமர்வர்,'' இவ்வாறு அகத்தியமுனிவன் சொன்னான்.

வேறு

1083 சொல்லிய நெறியாற் சோம சுந்தரன் விரத நோற்பான்
வில்லிடு மணிப்பூண் வேந்தர் முனிவனை
விடைகொண் டேகி
அல்லியங் கனக கஞ்சத் தாடியங் கயற்கண் வல்லி
புல்லிய பாகன் றன்னை வழிபடீஇப் போற்றி நோற்றார்.

1084 சுந்தரன் றன்னைப் பூசைத் தொழில் செய்து
வரம் பெற்றேகி
அந்தரத் தாறு செல்வா ரஃதறிந் தமரர் வேந்தன்
வந்தவர் இருக்க வேறு மடங்கல்மான் றவிசு மூன்று
தந்திடப் பணித்தா னிட்டார்தனதரியணையிற்றாழ.

1085 வான்வழி வந்த மூன்று மன்னரும் பொன்னா டெய்தி
ஊன்வழி குலிச வைவேல் உம்பர்கோன் மருங்கிற் புக்கார்
தேன்வழி போந்தின் கண்ணிச் சேரனு மார்த்தார் வேந்துங்
கான்வழி தாரு நாடன் காட்டிய தவிசின் வைக.

1086 மைக்கடல் வறப்ப வென்ற வாகைவேற் செழியன் மௌலிச்
செக்கர்மா மணிவிற் காலத் தேவர்கோன் றவிசில்ஏறி
ஒக்கவீற் றிருந்தா னாக வும்பர்கோ னழுக்கா றெய்திப்
பக்கமே யிருந்த ஏனைப் பார்த்திவர் முகத்தைப் பாரா.

1083. இவ்வாறு அகத்திய முனிவன் கூறிய முறைப்படி, சோமசுந்தரப் பெருமானின் சோமவார விரதத்தை நோற்கும் பொருட்டு ஒளிவீசும் அணிகலன்களை அனிந்த மன்னர் மூவரும், முனிவனிடம் விடைபெற்றுக் கொண்டு, அழகிய பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி, அங்கயற்கண்அம்மையையும் அவர் பக்கத்தில் உள்ள சோமசுந்தரக் கடவுளையும் வழிபட்டு அவ்விரதத்தை முடித்தார்கள்.

1084. சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு வரம் பெற்று, நீங்கி வான் வழியாகச் செல்வராயினர். தேவேந்திரன் அவர்களின் வருகையை உணர்ந்து, வந்த மன்னர்கள் அமருவதற்கு, வேறு மூன்று சிங்காதனங்கள், தம் சிங்காதனத்தைவிடத் தாழ்ந்திருக்கும் படி அமைக்க வேண்டுமெனக் கட்டளை இட்டான். பணியாளர் களும் அவ்வாறே அமைத்தனர்.

1085. வானின் வழியாக வந்த மூன்று மன்னர்களும் பொன்னுலகத்தை அடைந்து, வச்சிரப்படையை உடைய தேவேந்திரன் அருகில் சென்றனர். பனம்பூ மாலை அணிந்த சேரனும், ஆத்திமாலை அணிந்த சோழனும், மணம் வீசும் கற்பக மரம் உடைய இந்திரன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தனர்.

1086. கரிய கடலானது வற்றுமாறு வென்ற வெற்றி மாலையையும் வேற்படையையும் உடைய உக்கிர பாண்டியன் முடிவில் பதித்த சிவந்த மணிகள் ஒளிவீச, தேவேந்திரனது ஆசனத்தில் ஏறி அவனோடு சமமாக இருந்தான். அங்ஙனம் அமரவே தேவேந்திரன் பொறாமை கொண்டு, அருகிலிருக்கும் மற்றைச் சேர சோழ மன்னர்களின் முகத்தை நோக்கினான்.

1087 முகமனன் கியம்பி நீவிர் வந்ததென் மொழிமின் என்ன
மகபதி யெங்க ணாட்டின் மழைமறுத் தடைந்தே மென்றார்
அகமலர்ந் தனையார் நாட்டினளவும்வான் சுரக்க நல்கி
நகைமணிக் கலன்பொன் னாடை நல்கிநீர் போமினென்றான்.

1088 அன்னவர் அகன்ற பின்னை யமரர்கோன் கன்னி நாடன்
தன்னரி யணைமே லொக்கத் தருக்கினோ டிருக்கு மாறும்
பின்னரு மாரி வேண்டாப் பெருமிதவீறு நோக்கி
இன்னது புலப்ப டாமை யினையதோர் வினய முன்னர்.

1089 பொற்புற வரிசை செய்வான் போலள விறந்தோர் தாங்கி
வெற்புறழ் திணிதோ ளாற்றன் மெலிவதோர் ஆரந்தன்னை
அற்புற வளித்தான் வாங்கி யலர்மதுத் தார்போ லீசன்
கற்புடை யுமையாண் மைந்தன் கதுமெனக்
கழுத்தி லிட்டான்.

1090 கண்டனன் கடவுணாதன் கழியவு மிறும்பூ துள்ளங்
கொண்டன னின்று தொட்டுக் குரையளி துழாவு நிம்பத்
தண்டழை மார்ப வாரந் தாங்கு பாண்டியனென் றுன்னை
மண்டல மதிக்க வென்றான் வானநா டுடைய மன்னன்.

1087. அவர்களிடம் நன்றாக உபசார மொழி கூறினான் ''நீங்கள் வந்த காரணம் என்ன? கூறுங்கள்'' என்று கேட்டான்.''இந்திரனே எங்கள் நாட்டில் மழை இல்லாமையால் அதை வேண்டி இங்கு வந்தோம்''. என்றனர். இந்திரன் மனமகிழந்து அவ்விருவர் நாடுகளிலும் மழை பெய்ய அருளினான். அத்துடன் நவமணிகளாகிய அணிகலன்களும்' பொன்னாடைகளும் தந்து, ''நீங்கள் செல்லுங்கள்,'' என்று விடை கொடுத்து அனுப்பினான்.

1088. அம்மன்னர்கள் போனபின்னர், கன்னி நாடனாகிய உக்கிரவழுதி தன் சிங்காதனத்தின்கண் சமமாக இறுமாப்புடன் இருக்கும் தன்மையையும், அதன்பின்னும் மழையை வேண்டாதிருக்கும் தன்மையையும் மனத்தில் எண்ணிய தேவேந்திரன், மனதிற்குள் ஒரு சூழ்ச்சியைத் திட்டமிட்டான்.

பூணாரம் அளித்தல்

1089. அழகுமிக்க சிறப்புச் செய்கின்றவனைப் போல, அளவற்றவர்களாலே தாங்கிவரப்பட்ட மலையைப் போன்ற திடமான தோள்வலி குறையக் காரணமாய் உடைய ஒரு முத்துமாலையை அன்புடையவனைப் போல் பாசாங்கு செய்து கொடுத்தான். தடாதகைப் பிராட்டியாரின் புதல்வனாகிய உக்கிரவழுதி அதனை வாங்கி மலர்மாலை உடைய தன் கழுத்தில் அணிந்து கொண்டான்.

1090. அதனைக்கண்ட, தேவலோகத்திற்குத் தலைவனாகிய இந்திரன் மிகவும் வியப்படைந்து, ''வண்டுகள் மதுவில் திளைக்கும் வேம்பினது பூவை மாலையாகப் பொருந்திய மார்பினையுடைய உக்கிர வழுதியே! உன்னை உலகமானது இன்றுமுதல் 'ஆரம் தாங்கும் பாண்டியன்' என்று மதிக்கும'' என்று கூறினான்.

1091 அன்னது சிறிது மெண்ணா தங்குநின் றிழிந்து தென்னன்
தன்னகர் அடைந்தா னிப்பாற் சதமக னாணை யாலம்
மன்னவ ரிருவர் நாடு மழைவளம் பெருகப் பெய்த
தென்னவ னாடு பண்டைச் செயலதா யிருந்த தன்றே.

1092 ஆயதோர் வைகல் வேட்டை யாடுவான்
அண்ணல் விண்ணந்
தாயதோர் பொதியக் குன்றிற் சந்தனச் சார ணண்ணி
மேயதோ லரிமா னேனம் வேங்கையெண் கிரலை யின்ன
தீயதோர் விலங்கு வேட்டஞ் செய்துயிர் செகுக்கு மெல்லை.

1093 பொன்றத்து மருவிக் குன்றிற் புட்கலா வருத்த மாதி
மின்றத்து மேக நான்கும் வீழ்ந்தன மேயக் கண்டு
குன்றத்தி னெடிய திண்டோட் கொற்றவன்
அவற்றைப் பற்றிக்
கன்றத்தின் களிறு போலக் கடுந்தளை சிக்க யாத்தான்.

1094 வேட்டத்திற் பட்ட செங்கண் வேழம்போற்
கொண்டு போகிக்
கோட்டத்தில் இட்டா னாகக் குன்றிற கரிந்த வென்றி
நாட்டத்துப் படிவத் தண்ட நாடன்மற் றதனைக் கேட்டுக்
காட்டத்துக் கனல்போற் சீறிக் கடுஞ்சமர் குறித்துச்
செல்வான்.

1091. உக்கிரவழுதி அப்புகழ்ச்சியைச் சிறிதும் கருதாது, அவ்வாசனத்தினின்றும் இறங்கித் தன் நகரை அடைந்தான். இந்திரன் கட்டளையால் அச்சேர சோழ மன்னர்கள் நாட்டில் வளம் பெருகும்படி மழை பெய்தது. பாண்டிய நாடு முன்னைத் தன்மையோடு மழையின்றி இருந்தது.

1092. அப்படிப்பட்ட ஒரு நாளில் உக்கிரவழுதி வேட்டையாட விரும்பி, பொதிய மலையில் சந்தன மரங்கள் நெருங்கிய சாரலை அடைந்து அங்குள்ள யானை, சிங்கம், பன்றி, புலி, கரடி, மான் என்னும் இவை முதலான தீமையான மிருகங்களை வேட்டையாடி உயிரைப் போக்கினான்.

உக்கிரபாண்டியன் முகிலைத் தளை இடுதல்.

1093.அப்போது பொன்னை வாரிக்கொண்டு தாவும் அருவியையுடைய அம்மலையில் 'புட்கலா வருத்தம்' முதலிய நான்கு மேகங்கள் தவழக்கண்டு, குன்று போன்ற பெரிய தோள்களையுடைய உக்கிரவழுதி, அவற்றைத் தன் வலிமையினால் வருந்துமாறு விலங்கிட்டுப் பிடித்தான். (புட்கலா வருத்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி இவை நான்கு மேகங்கள். இவை முறையே பொன், பூ, மண், கல் என்பன வற்றைப் பொழிவன.)

1094. வேட்டையில் கிட்டிய யானையைக் கொண்டு செல்வது போல், கொண்டு சென்று சிறைக்கோட்டத்தில் வைத்தான். அச்செய்தியை மலையின் சிறகுகளையெல்லாம் வெட்டி வீசிய இந்திரன் அறிந்தான். உடனே விறகில் பற்றிய தீ போல் கோபம் கொண்டு கொடுமையான போரை எண்ணிச் செல்வானாயினான்.

1095 வாங்குநீர் வறப்ப வேலை விடுத்ததும் வலிய ஆரந்
தாங்கிய செருக்குங் காரைத் தளையிடு தருக்கு நோக்கி
ஈங்கொரு மனித யாக்கைக் கித்துணை வலியா தென்னா
வீங்கிய மான மூக்க மீனவன் மதுரை சூழ்ந்தான்.

வேறு

1096 ஓடினார் ஒற்றர்போய்ச் செழிய னொண்கழல்
சூடினர் நகர்ப்புறஞ் சுரர்கள் சேனைகள்
மூடின வென்னலு முனிவு மானமும்
நீடின னரியணை யிழிந்து நீங்குவான்.

1097 பண்ணுக தேர்பரி பகடு வீரர்முன்
நண்ணுக கடிதென நடத்தி யாவரென்
றெண்ணலன் மதமலை யெருத்த மேற்கொடு
கண்ணகன் கடிநகர்க் காப்பு நீங்குமுன்.

1098 அடுத்தனர் வானவர் ஆர்த்துப் பல்படை
எடுத்தனர் வீசினர் சிலையி லெய்கணை
தொடுத்தன ரிறுதிநாட் சொரியு மாரிபோல்
விடுத்தனர் மதிக்குல வீரன் சேனைமேல்.

1099 ஆர்த்தனர் மலயவெற் பரையன் சேனையோர்
பார்த்தனர் வேறுபல் படைக்க லக்குவை
தூர்த்தனர் குனிசிலை தொடுத்து வாளியாற்
போர்த்தன ரமரர்மெய் புதைத்த வென்பவே.

1095. வளைந்த கடல் வற்றும்படி வேற்படையை விடுத்ததனையும், வலிய மாலையைத் தாங்கிய பெருமையையும், முகிலை விலங்கிட்ட பெருமையையும் எண்ணி, 'இங்கு ஒரு மனித உடம்பிற்கு எவ்வாறு இவ்வளவு ஆற்றல் வந்தது' என்ற எண்ணியபடியே பாண்டியனது மதுரையை வளைத்துக் கொண்டான்.

1096. ஒற்றர்கள் ஓடிச்சென்று பாண்டியனின் திருவடிகளை வணங்கி, ''நகரின் புறத்தே தேவர் படைகள் வளைத்தன'' என்று கூறினர். உடனே கோபமும் மானமும் கொண்ட பாண்டியன் சிம்மாசனத்தினின்று எழுந்து போருக்குப் புறப்பட்டுச் சென்றான்.

உக்கிரபாண்டியனும் தேவேந்திரனும் போரிடுதல்

1097. ''தேர், குதிரை, யானைப் படைகட்கு முன்னதாக வீரர்கள் விரைந்து செல்லுக!'' என்று கூறி அவ்வாறு முன்னால் நடக்க வைத்து, போருக்கு வந்தவர் யார் என்றும் கருதாமல் யானையின் பிடரியிலேறி நகரின் காவலாகிய மதிலை நெருங்கினான்.

1098. அப்போது தேவர்கள் ஆரவாரம் செய்து, பல படைகளை எடுத்து வீசினர். வில்லில் வைத்து எய்யும் கருவிகளைத் தொடுத்து உக்கிரவழுதியின் சேனையின் மேல் ஊழிக்காலத்தில் பெய்யும் மழையைப் போலச் சொரிந்தார்கள்.

1099. பொதியமலையை உடைய பாண்டிய மன்னரின் படைவீரர்கள் உடனே ஆரவாரம் செய்து வெவ்வேறு விதமான படைக்கருவிகளை எடுத்து வீசினர். வளைந்த அம்புகளால் மூடினர். அவ்வம்புகள் தேவர்களின் உடலில் தைத்தன.

1100 தறிந்தன தாள்சிரந் தகர்ந்த தோள்கரம்
பறிந்தன குருதிநீர் கடலிற் பாய்ந்தன
செறிந்தன பாரிடஞ் சேனங் கூளிகள்
முறிந்தன வானவர் முதல்வன் சேனையே.

1101 ஆடின குறைத்தலை யவிந்த போர்க்களம்
பாடின பாரிடம் விந்தைப் பாவைதாள்
சூடின கூளிகள் சோரி சோரப்பார்
மூடின பிணக்குவை யண்ட முட்டவே.

1102 வெஞ்சின வலாரிதன் வீரச் சேனைகள்
துஞ்சின கண்டெரி சொரியுங் கண்ணனாய்ப்
பஞ்சின் முன் னெரியெனப் பதைத்துத் தெய்வத
வஞ்சினப் படைகளான் மலைவ துன்னினான்.

வேறு

1103 வெங்கதிர்ப் படைவிட் டார்த்தான் விண்ணவன் அதனைத் திங்கட்
பைங்கதிர்ப் படைதொட் டோச்சி யவித்தனன் பாராள் வேந்தன்
சிங்கவெம் படைவிட் டார்த்தான் றேவர்கோ னதனைச் சிம்புட்
புங்கவன் படைதொட் டோச்சி யடக்கினான் புணரி வென்றோன்.

1104 தானவர் பகைவன் மோக சரந்தொடுத் தெறிந்தானாக
மீனவன் அதனை ஞான வாளியால் விளித்து மாய்ந்து
போனபின் மற்போ ராற்றிப் புக்கனர் புக்கார் தம்மில்
வானவன் மண்ணி னான்மேல் வச்சிரம் வீசி யார்த்தான்.

1100. சிலருக்குக் கால்கள் அறுபட்டன. சிலருக்குத் தலைகள் உடைந்தன. தோள்களும் கையும் குறைபட்டன சிலருக்கு. அவர்களின் உதிரம் கடலில் ஓடிப் பாய்ந்தது. பூதங்களும், பருந்துகளும், பேய்களும் வந்து அவர்களை நெருங்கின. இந்திரனின் சேனை நிலைதடுமாறி ஓடியது.

1101. தலையற்ற உடல்கள் ஆடின. போர்க்களத்தில் போர் நின்றது. பூதங்கள் பாடின. பேய்கள் கொற்றவையின் திருவடியில் பணிந்தன. குருதி ஒழுகும் பிணக்குவியல்கள் வானுலகை முட்டின.

1102. இந்திரன் தன் சேனைகள் இறந்ததைக் கண்டு கோபத்துடன் தீ சிந்தும் விழிகளையுடையவனானான். பஞ்சின் முன்னே நெருப்பு விரைந்து பற்றுவது போன்று சினம் மேலோங்க வஞ்சினம் கூறித் தெய்வப் படைக்கலங்களினால் போர் செய்ய எண்ணினான்.

1103. இந்திரன் கொடுமையான பரிதிக் கணையை விடுத்து ஆரவாரம் செய்தான். பாண்டியனோ திங்கள் கணையை விடுத்து அதனை அழித்தான். தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரன் நரசிங்கக் கணையை விடுத்து முழக்கம் செய்தான். அதனை உக்கிரவழுதி மிக்க வலிமையுடைய சரபக் கணையை வில்லில் பூட்டி விட்டு அழித்தான்.

1104. இந்திரன் மோகக் கணையை விடுக்க, அக்கணையைப் பாண்டியன், ஞானக் கணையைக் கொண்டு அழித்தான். இவ்வாறு இவைகள் அழிந்தபின் இருவரும் மற்போர் புரியத் தொடங்கினார்கள். அப்போது இந்திரன் மிகுந்த கோபத்தோடு பாண்டியன் மேல் வஜ்ஜிரப் படையை விடுத்து ஆரவாரம் செய்தான்.

1105 காய்சின மடங்கல் அன்னான் கைவளை கழற்றி வல்லே
வீசினன் குலிசந் தன்னை வீழ்த்தது விடுத்தான் சென்னித்
தேசினன் மகுடந் துள்ளிச் சிதைத்தது சிதைத்த லோடுங்
கூசின னஞ்சிப் போனான் குன்றிற கரிந்த வீரன்.

1106 இந்திரண் டனைய கூர்ம்பல் லிருள்வரை நெஞ்சு போழ்ந்த
மைந்தனின் வலிய காளை வரைந்தெறி நேமி சென்னி
சிந்திடா தாகி யம்பொன் மணிமுடி சிதறச் சோம
சுந்தர நாதன் பூசைத் தொழிற்பயன் அளித்த தென்னா.

1107 போரினுக் காற்றா தோடிப் பொன்னகர் புகுந்த வென்றித்
தாரினுக் கிசைந்த கூர்வேற் சதமகன் பின்பு நின்னாட்
டூரினுக் கெல்லா மாரி யுதவுவேன் நிகள நீக்கிக்
காரினைத் தருக வென்னாக் கவுரியற் கோலை விட்டான்.

1108 முடங்கல்கொண் டணைந்த தூதன் முடிகெழு
வேந்தன் பாதத்
தொடுங்கிநின் றோலை நீட்ட உழையுளா
னொருவன் வாங்கி
மடங்கலே றனையான் முன்னர் வாசித்துக் காட்டக் கேட்டு
விடங்கலுழ் வேலான் விண்ணோர் வேந்துரை தேறா னாகி.

1105. மிக்க சினத்தையுடைய சிங்கம் போன்ற உக்கிரவழுதி, கையில் உள்ள திகிரிப் படையை சுழற்றி விரைந்து வீசினான். அப்படை வஜ்ஜிரப் படையை அழித்தது. அத்துடன் அப்படையை விடுத்தவனாகிய இந்திரனின் தலையில் உள்ள ஒளிவீசும் நல்ல முடியைக் கீழே தள்ளி வீழ்த்தி அழித்தது. உடனே இந்திரன் நாணமும் அச்சமும் கொண்டு ஓடினான்.

1106. இரண்டு பிறைமதி போன்ற கூரிய பற்களையுடைய மலைவடிவாய் உள்ள, கிரவுஞ்சனது நெஞ்சைப் பிளந்த முருகக் கடவுள் போன்ற வலிமை மிக்க உக்கிரவழுதி, கையில் கொண்டு எறிந்த திகிரிப் படையானது தலையைத் துண்டாக்காமல், பொன்னாலாகிய மணிகள் பதித்த முடியே சிதறுமாறு, சோமசுந்தரக் கடவுளை வணங்கிய பூசைப் பயன் காத்தது.

இந்திரன் ஓலை அனுப்புதல்.

1107. இந்திரன் போருக்கு ஆற்றாது புறம் கொடுத்தோடி, பொன்னுலகில் புகுந்து கொண்டான். பின்னர், ‘உன்னுடைய நாட்டில் உள்ள ஊர் முழுவதுக்கும் மழை வளம் தருவேன். விலங்கினின்றும் நீக்கி மேகங்களைத் தருக’ என்று உக்கிரவழுதிக்கு (ஓலை) திருமுகம் அனுப்பினான்.

1108. ஓலை கொண்டு வந்த தேவதூதன், முடியினை யுடைய பாண்டிய மன்னன் முன் தலை வணங்கி ஓலையைக் கொடுக்க, அருகில் உள்ள ஒருவன் அதனை வாங்கி, ஆண் சிங்கம் போன்ற உக்கிரவழுதியிடம் அதனைப் படித்துக் காட்ட, அதனைக் கேட்ட பாண்டியன், தேவேந்திரனுடைய வார்த்தையில் நம்பிக்கையில்லாததனால் தெளிவடையாதவனாய் இருந்தான்.

1109 இட்டவன் சிறையை நீக்கி யெழிலியை விடாது மாறு
பட்டசிந் தையனே யாகப் பாகசா தனனுக் கென்று
நட்டவ னொருவே ளாளன் நான்பிணை யென்று தாழ்ந்தான்
மட்டவிழ்ந் தொழுகு நிம்ப மாலிகை மார்பி னானும்.

1110 இடுக்கண்வந் துயிர்க்கு மூற்றம் எய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகு நாலா மரபினா னுரையை யாத்தன்
எடுத்துரை மறைபோற் சூழ்ந்து சிறைக்களத் திட்ட யாப்பு
விடுத்தனன் பகடு போல மீண்டன மேக மெல்லாம்.

1111 தேவர்கோன் ஏவ லாலே திங்கண்முகம் மாரி பெய்து
வாவியுங் குளனும் யாறு மடுக்களு மடுத்துக் கள்வாய்க்
காவிசூழ் வயலுஞ் செய்யுஞ் செந்நெலுங் கன்னற் காடும்
பூவிரி பொழிலுஞ் சாவும் பொலிந்தது கன்னிநாடு.

இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் முற்றிற்று.

1109. சிறையில் இடப்பட்ட மேகங்களை விடாது, அதற்கு மாறுபட்ட சிந்தனையுடையவனாய்ப் பாண்டியன் இருந்தான். அப்போது இந்திரனுக்கு எப்போதும் நண்பனாய் இருக்கும் வேளாளன் ஒருவன் எழுந்து பாண்டியனைப் பணிந்து, ''நான் பிணை'' என்று சொல்லி வணங்கினான். வேப்ப மாலையை அணிந்த பாண்டியன் தெளிவடைந்தான்.

முகிலை விடுதல்.

1110. துன்பம் உண்டாகி உயிர்களுக்கு இடையூறு வந்தாலும், உண்மையைப் பாதுகாத்துக் குற்றம் நீங்கிவாழும் நான்காம் குலத்தினன் ஆகிய அவ்வேளாளன் கூறிய மொழியை, வேத மொழிபோல் எடுத்துக் கொண்டான். உடனே சிறைச் சாலையில் இட்டிருந்த தளைகளை நீக்கினான். யானைகளைப் போன்ற நான்கு மேகங்களும் மீண்டு விரைந்து சென்றன.

1111. தேவேந்திரன் கட்டளையாலே மாதம் மூன்று மழை பெய்துவர, வாவிகளும், குளங்களும், ஆறுகளும், மடுக்களும் நிறைந்தன. தேனொழுகும் வாயினை உடைய குவளைகள் நிறைந்த வயல்களில் நெல், கரும்பு போன்றவை காடுகளைப் போன்று மண்டின. மலர் நிறைந்த பூஞ்சோலைகளும், இளமரக்காக்களும் நிறைந்து கன்னிநாடு பொலிவு பெற்று விளங்கியது.

இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் முற்றிற்று.

15. மேருவைச் செண்டாலடித்த படலம்.

1112 அண்டரஞ்ச வமருழந்த மமரர்கோனை யரசர்கோன்
வண்டலம்பு மவுலிசிந்த வளை யெறிந்து வெந்புறங்
கண்டவண்ணம் இன்னதன்ன கன்னிநாடன் மேருவிற்
சென்டெறிந்து வைப்பெடுத்த செயலுநன்கு செப்புவாம்.

1113 மன்னவன் றனக்குமுன்னர் மலயவெற்பின் முனிவர்கோன்
சொன்னதிங்கள் விரதமன்று தொட்டுநோற்று வரலுமந்
நன்னலஞ்செய் பேறுபோல நங்கைகாந்தி மதிவயிற்
றுன்னருஞ் சயங்கொண்மைந்தன் ஒருவன்வந்து
தோன்றினான்.

1114 வயந்தனைப் பயந்ததென்ன மைந்தனைப் பயந்தபோ
தியந்துவைத்து நகர்களிப்ப வினிதிருந்த புரவலன்
சயந்தழைக்க விந்திரன் சயந்தனைப் பயந்தநாள்
வியந்தகத் தடைந்தவின்பம் விளைமகிழ்ச்சி யெய்தினான்.

1115 தென்னரேறு சாதகாதி செய்துவீர பாண்டியன்
என்னநாம வினைநிரப்பி யெழுதொணாத கலைமுதற்
பன்னுகேள்வி கரிகடேர்கள் பரிபடைக் கலம்பயின்
றன்னகாத லான்விளங்க வகமகிழ்ச்சி யடையுநாள்.

15. மேருவைச் செண்டாலடித்த படலம்.

1112. மன்னர் மன்னனாகிய உக்கிரவழுதி, தன்னுடன் போர் புரிந்த தேவேந்திரனை, தேவர்கள் அஞ்சுமாறு அவன் முடி தகர, திகிரிப் படையை எறிந்து புறம் கண்ட திருவிளையாடல் இதுவாகும். அந்தக் கன்னி நாடனாகிய பாண்டியன், மேருமலையின் மேல் செண்டினை எறிந்து சேமநிதி எடுத்த திருவிளையாடலையும் கூறுவோம்.

வீரபாண்டியன் பிறப்பு.

1113. உக்கிரவழுதிப் பாண்டிய மன்னன் முன்பு, பொதிய மலையினுடைய முனிவர் தலைவனாகிய அகத்தியன் கூறிய சோமவார விரதத்தை அன்று முதற் கொண்டு நோற்று வரத் தொடங்கினான். அந்த நல்ல விரதம் அருளிய பயன்போல, பெண்களுள் சிறந்த காந்திமதி அம்மையின் வயிற்றிலே வெற்றி பெறும் புதல்வன் ஒருவன் வந்து தோன்றினான்.

1114. மன்மதனைப் பெற்றெடுத்தது போன்று புதல்வனைப் பயந்த போது நகரத்தில் உள்ள மக்கள் நல்ல வாத்தியங் களை இசைத்து மகிழ்ச்சியடைந்தனர். உக்கிரப்பெருவழுதிப் பாண்டியனும், முன்னர் இந்திரனானவன் தன் மகன் சயந்தனைப் பெற்றெடுத்த போது எவ்வாறு மகிழ்வெய்தி இருந்தானோ அத்தகைய மிக்க மகிழ்வை அடைந்தான்.

1115. பாண்டியர்களுள் ஆண் சிங்கம் போன்ற உக்கிரவழுதி, சாதகன்மம் முதலிய சடங்குகளைச் செய்து 'வீர பாண்டியன்' என்று தன் புதல்வனுக்குப் பெயரிட்டான். வேதங்களில் கூறப்பட்ட நூல்களையும், யானை, குதிரை, தேர் இவைகளின் ஏற்றங்களையும், படைக்கல வித்தைகளையும், நன் முறையில் கற்றுக் கொண்டவனாய் வீர பாண்டியன் திகழ அதைக் கண்டு தந்தையான உக்கிரவழுதி பெருமகிழ்ச்சி அடைந்தான்.

1116 மல்குமாறில் கோடிரிந்து மழைசுருங்கி நதியுநீர்
ஒல்குமாறு பருவமாறி யுணவுமாறி யுயிரெலாம்
மெல்குமாறு பசியுழந்து வேந்தனுக்கு விளை பொருள்
நல்குமாறி லாமையின்ன னலியவந்த நாடெலாம்.

1117 மழைவறந்த தென்கொலென்று வழுதிகூற முழுதுணர்ந்
தழிவிலாத பிரமகற்ப மளவுமெல்லை கண்டநூல்
உழவர்கோள்கள் இரவிதன்னை யுற்றுநோக்கி நிற்றலாற்
றழையுமாரி வருடியாதொர் வருடமென்று சாற்றினார்.

வேறு

1118 மகவுறு நோயை நோக்கி வருந்துறு தாய்போன் மன்னன்
பகவுறு மதியஞ் சூடும் பரஞ்சுடர் முன்போய்த் தாழ்ந்து
மிகவுறு பசியால் வைய மெலிவதை யைய வென்னாத்
தகவுற விரங்கிக் கண்ணீர் ததும்பநின் றிரந்து வேண்ட.

1119 திரைகடல் விடஞ்சேர் கண்டர் காலத்தின் செவ்வி நோக்கி
இரக்கமில் லவர்போல் வாளா விருத்தலு மருத்தார் மார்பன்
கரைக்கரி தாய துன்பக் கடலில்வீழ்ந் திருக்கை புக்கான்
அரக்கர்போர்க் கடலி னீந்தி யருக்கனீக் கடலில் வீழ்ந்தான்.

மழை பெய்ய மறுத்தல்.

1116. கோள்கள் தம்தம் நிலையினின்று மாறுதலடைந்ததால் நன்மை உண்டாகும் தன்மை குறைவடைந்து, மழைவளம் சுருங்கி நதியின் நீரும் வற்றியது, பருவங்கள் மாறுபட்டு உணவற்ற நிலை உண்டாகியது. உயிர்கள் அனைத்தும் மெலிந்து பசியால் வருந்தி, அரசனுக்கு விளைபொருள் கொடுக்கின்ற தன்மையும் இல்லையென்றாகி நாடு முழுவதும் வறுமைத் துன்பத்தில் வருந்தத் தொடங்கியது.

1117. ''மழை வறண்டதற்குக் காரணம் யாது?'' என்று பாண்டியன் கேட்க, அதற்கு சோதிட முழுமையும் கற்றுணர்ந்த, பிரம கற்பம் வரையும் கால அளவைத் தேர்ந்து உணர்ந்த புலவர்கள், ''ஏனைய கோள்கள் சூரியனைப் பொருந்தி நோக்கி நிற்றலால் ஓராண்டு வரை உலகைச் செழிக்க வைக்கும் மழையானது பொழியாது'' என்று கூறினார்கள்.

1118. நோயுற்ற மகனைக் கண்டு வருத்தம் அடைகின்ற தாயைப் போன்று வருத்தமடைந்த பாண்டிய மன்னன், பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமானின் முன் சென்று தாழ்ந்து வணங்கி, ''ஐயனே! உயிர்கள் மிகவும் பசியால் வருத்தம் அடைகின்றதே!'' என்று கூறிக் கண்ணீர் ததும்பி இரந்து வேண்டினான்.

1119. அலைகடலில் தோன்றிய நஞ்சினை உண்ட கறைமிடற்றினையுடைய சோமசுந்தரக் கடவுள் காலத்தின் இயல்பைக் கருதி, கருணை இல்லாதவர் போன்று சும்மா இருந்தார். மணம் பொருந்திய மாலையை அணிந்த உக்கிரவழுதி, பெருத்த துன்பக் கடலில் ஆழ்ந்தான். பின்னர் இருப்பிடம் சென்றான். சூரியன் மேற்குத் திக்கில் சென்று மறைந்தான்.

1120 வள்ளறன் குடைக்கீழ்த் தங்கு முயிர்ப்பசி வருத்தம் எல்லாங்
கொள்ளைகொண் டிருந்த நெஞ்சிற் குளிர்முகச்
செவ்வி குன்றத்
தள்ளருந் துயரின் மூழ்கித் தரையிடைத் துயின்றா னாக
வெள்ளிமன் றுடையார் சித்த வேடராய்க் கனவில் வந்தார்.

1121 அடற்கதிர் வேலோய் மாரி யரிதிப்போ ததனை வேண்டி
இடர்ப்படல் வரைக்கு வேந்தா யிருக்கின்ற
எரிபொன் மேருத்
தடப்பெரு வரையின் மாடோர் தனிப்பெரு
முழையி லிட்டுக்
கிடப்பதோ ரெல்லை யில்லாக் கேடிலாச் சேம வைப்பு.

1122 கிடைத்துமற் றனைய மேரு கிரிசெருக் கடங்கச் செண்டாற்
புடைத்துநின் னாணைத் தாக்கிப் பொன்னறை
பொதிந்த பாறை
துடைத்துநீ வேண்டுங் காறுந் தொட்டெடுத் ததனை மீள
அடைத்துநின் குறியிட் டைய வருதியென் றடிகள் கூற.

1123 விழித்தன னெழுமான் றேரோன் விழிக்குமுன்
கடன்கள் எல்லாங்
கழித்தனன் மீன நோக்கி கணவனை வலமாப் போந்து
சுழித்தெறி கடல னீகத் தொகைபுறஞ் சூழக் கொண்டல்
கிழித்தெழு வாயில் நீங்கிக் கீழ்த்திசை நோக்கிச் செல்வான்.

சோமசுந்தரர் கனவில் தோன்றுதல்.

1120. உக்கிர வழுதி தன் குடை நிழலில் தங்கும் உயிர்களின் பசித் துன்பம் அனைத்தையும் மனதில் எண்ணி குளிர்ந்த முகத்தின் பொலிவு குறைய நீக்குதற்கரிய துன்பக் கடலில் மூழ்கி, நிலத்தில் வீழ்ந்து உறங்கினான். அப்போது அவனது கனவில் வெள்ளியம்பலவாணர் சித்த மூர்த்தியாய் எழுந்தருளினார்.

1121. ''வெற்றியையுடைய ஒளி பொருந்திய வேற்படையை ஏந்திய உக்கிர குமரா! இப்பொழுது மழை பெய்தல் இல்லை. ஆதலால், அதனை வேண்டி வருந்தி இருக்க வேண்டாம். மலைகளுக்கு அரசனாய் இருக்கும், பொன் வடிவாகிய 'மேரு' என்று பெருமை மிக்க மலையின் பக்கத்தில் ஒரு பெரிய குகையில் ஓர் அளவில்லாத அழியாத சேமநிதி வைக்கப்பட்டுள்ளது.

1122. ஐயனே! அதனை அடைந்து, அம்மேருமலையினது செருக்கு அடங்கும்படி செண்டாலடித்து நினது ஆணை வழிப்படுத்திப் பொன் வைப்பு இருக்கும் அறையின் மேல் மூடியுள்ள பாறையை நீக்கி, நீ வேண்டுமளவும் பொன்னை வாரியெடுத்து அவ்வறையை மீண்டும் மூடி நின் இலச்சினையைப் பொறித்து வர வேண்டும்,'' என்று சித்த மூர்த்திகள் கூறி அருளினார்.

உக்கிர பாண்டியன் வடநாடு நோக்கிச் செல்லல்.

1123. உடனே உக்கிரப் பாண்டியன் விழித்து எழுந்தான். ஏழு தேரைப் பூட்டிய சூரியன் புறப்படுவதற்கு முன் நாள் கடமைகளைக் கழித்தான். அங்கயற்கண்ணம்மையின் கணவனாகிய சோமசுந்தரப் பெருமானை வலம் வந்து, வணங்கினான். கடல் போன்ற சேனை தொடர்ந்துவர ஓங்கிய கோபுர வாயிலைக் கடந்து கீழ்த்திசை நோக்கி செல்லத் தொடங்கினான்.

1124 அதிர்ந்தன முரசஞ் சங்கம் அதிர்ந்தன இயங்க ளண்டம்
பிதிர்ந்தன வென்ன வார்ப்பப் பெயர்ந்துவெண் கவரி துள்ள
முதிர்ந்தநான் மறையோ ராசி மொழியநா வல்லோ ரேத்தப்
பதிந்துபார் கிழியத் திண்டேர் பாகுமுன் செலுத்த வூர்ந்தான்.

1125 பவளக்காற் பிச்சம் பொற்காற் பன்மணிக் கவிகை முத்தத்
தவளக்காற் பதாகைக் காடுந் தானவான் அருவி தூங்குங்
கவளக்காற் பொருப்பும் பாய்மாக் கடலுமண் மடந்தை
யாகந்
துவளக்கால் வயவர் மான்றேர்த் தொகுதியுஞ் சூழல் போக.

1126 கோழிணர் ஞாழ லன்ன கோட்டுகிர்ப் புலவுப் பேழ்வாய்த்
தாழ்சின வுழுவை யொற்றைத் தனிப்பெருங்
கொடியுங் கூனற்
காழ்சிலைக் கொடியுஞ் சூழக் கயற்கொடி நிலந்து ழாங்கை
ஏழுயர் வரைமேற் றோன்றி யிருவிசும் பகடு கீற.

1127 தென்கடல் வடபா னோக்கிச் செல்வது போலத் தென்னன்
றன்கட லனிகங் கன்னித் தண்டமிழ் நாடு நீந்தி
வன்கட நெறிக்கொண் டேகி வளவர்கோன்
எதிர்கொண் டாற்றும்
நன்கடன் முகம னேற்று நளிர்புனல் நாடு நீந்தி.

1124. பேரிகை ஒலித்தது. சங்குகள் ஒலித்தன. வானம் பிளந்தது என்று சொல்லத்தக்க அளவில் வாத்தியங்கள் ஒலித்தன. வெள்ளிய் சாமரைகள் வீச, மறையவர் வாழ்த்துக் கூற, புலவர்கள் புகழ்ந்து பாட, உருளைகள் பதிவதால் நிலம் பிளந்தது என்று கூறும்படி வலிமையான தேரைப் பாகன் முன்னே செலுத்தினான்.

1125. பவளத்தால் செய்த காம்பினை உடைய பீலிக் குடைகளும், பொன்னால் செய்த காம்பினை உடைய முத்துக் குடைகளும், முத்துக்கள் கோத்தவெள்ளிய காம்பையுடைய வெற்றிக் கொடியின் காடும், மதநீர் சொரியும் பெரிய கவளங்களை உண்ணுகின்ற யானைகளும், தாவுகின்ற குதிரை வெள்ளமும் வீரர் கூட்டமும், குதிரைபூட்டிய தேர்க் கூட்டமும் நில மகளின் உடல் வருந்தும்படி சூழ்ந்து வந்தன.

1126. பூங்கொத்தினையுடைய ஞாழலின் பூவைப் போன்ற வளைந்த நகத்தையும், புலால் நாற்றமுடைய பிளந்த வாயையும், சினத்தையும் உடைய 'புலி' ஒன்று எழுதப்பட்ட பெரிய கொடியும், வில் எழுதிய கொடியும் சூழ்ந்து வர, மீன் கொடியானது நிலத்தைத் தடவுகின்ற துதிக்கையையுடைய ஏழு முழம் உயர்ந்த மலை போன்ற யானை மேலே தோன்றிப் பெரிய வானத்தின் வயிற்றைக் கிழித்துச் சென்றது.

1127. தெற்குக் கடலானது வடக்கு நோக்கிச் செல்வது போன்று உக்கிர வழுதி சென்றான். தன் கடல் போன்ற பெரிய சேனையோடு, தமிழ் வழங்கும் கன்னி நாட்டைக் கடந்து, வலிய காட்டு வழியாகச் சென்று, சோழனின் வரிசைகளை ஏற்றுக் கொண்டு, புனல்சூழ்ந்த நாடான அச்சோழ நாட்டைக் கடந்து சென்றான்.

1128 தண்டக நாடு தள்ளித் தெலுங்காநா டகன்று சாய்தாட்
கண்டகக் கைதை வேலிக் கருநடங் கடந்து காடுந்
தொண் டகந் துவைக்குங் குன்று நதிகளுந் துறந்து கள்வாய்
வண்டக மலர்க்கா வேலி மாளவ தேச நண்ணி.

1129 அங்குநின் றெழுந்து தீவா யருஞ்சுர நெறிப்பட் டேகி
மங்குனின் றதிருஞ் செம்பொன் மாடநீள் விராட நண்ணிக்
கொங்குநின் றவிழுங் கானங் குன்றொரீஇ வாளை பாயத்
தொங்குநின் றிளநீர் சிந்து மத்திய தேயத் தெய்தி.

1130 அந்நெடு நாடு நீங்கி யாடலே றுயர்த்த தோன்றல்
பொன்னெடுஞ் சடையிற் றாழ்ந்து புனிதமாந் தீர்த்தக் காசி
நன்னெடு நகரமெய்தி நளிர்புனற் கங்கை நீந்திக்
கன்னெடு நெறிய நேக காவதங் கடந்த பின்னர்.

1131 மடங்கன்மா நாகம் யாளி வழங்கலான் மனிதர் செல்லா
இடங்கடந் தாக வைஞ்நூற் றிரட்டியோ சனைத்தாம் எல்லைக்
கடங்கெழு குமரி கண்டங் கடந்துமற் றதுபோ லெட்டுத்
தடங்கெழு கண்டங் கொண்ட பாரத வருடந் தள்ளி.

1128. தொண்டை நாட்டையும் கடந்து, தெலுங்கு நாட்டையும் கடந்து, வளைந்த அடியையும், முள்ளையும் உடைய தாழையை வேலியாக உடைய கருட நாட்டைக் கடந்தான். காடும், தொண்டகப் பறை ஒலிக்கும் மலையும், ஆறுகளும் ஆகிய இவற்றைக் கடந்து, மலர் நிறைந்த சோலைகளை வேலியாக உடைய மாளவ நாட்டைச் சேர்ந்தான்.

1129. பின்னர் அந்நாட்டினின்றும் புறப்பட்டு, நெருப்புத் தகிக்கின்ற பாலைவழியில் சென்று, முகில் தவழும் செம்பொன் மாடங்கள் நிறைந்த விராட நாட்டை அடைந்தான். மகரந்தம் பொருந்திய மலர்கள் உள்ள முல்லை, குறிஞ்சி நிலத்தையும் விட்டு நீங்கி, வாளை மீன் பாய்தலால் தென்னையின் இளநீர் சிந்தும் மத்திய நாட்டை அடைந்தான்.

1130. பின்னர் அந்நெடிய நாட்டினையும் கடந்து, வெற்றியை உடைய சிவபெருமானின் நீண்ட சடையினின்று இழிந்து, தூய்மையாகிய கங்கையை உடைய நல்ல நெடிய காசிப் பதியை அடைந்து குளிர்ந்த நீரையுடைய கங்கை ஆற்றைக் கடந்து கற்கள் நிறைந்த அநேக காவத தூரங்களைக் கடந்து சென்றான்.

1131. சிங்கங்களும், யாளிகளும், கொடிய யானைகளும் திரிதலால் மக்கள் நெருங்க முடியாத இடங்களையெல்லாம் எளிதாகக் கடந்து சென்றான். மேலும் ஆயிரம் யோசனை அளவை உடையதாகிய காடுகள் நிறைந்த குமரிக் கண்டத்தையும் கடந்தான். அதுபோன்றே விரிவுடைய எட்டுக் கண்டங்களைக் கொண்ட பாரத நாட்டையும் கடந்து சென்றான்.

1132 யாவையும் ஈன்றாள் தன்னை யீன்றபொன் னிமயந் தன்னைத்
தாவியப் புறம்போய்ப் போகந் ததும்புகிம் புருட கண்டம்
மேவியங் கதுநீத் தேம வெற்படைந் ததுபின் னாக
ஒவியப் புறத்துத் தோன்று மரிவரு டத்தை யுற்று.

1133 உற்றது கழிந்தப் பாற்போய் நிடதவெற் பொழிந்து சம்புப்
பொற்றருக் கனிகால் யாறு போகிளா விருத கண்டத்
துற்றனன் கண்டான் மூன்றூ ரொருங்கடு ஞான்று கூனி
வெற்றிவெஞ் சிலையாய் நின்ற வெற்பினை மலய வெற்பன்.

1134 வெபம்படை மறவர் சேனை வெள்ளநீத் தேகித் தென்பாற்
சம்புவின் கனியின் சாறு வலம்படத் தழுவி யோடும்
அம்பொன் ஈராறு மாற்றி னருகுபொன் மயமாய் நிற்கும்
பைம்புனங் கான நோக்கி வளைந்துதென் பால்வந் தெய்தா.

1135 அவ்வரை யரசை நோக்கி வரைகளுக் கரசே யெந்தை
கைவரி சிலையே பாரின் களைகணே யளவில் வானந்
தைவரு சுடருங்கோளு நாள்களுந் தழுவிச் சூழந்
தெய்வத வரையேமேலைத் தேவர் ஆலயமே யென்னா.

1132. எல்லாவுலகங்களையும் பெற்றவளாகிய உமையம் மையாரைப் பெற்ற பொன் வடிவம் கொண்ட இமயமலையைத் தாண்டி அதற்கும் அப்புறம் சென்று, போகம் நிரம்பிய கிம்புருட கண்டத்தை அடைந்து, பின்னர் அதனையும் கடந்து சென்று ஏமவரையை அடைந்து அதனையும் கடந்து அரிவருட கண்டத்தை அடைந்தான்.

1133. அவ் அரிவருட கண்டத்தையும் கடந்து, அப்புறம் சென்று நிடதமலையையும் நீங்கி, நாவல் மரத்தின் பொன் போலும் கனிகள் சிதறும் சாற்றினைத் தாங்கிச் செல்லும் ஆறு பாயும் இளாவிருத கண்டத்தைப் பாண்டியன் அடைந்தான். பின்னர் திரிபுரங்களையும் ஒரு சேர அழித்த காலத்தில் வளைந்து (வெற்றியுடைய) வில்லாக நின்ற மேரு மலையைக் கண்டான்.

1134. கொடுமையான ஆயுதங்களை ஏந்திய வீரர்கள் உள்ள சேனை வெள்ளத்தைத் தனியே நிறுத்தித் தான் மட்டும் சென்றான். தென்புறத்தில் நின்ற நாவல் பழத்தின் சாறானது, வலமாகத் தழுவி ஓடுகின்ற நீர் நிறைந்த ஆற்றையும், அந்நதியில் பொன்மயமாய் நிற்கும் பசுமையான காட்டையும் பார்த்து, அந்நாவல் மரம் நின்ற தென் பக்கத்தை வந்தடைந்தான்.

மேருவைச் செண்டால் அடித்தல்.

1135. அம்மேருமலையை நோக்கி, ''மலைகள் அனைத்திற்கும் அரசனே! எம் தந்தையாகிய சிவபெருமானின் திருக்கரத்தில் உள்ள கட்டமைந்த வில்லே! நிலவுலகின் ஆதாரமே! வானுலகைத் தழுவி வருகின்ற சூரிய சந்திரரும், ஏனைக் கோள்களும் நட்சத்திரங்களும் பொருந்தி சூழ்ந்து வருகின்ற தெய்வத் தன்மையுடைய மலையே! வானுலகத்தில் உள்ள தேவர்கள் வசிக்கும் கோயிலே!'' என்று அழைத்தான்.

1136 மாணிக்க மிமைக்கும் பூணான் விளித்தலும்
வரைக்கு வேந்தன்
பாணித்து வரவு தாழ்ப்பப் பாகசா தனனை வென்றோன்
நாணித்தன் சினமு மேரு நகைவரைச் செருக்குமாறச்
சேணுற்ற சிகரந் தன்னிற் செண்டினால் அடித்து நின்றான்.

1137 அடித்தலும் அசையா மேரு வசைந்துபொற் பந்து போலத்
துடித்தது சிகர பந்தி சுரர்பயில் மாடப் பந்தி
வெடித்தன தருண பானு மண்டலம் விண்டுதூளாய்ப்
படித்தலை தெறித்தா லென்னப் பன்மணி யுதிர்ந்த வன்றே.

1138 புடைவரைக் குலங்கள் எட்டும் புறந்தழீஇக்
கிடக்குஞ் செம்பொன்
அடைகலோர் நான்கு நான்கு கிடங்கரு மலர்ந்த நான்கு
தடமலர்ப் பொழிலு நான்கு தருக்களுஞ் சலித்த வம்மா
உடையவ னிடையூ றுற்றா லடுத்தவர்க் குவகை யுண்டோ.

1139 புடைத்தபின் மேருத் தெய்வம் புடைக்குல
வரையெட் டென்னப்
படைத்தவெண் டோளு நான்கு முடியுமேற்
படுவெண் சோதி
உடைத்தனிக் குடையுங் கொண்ட வுருவினோடு
எழுந்து நாணிக்
கிடைத்தது கருணை வேந்தன் கிளர்சினந்
தணிந்து நோக்கா.

1140 இத்தனை வரவு தாழ்த்த தென்னென மேருத் தெய்வம்
வித்தக நம்பி கேட்டி மீனெடுங் கண்ணி யோடும்
பைத்தலை யரவம் பூண்ட பரனையிப் படிவங் கொண்டு
நித்தலும் போகிப் போகி வழிபடு நியமம் பூண்டேன்.

1136. மாணிக்கங்கள் ஒளிவீசும் அணியை அணிந்த உக்கிரவழுதி இவ்வாறு அழைத்தலும், அம்மலையானது வராமல் காலம் கடத்தியது. உடனே இந்திரனையே வென்ற அப்பாண்டியன் நாணம் அடைந்து, கோபம் கொண்டு, அம்மேருமலையின் செருக்கு நீங்குமாறு வானை அளாவிய அம்மலையின் முடியில் செண்டினால் அடித்தான்.

1137. அடித்தலும் அசையாத மேருமலையானது பாண்டியன் செண்டால் அடிபட்டவுடன் பொன் பந்து போலத் துடித்தது. முடிவரிசைகளும் தேவர்கள் வசிக்கும் மாட வரிசைகளும் வெடித்தன. சூரிய மண்டலம் பிளந்து தூளாகிப் பூமியில் சிந்தியது போலப் பல மணிகளும் சிதறின.

1138. மேருவின் பக்கத்தில் இருந்த குல மலைகள் எட்டும், நான்கு பக்கங்களிலும் சூழ்ந்த பக்க மலைகள் நான்கும், கிடங்குகள் நான்கும், மலர்ந்த பெரிய பூம்பொழில்கள் நான்கும், மரங்கள் நான்கும் நடுங்கின. தலைவனுக்குத் துன்பம் உண்டாயின் அவனைச் சேர்ந்தவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகுமோ? உண்டாகாது.

1139. அடிபட்டபின் மேருமலைத் தெய்வமானது, பக்கத்தில் உள்ள குலவரைகள் எட்டினையும் போல எட்டுத் தோள்களும் நான்கு தலைகளும், மேலே கவிக்கும் ஒளியையுடைய ஒப்பற்ற குடையும், ஆகிய இவைகளைக் கொண்ட வடிவத்தோடு எழுந்தருளி அருளை உடைய உக்கிரவழுதியின் முன் எதிர்ப்பட்டது. பாண்டியன் தன் சினம் தணிந்து மலையை நோக்கினான்.

1140. ''இதுவரை வராமல் காலம் தாழ்ந்திருந்தமைக்குக் காரணம் என்ன?'' என்று கேட்டான். அம்மேருத் தெய்வம் ''வித்தகனே கேள்! அங்கயற்கண்ணம்மையோடு பாம்பையணிந்த சோமசுந்தரப் பெருமானை இந்த வடிவத்தோடு தினம் தினம் சென்று வணங்குகின்ற நியதியைக் கொண்டிருந்தேன்.''

1141 இன்றுகேட் டிலையோ வையா வேந்திழை
யொருத்தி காமந்
துன்றுமா கடலின் மோகச் சுழித்தலைப் பட்டு வெள்ளி
மன்றுளா டியபொற் பாதம் வழிபடல் மறந்து தாழ்த்து
நின்றுளேன் இனைய தீங்கி னிமித்தினா லடியும் பட்டேன்.

1142 திருவடி பிழைத்த தீங்கு தீர்த்தனை யிதனி லையன்
தருவதோர் உறுதி தானுந் தக்கதோர் கைம்மா றென்னால்
வருவது முண்டாங் கொல்லோ மற்றது நிற்க மன்றல்
பருவரை மார்ப வந்த பரிசென்கொல் பகர்தி யென்ன.

1143 மன்னவன் வெறுக்கை வேண்டி வந்தனன் என்றா னைய
உன்னது புலத்தோர்க் கேற்ப வுரைபடு மாற்ற தாய
பொன்னவிர் தேமா நீழற் புதைபடக் கிடக்குஞ் செம்பொன்
என்னவங் கையாற் சுட்டிக் காட்டியது எரிபொற் குன்றம்.

1144 மின்னகு வேலான் முந்நீர் வேலையை
வணக்கங் கண்டோன்
பொன்னறை மருங்கிற் போகிப் பொத்திய பாறை நீக்கித்
தன்னவா வளவிற் றாய தபனிய முகந்து மூடிப்
பின்னதுந் தன்னதாகப் பெயரிலச் சினையுந் தீட்டா.

1141. 'ஐயனே!' இன்று நடந்ததொரு செய்தியைக் கேட்பாயாக! பெண் ஒருத்தியின் மேல் கொண்ட காமத்தால் மோகமாகிய சுழியில் ஆழ்ந்து, வெள்ளியம்பலத்துள் ஆடியருளும் பெருமானின் திருவடிகளை வணங்காமல் மறந்திருந்தேன். அதனால் காலம் தாழ்த்தி வந்து அடியும் பட்டேன்'' என்றது.

1142. மேலும் ''சிவபெருமானின் திருவடிகளை மறந்த தவற்றினை நீக்கினாய். இதைவிடப் பெரிய நன்மையை எனக்கு யார் செய்ய முடியும்? அதற்குரிய கைம்மாறாக என்னால் செய்யக்கூடியது ஏதேனும் உண்டோ? அது இருக்கட்டும். மலைபோன்ற பெரிய மாலையை அணிந்த மார்பனே! நீ வந்த காரணம் யாது? கூறுவாயாக'' என்றது.

1143. அதற்கு உக்கிரப் பாண்டியன், ''நிதி பெறுவதற்காக வந்தேன்,'' என்றான். ''ஐயனே! உன்னுடைய நாட்டில் உள்ளோர்க்கு இசைய, செம்பொன் இத் தேமாமரத்தின் கீழ் நிழலில் ஓர் அறையில் பாறையால் மூடப்பட்டுக் கிடக்கின்றது,'' என்று கூறித் தன் கையால் அவ்விடத்தைச் சுட்டிக் காட்டியது.

பாண்டியன் செம்பொன் பெற்றுத் தன்னாடு திரும்புதல்.

1144. வெற்றி மிக்க வேல் படையால் மூன்று நீர்களையுடைய கடலைத் தன் கீழ்ப்படுத்திய உக்கிரவழுதி பொன் அறையின் அருகில் சென்று, மூடிய பாறையை நீக்கி, தான் விரும்பிய அளவிற்குப் பொன்னை அள்ளிக்கொண்டு, அப்பாறையை மீண்டும் மூடி எஞ்சிய பொன்னையும் தன்னுடையதாக வைத்துத் தன் முத்திரையை அதன் மேல் பதித்தான்.

1145 மின்றிகழ் மணிப்பூண் மார்பன் மீண்டுதன் றானை யோடுந்
தென்றிசை நோக்கிப் பாகன் செலுத்தமான்
றடந்தேர் ஊர்ந்து
பொன்றிகழ் வரையும் போக பூமியும் பிறவு நீத்து
நன்றிகொண் மனிதர் வைப்பி னண்ணுவா
னண்ணு மெல்லை.

1146 மாத்திமர் விராட மன்னர் மாளவர் தெலுங்க தேயப்
பார்த்திபர் பிறருந் தத்தம் பதிதொறும் வரவு நோக்கித்
தேர்த்திக ழனிகத் தோடுஞ் சென்றெதிர் முகமன் செய்யத்
தார்த்திரு மார்பன் கன்னித் தண்டமிழ் நாடு சார்ந்தான்.

1147 கன்னிப்பொன் னெயில்சூழ் செம்பொற் கடிநகர்க்
கணிய னாகிப்
பொன்னிற்செய் திழைத்த நீள்கோ புரத்தினைக்
கண்டு தாழ
உன்னித்தே ரிழிந்தெட் டோடைந் துறுப்பினாற்
பணிந்தெ ழுந்து
வன்னிச்செஞ் சுடர்க்க ணெற்றி மன்னவன்
மதுரை சார்ந்தான்.

1148 அறத்துறை யந்த ணாளர் துறந்தவர் அரன்றாள் பற்றிப்
புறத்துறை யகன்ற சைவ பூதியர் புனிதன் கோயிற்
றிறத்துறை யகத்துத் தொண்டர் திரண்டெதிர்
கொள்ள முத்தின்
நிறத்துறை வைகை நீத்து நெடுமதில் வாயின் புக்கான்.

1145. மின் போன்ற மணிகளை அணிந்த உக்கிர பாண்டியன் தன் சேனையோடு திரும்பித் தெற்குத் திசையை நோக்கி, குதிரை பூட்டிய தேரைப் பாகன் விரைந்து செலுத்த, மேரு மலையையும், போக பூமியையும், மற்றுமுள்ள நாடுகளையும் கடந்து நன்மையைக் கொண்ட மக்கள் வசிக்கும் நாட்டிற்கு வந்தான்.

1146. அவ்வாறு வரும்பொழுது, மத்திமர், விராடர், மாளவர், தெலுங்கர் ஆகியோரின் மன்னர்களும், ஏனைய மன்னர்களும் தம் தம் நகரங்கள் தோறும் வருகையை எதிர் நோக்கி, தேருடன் விளங்கும் சேனைகளுடன் எதிரே சென்று வரவேற்று உபசாரம் செய்தனர். அதனை ஏற்றுக் கொண்ட பாண்டியன், தமிழ் வழங்கும் அழகிய தன்னுடைய கன்னி நாட்டை அடைந்தான்.

1147. அழியாத பொன்னாலாகிய மதில் சூழ்ந்த காவலையுடைய மதுரை நகருக்கு அருகில் சென்று, பொன்னால் செய்யப்பட்டு மணிகள் இழைத்த நீண்ட கோபுரத்தைக் கண்டு வணங்க எண்ணி தேரில் இருந்து இறங்கினான். எட்டு உறுப்பினாலும் ஐந்து உறுப்பினாலும் பணிந்து வணங்கி எழுந்து நெற்றியில் செவ்வொளி பொருந்த நெருப்புக் கண்ணையுடைய சோமசுந்தரக் கடவுளின் மதுரையை அடைந்தான்.

1148. அறநெறியில் பிழையாத அந்தணர்களும் துறவிகளும், சிவபெருமானின் திருவடியைப் பற்றிக்கொண்ட சைவப் பெருவாழ்வினரும், சோமசுந்தரக் கடவுளின் திருக் கோயில்களில் பூசனை வகைகளை நடத்தும் அகத்துத் தொண்டர் களும், ஒன்றாக எதிர் கொள்ள வையை ஆற்றைக்கடந்து நீண்ட மதில் சூழ்ந்த வாயிலில் புகுந்தான்.

1149 கொங்கலர் கோதை மாதர் குங்குமம் பனிப்பச் சிந்தும்
மங்கல மறுகி னேகி மறைகள் சூழ் கோயில் எய்தித்
தங்கணா யகனைச் சூழ்ந்து தாழ்ந்தெழுந் தேத்திப் போந்து
திங்கள்சூழ் குடுமிச் செல்வத் திருமணிக்
கோயிலில் புக்கான்.

1150 பொன்மலைக் கடவு ளீந்த புண்ணிய நிதியை யந்த
நன்மலை மானக் கூப்பி நல்கிப்பல் குடியு மோம்பித்
தென்மலைக் கிழவன் றெய்வந் தென்புல வாண ரொக்கல்
தன் மனை விருந்து காத்துத் தருக்கினா னிருக்கு நாளில்.

1151 ஐவினை நடாத்தும் ஈச னாணையால் நடக்குங் கோளுஞ்
செய்வினைத் திரிவு மாறத் தென்னனா டெங்கு மாரி
பெய்வினை யுடைய தாகிப் பெருவளம் பகிர்ந்து நல்க
உய்வினை யுடைய வாகி யுயிரெலாந் தழைத்த வன்றே.

வேறு

1152 புவனியிம் முறையாற் புரந்தளித் தாரம் பூண்டபாண்
டியன்றிரு மகனுக்
கவனியே ழறிய வீரபாண் டியனென் றணிமுடி
கவித்தர சளித்து
நவநிர திசய பூரண வின்ப ஞானநோக் கருளிய மதுரைச்
சிவனடி நிழலிற் பிளப்பறப் பழைய தேசொடு
நிறைந்து வீற்றிருந்தான்.

மேருவைச் செண்டாலடித்த படலம் முற்றிற்று.

1149. மணம் வீசும் கூந்தலை உடைய பெண்கள், குங்கும நீரைக் குளிரச் சிந்திய மங்கலம் நிறைந்த வீதியில் சென்று, வேதஒலி சூழ்ந்த திருக்கோயிலை அடைந்து தங்கள் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி வலம் வந்து பின்னர் உக்கிரபாண்டியனைத் துதிசெய்து வரவேற்க, அவன் சந்திரன் தவழும் சிகரத்தையுடைய கோயிலைச் சென்றடைந்தான்.

பண்டிய நாடு செழித்தல்

1150. பொன்மலைக் கடவுள் கொடுத்த புண்ணிய நிதியை, அம்மேருமலையைப் போலவே குவித்து, பல குடிகளுக்கும் கொடுத்துப் பாதுகாத்தான். பின்னர் உக்கிர வழுதி, தெய்வத் தையும், தென்புலத்தாரையும் சுற்றத்தாரையும் தன் இல்லத்திற்கு வந்த விருந்தினரையும் பாதுகாத்துக் களிப்புடன் இருந்தான்.

1151. ஐந்து தொழில்களையும் இயற்றும் சிவபெரு மானுடைய ஆனையினால்,இதுவரை இயங்காமல் நின்ற கோள்களும், செயற்கையாகிய இத்தன்மையானது நீங்கு தலால்,பாண்டியனுடைய நாடு முழுவதும் மழையானது பெய்யத் தொடங்கியது. பெரிய வளமை உண்டாயிற்று. எல்லா உயிர்களும் பசி நீங்கிப் பிழைத்தன.

1152. ஆரம் பூண்ட உக்கிரவழுதி, நிலவுலகை இம்முறை யினால் நன்றாகப் பாதுகாத்தான். தன் திருமகனான வீரபாண்டியனுக்கு ஏழுலகும் அறியுமாறு அழகிய மணிமுடி சூட்டி அரசுரிமை தந்தான். புதுமையான, இன்பத்திற்கு ஏதுவான ஞான மார்க்கத்தை உண்டாக்கக் கூடிய மதுரைத் திருநகரில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழலில் இரண்டறக் கலந்து பழைய ஒளியோடு வீற்றிருந்தான்.

மேருவைச் செண்டாலடித்த படலம் முற்றிற்று.

16. வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்.

1153 உலம்பொரு தடந்தோ ளுக்கிரச் செழியன் உயரிய
மேருமால் வரையைப்
பொலம்புரி செண்டாற் புடைத்துவைப் பெடுத்துப்
போந்தரு ளடைந்தவா புகன்றும்
வலம்படு திணிதோள் வீரபாண்டியன்கோல்
வழங்குநாண்மதுரையெம் பெருமான்
புலம்பொரு முனிவர் தேறதால் வேதப்பொருளுணர்த்
தியதிறம் புகல்வாம்

1154 ஐம்பெரும் பூத நிலைதிரிந் தீரேழ் அடுக்கிய
வுலகொடும் அயன்மால்
உம்பவர்வான்பதமு முதித்தவா றொடுங்க வுருத்த
தோ ருழிவந் தெய்தச்
செம்பொருண் மறையு மொடுக்கிய வழிநாட்
செஞ்சுடர்கடவுண்முன் மலரும்
வம்பவிழ் கமல மெனவரன் திருமுன் மலர்ந்ததா
லகிலமு மாதோ.

1155 பண்டுபோற் பின்னு முத்தொழி னாடத்துப்
பராபரஞ்சுடர்திருவுள்ளங்
கொண்டுபோர்த் திகிரி வலவனைத் தரவிக் குரிசிறன்
நாபிமுண்டகத்தில்
வண்டுபோற் பிரம னுதித்துமூவுலகும் வரன்முறை
படைக்குநாள்நஞ்சம்
உண்டுபோற்றியவானவர்க்குயிர் அளித்த
உம்பர்தாயகன்றிரு வாக்கில்

16. வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்

1153. திரண்டகல்போன்ற பெரிய தோளை உடைய உக்கிரவழுதி உயர்ந்த மேருமலையைப் பொன்னாலான செண்டினால் அடித்து, நிதியை எடுத்துவந்து, திருவருளைப் பெற்ற அத்திருவிளையாடலைக் கூறினோம். இனி வெற்றி பொருந்திய வலிய தோள்களையுடைய வீரபாண்டியன் அரசாட்சி செய்தபொழுது மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், புலன்களை வென்ற முனிவர்கள் தெளிவடைய நான்கு வேதங்களின் பொருளை அறிவுறுத்திய திருவிளையாடலைக் கூறுவோம்.

உலகம் அழிந்து தோன்றுதல்

1154. ஐந்து பெரிய பூதங்களும் தம் நிலையில் மாறுபட்டு, பதினான்கு உலகங்களுடன், பிரமன் திருமால் ஏனைத் தேவர்களின் பதங்களும் தோன்றியவாறே ஒடுங்க ஒரு ஊழிக் காலம் வந்து பொருந்த மெய்ப் பொருளை உடைய மறைகளும் ஒடுங்கின. பின்னாளில், சிவந்த கதிர்களையுடைய ஆதித்தன் முன் மலருகின்ற தாமரை மலர் போல, சிவபெருமானின் திரு முன்னே எல்லாமும் தோன்றின.

1155. முன்னர் போலவே பின்பும் மூன்று தொழிலும் நடத்தி அருள சிவபரஞ்சுடர் திருவுள்ளம்கொண்டு, திகிரிப் படையை ஏந்திய திருமாலைத் தோற்றுவிக்க, அத்திருமாலின் உந்திக் கமலத்தினின்றும் வண்டு போலும் பிரம்மதேவன் தோன்றினான். மூன்று உலகங்களையும் முறையாகப் படைக்கும் போது நஞ்சினை உண்டு, வணங்கிய தேவர்களுக்கு உயிரைத் தந்தருளிய தேவ தேவனாகிய சிவபெருமானின் திருவாக்கில் (பிரணவம் தோன்றியது).

1156 பிரணவ முதித்த ததனிடை வேதம் பிறந்தன நைமிசா
ரணியத்
தருணிறை முனிவர் கண்ணுவர் கருக்கர் ஆதியோ ரதிகரித்
தவற்றின்
பொருணிலை தெரியா துள்ளமு முகமும் புலர்ந்தன
ரிருப்பவப் போதத்
திருண்மல வலிவென் றவனர பத்த னென்றொரு
வேதியன் வந்தான்.

1157 வந்தவே தியனை யிருந்தவே தியர்கள் வரவெதிர்ந்
திறைஞ்சிவே றிருக்கை
தந்தவே லையிலம் மறையவன் முனிவர் தமைமுக
நோக்கியீ துரைப்பான்
பந்தவே தனைசா லவாவெறுப் பிகந்த பண்பினன்
ஆயினீர் நீவிர்
சிந்தைவேறாகி முகம்புலர்ந் திருக்கச் செய்தியா
தெனவவர் சொல்வார்.

1158 மருட்படு மாயை கழிந்தவன் மொழிந்த மறைபயின்
றுரைசெய்தே சிகனற்று
இருட்படு மனத்தே மிருந்துமா லைய யாதுசூ
ழிதற்கெனக் கேட்ட
தெருட்படு மனத்தோன் செப்புவான் வேதஞ் செப்பிய
சிவபரஞ் சுடரே
அருட்படி வெடுத்துப் பொருளையும் உணர்ந்து
மல்வது சூழ்ச்சியாதறைவீர்

1156. பிரணவம் தோன்றியபின் அதனிடம் இருந்து மறைகள் தோன்றின. நைமிசாரணியத்தில் உள்ள அருள் நிறைந்த முனிவர் கண்ணுவர், கருக்கர் ஆகியோர் பயின்றனர். ஆயினும் அம்மறையின் உட்பொருளை உணராது மனமும் முகமும் வாடி இருந்தனர். அப்போது ஆணவமலத்தின் சக்தியை வென்றவனாகிய அரபத்தன் என்ற பெயருடைய முனிவன் ஒருவன் வந்தான்.

அரபத்தர், முனிவர் வாட்டம் பற்றிக் கேட்டல்

1157. வந்த அரபத்த முனிவனை அங்குத் தங்கி இருந்த முனிவர்கள் வரவேற்றனர் . அவனை வணங்கி ஆசனம் அளித்தனர். அப்போது கண்ணுவர் போன்ற முனிவர்களை நோக்கிஅரபத்தர் சொல்லத் தொடங்கினார்: ''நீங்கள், பாசம் நீக்கப்பட்டு விருப்பு வெறுப்பற்ற தன்மை உடையவராய் இருந்தும் மனம் வேறுபட்டு முகம் வாடி இருக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டார். அம் முனிவர்கள் உடனே சொல்லத் தொடங்கினர்.

1158. ''ஐயனே! மயக்கத்திற்கு ஏதுவாகிய மாயை இயல்பாகவே நீங்கிய இறைவன், திருவாய் மலர்ந்தருளிய வேதங்களை ஓதி, அவற்றின் பொருளை உணர்த்தும் ஆசிரியன் இல்லாமல் அஞ்ஞானம் உடைய மனத்தையுடையேமாக இருக்கின்றோம். ஆதலால் இதற்கு ஆலோசனை யாது?''என்று வினவினர். அதனைக் கேட்டுத் தெளிவு பெற்ற மனத்தினையுடைய அரபத்தன், ''அவ்வேதங்களை அருளிய சிவபரம் பொருளே அருளுருக் கொண்டு பொருளையும் அறிவிக்கும். அது தவிர வேறு ஆலோசனை யாது? சொல்வீர்!''என்றான்.

1159 பண்ணிய தவத்தால் அன்றியா தானும் படுபொருள்
பிறதிலை தவமும்
புண்ணிய தலத்தி னல்லது பலியா புண்ணிய
தவத்திலும் விழுப்பம்
நண்ணிய சைவ தலத்தினி லியற்றி னல்குமச்
சிவதலங்களினும்
எண்ணிய வதிக தலத்தினி லியற்றி னிருந்தவ
மெளிதுடன் பயக்கும்

1160 அத்தகு தவமற் றியாதெனில் உலக மகிலமுந்
தன்னுடம் பான
வித்தகன் சென்னிப் பன்னிரு விரன்மேல் விளங்கிய
தலமது சீவன்
முத்தரா யெண்ணில் வானவர் முனிவோர் முயன்றுமா
தவப்பய னடைந்து
சித்தமா சகன்று வதிவதென் றறநூல் செப்பிய
மதுரையந் நகரில்.

1161 தெளிதரு விசும்பின் இழிந்ததோர் விமான சிகாமணி
யருகுதென் மருங்கின்
முளிதரு பராரை வடநிழல் பிரியா முழுமுதல்
வழிபடும் அறவோர்க்
களிதரு கருணை முகமலர்ந் தளவா வருங்கலை
யனைத்தையுந் தெளிவித்
தொளிதரு மனைய மூர்த்தியே நுங்கட் கோதிய
மறைப்பொரு ளுணர்த்தும்.

1162 அங்கவன் றிருமுன் அருந்தவ விரத மாற்றுவான்
செல்லுமி னெனவப்
புங்கவன் னருள்போல் வந்தமா தவன்பின் புனிதமா
முனிவரு நங்கை
பங்கவன் மதுரைப் பதிபுகுந் தம்பொற் பன்மணிக்
கோயில்புக் காழிச்
சங்கவன் கைபோல் வளைசெறி செம்பொற் றாமரைத்
தடாக நீராடி.

1159. மேலும், ''செய்த தவத்தினால் அல்லாமல் வேறு யாதொன்றாலும் கைகூடும் பொருள் இல்லை. அத்தவமும் புண்ணியத் தலங்களில் அல்லாமல் கைகூடாது. அப்புண்ணியப் பதிகளிலும் சிறப்புப் பொருந்திய சிவத்தலங்களில் செய்தால் எளிதில் பலன் அளிக்கும். அச்சைவத் தலங்களிலும் மதிப்புடைய சிறந்த சிவத் தலத்தில் செய்தால் அப்பெரிய தவங்கள் விரைவாகப் பயனளிக்கும்.

1160. ''அந்தச் சிறந்த பதி யாது என்றால் அது, உலகம் முழுவதும் தனது உடம்பாக உள்ள வித்தகன், முடியின் மேல் பன்னிரெண்டு அங்குலத்திற்கு மேலாக விளங்கிய தலம் என்றும், அளவற்ற தேவர்களும் முனிவர்களும் நோற்றுப் பெரிய தவப் பயனை அடைந்து மனக் குற்றம் நீங்கப் பெற்றுச் சீவன் முக்தராய் வசிக்கப் பெறுவது என்றும் தரும நூல்களால் எடுத்துரைக்கப் படுகின்ற மதுரை நாடாகும்.

1161. ''வானத்தினின்று இறங்கிய ஒப்பற்ற விமானங்களுக் கெல்லாம் சூளாமணியாய் உள்ள விமானத்தின் அருகில் தெற்கில் அரையாடையை உடைய கல்லால மரத்தினின்றும் நீங்காத முழுமுதற்கடவுள், வழிபடும் முனிவர்க்கு கருணையுடன் முகமலர்ச்சியுற்று அளவற்ற அரிய நூல்கள் அனைத்தையும் தெளிவு படுத்தி நிற்பர். அச்சிறந்த தென்முகப் பெருமானே தாம் அருளிய வேதத்தின் உட்பொருளை உங்கட்கு அறிவிப்பார்'' என்றார்.

அரபத்தர், முனிவர்களை மதுரைக்கு அனுப்பி வைத்தல்

1162. ''அம்மூர்த்தியின் திருமுன்னர் தவமாகிய அரிய தவத்தை நோற்பதற்கு அங்கே செல்லுங்கள்'' என்று மேலும் கூறினார். அந்தத் தேவனது திருவருள் போலும் வந்த மாதவனாகிய அரபத்தன் பின்பு தூய பெருமையுடைய முனிவர்களும் சோமசுந்தரப் பெருமானின் மதுரைப் பதியில் சென்று, பல வகை மணிகள் பதித்த திருக்கோயிலினுள் புகுந்து, திருமாலின் திகிரிப் படையை ஏந்திய கையைப் போலச்சங்கு பொருந்திய சிவந்த பொற்றாமரைக் குளத்தில் நீராடினர்.

1163 கரைகடந் துள்ளங் கடந்தவன் புந்தக் கடிதுபோய் நான்கிரு
வெள்ளி
வரைகடம் பிடரிற் கிடந்தோர் மேரு வரைபுரை
விமானமேற் காணா
உரைகடம் பொருளைக் கண்களாற் கண்டாங் கும்பர்தம்
பிரானைநேர் கண்டு
திரைகடந் திடும்பேர் இன்பவா ரியிலுஞ்
சேணிலத்திலும்விழுந் தெழுந்தார்.

1164 கைதலை முகிழ்த்துக் கரசரணங்கள் தம்பிதஞ்
செய்துகண் ணருவி
பெய்தலை வெள்ளத் தாழ்ந்துவாய் குழறிப் பிரமன்மால்
இன்னமுந் தேறா
மைதழை கண்ட வெள்ளிமன் றாடும் வானவர்
நாயக வானோர்
உய்தர விடமுண் டமுதருள் புரிந்த உத்தம
போற்றியென் றேத்தா.

1165 மறைபெருள் காணா துள்ளமா லுழந்து வாடிய
வெமக்குநீ யேயந்
திறைபொரு ளாகி நின்றனை யதற்கு நீயலாற்
பொருள்பிறி தியாதென்
றிறைவனை யிறைவன் பங்கிலங் கயற்க ணிறைவியை
யம்முறை யேத்தி
முறைவலஞ் செய்து வடநிழல் அமர்ந்த மூர்த்திமுன்
னெய்தினார் முனிவோர்.

1163. உள்ளத்தை விழுங்கி எழுந்த எல்லையற்ற அன்பானது, உந்த விரைந்துபோய்,எட்டு வெள்ளி மலைகளின் பிடரியிலே தங்கியதாகிய ஒரு பொன் மலையைப் போலும் விமானத்தின்கண் தம் அகக் கண்ணால் காணக் கூடாத மறைகளின் பொருளைப் புறக் கண்ணால் கண்டது போலத் தேவதேவனாகிய சொக்கலிங்கக் கடவுளை நேரில் பார்த்து அலை பொழிந்த பேரின்பக் கடலினும் அண்மையாகிய நிலத்திலும் விழுந்து எழுந்தார்கள்.

1164. கைகளைத் தலைமேல் குவித்து, கைகளும் கால்களும் நடுக்கமடைந்து, ஆனந்தக் கண்ணீர் பொழிந்து, அதில் மூழ்கி, நாத்தடுமாறி,''பிரமனும் திருமாலும் இன்னமும் காணப் பெறாத கருமை மிக்க திருமிடற்றையுடையவனே! வெள்ளியம் பலத்திலே திருநடனம் புரியும் தேவதேவனே!தேவர்கள் உயிர் பிழைக்குமாறு நஞ்சினை உண்டு அமுதத்தை அளித்த உத்தமனே! எம்மைக் காத்தருள்க''என்று துதித்தனர்.

தட்சிணாமூர்த்தியைத் துதித்தல்

1165. கண்ணுவர் முதலிய அம்முனிவர்கள் மறை பொருள் காணாது உள்ளம் மயங்கி வாடிய எமக்கு நீயே அம்மறையின் நிறைந்த பொருளாகி நிள்றாய். அதற்கு உன்னையல்லாமல் வேறு பொருள் யாது?'' என்று சொக்கலிங்கக் கடவுளைத் துதித்து, அப்பெருமானுடைய ஒரு பாதியில் அமர்ந்த அங்கயற் கண்ணம்மையையும் அங்ஙனமே துதித்து முறையாக வலம் வந்து கல்லால மர நிழலில் அமர்ந்தருளியுள்ள தட்சணாமூர்த்தியின் திருமுன்னர் அடைந்தார்கள்.

1166 *சீதளப் பளிக்கு மேனியும் பளிக்குச் செழுமலை*
பதித்த துப்பன்ன
பாதமுஞ் செவ்வாய் மலருமுக் கண்ணும் பங்கயச்
செங்கர நான்கும்
வேதபுத் தகமும் அமுதரும் பமுந்தன் விழிமணி
வடமுமெய்ஞ் ஞான
போதமுத் திரையுந் தரித்ததோர் தனிமைப் போதன்முன்
தாழ்ந்தெழுந் தேத்தா.

1167 வடநிழல் அமர்ந்த மறைமுதன் மேதா மனுவெழுத்
திருபது மிரண்டுந்
திடமுற அரபத் தன்றனாற் றெளிந்து தேணிறை மதி
முத லடைவிற்
படுமதி யளவுந் தருப்பணம் ஓமம் பார்ப்பன
வுண்டிமுப் போதும்
அடைவுற நுவன்று நோற்குமா தவர்மு னருமறைப்
பொருள்வெளி வருமால்.

வேறு

1168 மானமுனி வோரதி சயிப்பவட நீழல்
மோனவடி வாகிய முதற்குரவன் எண்ணாள்
கூனமி விலக்கண வுறுப்பகவை நானான்
கானவொரு காளைமறை யோன்வடிவ மாகி.

1169 நீண்ட திரிபுண்டரம் நெற்றிவிழி பொத்தக்
காண்டகைய கண்டிகை வளைந்தொழுகு காதிற்
பூண்ட குழை கௌவிய பொலன்செய்பல காசு
சேண்டவ ழிளங்கதிர் சிரித்திருள் சிதைப்ப.

1166. குளிர்ந்த பளிங்கு போன்ற திருமேனியும், ஒளி நிறைந்த அப்பளிங்கு மலையின் அடியில் பதித்த பவளம் போன்ற திருவடிகளும், சிவந்த திருவாயாகிய தாமரை மலரும்,மூன்று கண்களும், தாமரை மலர்போன்ற சிவந்த திருக்கைகள் நான்கும், வேதத் திருமுறையும், அமுத கவசமும், உருத்திராக்க மணிமாலையும்,மெய்ஞான போத முத்திரையும், தரித்த தேசிகனாகிய தட்சணாமூர்த்தியின் திருமுன்னர் தாழ்ந்து வணங்கித் துதித்தார்கள்.

இறைவன் குருமூர்த்தியாக வெளிப்படல்

1167. கல்லால மரநிழலில் அமர்ந்தருளிய வேத முதல்வனாகிய தட்சிணாமூர்த்தியின் இருபத்திரண்டு எழுத்து வடிவமாகிய மந்திரத்தை அரபத்த முனிவனால் உறுதி பெறத் தெளிந்து, கார்த்திகை மாதம் முதல் அடுத்த கார்த்திகை வரும் வரையில் தருப்பணமும், ஒமமும், பார்ப்பன உணவும் மூன்று காலமும் பொருந்தும்படி, மாதவர் முன் நோற்று அறிதற்கரிய மறைகளின் பொருளாய் உள்ள இறைவன் வெளிப்பட்டு வருகின்றான்.

1168. பெருமை பொருந்திய அம்முனிவர்கள் அதிசயம் அடைந்தனர். கல்லால மரநிழலில் அமர்ந்த மௌன வடிவத்தை உடைய பரம குருவானவன் குற்றமற்ற முப்பத்திரண்டு உறுப்புகளுடன் கூடிய பதினாறு வயதுள்ள ஒரு குமாரனாகிய மறையவன் உருவம் கொண்டான்.

1169. நீண்ட திரிபுண்டரமானது (திருநீற்றின் மூன்று கீற்று)நெற்றியிலுள்ள அனல் கண்ணை மறைக்க, அழகான கண்டிகையோடு, வளைந்து நீண்ட காதுகளில் அணிந்த குண்டலங்கள் கௌவியுள்ள பலமணிகளும், வானில் தவழும் இளஞ்சூரியனைச் சிரிப்பது போலும் ஒளிவீசி இருளை ஓட்டின.

1170 உத்தரிய வெண்படம் வலம்பட வொதுங்க
முத்தவள நூலினொடுமுத்தமிடை யிட்டு
வைத்தணியும் அக்கவட மாலையெறி வாளாற்
பத்தரை மறைத்தமல பந்தவிருள் சிந்த.

1171 கண்டிகை தொடுத்திரு கரத்தினொடு வாகு
தண்டினிடு மாலைவிட வாளரவு தள்ள
வெண்டுகிலி னானவிரி கோவண மருங்கிற்
தண்டரிய பட்டிகை வளைந்தொளி தழைப்ப.

1172 வண்டுவரி பாடுவன போலமலர் பாத
புண்டரிக மேலுழல் சிலம்புகள் புலம்பத்
தொண்டரக மாசிருள் துணித்துமுடி சூட்டும்
முண்டக மலர்ப்புறம் விறற்கழன் முழங்க.

1173 ஏதமில் பவித்திரம் வலக்கர னிமைப்பப்
போதம்வரை புத்தக மிடக்கையது பொற்ப
ஓதியுண ராதலறி யோலமிடும் வேதம்
பாதுகைகள் ஆகியிரு பாதமலர் சூட

1174 கள்ளமுள ரிக்குள்முரல் காளையறு கால
புள்ளொலியி னாவுமித ழும்புடை பெயர்ந்து
துள்ளவெழு வேதவொலி தொண்டர் செவியாற்றால்
உள்ளவயல் புக்குவகை யொண்பயிர் வளர்ப்ப.

1175 சீதமணி மூரறிரு வாய்சிறி தரும்ப
மாதவர்கள் காணவெளி வந்துவெளி நின்றான்
நாதமுடி வாயளவில் நான்மறையின் அந்த
போதவடி வாகி நிறை பூரண புராணன்.

1170. வெள்ளிய ஆடை வலத்திற் பொருந்த ஒதுங்கவும் , வெள்ளியபூணூலோடு முத்துக்களை இடையிட்டுக் கோத்து அணிந்த உருத்திராக்க மணி மாலை வீசும் ஒளியால் அன்பர்களை மறைக்கும் ஆணவமாகிய இருள் பந்தம் சிதறியது.

1171. உருத்திராக்க மணிகளைக் கோத்து, இரண்டு கைகளிலும் தண்டினை ஒத்த தோள்களிலும் அணிந்த மாலை நஞ்சினை உடைய கொடிய பாம்பணிகளை ஒழிக்கவும், வெள்ளிய ஆடையால் போக்கிய விரித்த கோவணத்தின் பக்கத்தில் நீங்குதல் இல்லாத பட்டிகை ஒளி மிகவும் சூழ்ந்தது.

1172. வண்டுகளின் இசையைப் போலத் திருவடிகளில் உள்ள சிலம்புகள் ஒலிக்கவும், அடியார்களின் அக அழுக்காகிய ஆணவ இருளைப் போக்கி, அவர்கள் தம் முடியில் சூடுகின்ற தாமரை போலும் திருவடியில் வெற்றியை யுடைய வீரக்கண்டை ஒலித்தது.

1173. குற்றமற்ற பவித்திரம் வலக்கையில் விளங்கவும், சிவஞானபோதம் எழுதப்பெற்ற திருமுறை இடக்கையில் அழகுடன் திகழவும், ஓலமிடுகின்ற மறைகள் பாதுகைகளாகிய இரண்டு திருவடிகளையும் சூடியது.

1174. தேனையுடைய கமல மலரில் ஒலி செய்கின்ற ஆண் வண்டுகளைப் போன்று, நாவும் இதழும் எழுந்து துள்ளும் மறை ஒலியானது அடியார்களின் செவிகளில் பாய்ந்து, உள்ளமாகிய கழனியில் நிலை கொண்டு மகிழ்ச்சிப் பயிரை விளைவித்தது.

1175. திருவாயில் குளிர்ச்சியும் அழகும் உள்ள புன்னகை தோன்றவும் , நாதத் தத்துவத்தின் முடிவாகியும், அளவற்ற நால் வேதங்களின் முடிவில் ஞான வடிவாகியும் நிறைந்த பூரணத் தன்மையுடைய தட்சிணாமூர்த்திஅம் முனிவர்கள் தரிசிக்கும்படி மிக எளியோனாகி வெளியில் நின்றருளினான்.

வேறு

1176 வட்டவாண் மதிகண்டார்க்கு முவாக்கடல் மான மாண்ட
சிட்டரா முனிவர் காளைத் தேசிக வடிவ நோக்கி
ஒட்டறா வுவகை வெள்ள மேற்கொள வுருத்த கூற்றை
அட்டதா மரைதஞ் சென்னிக் கணிமல ராகத் தாழ்ந்தார்.

1177 அளவறு கலைகட் கெல்லாம் உறைவிட மாகி வேத
விளைபொரு ளாகி நின்ற வேதிய சரண மென்ற
வளைவுறு மன த்தி னாரைத் தேசிக வள்ளல் நோக்கிப்
பளகறு தவத்தீர் வேட்கை யாதெனப் பணிந்து சொல்வார்.

1178 அடியரே முய்யு மாறு முலகெலாம் அளிக்கு மாறும்
படியிலா வரத்த வேதப் பயனருள் செய்தி யென்னக்
கொடியமா பாசந் தீர்ப்பான் குரவனம் முனிவரோடு
முடிவிலா விலிங்க முன்போய் மறைப்பொருள் மொழிவ தானான்.

1179 அந்தணிர் கேண்மின் சால வருமறைப் பொருள்கள் எல்லாம்
மந்தண மாகு மிந்த மறைப்பொரு ளறிதல் தானே
நந்தலில் லாத போகப் பயனுக்கு நலியும் பாச
பந்தனை கழிக்கும் வீட்டின் பயனுக்குங் கருவி யாகும்.

1174. முழுமதி நாளிலே வட்டமாகிய திங்களைக் கண்டு ஆரவாரம் செய்யும் கடலைப் போன்று, பெரியோராகிய முனிவர்கள், காளைப் பருவமுடைய தம்முடைய குருவின் வடிவம் கண்டு வற்றுதல் இல்லாத மகிழ்ச்சி வெள்ளம் மேலெழ வெகுண்டெழுந்த கூற்றுவனை உதைத்த திருவடிகளைத் தங்கள் தலையில் சூடிக் கொண்டு வணங்கி நின்றார்கள்.

1177. எல்லாக் கலைகளுக்கும் உறையுள் ஆகி, வேதங்களின் விளையும் பொருளாய் நின்ற வேதியனே அடைக்கலம் என்று வளைவுறு மனம் கொண்ட முனிவர்களை, குரவன் நோக்கி, ''குற்றமற்ற தவத்தையுடைய முனிவர்களே! உங்கள் விருப்பம் யாது?''என்று கேட்டான். அவர்களும் சொல்லத் தொடங்கினர்.

முனிவர்களின் வேண்டுதல்

1178. ''அடியார்கள் உய்யுமாறும், உலகம் அனைத்தையும் ஓம்பும் வண்ணமும், ஒப்பற்ற சிறப்பினை உடைய மறைகளின் பொருளை அருளிச் செய்வாய்'' என்று விண்ணப்பித்துக் கொண்டனர். உயிர்களின் கொடிய பாசத்தை நீக்கியருளும் அக்குரவன், அம்முனிவர்களுடன் இலிங்கத்தின் திருமுன்னர் சென்று வேதங்களின் பொருளை அருளத் தொடங்கினான்.

முனிவர்களுக்கு வேதப் பொருளைக் கூறல்

1179. ''முனிவர்களே! கேளுங்கள்; அரிய வேதங்களின் பொருள் அனைத்தும் பெரிய ரகசியமாகும். இந்த வேதங்களின் அரிய பொருளை அறிதலே போகப் பேற்றிற்கும், பாசபந்தத்தைப் போக்கும் வீடு பேற்றிற்கும் கருவி ஆகும்.

1180 உத்தம சுயம்புக் குள்ளு முத்தம தரமாய் மேலாந்
தத்துவ மாகும் இந்தச் சுந்தர சுயம்பு லிங்கம்
நித்தமாய் மறைகட் கெல்லா நிதானமாம் பொருளா யுண்மைச்
சுத்தவத் துவித மான சுயம்பிர காச மாகும்.

1181 நிறைபரா பரம் விஞ் ஞான நிராமய மென்று நூல்கள்
அறைபரம் பிரம மாகும் இதனுரு வாகு மேக
மறையிதன் பொருளே யிந்தச் சுந்தர வடிவாயிங்ஙன்
உறைசிவ லிங்க மொன்றே யென்பர்நூ லுணர்ந்த நல்லோர்.

1182 ஆகையான் மறையு மொன்றே யருமறைப் பொருளும் ஒன்றே
சாகையா லனந்த மாகித் தழைத்ததச் சாகையெல்லாம்
ஓகையா லிவனை யேத்து முலகுத யாதிக் கீந்த
ஏகன் ஆணையினான் மூன்றுமூர்த்தியா யிருந்தானன்றே.

1183 மலர்மக னாகி மூன்று வையமும் படைத்து மாலாய்
அலைவற நிறுத்தி முக்க ணாதியா யழித்தம் மூவர்
தலைவனாய்ப் பரமா காச சரீரியாய் முதலீறின்றித்
தொலைவருஞ் சோதி யாம் இச் சுந்தர விலிங்கந் தன்னில்.

1180. உத்தமமான சுயம்பு லிங்கங்களுக் கெல்லாம் மேலான உத்தமம் ஆகி, மேலான தத்துவங்களின் வடிவமாகிய இந்தச் சுயம்பு ஆகும் சொக்கலிங்கம், என்றும் அழியாததாய் வேதங்கள் அனைத்திற்கும் முதல் காரணமாய், பொருளாய், உண்மையான சுத்தாத்துவிதமான சுயம்பிரகாசமாக விளங்கும்.

1181. எங்கும் நிறைந்த பராபரம், விஞ்ஞானம், நிராமயம் என்றும் நூல்கள் கூறுகின்ற பரப்பிரம்மமாகிய இந்த மூர்த்தியின் திருவுருவமே ஒன்றாயுள்ள வேதமாகும். இந்த வேதத்தின் பொருளும் இங்கு எழுந்கருளியுள்ள இச் சிவலிங்கமே ஆகும். உண்மையான நூல்களைக் கற்றறிந்த நல்லறிவுடையோர் இச் சிவலிங்கமும் வேதமும் வேறல்ல என்பர்.

1182. ஆதலால் வேதமும் ஒன்றே அவ்வேதத்தின் பொருளும் ஒன்றே. அவ்வேதமானது உட்பொருளால் அளவிறந்த பேதமாகித் தழைத்துள்ளது. அவ்வுட்பொருள் எல்லாம் மகிழ்வோடு இப்பெருமானையே துதிக்கும். உலகத்தின் தோற்றம் முதலிய மூன்று தொழிலுக்கும் இந்த ஒருவனாகிய சொக்கலிங்கமூர்த்தி தன் சக்தியால் மூன்று மூர்த்தியாய் இருந்தருளினான்.

1183. பிரமனாகி மூன்று உலகங்களையும் உண்டாக்கினான். திருமாலாகிக் காத்தான். மூன்று கண்களை யுடைய உருத்திரன் ஆகி அழித்தான். அந்த மூன்று மூர்த்தி களுக்கும் தலைவனாகியும், சிதாகாயமே திருமேனியாய் உள்ளவனாகியும் ஆகி அந்தமாகி என்றும் கெடாத ஒளி வடிவாய் இருப்பவன் இச் சொக்கலிங்கமூர்த்தி.

1184 ஆதியி லான்ம தத்துவ மான வலர்மகன் பாகமு நடுவில்
நீதியில் விச்சா தத்துவ மான நெடியவன் பாகமு முடிவில்
ஓதிய சிவதத் துவமல் தத் வுருத்திர பாகமு முதிக்கும்
பேதியிம் மூன்றில் எண்ணி துவங்கள் பிறக்குமிம் மூன்றினு
முறையால்.

1185 ஓதரு மகார முகாரமே மகார முதித்திடும் பிரணவம் விந்து
நாதமோ டுதிக்கும் வியத்ததா ரகத்தி னல்லகா யத்திரி
மூன்று
பேதமாம் பதத்தாற் பிறக்குமிக் காயத் திரியிரு பேதமாம்
பேதம்
யாதெனிற் சமட்டி வியட்டியென் றிரண்டு மேதுவாம்
வேட்டவைக் கெல்லாம்.

1186 இன்னவை யிரண்டு மிவனருள் வலியா லீன்றநான்
மறையையந் நான்கும்
பின்னிவ னருளால் அளவில வான பிரணவ
மாதிமந்திரமும்
அன்னவா றான தாரகத் தகார மாதியக் கரங்களு முதித்த
சொன்னவக் கரத்திற் சிவாகம நூலிச் சுரவர னடுமுகத்
துதித்த.

1187 கீட்டிசை முகத்தோன் றடுத்தநா லைந்திற் கிளைத்ததா
லிருக்கது தென்பால்
ஈட்டிய விரண்டாம் வேதநூ றுருவோ டெழுந்தது
வடதிசை முகத்தில்
நீட்டிய சாமம் ஆயிர முகத்தா னிமிர்ந்தது குடதிசை
முகத்தில்
நாட்டிய வொன்ப துருவொடு கிளைத்து நடந்தது
நான்கதா மறையே.

1184. அப்பெருமானிடத்தில் முதலில் ஆன்ம தத்துவமான பிரமன் பாகமும்,முடிவில்ஒதிய சிவதத்துவம் என்ற உருத்திர பாகமும், தோன்றும். இங்ஙணம் வேறுபட்ட இம் மூவகைத் தத்துவங்களில் அளவற்றனவாய் ஏனைத் தத்துவங்கள் தோன்றும்.

1185. ஓதுவதற்கு அரிய அகாரமும், உகாரமும், மகாரமும் மேலே சொன்ன மூன்று தத்துவங்களின் முறைப்படி தோன்றும். பிரணவமானது விந்து நாதங்களோடு அவுவை கூடுதலால் தோன்றும். சிறந்த அப்பிரணவத்தில் நன்மை தருகின்ற காயத்திரி மூன்று பேதமாகிய பதங்களாலே தோன்றும். இக்காயத்திரி 'சமட்டி' 'வியட்டி' என்னும் இரண்டு வேற்றுமை உடையதாகும். இவ்விரண்டும் விரும்பிய பொருளை அடைவதற்குக் காரணமாக அமையும்.

1186. இவை இரண்டும் சொக்கலிங்க மூர்த்தியின் திருவருள் சக்தியால் நான்கு வேதங்களையும் தந்தன. அந்நான்கு வேதங்களும் இவன் அருளால் பின்னர் அளவற்றனவாய் விரிந்தன. பிரணவத்தை முதலாக உடைய மந்திரங்களும் அவ்வாறே விரிந்தன. அப்பிரணவத்தில் தான் அகரமுதலிய எழுத்துக்களெல்லாம் தோன்றின. அவ்வெழுத்துக்களினாலே சிவாகம நூல் இச்சொக்கலிங்க மூர்த்தியின் நடுமுகத்தில் தோன்றின.

பிரணவத் தோற்றம்

1187. தற்புருட முகத்திலே இருபத்தொரு சாகைகளோடு இருக்கு வேதம் தோன்றியது. அகோர முகத்தில் நூறு சாகைகளோடு யசுர் வேதம் தோன்றியது. வாமதேவ முகத்தில் ஆயிரம் சாகைகளோடு சாமவேதம் தோன்றியது. சத்தியோசாத முகத்தில் நாட்டப்பட்ட ஒன்பது சாகைகளோடு அதர்வண வேதம் தோன்றியது.

1188 அருமறை நால்வே றாகையால் வருண மாச்சிர மங்களு
நான்காம்
தருமம்யா காதி கருமமு மறையின் றகைமையிற் றோன்றின
மறையுங்
கருமநூன் ஞான நூலென விரண்டாங் கருமநூல்
இவனருச் சனைக்கு
வரும்வினை யுணர்ந்து ஞானநூ லிவன்றன் வடிவிலா
வடிவினை யுணர்த்தும்.

1189 முதனுகர் நீராற் சினைகுழைத் தாங்கிம் முழுமுதற்
கருத்துநல் லவியின்
பதமிவன் வடிவப் பண்ணவர் பிறர்க்குந் திருத்தியாம்
பரனிவன் முகத்தின்
விதமுறு நித்த மாதிமூ வினைக்கும் வேண்டியாங்
குலகவர் போகங்
கதிபெற வியற்றுஞ் சிவார்ச்சனை வினைக்குங் காரணம்
இச்சிவ கோசம்.

1190 மறைபல முகங்கொண் டலறிவா யிளைத்து மயங்கவே
றகண்டபூரணமாய்
நிறைபரம் பிரமம் ஆகுமிக் குறியைக் கருமநன்னெறிவழாப்
பூசை
முறையினு ஞான நெறியினிப் பொருளை யருளினான்
முயக்கற முயங்கும்.
அறிவினுந் தெளிவ துமக்குநா முரைத்த வருமறைப்
பொருள் பிறர்க்கரிதால்.

வேறு

1191 கருமத்தான் ஞான முண்டாங் கருமத்தைச் சித்த சுத்தி
தருமத்தா லிகந்த சித்த சுத்தியைத் தரும நல்கும்
அருமைத்தாந் தருமத் தாலே சாந்தியுண்டாகும் ஆண்ட
பெருமைத்தாஞ் சாந்தி யாலே பிறப்பதட் டாங்க யோகம்.

1188. அரிய வேதங்கள் நான்கு ஆதலின் வருணங்களும் நிலைகளும் தனித்தனி நான்காகும், தருமங்களும், வேள்வி முதலியவைகளும் வேதங்களின் நெறியிலே தோன்றின. அவ்வேதங்களும் கருமகாண்டம் ஞனகாண்டம் என்ற இரண்டு வகைப்படும். கரும காண்டமானது இச் சொக்கலிங்க மூர்த்தியின் பூசனைக்குரிய வினைகளை அறிவிக்கும். ஞான காண்டம் இவனது சச்சிதானந்த வடிவத்தை அறிவிக்கும்.

1189. வேர்களால் அருந்தப்படுகின்ற நீரானது கிளைகள் தளிர்க்கப் பயன்படுவது போன்று, முழு முதற் கடவுளான இவ்விறைவனுக்கு ஊட்டப்படுகின்ற அவியுணவு தேவர்கட்கும் பிறருக்கும் நிறைவினை உண்டாக்கும். இப் பரமன் திருமுன்னர் வெவ்வேறு வகைப்பட்ட நித்ய முதலிய மூன்று வினைகளுக்கும் உலகத்தவர் இன்பப் பேற்றினையும் வீடு பேற்றினையும் வேண்டியவாறே பெரும் பொருட்டுச் செய்யும் சிவார்ச்சனைக்கு இச்சிவலிங்கமே காரணமாய் உள்ளது.

1190. வேதங்கள் பல முகங்களைக் கொண்டு தேடியும் உணராது, கதறி வாய் சோர்ந்து மயங்க, வேறு அகண்ட பூரணமாய் நிறை சொரூபமாய் விளங்கும் இச்சிவலிங்கத்தை நல்ல கரும காண்டத்திற் கூறிய முறையினின்றும் தவறாது பூசை செய்தலாலும், ஞான காண்டத்திற்கூறிய முறையினின்று திருவருளால் இதனைக் கலவாது கலக்கும் உணர்வினாலும் தெளிக. உங்களுக்கு நாம் உணர்த்திய வேதங்களின் உட்பொருள் ஏனையோர் அறிதற்கரியது.

1191. நல்லினையால் ஞானம் கைகூடும். அந்நல் வினையை உள்ளத் தூய்மை கொடுக்கும். உள்ளத் தூய்மையை அறம் கொடுக்கும். அவ்வறத்தாலே சாந்தி உண்டாகும். பெருமையுடைய அச்சாந்தியாலே அட்டாங்க யோகம் தோன்றும்.

1192 கிரியையான் ஞானந் தன்னாற் கிளர்சிவ பத்தி பூசை
தரிசனஞ் சைவ லிங்க தாபனஞ் செய்த லீசற்
குரியமெய் யன்பர் பூசை யுருத்திர சின்னந் தாங்கல்
அரியதே சிகன்பாற் பத்தி யனைத்தையுந் தெரியலாகும்.

1193 மறைவழி மதங்கட் கெல்லா மறைபிர மாணம் பின்சென்
றறைதரு மிருதி யெல்லா மவைக்கனு குணமாம் இன்ன
முறையினான் மார்த்த மென்று மொழிவதம் மார்த்தஞ்
சேர்ந்த
துறைகள்வை திகமா மேலாச் சொல்வதிச் சுத்த மார்க்கம்.

வேறு

1194 தெருட்பெறு போகம் வீடுகா ரணமாய்ச் சிவமய மாமறைப்
பொருளை
இருட்கெட வுரைத்தேம் இப்பொருட் கதிகமில்லையிப்
பொருளெலா மும்மக்கு
மருட்கெடத் தெளிவ தாகென வினைய வழிவழா மாதவர்
புறத்தை
அருட்கையால் தடவி யிலிங்கத்துட் புகுந்தா னருள்பழுத்
தன்னதே சிகனே.

வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம் முற்றிற்று.

இரண்டாம் தொகுதி முற்றிற்று.

1192. கிரியையாலும் ஞானத்தாலும் சிவபக்தியும், சிவபூஜையும், சிவதரிசனமும், சிவலிங்கம் தாபித்தலும் சிவபெருமானுக்குரிய மெய்யடியார் பூசையும், சிவ சின்னம் தாங்குதலும் அரிய குரு பக்தியும் ஆகிய இவை எல்லாவற்றையும் அறியலாகும்.

1193. வேதத்தின் வழிபட்ட மதங்கள் அனைத்திற்கும் வேதம் பிரமாணமாகும். அவ்வேதத்தின் வழியே அதற்குப் பொருந்தக் கூறும் மிருதிகள் அனைத்தும் அம்மதங்களுக்கு ஏற்பவனவாகும். இதனால் இம் மிருதிக் கொள்கைகள் மார்த்தம் என்று கூறப்படும். அம்மார்த்தத்தைத் தழுவிய வேத நெறிகள் வைதிகம் என்று கூறப்படும். அவற்றுள் மேன்மையுடையதாகச் சொல்லப்படுவது இந்தச் சுத்த சன்மார்க்கமாகிய வைதிக சைவமாகும்.

1194. தெளிவு பெற்ற போகத்திற்கும், வீட்டிற்கும் காரணமாகி மறைப் பொருளை அறியாமை நீங்கக் கூறினோம். நாம் கூறிய இந்தப் பொருளுக்கு மேலான பொருள் இல்லை. இப்பொருள் அனைத்தும் உமக்கு மயக்கம் தீர விளங்கு வதாக,'' என்று, ஒத்த வடிவுடைய சிவபெருமானாகிய குரவன், இந்த வழியினின்றும் வழுவாத முனிவர்கள் முதுகை அருளாகிய தமது திருக்கரத்தாலே தடவிச் சிவலிங்கத்துள் புகுந்தருளினார்.

வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம் முற்றிற்று.

இரண்டாம் தொகுதி முற்றிற்று.

பாட்டு முதற்குறிப்பு

✶ ✶ ✶